http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில்

பன்னிரண்டாவது சதகம்

மதங்கள் சாஸ்திரங்கள் இலக்கியங்களில்
வாசகர்களின் 100 ஐயவினாக்களுக்கு
ஆசிரியரின் விளக்கங்கள்

ஆசிரியர் & கிடைக்குமிடம்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்.
[ஆசிரியர் 'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்']
8 B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி

ஸ்ரீ. ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.
டிரஸ்டிகள் :—
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A., B.L., அட்வகேட்,
K. ராம அய்யங்கார், B.Sc., B.L., அட்வகேட்.

விலை ரூ. 20] 1996 [தபாற்கூலி தனி

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

http://acharya.org

ஸுதர்சனர் பதில் — பன்னிரண்டாவது சதகம்

முன்னுரை

[ஸுதர்சனர்]

பதினொரு சதகங்களில் ஸுதர்சனர் பதிலில் வெளி வந்த கண்டனங்களின் பயனாக, பொதுஜனப் பத்திரிகை களில் வெளிவரும் விஷ்ணு வைஷ்ணவ தூஷணம் மிகவும் குறைந்திருக்கிறது. இந்த துவேஷப் பிரசாரங் களுக்குத் தலைமை வகித்து நடத்தி வந்த காமகோடி பெரிய பீடாதிபதி மறைந்த பிறகும் அவருடைய வாதங்களை 'கல்கி' பத்திரிகை தொடர்ந்து வெளியிட்டு வருவதால், இந்த சதகத்திலும் காமகோடி மிகுதியாக இடம் பெறுகிறார். இருந்தபோதிலும் 'கல்கி' பத்திரிகையும் மாற்றுக்கருத்துக் களுக்கு இடம் கொடுத்திருப்பதை 99வது கேள்வி பதிலில் அந்தணல்லூர் முரளியின் கடிதத்தை 29—10—95 கல்கியிலும், 98வது கேள்வி பதிலில் காணப்படும் விஷயம் பற்றித் திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசாரியாரின் கடிதத்தை 3-12—95 தேதி யிட்ட கல்கியிலும் வெளியிட்டிருப்பதிலிருந்து காணலாம். 3—12—95 கல்கியில் வெளிவந்த கடிதம் ஸுதர்சன விஜயம் 223வது பக்கத்தில் வெளியிடப் படுகிறது.

இந்தப் பன்னிரண்டாவது சதகத்தில் ஸ்ரீ ரங்கம் கோயில் பற்றிய தவறான செய்திக்கு ஸுதர்சனரின் மறுப்பு (14-12-95 குமுதத்தில் வெளியானது) முதல் அநுபந்தமாக இணைக்கப்பட்டுள்ளது. மூன்றாவது அநுபந்தம் திருச்சி வானொலியில் 93 டிசம்பரில் ஒலிபரப்பாகிய ஸுதர்சனரின் "திவ்ய ப்ரபந்த சிந்தனைகள்" ஆகும். நாலாவது அநுபந்தம் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற வைணவக் கருத்தரங்கில், 'ஆசார்யர்களின் சமுதாயச் சிந்தனைகள்' பற்றி ஸுதர்சனர் ஆற்றிய உரையாகும். ஐந்தாவது அநுபந்தம் 'வேதாந்த தேசிகரின் சிந்தனைகள்' என்ற தலைப்பில் 1995 மார்ச்சில் திருச்சி வானொலியில் ஸுதர்சனர் நிகழ்த்திய உரைகளின் தொகுப்பாகும். இதில் வேதாந்த தேசிகரின் பெருமையும், தென்கலை வடகலைக் கொள்கைகளில் முக்கியமான கருத்து வேற்றுமைகளுக்கு அடிப்படையும் நன்கு விளக்கப் பட்டுள்ளன.

http://acharya.org

தென்னாசார்யர்களுக்கும், வேதாந்த தேசிகருக்கும் உள்ள கருத்து வேற்றுமைகள் சிலவற்றை அவ்வப்போது நடுநிலை நின்று நாம் விளக்கி வருகிறோம். பிராட்டி விஷயத்தில் உள்ள கருத்து வேற்றுமைகள் நம்முடைய ஸ்ரீஸூக்த வ்யாக்யானத்திலேயே விளக்கப்பட்டன. இது நிற்க; இரண்டாவது அநுபந்தம் பற்றி இனி விளக்குவோம்.

சென்னை 113, தரமணியிலிருந்து வெளிவரும் "ஸ்ரீகாஞ்சிப் பேரருளாளன்" என்னும் மாதப்பத்திரிகையில் "ஸ்ரீதத்வஸித்தாந்த ஸங்க்ரஹம்" என்னும் தலைப்பில் வெளிவந்த தொடர் கட்டுரைகளின் தொகுப்பு நம் அன்பரால் நடுநிலை நின்று விமர்சிப்பதற்காக அனுப்பப்பட்டது. [20வது கேள்வி காண்க] அதில், "எம்பெருமானுக்குள்ள ஜகத் காரணத்வம், மோக்ஷ ப்ரதத்வம், ஸர்வஜகச் சரீரித்வம், ஸர்வ ஜகந்நியந்த்ருத்வம் முதலான ஈஶ்வர லக்ஷணங்களெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. பகவான் பிராட்டிக்கு ஶரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு ஶரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்க முடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து ஶேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல. அவளுடைய அநுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்கு பகவத்பாரதந்த்ர்யம் செயற்கையானது. ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும் எம்பெருமானார் பட்டர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன" என்று எழுதப்பட்டிருந்தது. இவையனைத்தும் ஸ்ரீவேதாந்த தேசிகருடையவும், மற்ற பூர்வாசார்யர்களுடையவும் ஸ்ரீஸூக்திகளோடு மிகவும் முரண்பட்டவையாகையாலே நாம் "விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்" என்னும் கட்டுரையை ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் 46-12 [552] இதழில் வெளியிட்டு, அதில் பல பல வேதாந்த தேசிக ஸ்ரீஸூக்திகளைக் காட்டி, "அவர் பிராட்டிக்கு எம்பெருமானோடு துல்யமான ஈஶ்வரத்வத்தையோ, ப்ரஹ்மத்வத்தையோ கூறவில்லை" என்றும், "பிராட்டியை எம்பெருமானுக்கு ஶரீரமாய், அவனால் நியமிக்கப்படுபவளாய், தரிக்கப்படுபவளாய், அவனுக்கு ஶேஷபூதையான தத்வ

http://acharya.org

மாகவும், உபயவிபூதி ஶேஷியாயிருக்கையாலே ஈஶ்வர வகுப்பைச் சேர்ந்தவளாகவுமே அருளிச்செய்திருக்கிறார்'' என்றும் நிலை நாட்டி, "காஞ்சிப் பேரருளாளன்" கட்டுரையை ஆதரிக்கும் வித்வான்களின் மநஸ்ஸாக்ஷியைக் குறித்து எட்டுக் கேள்விகளையும் வெளியிட்டிருந்தோம். [இதை இந்த ஶதகத்தின் இரண்டாவது அநுபந்தமாக இணைத்திருக்கிறோம்.] இதைப் பேரருளாளன் பத்திரிகைக்கும் மற்றும். பல பிரபலமான தேசிக ஸம்ப்ரதாய வித்வான்களுக்கும் அப்போதே அனுப்பியிருந்தோம். பிறகும் பலருக்கு வழங்கினோம். கடிதம் மூலமாகவும், நேரிலும், ஸ்ரீரங்கத்தில் நடைபெற்ற அஹோபில மடம் 44வது பட்டம் ஸ்ரீமதழகிய சிங்கரின் நூற்றாண்டு விழா ஸதஸ்ஸிலும், மதுராந்தகத்தில் 16—1—96 தொடங்கி நடந்த 'மாலோல வித்வத் ஸதஸ்ஸிலும் கலந்து கொண்டும், இவ்விஷயம் பற்றிய வித்வான்களின் கருத்தைக் கேட்டோம். 'காஞ்சிப் பேரருளாளன்' பத்திரிகையிலிருந்து எந்த பதிலும் இல்லை. தேசிக ஸம்ப்ரதாய வித்வான்கள் அனைவரும் நம் கேள்விக்குப் பதிலெழுத மறுத்து விட்டார்கள்; பலவிதமாகக் கருத்துத் தெரிவித்தார்கள். சிலர் ''பிராட்டிக்கு பகவச்சரீரத்வம் இல்லை; அவள் எம்பெருமானோடு துல்யையான ஈஶ்வரியே; ஆனால் அவளுக்கு ப்ரஹ்மத்வம் இல்லை'' என்னும் கருத்தைக் கூறினார்கள். ஒருவர் ''பிராட்டியின் விக்ரஹத்துக்கே பகவச்சரீரத்வம் உண்டு. ஸ்வரூபத்துக்குஇல்லை'' என்று எழுதினார். ''சிலர் பிராட்டிக்கு பகவச்சரீரத்வம் உண்டு; ப்ரஹ்மத்வமும் உண்டு'' என்று கூறினார்கள்.

(1) ''எம்பெருமானுக்கு ஶரீரமாயிருக்கையால் உண்டான ஶேஷத்வம் நியாம்யத்வம் முதலானவை இருக்குமிடத்தில் நிரதிஶய ப்ருஹத்த்வமாகிற (தன்னையொழிந்த அனைத்தைக் காட்டிலும் பெரிதாயிருக்கையாகிற) ப்ரஹ்மத்வம் இருக்கமுடியாதே'' என்னும் கேள்விக்கு எவரும் பதிலளிக்கவில்லை. (2) ''ஸ்வேதரஸமஸ்தத்ரவ்ய ஶரீரகத்வம்'' [தன்னுடைய ஜ்ஞாநமும், தானும் தவிர்ந்த மற்ற எல்லா த்ரவ்யங்களையும் ஶரீரமாகக்கொண்டிருக்கை] என்று ஸ்ரீதேசிகன் ஸாதித்த ஈஶ்வரலக்ஷணத்தின்படி ஈஶ்வரன் ஒருவனே என்று தேறுகிறதே? என்று கேட்டதற்கு ''ஸ்வ'' ஶப்தத்திற்குப் ''பெருமானும் பிராட்டியுமான இருவருமே பொருள்'' என்று கூறினார்கள். ''அப்படியா

http://acharya.org

ஞல் ஈஶ்வரர் இருவர் என்ருகிவிடும். இது 'ஈஶதே தே₃வ ஏக:' (ஒருவனே ஸர்வேஶ்வரன்) 'ந தத்ஸமஶ்ச அப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே' 'ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா' என்று வடமொழி தென்மொழி மறைகள் முழங்குவதோடு முரண்படுமே'' என்று நாம் கேட்டதற்கு, எந்த பதிலுமில்லை. (3) '' 'பிராட்டி எம்பெருமானுக்கு ஶரீரமாயிருப்பது அவனுடைய இச்சையால் விளைந்தது' என்று கூறுகிறீர்களே; ஶரீரத்தின் இச்சையால் ஶரீரத்வம் உண்டாகுமானல், 'டஸ்ய சேதநஸ்ய' என்று தொடங்கி 'ஶரீரியின் விருப்பத்தாலேயே ஶரீரத்தின் ஶரீரத்வம் உண்டாகிறது' என்று ஸ்ரீபா₄ஷ்யத்தில் அருளியிருப்பது பொருந்தாதே'' என்று நாம் கேட்டதற்கும் எந்த பதிலுமில்லை. (4) ''சேதநாசேதந விசிஷ்டமான ப்₃ரஹ்மம் ஒன்றே என்று ஒப்புக்கொள்ளுகையால் விசிஷ்டாத்வைதமென்று பெயர்பெற்ற நம் மதம் 'சேதநாசேதந விசிஷ்டம் ஒரு மிதுனம்' என்று ஒப்புக்கொண்டால் விசிஷ்டத்₃வைதமாகிவிடுமே'' என்று கேட்டதற்கு ஸமாதானம் சொல்லாமல் கோபப்படுகிருர்கள். (5) ''ப்ரஹ்ம ஸூத்ரம் முதல் ஸூத்ரத்தில் ப்₃ரஹ்ம ஶப்₃த₃த்திற்கு ஸ்வாதந்த்ர்யத்தின் எல்லையில் நிற்கும் புருஷோத்தமனை ஸ்ரீபாஷ்யகாரர் பொருளாக கூறியிருக்கும்போது அவனுடைய பாரதந்த்ர்யத்தின் எல்லையில் நிற்கும் நாரீணாம் உத்தமையான பிராட்டியைப் பொருளாக நீங்கள் கூறுவது எப்படிப் பொருந்தும்?'' என்னும் கேள்விக்கும் பதிலில்லை.

பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பிற்பட்ட சில பெரியவர்கள் எழுதியிருப்பதற்குக்கட்டுப்பட்டு, இப்படி யெல்லாம் வித்வான்கள் ஸ்ரீதேசிகன் திருவுள்ளத்துக்கு முரணுகவும் விசிஷ்டாத்வைதத்திற்கு எதிரிடையாகவும் செயல்படுகிருர்கள் என்று விளங்குகிறது. உப₄யஸம்ப்ரதா₃யத்தையும் சேர்ந்த வாசகர்கள் பலர் நம் கருத்தை ஆதரித்திருக்கிருர்கள். உண்மையே வெல்லும் என்பதை வருங்காலம் நிரூபிக்கும்.

ஸ்ரீவைஷ்ணவதாஸன்,

18—1—1996 ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்

[ஸுதர்சனர்]

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸுதர்சனர் பதில்—பனிரண்டாவது சதகம்

அம்மாள் ஸ்ரீ. திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

1. 14-2-93 கல்கி பக்கம் 31 ல் "ஹைதராபாத்தில் த்ரிதண்டி ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமிக்கு அவருடைய கீதாப்ரசங்கத்தை முன்னிட்டு 'விகாஸதரங்கிணி' என்ற இளைஞரணி அவருக்கு பிரம்மாண்டமான 'கட்அவுட்' வைத்தார்கள். அரசியல்வாதிகளைப் போலே மடாதிபதிகளும் கட்அவுட்டில் நிற்க ஆரம்பித்து விட்டார்கள்" என்று கேலி செய்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் "சுவாமிகளைப் பற்றி ஒரு வரி; பஞ்சாபில் தீவிரவாதிகளின் வன்முறைப் போராட்டம் உச்சத்திலிருந்தபோது அமைதி கோரி நாற்பது வேதச்சிறுவர்களுடன் மறை ஓதியபடி பாதயாத்திரை புரிந்து அமிர்தசரஸ் அடைந்து சாதனைபடைத்தவர்" என்று அவருடைய சாதனைகளில் ஒன்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. விமர்சிக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீமத் பரமஹம்ஸ ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமியின் பூர்வாசிரம பிதாமஹரான ஸ்ரீமத்பரமஹம்ஸ பெரிய ஸ்ரீமந் நாராயண ஜீயர் ஸ்வாமி பாரததேசம் முழுவதிலும் 108 ராமக்ரதுக்களையும் பல வேத யஜ்ஞங்களையும் நடத்தி ஸ்தம்பங்களை நாட்டியும், ஆயிரக்கணக்கான வேதவல்லுநர்களைக் கூட்டி டில்லியில் வேத சம்மேளனம் நடத்தியும், திருப்பதி முதலான பலவிடங்களில் பெரிய அளவில் யாகங்களை நடத்தியும், வேதசாஸ்த்ரங்களைப் பரப்புவதற்காகப் பல நிறுவனங்களை ஏற்படுத்தியும் பல அரிய பெரிய சாதனைகளைப் படைத்தவர். அந்த சாதனைகளில் எதுவும் 'கல்கி' போன்ற தமிழ் நாட்டுப்பத்திரிகைகளின் கண்களில் இதுவரைபட்டதில்லை. பிதாமஹருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி இளம் வயதிலேயே ப்ரஹ்மசர்ய ஆஶ்ரமத்திலிருந்தே துறவறம் மேற்கொண்டு அவர்நிறுவிய ஸ்தாபனங்களையெல்லாம் நன்கு வளர்த்து வேதத்திற்கென்றே ஒரு ஸர்வகலாசாலை நிறுவி ஆந்திரதேசத்திலும் வடநாட்டிலும் வெற்றிக் கொடி நாட்டிவருகிறார் ஜீயர் ஸ்வாமி. அப்படிப்பட்ட ஸ்வாமிக்கு

http://acharya.org

ஹைதராபாத்தில் சில இளைஞர்கள் அவர் மீதுள்ள பக்தியாலும், ஆர்வத்தாலும் ஒரு கட்அவுட் வைத்ததைப் பெரிய குற்றமாக ஸ்வாமியின் பேரில் ஏறிடுகிறது கல்கி. இந்தக்கல்கிபோன்ற தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் பலவும், அரசுச்சார்புள்ள வானொலி தொலைக்காட்சி போன்ற அமைப்புக்களும் தமது பத்திரிகைகளிலும் தீபாவளி மலர்களிலும் தீபாவளி போன்ற பண்டிகைகளின் போதும் ஒவ்வொரு வருடமும் காமகோடி பீடாதிபதிகளுக்கே திரும்பத்திரும்ப அளவுக்கு அதிகமான விளம்பரம் அளித்து வருவது கல்கியின் கண்களுக்கு ஏனோபுலப்படவில்லை. ஒரு நகரத்தில் அவர் மீதுள்ள ஈடுபாட்டினால் ஒரு கட்அவுட் வைத்ததை, தாம் வாரந்தோறும் காமகோடி பீடாதிபதிக்கு அளித்துவரும் தகுதிக்கு மீறிய விளம்பரத்தை மறந்து விட்டு, நகரந்தோறும் கட்அவுட் வைக்கும் அரசியல்வாதிகளோடு ஒப்பிடுவது ஒருதலைப்பட்சமாகவும் விஷமத்தனமாகவும் உள்ளது.

S. முரளி, அந்தநல்லூர்

2. சென்னைத் தொலைக்காட்சி 21—12—92 அன்று ஒளிபரப்பிய முத்தமிழ் மன்றத்தில் 'இவர்கள் சந்தித்தால்' என்னும் தலைப்பில் பெரியாழ்வாரும் கண்வமஹரிஷியும் சந்தித்து உரையாடுவது போன்ற ஒரு காட்சி ஒளி பரப்பப்பட்டது. அதில் பெரியாழ்வார் பின்குடுமியுடனும், வடகலைத்திருமண் காப்புடனும் காட்டப்பட்டார். கண்வ மஹரிஷி உடல்முழுவதும் விபூதிப்பட்டைகளை அணிந்தவராகக் காட்டப்பட்டார். கோயில்களில் காணப் படும் பெரியாழ்வார் விக்ரஹங்களோடும், இலக்கியங் களில் காட்டப்படும் கண்வமஹரிஷியின் பாத்திரப் படைப்போடும் இவை பொருந்துமா?

இது பற்றி விமர்சனம் செய்து தொலைக்காட்சிக்கு ஒரு கடிதம் எழுதி, எதிரொலியில் பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம் யாம். அடுத்த வாரங்களில் வந்த எதிரொலி நிகழ்ச்சிகளில் நம்முடைய கடிதமோ, இந்த நிகழ்ச்சிபற்றிய வேறு எந்த விமர்சனக் கடிதமோ படிக்கப்படவேயில்லை. நம்முடைய கடிதத்திற்குப் பதிலளிக்க முடியாதாகையாலே, கண்டு கொள்ளாமல் விட்டு

http://acharya.org

விட்டார்கள் போலும்! உலகம் உண்மையை உணருவதற்காக இங்கு நமது விமரிசனங்களை வெளியிடுகிறோம். "இவர்கள் சந்தித்தால்" என்னும் தலைப்பில் நடந்த உரையாடல் கற்பனையானாலும், பாத்திரங்களில் பெரியாழ்வாரின் விக்ரஹங்கள் தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கான கோயில்களில் உள்ளன. தொலைக்காட்சி நிலையத்திற்கு வெகு அருகிலேயே மிகப்பெரிய திவ்யதேசமாக விளங்கும் திருவல்லிக்கேணியிலேயே உள்ளது. அந்தவிக்ரஹங்கள் அனைத்திலும் அவர் முன்குடுமி உள்ளவராகவே காணப்படுகிறார். அவர் அவதரித்த ஸ்ரீவில்லிபுத்தூர், அவர் மிகவும் ஈடுபட்ட ஸ்ரீரங்கம், திருமாலிருஞ்சோலை, திருக்கண்ணபுரம், பரதத்வ நிர்ணயம் செய்த 'கூடல்' எனப்படும் மதுரை முதலான பல திவ்யதேசங்களில் அவர் தென்கலைத்திருமண்காப்புடன் தான் காட்சியளிக்கிறார். பெரியாழ்வாரின் ஸஹோதரர்களின் வம்சத்தில் வந்த வேதப்பிரான் பட்டர் ஸ்வாமிகள் இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்குடுமியோடும் தென்கலைத் திருமண்காப்புடனும் ஸேவை ஸாதிக்கிறார்கள். உண்மையில், பெரியாழ்வார் அவதரித்த பூர்வசிக (முன்குடுமி) ஸ்ரீவைஷ்ணவர்களில் இன்றளவும் ஒருவர்கூட வடகலைத்திருமண் காப்புடன் காணப்படுவதில்லை. ஆகையால் அவரைப் பின்குடுமியுடனும் வடகலைத் திருமண்காப்புடனும் காட்டியது ஆதாரம் ஏதுமின்றி மனம் போனபடி செய்த செயலே ஆகும். சகுந்தலையின் கதையை விளக்கும் மஹாபாரதம், சாகுந்தலம் முதலான எந்த நூலிலும் கண்வர் நீறணிந்தவராகச் சித்திரிக்கப்படவில்லை. பொதுவாகத் தொலைக்காட்சி போன்ற நிறுவனங்களில் நீறணியும் சிவபக்தர்களே மிகுதியாயிருப்பதால் ரிஷிகளைப் பெரும்பாலும் நீறணிந்தவர்களாகவே காட்டிவிடுகிறார்கள். பொதுஜனப் பத்திரிகைகளிலும் இந்த அவலநிலையே காணப்படுகிறது. விஷ்ணு பக்தர்களிலே தலைவராய், 'நாராயண' நாமத்தையே இடையறாது உச்சரிப்பவரான நாரதரைக் கூட சிலமாதங்களுக்கு முன் தினமலர் சிறுவர்மலரில் நீறணிந்தவராகக் காட்டிவிட்டார்கள். இவைகளெல்லாம் நம்நாட்டுப் பொது ஸ்தாபனங்கள் வரலாற்றுச் சான்றுகளுக்கும் உண்மைக்கும்

http://acharya.org

மதிப்பளிப்பதில்லை என்பதையே காட்டுகிறது. ஹிந்து, இண்டியன் எக்ஸ்ப்ரஸ் போன்ற பத்திரிகைகளிலும்-வேதசாஸ்த்ரப்ரமாணங்களிலோ பழைய இலக்கியங்களிலோ கையாளப்படாத அடிமுடி தேடியகதை போன்றவற்றையும், விநாயகரைப்பற்றிய ஆதாரமற்ற பல கற்பனைக் கதைகளையும், [ஹிந்து 20—11—92, இண்டியன் எக்ஸ்ப்ரஸ் 4—9—92 & 8—12—92] மீண்டும் மீண்டும் பிரசுரிப்பது இத்தகைய மனப்பான்மையையே காட்டுகிறது.

T. S. ஸ்ரீநிவாஸன், சென்னை-91

3. முமுக்ஷுப்படி 116-வது ஸூத்ரத்தில் "புறம்புண்டான பற்றுக்களை அடைய வாஸனையோடே விடுகை" என்று தொடங்கும் சூர்ணையின் வியாக்கியானத்தில் விடவேண்டியவைகளைக் காட்ட "பிதரம் மாதரம் தா₃ராந்" என்று தொடங்கும் ஶ்லோகம் எடுக்கப்பட்டுள்ளது. அதில் "கு₃ரூந்" என்று ஆசார்யர்களும் விடத்தக்கவர்களாக எடுக்கப்பட்டுள்ளனர். அந்த ஸூத்ரத்திலேயே மேலே "ஆசார்ய ப்ரேமம் கனத்திருக்கையும், ஆசார்யன் பக்கலிலும் ...க்ருதஜ்ஞனாய்ப்போருகையும்" என்று ஸாதித்திருப்பதோடு இது முரண்படுகிறதே; முரண்பாட்டை நீக்கும் வழி என்ன?

"பிதரம் மாதரம் தா₃ராந்"—இத்யாதி₃ப்படியே பா₃ஹ்ய விஷய ஸங்க₃ங்களையடைய மறுவலிடாதபடி ஸவாஸனமாக விடுகை" என்பது இங்குமாமுனிகளின் வியாக்கியானம்.இதில் 'பா₃ஹ்யவிஷய' என்னும் அடைமொழியுள்ளதால், பகவத் விஷயத்தில் தொடர்பில்லாத விஷயங்களைக் கற்பித்த ஆசார்யர்களே "கு₃ரூந்" என்னும் பத₃த்தால் எடுக்கப்படுகிறார்கள். மேலே கௌரவிக்கத்தக்கவர்களாக எடுக்கப்பட்ட ஆசார்யர்கள் பகவத் விஷயத்தைக் காட்டிக்கொடுத்தவர்களும் கற்பித்தவர்களுமாவர் ஆகையாலே முரணில்லை.

http://acharya.org

S. ஆனந்தன், சென்னை-90.

4 உலகில் இன்று பின்பற்றப்பட்டு வரும் இஸ்லாம், கிறிஸ்தவப், பௌத்தம், சைவம், அத்வைதம் போன்ற பிறமதங்களின் கொள்கைகளையும், அவற்றின் குறைபாடுகளையும், எந்த வகையில் விசிஷ்டாத்வைதம் இவை அனைத்தையும்விட உயர்ந்த முழுமையான மதம் என்பதையும் விளக்கியருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

எல்லாமதங்களுமே மனிதன் கடைப்பிடிக்கவேண்டிய பொய்சொல்லாமை, திருடாமை, முதலான அறநெறிகளை ஒருபடியாக ஒப்புக்கொண்டபோதிலும், அந்தந்த மதங்களுக்குரிய தனிக்கொள்கைகளைக்கொண்டு அந்த மதங்களின் சிறப்பையும் தாழ்வையும் நடுநிலை நின்று ஆராய்வோம். நம்நாட்டில் அநாதிகாலமாக இருந்து வரும் வைதிகமதம் வேதத்தைப் பிரமாணமாகக் கொண்டது. வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து சேர்ந்த கிறிஸ்தவ மதத்தினர் பைபிளை வேதமாகக் கொள்கிறார்கள்; இஸ்லாம் மதத்தினர் குரானை வேதமாகக் கொள்கிறார்கள்; கடவுள் ஒருவரே என்று இவ்விரு மதங்களிலும் ஒப்புக்கொள்வது இவற்றின் சிறப்புஅம்சம். ஆனாலும், உலகில் உள்ள ஜீவராசிகளுக்கிடையே காணப்படும் எண்ணிறந்த வேற்றுமைகளைப் பொருந்தவிடும் புண்யம் பாபம் ஆகிய கர்மம் பற்றிய கொள்கையும், ஜீவராசிகள் அநாதிகாலமாக எண்ணிறந்த பிறப்புகள் எடுக்கிறார்கள் என்னும் விஷயமும் இவ்விருமதங்களிலும் ஒப்புக்கொள்ளப் படுவதில்லை. மனிதன் தவிர மற்ற ஜீவராசிகளுக்கு ஆத்மாவே கிடையாது என்றும் இவர்கள் கூறுகிறார்கள். உலகில் காணும் பல வேற்றுமைகளுடன் பரம்பொருள் இவ்வுலகைப் படைத்ததின் காரணத்தை இவர்களால் விளக்கமுடிவதில்லை. விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் [தாவரங்களுக்கும் கூட] உணர்ச்சிகளும் செயல்பாடுகளும் வெளிப்படையாகக் காணப்படும்போது அவற்றுக்கு ஆத்மா இல்லை என்பது எப்படிப் பொருந்தும்? மறுபிறவியையும் முற்பிறவியில் மனிதன் செய்த நல்வினை தீவினைகளையும் [புண்யபாபங்களையும்] உலகில் ஜீவராசிகளுக்கிடையே உள்ள வேற்றுமைகளுக்குக் காரணமாக ஒப்புக்கொள்ளாவிட்டால் பரம்பொருளுக்குக் கருணையின்மை, பக்ஷபாதம் முதலான குற்றங்கள் வரும். இதற்கு இம்மதங்

http://acharya.org

களில் எந்த விளக்கமும் சொல்ல இயலாது. அத்துடன் இவர்கள், குறிப்பாக கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தில் உள்ளவர்களுக்கே ஒரே நாளில் மோக்ஷம் கிடைக்கும் என்றும், மற்ற மதத்திலுள்ளவர்களுக்கு மோக்ஷம் இல்லை என்றும் [நரகமே என்றும்] கூறுகிறார்கள். கிறிஸ்தவம் இஸ்லாம் ஏற்படுவதற்கு முன்னமே எத்தனையோ சான்றோர்கள் உலகெங்கும் பிறந்து மடிந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் பரம்பொருள் எதற்காகப் படைத்தது, அவர்களுக்கு என்னகதி என்பதற்கும் இவர்களால் பதில் சொல்ல முடியாது.

நம்நாட்டில் பிறந்தபோதிலும் வேதத்தை ஒப்புக்கொள்ளாத பௌத்தமதம் பரம்பொருளை ஒப்புக்கொள்வதில்லை. ஸூர்ய சந்திரர்கள் ஒழுங்காகத் தோன்றி மறைவது, அண்ட வெளியில் எங்கு பார்த்தாலும் சுழன்று கொண்டிருக்கும் கிரகங்கள் நக்ஷத்ரங்கள் முதலானவை ஓர் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் இருப்பது முதலான எண்ணிறந்த காட்சிகள் இவற்றையெல்லாம் ஆட்டிப் படைக்கும் ஒரு ஸர்வ ஶக்தனை பரமாத்மா இருக்கிறான் என்பதைத் தெளிவாக நிரூபிக்கும்போது இத்தகைய பரம்பொருள் இல்லை என்பதே இவர்களுடைய மதத்திற்குப் பெரும் குறையாகும்.

நம் நாட்டில் வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளும் மதங்களில் சைவமும் அத்வைதமும் இப்போது வலிமை பெற்று விளங்குகின்றன. வேதங்களையும், அவற்றைவிளக்க வந்த ஸ்ரீராமாயணம் மஹாபாரதம் ஆகிய இதிஹாஸங்களையும், மநுமுதலான புகழ்பெற்ற ஸ்ம்ருதிகளையும், வலிமைமிக்க ஸாத்விக புராணங்களையும்பார்த்தால் வைதிகமதத்தில்விஷ்ணு ஒருவனே பரம்பொருளாக அநாதிகாலமாகக் கொள்ளப்பட்டுள்ளான் என்று விளங்குகிறது. ப்ரஹ்மஸூத்ரத்தில் கண்டிக்கப்பட்டுள்ள சைவமதம் நெடுங்காலமாக அவைதிக மதமாகவே கருதப்பட்டு வந்தது என்பது தெளிவு. முற்காலத்தில் சைவர்கள் காபாலிகர்கள் காளாமுகர்கள் முதலான பிரிவுகளை உடையவர்களாய், வேதத்தில் கூறப்பட்டதற்கு முரணான பல ஒழுக்கங்களைக் கொண்டிருந்தார்கள் என்பதற்குப் பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. சங்க நூல்களில் திருமால் ஒருவனே பரம்பொருளாக முழங்கப்பட்டி

http://acharya.org

ருப்பதும், சிவன் சக்தி முருகன் முதலான தெய்வங்கள் திருமாலுக்கு அடங்கிய சக்திமிக்க ஜீவர்களாகவே குறிக்கப்பெற்றிருப்பதும், சங்ககாலத்தில் சான்றோர்களால் சிவனைப் பரம்பொருளாகக் கூறும் சைவமதம் ஏற்கப்படவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. பிற்காலத்தில் ஆகமங்களையும் சைவ புராணங்களையும் அடிப்படையாகக்கொண்டு சைவமதம் படிப்படியாக வளர்ந்தது. ஆழ்வார்களும் அவர்களைப் பின்பற்றிய ஆசார்யர்களும் இம்மதம் அவைதிகமானது என்று தம் நூல்களில் நிலை நாட்டினர். இதற்கு ஆதாரமாக சிவனுக்கு வேதசாஸ்திரங்களில் பலதாழ்வுகள் கூறப்பட்டிருப்பதைக் காட்டினர். திருமாலை இழிவுபடுத்த சைவர்கள் கூறும் அடிமுடி தேடியகதை முதலான தாமஸபுராணக்கதைகள் வேதவிருத்தமாகையாலே ஏற்கத்தக்கவையல்ல என்றும்நிலைநாட்டினர். இந்த நிரூபணங்களுக்கு சரியாக பதில் சொல்லமுடியாமையாலே எம்பெருமானார் காலத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்பு 'சித்தாந்தசைவம்' என்னும் மதம் மெய்கண்டார் முதலானவர்களாலே உருவாக்கப்பட்டது. ருத்ரனுக்கு வேதசாஸ்திரங்களில் ஜீவர்களுக்கு உரிய பல தாழ்வுகள் காணப்படுவதை மறைக்கவொண்ணாமையாலே, "மும்மூர்த்திகளில் அடங்கிய ருத்ரன் வேறு; மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட பரமசிவனே பரம்பொருள்'' என்று சித்தாந்த சைவர்கள் கூறத்தலைப்பட்டார்கள். இது நாயன்மார்களுடைய தேவார, திருவாசகங்களுக்கு முரணானது. ருத்ரனுக்கும் பரமசிவனுக்கும் மூன்று கண்களை உடைத்தாயிருக்கை, பார்வதிக்குப்பதியாயிருக்கை, கபால மாலை, சுடுகாட்டுச்சாம்பல், எருக்கு, கொன்றை, பாம்பு முதலானவற்றை தரித்திருக்கை ஆகிய ஒரே அடையாளங்களையே சைவர்கள் கூறுகிறார்கள். ஸம்ஹாரருத்ரன் கோயிலையும் துரீய (நாலாவது) சிவன் கோயிலையும் அவர்களாலே தனியாகக் காட்ட முடியவில்லை. சங்கநூல்களிலும் காளிதாஸன் முதலான வடமொழிக்கவிஞர்களின் காவியங்களிலும் திருமாலைத்தாழ்த்திக் கூறும் சிவபுராணக்கதைகளில் ஒன்று கூடக் கையாளப்படவில்லை. இக்காரணங்களால், பரமசிவனைக் கற்பித்து 'வேதத்தில் சொல்லப்பட்ட பரம்பொருள் அவனே' என்று கூறும் சித்தாந்தசைவர்களின் வாதம் ப்ராமாணிகர்களால் ஏற்கத்தக்கதல்ல என்று விளங்குகிறது. ஜகத்காரணமான பரம்பொருள் ஒன்றே என்று ஒப்புக்கொள்ளுகையாலும், விஷ்ணுபக்தியை விலக்கக் கூடிய சிவபக்தியை ஆதரிக்கையாலும், காபாலிகம் காளாமுகம் முதலியவற்றிலிருந்த துராசாரங்

http://acharya.org

களைக் கைவிட்டுவிட்டபடியாலும், பாமரஜனங்களைக் கட்டுப்படுத்திவைப்பதில் வெற்றிகண்டு வைணவத்திற்கு அடுத்த நிலையிலுள்ளதாய் நம் நாட்டு மதத்துறையில் முக்கிய அங்கம் வகிக்கிறது சைவமதம். சைவத்திற்குப் பின் தோன்றிய சாக்தமதமும் தற்காலத்தில் சைவத்தின் ஒரு அங்கமாக விளங்குகிறது.

ஆதிசங்கரரால் பாரத தேசமெங்கும் பிரசாரம் செய்யப்பெற்ற அத்வைத மதத்தின் முக்கியக் கொள்கைகளாவன:- 1. எந்த பேதமும் இல்லாததாய் நற்குணங்கள் கூட இல்லாததாய் அறிவு மாத்திரமான ப்₃ரஹ்மம் ஒன்றே உண்மை. 2. 'வெவ்வேறாகக்காணப்படும் உலகத்தோற்றம் முழுவதும்பொய். 3 ' 'நானே ப்₃ரஹ்மம்' என்று கூறும் வேத வாக்யங்களின் பொருளை உணர்வதால் ஜீவன் ப்₃ரஹ்மமாகி விடுவதே மோக்ஷமாகும். அத்வைத மதத்தின் கொள்கைகள் வேதசாஸ்த்ரங்களுக்கும் உலக அநுபவத்திற்கும் முரணானவை என்று யாமுநாசார்யர் ஸ்ரீராமாநுஜாசார்யர் முதலான ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்களாலும், மத்வமதாசார்யர்களாலும் தம் நூல்களில் விரிவாகக் காட்டப்பட்டது. இவற்றுக்குச் சரியாக பதிலிறுக்க முடியாமையாலே சுமார் முந்நூறு வருடங்களுக்குள் இருந்த அப்பைய தீக்ஷிதர் காலத்திலிருந்து அத்வைதிகள் பெரும்பாலும் சைவர்களாகவும் சாக்தர்களாகவும் மாறிவிட்டனர். இன்று 'உலகம்பொய், நானே ப்₃ரஹ்மம்' என்னும் அத்வைதக் கொள்கையை மனப்பூர்வமாகப் பின்பற்றுகிறவர்கள் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. 'எல்லா ஜீவாத்மாக்களும் ஒன்றான ப்₃ரஹ்மமே' என்னும் அத்வைதவாதத்தை 'அரியும் சிவனும் ஒன்று' என்னும் பாமரவாதமாகக் குறுக்கிக்கொண்டு விட்டார்கள் இன்றுள்ள அத்வைதிகள். 'சம்மதமும் சம்மதம்' என்ற அரசியல் வாதிகளின் சமரசவாதத்திற்கு ஒத்தூதுபவர்களாகவும் ஆகி விட்டார்கள். இதனால் அரசாங்கபலமும், செல்வாக்கும், தொலைக்காட்சி வானொலி, பொதுஜனப்பத்திரிகைகள் ஆகியவற்றில் அவர்களுக்கு மிகுதியான விளம்பரமும் கிடைக்கிறது.

சைவமும் அத்வைதமும் உண்மையில் வைதிகமதங்களாகமாட்டா என்பதையும், வேதசாஸ்திரங்களுக்குப்பொருந்தியிருப்பதாய், எக்குறைகளும் அற்றதாய், சைவம் அத்வைதம் போலே சமயத்திற்குத் தகுந்தவாறு மாற்றுரு எடுக்காததாய், சங்ககாலத்திலிருந்து இன்றுவரை நம் தமிழ் நாட்டில் ஒருபடிப்பட்டதாய் இருக்கும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே உண்மையில் தொன்றுதொட்டு விளங்கிவரும் வைதிகமதம் என்பதையும் நாம் விஷ்ணுசித்த விஜயம், சங்ககாலத்தமிழர் சமயம், விசிஷ்டாத்வைதவிஜயம் ஸ்ரீவைஷ்ணவமத விஜயம் முதலான நூல்களில் எவரும் வாய்திறக்க இயலாதபடி நிலை நாட்டியிருப்பது அன்பர்கள் அறிந்ததே.

http://acharya.org

திருவெள்ளறை மேலத்திருமாளிகை, S. ஸௌம்யநாராயணன்
ஸ்ரீரங்கம்.

5. ஸுதர்சனர் பதில் பதிமூன்றாவது சதகம் 93வது கேள்வி பதிலில் கண்டபடி 'அரங்கத்தம்மா' 'வித்துவக் கோட்டம்மா' முதலான பதங்கள் பற்றித் தமிழறிஞர்கள் எவராவது விளக்கமளித்தார்களா?

பாண்டிச்சேரி கல்விக்கடல் திரு தி. வே. கோபாலய்யர் அவர்கள் விரிவான விளக்கம் எழுதியிருக்கிறார்கள். அதைச் சுருக்கமாகத் தருகிறோம். விளிநிலையில் உள்ள 'அம்மா' என்ற சொல் திவ்யப்ரபந்தத்தில் "அம்மா உன்னை அறிந்து கொண்டேன்" [225] "வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா" [489], "வித்துவக்கோட்டம்மா" [689-91, 693, 695 697] "அம்மா என்றுகந்தழைக்கும் ஆர்வச்சொல் கேளாதே" [735] "அரங்கத்தம்மா பள்ளியெழுந்தருளாயே" [917-925] "பாரிடந்த அம்மா" [2591], "அம்மா அடியேன் வேண்டுவதீதே" [2875] "நறுந்துழாயின் கண்ணி அம்மா" [3079] என்ற இடங்களிலெல்லாம் 'தலைவனே' என்னும் பொருளிலேயே ["அம்மா" என்னும் விளி] வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்விடங்களில் எல்லாம் 'அம்மான்' என்பதின் விளியாகவே கொள்ளவேண்டும். [அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள பாசுர எண்கள் நம்முடைய திவ்யப்ரபந்தப் பதிப்பில் கொடுக்கப்பட்டவை] 'அம்மான்' என்னும் சொல்லின் விளி "அம்மான்!" என்றே அமையும். 'அம்மான்!' என்ற அந்த விளி இறுதி எழுத்து மறைந்து 'அம்மா' என்று வருவதற்கும் இடமுண்டு. "புலிப்பல் தாலி புதல்வற் பற்றி அன்னா என்னும் அன்னையும்" [குறுந்தொகை 161] "தாய் உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு அன்னா என்னும் குழவி போல" [குறுந்தொகை 397] என்னுமிடங்களில் 'அன்னாய்' என்னும் விளிச்சொல் இறுதி எழுத்து மறைந்து 'அன்னா' என்று வந்திருப்பது போல் "அம்மான்!" என்ற விளிச் சொல் "அம்மா!" என்று வந்திருப்பதாகக் கொள்ளலாம். "என் அம்மா! என்கண்ணா!" [3344] என்ற விடத்தில் ஈட

http://acharya.org

டிலும் இருபத்துநாலாயிரப்படியிலும் "எனக்குத் தாய்போலே பரிவனுனவனே:" என்று உரையிடப்பட்டுள்ளது. ஈட்டிலும் அதன் அரும்பதவுரையிலும் "புருஷனைத் தாயாக விளிக்கை யாலே 'அம்மே' என்னும் விளி 'அம்மா' என்று மாறியிருக்கிறது' என்று விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது. மற்ற விடங்களில் 'ஸ்வாமி' என்றே உரையிட்டிருப்பதாலே 'அம்மான' என்பதன் விளி 'அம்மா' என்று ஆகியிருக்கிறது என்றே கொள்ளவேண்டும்.

கி. ஜகந்நாதன், சென்னை 28. (6, 7 8, கேள்விகள்)

6. இக்காலத்தில் திருமணத்திற்த ஜாதகப்பொருத்தம் பார்ப்பது அவசியம்தானு? சைவத்திற்போல் வைஷ்ணவத்தில் நவக்ரஹங்களுக்கு முக்யத்வம் அளிக்கப்படவில்லை. "பரமபுருஷனை உள்ளபடி அறிந்தவர்களுக்கு மற்ற தேவர்கள் வசப்பட்டிருப்பர்" என்று புருஷஸூக்தம் முழங்குகிறது. அப்படியிருக்கும்போது ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமணப்பொருத்தத்திற்கு ஜாதகப்பொருத்தம் பார்க்கவேண்டுமா? இதனுல் நற்குணம், நற்குலம், நல்லபடிப்பு முதலானவை அனைத்தும் அமைந்த பலவரன்கள் ஜாதகம் காரணமாகத் தள்ளப்படுகின்றனவே. 'பெண்மூலமென்ருல் நிர்மூலம்' என்றும், 'கேட்டை என்ருல் ஜ்யேஷ்டனுக்கு ஆகாது' என்றும் பல நல்ல வரன்கள் தள்ளப்படுகின்றன- "எம்பெருமானுடைய திருக்கையிலுள்ள ஸுதர்சனுழ்வானை அநுஸந்தித்தால் நவக்ரஹங்கள் ஸ்ரீவைஷ்ணவர்களை ஒன்றும் செய்யாது" என்பது அடியேனுடைய அபிப்ராயம். தேவரீருடைய கருத்தை விளக்கவேண்டுகிறேன்.

ஸம்பந்திகள் இருவருக்கும் எம்பெருமானிடம் பரிபூர்ண நம்பிக்கை இருந்தால் ஜாதகம் பார்க்காமல் மற்ற நல்ல விஷயங்களைக் கருத்தில் கொண்டு விவாஹம் நிச்சயம் செய்யலாம் என்பதே நம்முடைய அபிப்ராயம். ஜாதகம் பார்த்துச் செய்யும் திருமணங்களிலும் சில தோல்வியிலும் சோகத்திலும் முடிவதைக் காண்கிறேம். ஆனல், இன்றுள்ள ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்தில் பெண்வீட்டாரும் பிள்ளைவீட்டாரும் அப்படிப் பரிபூர்ண நம்பிக்கை உள்ளவர்களாக அமைவது மிகவும் அரி

http://acharya.org

தாகவே உள்ளது. ஆகையால் திருமணத்திற்கு ஜாதகப் பொருத்தம் பார்ப்பது தவிர்க்கமுடியாததாகிறது. பல குடும்பங்களில் பெருமாள் திருமுன்பே பூக்கட்டி உத்தரவு கேட்டுத் திருமணங்களை நிச்சயிக்கும் வழக்கமும் உள்ளது. மூலம் என்றால் நிர்மூலம், கேட்டை என்றால் ஜ்யேஷ்டனுக்கு ஆகாது, பூராடம் என்றால் நூலாடாது முதலான பாமரவசனங்களுக்கு ஜ்யோதிஷ ஶாஸ்த்ரங்களில் எந்த ஆதாரமும் இல்லை என்றே சோதிட வல்லுநர்கள் கூறுகின்றனர். இந்த வழக்குகள் பொய்யாகும்படி பல தம்பதிகள் வாழ்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். ஆகையால் இத்தகைய பாமரவசனங்களைப் பொருட்படுத்த வேண்டாம்.

7. 'எம்பெருமானைத் தஞ்சமாகக் கொண்டு, அவனுடைய அருளாலேயே மோக்ஷமடையலாம்'' என்று சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. எனது நண்பர் ஒருவர் தன் ஜாதகத்தை நாலு சோதிடர்களிடம் காட்டியதாகவும், அவர்கள் ஒருமுகமாகத் தனக்குக் கடைசிப்பிறவி இது தான் எனக்கூறுவதாகவும் சொல்லுகிறார். இதுசரியா?

அந்த நண்பர் எம்பெருமானையே தஞ்சமாகக் கொண்டு வாழ்பவராயிருந்தால், அவரது ஜாதகத்தில் அதற்கான அறிகுறிகளைக் கண்டு சோதிடர்கள் கூறியது பலிக்கலாம். அப்படி வாழ்பவராகக் கடைசி வரையில் அவர் மாறாவிடில், சோதிடர்கள் சொன்னதால் மாத்திரம் அவர் மோக்ஷமடைந்து விடமுடியாது. இவ்வுலக வாழ்க்கையிலேயே சோதிடர்கள் கூறும் பலன்களில் சில பலிக்காமற்போவதைக் காண்கிறோம். அப்படியிருக்க, மோக்ஷவிஷயத்தில் சோதிடர்கள் கூறுவதைக் கொண்டு எவரும் 'நமக்கு இதுவே கடைசிப் பிறவி' என்று நம்பியிருக்க இயலாது.

8. அண்ணனின் மனைவியின் வயதைக் காட்டிலும் தம்பியின் மனைவியின் வயது குறைவாக இருக்க

http://acharya.org

வேண்டும் என்ற நிர்ப்பந்தம் உண்டா? இல்லையானால், வயதில் மூத்த தம்பி மனைவி இளையவனான அண்ணன் மனைவியை வணங்கலாமா?

தம்பி மனைவியின் வயது குறைவாயிருக்க வேண்டும் என்னும் நிர்ப்பந்தமில்லை; வயதில் மூத்த தம்பியே, வயதில் இளைய தமையன் மனைவியை ஸ்தானத்தையிட்டு வணங்க வேண்டும்; தம்பியின் மனைவியும், மூத்தவளாயினும் ஸ்தானத்தையிட்டு அவளை வணங்க வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும்.

9. K. S. ரங்கதுரை, கணவாய் பாளையம்.

திருமுடிசம்பந்திகள், திருவடிசம்பந்திகள் என்றால் என்ன?

சீடனின் தலையில் திருவடிகளை வைத்து அருள் புரிந்த ஆசாரியனும், அவரது ஆசார்யபரம்பரையும் திருமுடிசம்பந்திகள். ஆசார்யனின் திருவடிகளில் தலையை வைத்து அருள் பெற்ற சீடனும், அவனது சிஷ்யபரம்பரையும் திருவடி சம்பந்திகள்.

10. J. ஆனந்தன், சென்னை-90.

'தேஹயாத்திரை கர்மாதீனம்' என்பது மனிதனைத் தவிர்ந்த தாவரம் முதலான மற்ற ஜீவராசிகளுக்கும் பொருந்துமா? பொருந்துமாயின், புண்ய பாபங்களை அவைகள் செய்வதாக எப்படிக் கொள்வது?

'தேஹ யாத்திரை கர்மாதீனம்' என்பது ஸம்ஸார மண்டலத்தில் உள்ள எல்லா ஜீவர்களுக்கும் பொருந்தும். ஆனால், மனிதனுக்கே பகுத்தறிவிருக்கையால், புண்யபாப கர்மங்களைச் செய்ய இயலும். விலங்குகளும், தாவரங்களும் முற்பிறவிகளில் மனிதனாயிருக்கும்போது செய்த பாபங்களை அனுபவிப்பதற்காகவே பிறவியெடுத்திருப்பவை. அவற்றுக்கும் பாபம் நீங்கியபிறகு உயர்பிறவி உண்டாகும்.

http://acharya.org

K. வரததேசிகாச்சாரியார், அட்வகேட், விழுப்புரம்

11. 'கனகாபிஷேகம்' யார் செய்து கொள்வது? ஸந்யாஸிகள் செய்து கொள்ளலாமா? ஶ்ரீவைஷ்ணவர்கள் செய்து கொள்வதுண்டா?

செல்வச் செழிப்புள்ள ஸம்ஸாரிகளான ஸ்மார்த்தர்கள் தங்களுடைய செல்வச் செழிப்பினைக் காட்டிக் கொள்வதற்குக் கனகாபிஷேகம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். காம கோடி மடத்து ஸங்யாஸிகள் சிலருக்கும் ஸமீபகாலத்தில் கனகாபிஷேகம் நடந்திருப்பதாகக் கூறுகிறார்கள். நூறாண்டு விழாக்காணும் பெரிய பீடாதிபதிக்கு அவ் விழாவிற்கு அங்கமாக இது நடைபெற்று, தொலைக் காட்சியிலும் ஊர் உலகம் காண ஒளிபரப்பப்பட்டது. ஏற்கனவே இவருக்கு இது பல முறை நடைபெற்றதாகவும், இனி மீண்டும் ஒரு முறை நடக்கப் போவதாகவும் கூறுகிறார்கள். 'ஸங்யாஸி கனகம் எனப்படும் பொன்னைத் தீண்டலாகாது' என்பது சாஸ்த்ரம். பொன்னை ஓட்டாஞ்சில்லியாக நினைப்பவர்களை உண்மையான ஸங்யாஸிகள் என்பது அறிவாளிகள் அனைவரும் இசைந்தது. இப்படியிருக்க, ஒரு ஸங்யாஸிக்குக் கனகாபிஷேகம் செய்வது சாஸ்த்ரங்களுடன் எப்படிப் பொருந்தும் என்று நமக்கு விளங்கவில்லை. ஒருக்கால் 'எல்லாம் பொய்' என்று கூறும் அத்வைதிகளாகையாலே, "பொன்னும் பொய், அபிஷேகமும் பொய், தொலைக்காட்சியில் காட்டியதும் பொய்" என்னும் கருத்தாலே கனகாபிஷேகம் செய்வித்து, தொலைக்காட்சியிலும் விளம்பரப் படுத்திக் கொண்டார்கள் போலும்! பகவத்பாகவத கைங்கர்யம் தவிர வேறு எதற்கும் பொன்னைப் பயன்படுத்தலாகாது என்று உணர்ந்தவர்கள் ஆகையாலே அறிவாளிகளான வைஷ்ணவர்கள் தங்களுக்குக் கனகாபிஷேகம் செய்துகொள்ள இடமே இல்லை; செய்து கொண்டதாக வரலாறும் இல்லை.

http://acharya.org

டாக்டர் A.V. ரங்காசார்யஸ்வாமி—திருச்சித்திரகூடம் (சிதம்பரம்)

12. சிலவருடங்களுக்கு முன் வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி நரஸிம்ஹ சரம ச்லோகம் ஒன்று இருப்பதாகக் கூறியதாகவும், அதை அறிந்தவர்கள் தெரிவிக்கலாம் என்றும் ஸுதர்சனர் பதிலில் வெளியிடப்பட்டிருந்தது; இப்பொழுது அடியேனுக்கு அது தெரியவந்தது. நெல்லூர் ஸிம்ஹாத்ரிஸ்வாமியிடமிருந்து அந்த ப்ராந்தத்திலிருப்பவர்கள் ஸமாச்ரயணத்தின் போது அனுஸந்திக்கும் அந்த ச்லோகத்தைப் பெற்று எழுதியுள்ளேன். ஸுதர்சனம் வாசகர்களுக்கு வெளியிடவேண்டுகிறேன்.

அந்த ச்லோகம் அடுத்துக் கொடுக்கப்படுகிறது:-

ஸத்யம் ப்3ரவீமி மநுஜா: ஸ்வயம் ஊர்த்4வபா3ஹு:
யோ மாம் முகுந்த3 நரஸிம்ஹ ஜநார்த்த3நேதி ।
ஜீவந் ஜபத்யநுதி3நம் மரணே ருணீவ
பாஷாணகாஷ்ட2 ஸத்3ருசாய த3தா3மி முக்திம் ॥

[(இது நரஸிம்ஹப்பெருமான் அருளியது:—) மனிதர்களே! நானே தூக்கிய கையுடன் ஸத்யமாகக் கூறுகிறேன். எவனொருவன் தினந்தோறும் என்னை 'முகுந்தா! நரஸிம்ஹ! ஜநார்த்தன!' என்று உயிருடன் இருக்கும்பொழுது ஜபிக்கிறானோ, மரணகாலத்தில் கல்லும், கட்டையும்போல் இருக்கும் அவனுக்குக் கடன் பட்டவன்போலே முக்தியை அளிக்கிறேன்.]

இந்த ச்லோகம் எந்தப் புராணத்தில் இருக்கிறது என்பதை அறிந்தவர்கள் எழுதினால் வெளியிடப்படும்.

R. பத்மநாபய்யங்கார், ஓய்வுபெற்ற ஆசிரியர், மேலக்கொட்டையூர்

13. "ஸ்ரீகிஷ்ணமாச்சாரியார் யோகமந்திரம்— 13, நாலாவது குறுக்குத்தெரு. ராமகிருஷ்ண நகர், சென்னை 28" என்னும் விலாஸத்திலிருந்து வெளிவரும் 'தர்சனம்'' என்ற ஆங்கிலக்காலாண்டுப்பத்திரிகையில் "நாதமுனிகள் இயற்றிய யோக ரஹஸ்யம்'' என்ற தலைப்பில் இரண்டு வருடங்களாக வடமொழியில் ச்லோக ரூபமான ஒரு நூல் வெளியிடப்படுகிறது. ஒரு நண்பரிடமிருந்து கிடைத்த

http://acharya.org

இதழ்களை தேவரீர் ஆராய்ந்து அந்நூல் நாதமுனிகள் அருளியதாக இருக்கமுடியுமா? என்பதைத் தெளிவு படுத்துமாறு வேண்டுகிறேன்.

ஸமீபகாலத்தில் நூறாண்டுவாழ்ந்து பரமபதித்த ஸ்ரீகிருஷ்ண மாசார்ய ஸ்வாமி தம்முடைய வாழ்நாளிலேயே நாதமுனிகளின் யோக ரஹஸ்யம் தம்மிடம் இருப்பதாகச் சில வருடங்களுக்கு முன் பத்திரிகைகள் மூலம் அறிவித்தார். இப்பொழுது அது இந்தப் பத்திரிகையில் வெளிவருகிறது. 1993 பிப்ரவரி இதழ் வரையில் 149 சுலோகங்கள் வெளிவந்துள்ளன; நடுநிலைநின்று ஆராய்ந்ததில் இது நாதமுனிகள் அருளியதாக இருக்க இடமில்லை என்று விளங்குகிறது. நாதமுனிகள் பக்தியே வடிவெடுத்த யோகி என்று ஸ்தோத்ரரத்னத்தின் தொடக்கத்தில் அவரது பேரனாரான யாமுனாசாரியர் என்னும் ஆளவந்தார் அருளிச்செய்கிறார். அவருடைய யோகரஹஸ்யம் பக்தியோகத்தை விரிவாக விளக்குவதாகவே அமைந்திருக்க முடியும். அவரும், அவரிடமிருந்து பக்தியோகத்தைப் பெற்ற குருகைக் காவலப்பனும் யோகநிலையில் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து அனுபவித்து வந்ததாகவே ஈடு முதலான பூர்வாசார்ய க்ரந்தங்களில் அருளிச்செய்யப்பட்டுள்ளது. இப்பொழுது வெளிவரும் நூலில் யோக ஆஸனங்களைப்பற்றி மிகுதியாக விளக்கப்பட்டிருக்கிறதே யொழிய பக்தியோகத்தைப் பற்றி எந்த விளக்கமும் இல்லை. யோகாநுஷ்டானத்தைப் பெண்களும் செய்யலாம் என்று இந்நூலில் காணப்படுகிறது. ஸ்ரீராமாநுஜர் முதலான பூர்வாசாரியர்களால் அருளப்பட்ட ஸ்ரீபாஷ்யம் முதலான க்ரந்தங்களில் யோகாநுஷ்டானம் செய்ய ஸ்திரீகளுக்கு அதிகாரமில்லை என்று கூறியிருப்பதற்கு இது முரணாகவுள்ளது. மேலும் கிருஷ்ணமாச்சாரியருக்கு ஆழ்வார் திருநகரியில் நாத முனிகளே நேரில் தோன்றி இந்த யோக ரஹஸ்யத்தை உபதேசித்தார் என்றும், கிருஷ்ணமாச்சார்யர் அதைத்தம் நினைவில் வைத்துக்கொண்டு எழுதியதே இந்நூல் என்றும் இப்பத்திரிகையில் காணப்படுகிறது. ஆகையால் இந்நூல் உண்மையாக நாதமுனிகளுடையதா என்றறிய ஓலைச்சுவடி ஒன்று கூட இல்லை. இந்நூலின் இரண்டாவது

http://acharya.org

ச்லோகத்தில் "ஹாரீதமர்ஷணகுலதிலகம்ஹாரீதகோபாக்யம்" என்று நம்மாழ்வார் ஹாரீதமர்ஷண கோத்ரத்தில் உதித்தவர் எனக்கூறப் படுகிறது. இதற்கு வரலாற்று நூல்களில் ஆதாரம் இல்லை. இக்காரணங்களால் இந்நூல் நாதமுனிகளுடையதாக இருக்க இடமில்லை என்று விளங்குகிறது.

S. ரங்கநாதன், சென்னை--15

14. "ஓம் சக்தி" (**101**, மௌண்ட் ரோடு, கிண்டி, சென்னை —**32**) என்னும் (திரு பகீரதனை ஆசிரியராகக் கொண்ட) மாத இதழில் "ஸ்ரீவேங்கட நாத விஜயம்" என்னும் தலைப்பில் 'விஷ்ணுப்ரியா' எழுதிவரும் கட்டுரையில் 'உடையவர் திருவேங்கடமுடையானைப் பெருமாளாக மாற்றிவிட்டார்' என்றும் "ஸ்ரீநிவாஸன் என்னும் பெயரைச் சூட்டியதே கிருஷ்ணதேவராயரின் தம்பி அச்சுதராயர் தான்" என்றும் பல பொய்கள் எழுதப்பட்டு வருகின்றன. விமர்சிக்க வேண்டுகிறேன்.

சிலப்பதிகாரத்திலும், ஆழ்வார்களாலும் திருவேங்கட முடையான் திருமாலாகவே ஆயிரக்கணக்கான வருடங்களாகப் பாடப்பட்டிருப்பதை எத்தனையோ முறை எடுத்துக் காட்டிப் பொய்யர்களின் பிதற்றல் மறுக்கப்பட்டுவிட்டது குமுதத்தில் இந்தச் சர்ச்சை கிளம்பியபோது நம் மறுப்புரை 'அரசு' பதிலில் வெளியிடப்பெற்று "திருமால் என்று நிலை நாட்டியாயிற்று" என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. இன்றுவரை இதை மறுத்தவர் யாருமில்லை. ஒருமுறை திரு பகீரதன் நம் வீட்டிற்கு வந்தபோது "ஓம் சக்தியில் பல தவறான விஷயங்கள் வெளியிடப்பெற்று நம்மால் மறுக்கப் படவேண்டியுள்ளதே" என்று கேட்டேன். "பல தரப்பட்டவர்கள் எழுதுவதால் அப்படி வந்துவிடுகிறது; நீங்கள் தாராளமாக மறுக்கலாம்" என்றார். 'அப்பட்டமான பொய்களான இத்தகைய விஷயங்களாவது வெளிவராமல் பார்த்துக் கொள்வது பத்திரிகை ஆசிரியரான அவரது பொறுப்பு என்று உணர்த்தி, அவருக்கும் இவ்விதழை அனுப்புகிறோம்.

http://acharya.org

சுவாமி ஞா மிக்கேல் சேசர், நற்செய்தி ஆசிரமம், குடியிருப்பு குற்றாலம்.

15. 11-9-93. தினமணி—பக்கம் 4ல் விவேகாநந்தரின் சிகாகோ சொற்பொழிவைப்பற்றிய செய்தியில், "எல்லாச் சமயங்களும் ஒரே இலக்கை நோக்கிச் செல்லும் வெவ்வேறு பாதைகள்" என்னும் கருத்து வலியுறுத்தப்படுகிறது. இது பற்றிய என் கருத்தைச் சுருக்கமாகக் கொடுத்திருக்கிறேன். அதை உங்களுடைய வாசகர்களுக்கு வெளியிட்டு உங்கள் கருத்துக்களையும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஞா. மிக்கேல் சேசர் பாதிரியாரின் கருத்து

இந்தக் கொள்கை உலகில் சன்மார்க்கத்தை அழித்து வருகிறது. உலகின் இன்றைய அவலநிலைக்குக் காரணமே இது தான்.

இதில் தெளிவுபடுத்த வேண்டிய இரண்டு முக்கியப் பகுதிகள் இருக்கின்றன. "ஒரே இலக்கு": அது எது? "அதை நோக்கித்தான் செல்கின்றன"; "நோக்கி" என்றால் போய்ச்சேரும் என்று பொருளா? அல்லது போகாமலும் இருக்கலாம் என்பது பொருளா? (போகும் அல்லது போகாது என்பதைக் கண்டது யார்?)

இது ஒரு பொறி. இதில் பலருடைய அறிவு சிறகினை இழந்து சிக்கிக் கொள்கிறது. எல்லோரையும் மதிக்கிற மாதிரி, எல்லோரும் இதன்படி ஒன்றுபடவேண்டும் என்ற மாதிரி, மத வாதங்களும் சண்டைகளும் இதனால் ஓய்ந்து விடும் என்றபடி இது தோற்றம் அளிக்கிறது. ஆனால் எந்த மதத்தையும் யாரும் அனுசரிக்கவிடாமல் இது தடுக்கிறது. பெரும்பாலானோர் தம் மதத்தையோ பிறர் மதத்தையோ தெரிந்துகொள்ள முயலாமலே எல்லாம் தெரிந்தாற் போல் பேசி மக்களை நாத்திகராக்கி வருகின்றனர். (சண்டைகள் ஆணவம் சுயநலம் பொறாமை முதலிய துர்குணங்களால் வருமே யொழிய மதத்தைப் பின்பற்றுவதாலல்ல.)

நாத்திகமும் ஒரு மதமே. அதுவும் அதே இலக்கை, மனித கதியை நோக்கித்தான் செல்கிறதா? மதம் என்றால் என்ன என்றே தெரியாதவரது கொள்கை இது. ஒன்றுக்கொன்று முரண்படும் மதங்கள் எப்படி ஒரே இலக்குக்கு யாவரையும் இட்டுச் சொல்லும்? இது அறிவுக்கே முரணான கொள்கையாகும்.

http://acharya.org

"கிறிஸ்துவின் கத்தோலிக்க அருட்சாதன அன்பு வாழ்க்கை ஒன்றே மனிதகதிக்கு அவனை இட்டுச் செல்லும் பாதையாகும். அதன் வெவ்வேறு அம்சங்களை ஏற்று வாழும் அளவுக்கு ஒவ்வொருவரும் சன்மானம் பெறுவர்" என்பது கத்தோலிக்க மதக் கோட்பாடாகும். இதேபோல் ஒவ்வொரு மதத்தவரும் தத்தம்வழியைச் சொல்வர். அதைக் கேட்டறிந்து செயல்படவே சமயக் கலந்துரையாடல் எனும் ஏற்பாடாகும்.

ஸுதர்சனம் ஆசிரியரின் விமர்சனம்

"எல்லாச் சமயங்களும் ஒரே இடத்தை நோக்கிச் செல்லும் வெவ்வேறு பாதைகள்" என்று பத்திரிகைகளிலும் வானொலி தொலைக்காட்சி முதலியனவற்றிலும் இடைவிடாமல் செய்யப்படும் பிரசாரம் பொய்யை அடிப்படையாகக் கொண்டது— என்பதைப் பல வருடங்களாக நாம் "ஸர்வசமய சமரசம்" '(TOLERATION OR EQUALIZATION)' எனும் நூலிலும்' மற்றும் பல கட்டுரைகளிலும், சாதிமத ஆராய்ச்சி இரண்டாம் பாகத்திலும் விளக்கிவந்திருக்கிறோம். "எம்மதமும் சம்மதமா?" என்னும் தலைப்பில் இவர் எழுதிய ஒரு கட்டுரையை வெளியிட்டு, 'சாதிமத ஆராய்ச்சி' இரண்டாம் பாகம் பக்கம் 6 முதல் 10 வரையில் விமர்சனம் செய்திருக்கிறோம். "சமயக் கலந்துரையாடலால் ஏது உண்மையெனக் கண்டுபிடித்து மக்களுக்கு வழிகாட்டி அனைவரையும் ஒன்றுபடுத்த மதத் தலைவர்கள் முன்வரவேண்டும்" என்று இவர் எழுதிவருவது நடைமுறைக்கு ஒவ்வாது என்பதை, சாதிமத ஆராய்ச்சி இரண்டாம் பாகத்தில் பக்கம் 33 முதல் 36 வரை நிலைநாட்டியிருக்கிறோம். இந்துமதக் கொள்கைகளையும் இந்துமத தெய்வங்களையும் வேத சாத்திரங்களையும் சரியாகப் புரிந்து கொள்ளாமல இழித்தும் பழித்தும் கூறும் இழிசெயலைக் கிறிஸ்துவ மதத் தலைவர்கள் இன்றும் செய்து வருகிறார்கள். அப்படியிருக்கும்போது கலந்துரையாடலால் அனைவரையும் ஒன்றுபடுத்தி விடலாம் என்று பாதிரியார் எண்ணுவது கற்பனைக் கோட்டையாகவே முடியும். இந்நிலையில், பாதிரியார் கூறும் வழியான கத்தோலிக்கமதக் கோட்பாட்டை மற்ற மதத்தினர் ஒப்புக்கொள்ள இயலாது என்பதும், "நாராயணனே பரம்பொருள், அவனைச் சரணமடைபவர்கள் தான் இவ்வுலகப்

http://acharya.org

பலன்களோடு கூட மோக்ஷலோகத்தையும் அடையமுடியும். மற்றவர்கள் இவ்வுலகப் பலன்களை மட்டுமே அடையமுடியும்'' என்பதைப் போன்ற மற்ற மதங்களின் கோட்பாடுகளைக் கிறிஸ்துவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்பதும் வெளிப்படை. ஆகையால், மதசகிப்புத்தன்மை ஒன்றே மக்களிடையே ஒற்றுமைக்கு உண்மையான வழியாகும். கையிலங்கு நெல்லிக்கனி போலும், வெள்ளிடைமலை போலும் உள்ள இவ்வுண்மையைப் பாதிரியார் இப்போதாவது ஏற்றுக் கொள்வார் என்று நம்புகிறோம்.

கோ. நம்பெருமாள், கும்பகோணம்

16. எல்லா தெய்வங்களும் ஸ்ரீமந்நாராயணனின் அம்சங்கள் என்றும் அவற்றை வணங்குவது அவனையே சென்றடையும் என்றும் நாம் ஒப்புக் கொள்கிறோம். அந்த அடிப்படையில் வேறு தெய்வங்களையோ அவைகளின் பக்தர்களையோ நிந்திப்பது பரமபுருஷனையே போய்ச் சேருமல்லவா? தங்கள் எழுத்துக்களில் சில அவ்வாறு உள்ளனவே. விளக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

''எந்த தெய்வத்தை வணங்கினாலும் அந்தர்யாமியான (உள்ளுறை பொருளான) என்னையே அது வந்தடையும்'' [கீதை 9—23] என்று கூறியிருக்கும் கண்ணன் அந்த ஶ்லோகத்திலேயே அவர்கள் மற்ற தேவதைகளை வழிபடுவது ''அவிதி பூர்வகம்'' [முறையற்ற வழிபாடு] என்று அருளிச் செய்திருக்கிறான். மேலும், கீதை 7—23ல ''புல்லறிவாளர்களான தேவதாந்தர பக்தர்களுக்கு அவ்வாராதனை பலன் அல்பமாகவும் முடிவுடையதாகவும் ஆகிறது. ஏனெனில்: தேவர்களை ஆராதிப்பவர்கள் தேவர்களை அடைகின்றனர்; என்னுடைய பக்தர்கள் என்னை அடைகின்றனர்'' என்று எம்பெருமானை யொழிந்த மற்ற தெய்வங்களைப் பற்றுகிறவர்களுக்கு மோக்ஷம் கிடையாதென்றும் அவர்கள் புல்லறிவாளர்கள் என்றும் கண்ணன் கூறுகிறான். இதை அடிப்படையாகக் கொண்டே ''காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார், பேணிலும் வரம் தர மிடுக்கிலாத தேவரை ஆணமென்று அடைந்து வாழும் ஆதர்காள்!'' [திருச்சந்த 69], ''சிறியார் சிவப்பட்டார்'' [நான் திருவ 6] முதலான பாடல்களில் ஆழ்வார்களும் 'எம்பெருமானை நேரே தொழுது இவ்வுலகப் பலன்களோடு கூட மோக்ஷத்தையும் அடையலாயிருக்க, மற்ற தெய்

http://acharya.org

வங்களைத் தொழுது ஸம்ஸாரத்தில் உழல்கின்றீர்களே' என்னும் வருத்தத்தால் ஏற்பட்ட கருணையாலே தேவதாந்தர பக்தர்களை இடித்துக் கூறி அவர்களைத் திருத்த முயன்றிருக்கிறார்கள். நம்முடைய விஷ்ணுசித்தவிஜயம், ஸுதர்சனர் பதில் முதலானவைகளில் நாம் மற்றதெய்வங்களின் தாழ்வையும், 'அவர்களை அடைபவர்கள் மோக்ஷமடைய முடியாது' என்பதுபோன்ற உண்மைகளையும் கூறிவருவது - பொதுஜனப் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற லக்ஷக்கணக்கானவர்களைக் கவர்ந்திழுக்கும் பெரிய பொதுஜன மேடைகள் (FORUMS) மூலமாக மற்றவர்கள் செய்யும் துஷ்பிரசாரத்தால் மயங்கி வைஷ்ணவர்கள் வழிதவறிப்போய் விடக்கூடாதே என்பதற்காகத்தான். இத்தகைய துஷ்பிரசாரங்களில் ஒன்று 2—8—93 இந்தியன் எக்ஸ்பிரஸ் சென்னைப் பதிப்பில் ஒரு படத்துடன் கூடிய கட்டுரையாக வெளியிடப் பட்டிருப்பதை சென்னை —5 அப்பத்தூரிலுள்ள நமது அன்பர் வி. ஸ்ரீநிவாஸன் அவர்கள் நமக்கு அனுப்பி, தக்கபதிலுரைக்கும்படி கேட்டிருக்கிறார். அந்தக்கட்டுரையில் சரபரூபங்கொண்ட சிவன் நரசிங்கப்பெருமானைக் காலால் கிழிப்பதாகச் சித்திரம் வரையப்பட்டு, திருபுவனம் என்னும் ஊரின் தல புராணப்பொய்க்கதையும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பொய்க்கதை வேதங்களிலோ, இதிஹாஸங்களிலோ, சான்றோர்கள் கொண்டாடும் ஸாத்விகபுராணங்களிலோ, பண்டைத் தென்மொழி வடமொழி இலக்கியங்களிலோ காணப்படாததால் பிற்கால விஷ்ணு த்வேஷிகளால் புனையப்பெற்றது என்று நிலைநாட்டி தினமணிகதிரில (25-6-89) இதழ் பக்கம பதிலிலில் வெளியிடச்செய்திருக்கிறோம். நம்முடைய ஸுதர்சனர் பதில் பத்தாவது சதகம் 81 98 பதில்களைக் காணலாம். இந்தப் பொய்க்கதையைச் சிறிதுகூட வெட்கமில்லாமல் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'ஸில் மறுபடியும் விஷ்ணு த்வேஷிகள் பிரசுரித்திருப்பது நல்லோர்களால் கண்டிக்கத்தக்கது. நிற்க, எம்பெருமானை இப்படி இழித்துரைப்பவர்களுக்கு பதிலாக ஆதாரங்காட்டிமற்ற தெய்வங்களின் தாழ்வை எடுத்துக்காட்டுவது அவர்களை நிந்திப்பதும் ஆகாது. மற்றதெய்வங்களின் பக்தர்கள் இதைக்காணநேர்ந்தால், நாம் எடுத்துக்காட்டும் ஆதாரங்கண்டு அதை ஏற்றுக்கொள்ளவேண்டும், அல்லது தக்க ஆதாரங்களுடன் அதை மறுக்க முன்வரவேண்டும்; இவ்விரண்டும் செய்யாமல் 'புண்படுகிறோம்' எனக்கூறுவது பொருளற்றது.

http://acharya.org

N. V. நாயுடு, (முன்னாள் LIC உயர் அதிகாரி) 20, கோகுலம் காலனி எக்ஸ்டென்ஷன், கோவைபுதூர்—கோவை—42.

17. நிகழ்கிற ஸுதர்சனர் பதில் 11-வது கேள்வியில் காமகோடிபீடாதிபதிக்குக் கனகாபிஷேகம் ஸ்வர்ண புஷ்பம்போன்ற பாராட்டுதல் பற்றிய விமர்சனத்தில் கீழ்க் கண்ட மநுவசநத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அபி₄பூஜிதலாப₄ம்ஸ்து ஜுகு₃ப்ஸேதைவ ஸர்வஶ: ।
அபி₄பூஜிதலாபை₄ஶ்ச யதிர் முக்தோऽபி ப₃த்₄யதே ॥
[மநு 6-58.]

[(பிறரால்) பாராட்டப்பெற்றுக் கிடைத்த பொருளைத் (துறவி) எந்தச் சூழ்நிலையிலும் அருவருக்கவேண்டும். (ஏனெனில்) அப்பொருளால் (பற்றுக்களினின்று) விடு படும்நிலையிலுள்ள துறவியும் கட்டுண்ணைப்படுகிருன்.] இதை வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

துறவியானவன் புகழ், பணம், பாராட்டு ஆகிய மூன்றையும் அடியோடு துறந்திருக்கவேண்டும். இம்மூன்றையும் தேடி ஓடுகின்றவர்களே இக்காலத்தில் 'ஜகத்குரு' என்று அரசியல்வாதிகளாலும், பொதுஜனப் பத்திரிகைகளாலும், பெரும்பாலான பொதுமக்களாலும் கொண்டாடப்படுகிறுர்கள். இந்நிலையில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் மநுவசனம்போன்ற எண்ணிறந்த சாஸ்திரவாக்கியங்கள் செல்லாக் காசாகவே ஆகின்றன.

S. ஆனந்தன், சென்னை—90.

18. ஸம்ப்ரதாய விஷயங்களில் உண்மையான ஈடுபாடுள்ள ஸ்ரீவைஷ்ணவ நண்பர் ஒருவரால் கவரப்பட்டு நான் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து கொண்டேன், ஆயினும் அடிக்கடி 'பரமாத்மா, மோக்ஷம் போன்ற விஷயங்கள் உண்மைதானு' என்ற சந்தேகம் எழுகிறது. தெளிவுபெற வழி என்ன? 'தெளிவு இல்லாமல் இருக்கும்போது ஒருவன் திருமண் அணிவதும், ஸ்ரீவைஷ்ணவன் என்று தன்னைக் கூறிக்கொள்வதும் கூடாது' என்கின்றனர் சிலர். சாஸ்திரங்கள் மூலமாகமட்டுமே அறிந்து கொள்ளக்கூடிய

http://acharya.org

ஆத்மா, பரமாத்மா, மறுபிறவி, மோக்ஷம்போன்றவை இவ்வுலகில் துன்பப்படும் மக்களுக்கு ஆறுதலாக இருக்கட்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட சிலரது கற்பனையாக ஏன் இருக்கக்கூடாது? வெறும் நம்பிக்கையின் அடிப்படையில்தானே இவ்விஷயங்களை நாம் அணுகுகிறோம். நம்பிக்கை உண்மையாகிவிடுமா? பகவத் விஷயங்களில் ஸ்வாமியின் சொந்த அநுபவங்கள் ஏதேனும் உண்டா?

நாம் காணும் இவ்வுலகில் கணக்கற்ற நக்ஷத்ரங்களும், ஸூர்யன், சந்திரன் முதலானவையும் ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுவதைக் காண்கிறோம். இவையெல்லாம்—'எல்லாம் அறிந்தவனும், அனைத்தும் வல்லவனுமான ஒரு பரம்பொருளால் இவ்வுலகம் ஆட்டிவைக்கப்படுகின்றது.' என்பதை நமக்குப் புலப்படுத்துகின்றது. இப்பரம்பொருளைப்பற்றி உலகிலுள்ள பல மதங்களும் பலவாறு பேசுகின்றன. ஒவ்வொரு கிரந்தத்தைத் தங்களுக்கு ப்ரமாணமாகக் கொள்கின்றன. நம் நாட்டில் உள்ள ஆஸ்திக மதங்களுக்கு வேதங்கள் ப்ரமாணமாகின்றன. மற்ற மதங்களுக்கு உள்ள ப்ரமாணங்களைக் காட்டிலும் வேதங்களுக்குப் பல சிறப்புக்கள் உண்டு. பரந்து விரிந்திருக்கும் நம்முடைய பாரத தேசத்தில் உள்ள எல்லா வைதிகர்களாலும் அநாதி காலமாக ஒரேவிதமான ஸ்வரத்துடன் அந்தந்த வேதங்கள் ஓதப்படுகின்றன. இவை நூல்களில் எழுதப்பட்டுப் பரவாமல் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக ஆசார்ய சிஷ்ய உபதேசக்ரமத்திலேயே பரவிவந்திருக்கின்றன. இவற்றிலிருந்து மற்ற மதங்களின் ப்ரமாணங்களைக் காட்டிலும் இவை மிகவும் தொன்மைவாய்ந்தவை என்று விளங்குகிறது. ஒரு பெரிய நாட்டில் பல்லாயிரக்கணக்கான வருடங்களாக நான்கு வேதங்களும் தனித்தனி ஸ்வரத்துடன் ஒரே மாதிரியாக ஓதப்பட்டுவருவது என்பது எல்லாம் வல்ல பரம்பொருளின் ஸங்கல்பத்தாலேயே நடைபெற முடியும் என்பது எளிதில் உணரத்தக்கது. இந்த வேதங்கள் இன்ன காலத்தில் தோன்றியவை என்று இன்றுவரை எவராலும் அறுதியிட முடியவில்லை. ஆகையால் அந்த வேதங்களிலும், அவற்றை விளக்க வந்த மிகப்பழைய நூல்களான ஸ்ம்ருதிகளிலும்

http://acharya.org

இதிஹாஸங்களிலும் 'அந்த வேதங்கள் எவராலும் (பரம் பொருளாலும்கூட) இயற்றப்படவில்லை, என்றும் அழியா தவை, பரம்பொருளால் முதலில் படைக்கப்பட்ட பிரமனுக்கு உபதேசிக்கப்பெற்று குரு சிஷ்யக்ரமத்தால் உலகில் பரவி வருபவை' என்று ஒருமுகமாக முழங்கப்படுவது குறித்து நாம் ஐயமுறுவதற்கு இடமேயில்லை. அந்த வேதங்களில் திருமால் ஒருவனே பரம்பொருளாக முழங்கப்படுகிறான் என் பதை விஷ்ணுசித்தவிஜயம் முதலான நூல்களில் விளக்கி யிருக்கிறோம். ஸ்ம்ருதிகளும், இதிஹாஸங்களும், மநு, வால் மீகி, வியாஸர் முதலான பண்டைச்சான்றோர்களும் இதை மிகத்தெளிவாக விளக்கியுள்ளதையும் எடுத்துக் காட்டியிருக் கிறோம். இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட வடமொழி தென்மொழி இலக்கியங்களை ஆராய்ந்து இவ்விஷயம் சான் றோர்கள் அனைவராலும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளப்பட் டிருப்பதை, 'சாதிமத ஆராய்ச்சி,' 'சங்ககாலத்தமிழர் சமயம்' முதலான நூல்களில் நிலைநாட்டியிருக்கிறோம். உபநிஷத், ப்ரஹ்மஸூத்ரம் முதலானவற்றுக்கு விளக்கவுரை எழுதிய சங்கரர், ராமாநுஜர், மத்வர் முதலான வைதிகமதாசார்யர் களும் இவ்விஷயத்தில் ஒரே கருத்துடையவர்கள் என்னும் விஷயத்தை 'சங்கரரும் வைஷ்ணவமும்' என்னும் நூலில் தெளிவுபடுத்தியிருக்கிறோம். திருமாலுக்குத் தாழ்வுகூறி மற்ற தெய்வங்களைப் பரம்பொருளாக ஏற்கும் சைவம் முதலான மதங்கள் மிகப்பிற்காலத்தில் பரவியவையே என்பதையும் இந்நூல்களில் நிலைநாட்டியிருக்கிறோம். ஆகையால் 'ஸ்ரீமந் நாராயணனே பரமாத்மா,' 'அவனுடைய உலகமான பரம பதத்தை அடைவதே தலைசிறந்த மோக்ஷம்' என்று வேதங் களிலும், மநு, வால்மீகி, வியாஸர்போன்ற முனிசிரேஷ்டர் களாலும், சங்ககாலச் சான்றோர்களாலும், ஆழ்வார்களாலும், விசிஷ்டாத்வைதத்வைதமத ஆசார்யர்களாலும், சைதன்யர், வல்லபர், துளஸீதாஸர், ஜயதேவர், தியாகராஜர் போன்ற பர மாத்ம அநுபவம் உள்ள எண்ணிறந்த பிற்காலப் பெரியவர்களாலும் ஒருமுகமாகக் கூறப்படும் இவ்விஷயத்தில் 'கற்பனை' என்று ஐயமுறுவதற்கு இடமேயில்லை. தலைசிறந்த வேதக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டிருப்பதும், அப்படிக்

http://acharya.org

கற்ற அனுஷ்டானங்களை உடையதுமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதமே வைதிகமதங்களில் தலைசிறந்தது என்பதை நடுநிலை நின்று ஆராய்ந்தால் எளிதில் உணரலாம். உங்களைப்போன்றவர்களின் ஐயத்தைப் போக்குவதற்கு இந்த விளக்கம் போதுமென்று நினைக்கிறேன்.

இனி எனது அநுபவம்பற்றிச் சிறிது கூறுகிறேன். கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக வேதங்கள், உபநிஷத்துக்கள், கீதை, பிரம்மஸூத்ரம், ஆழ்வார்களின் அருளிச்செயல்கள், ஆசார்யர்களின் கிரந்தங்கள் ஆகியவற்றை விளக்கி அடியேன் பல்லாயிரக்கணக்கான பக்கங்கள் உள்ள பற்பல கிரந்தங்களை எழுதிவரும்போது, பற்பலவிடங்களில் பல அரியபெரிய அர்த்தங்களை அந்தர்யாமியாயிருந்து அடியேனுக்குத் தெரிவித்துஎம்பெருமான் எழுதச்செய்வதை உணர்ந்து வருகிறேன். இருபது வருஷங்களுக்கு முன் பரமநாத்திக வாதங்களைச் செய்த அக்னிஹோத்ரியோடு போராடி 'அக்னிஹோத்ரியும் வைணவமும்' எனும் நூலை எழுதி வருகையில் மனமும் உடலும்மிகத்தளர்ந்து ஒருநாள் முழுவதும் நினைவிழந்து எம்பெருமான் அருளால் பிழைத்து ஆஸ்பத்திரியில் சிலநாள் இருக்கையில் மிகுந்த வைராக்யம் ஏற்பட்டு "அடியேனைத் திருவடிசேர்த்துக்கொள்ளவேண்டும்" என்று எம்பெருமானிடம் கதறியபோது என்னுடைய குலதனமும் குலதெய்வமுமான சக்ரவர்த்தித்திருமகன் "கண்ணுள்ளே நிற்கும்" என்று ஆழ்வார் அருளிய ரீதியில் மனத்திலே காட்சியளித்து இந்த விசிஷ்டாத்வைத தர்சனம் பிற்காலத்தில் ஒரு முக்கோற்பகவராலும் அவரது சிஷ்யரான க்ருஹஸ்தராலும் உலகெங்கும் பரவும் என்பதற்கு அறிகுறியான காட்சிகளைக்காட்டி எனக்கு ஆறுதல் அளித்தான். இந்நிகழ்ச்சியை அன்று முதல் இன்றுவரை அந்தரங்கர் பலரிடம் கூறியிருக்கிறேன். இது கனவுக்காட்சியல்ல; மானஸஸாக்ஷாத்காரம் என்னும் மனக்காட்சியாகும். கண்ணை மூடியதும் நெஞ்சென்னும் உட்கண்ணாலே தோன்றும் நனவுக்காட்சியே ஆகும். இப்படிப் பல அநுபவங்கள் உண்டு. அவை உணர்ந்து அநுபவிக்கப்பட்டவை; விளக்கிச் சொல்லக்கூடியவை அல்ல.

http://acharya.org

S. முரளி, அந்தநல்லூர்.

19. தினமலர் — அக்டோபர் 16 கதைமலரில் 'அறிவோமா ஆன்மீகம்' என்னும் பகுதியில் "த்வைதம் அத்வைதம் என்றால் என்ன?" என்னும் கேள்விக்கு "சைவம் வைணவம் இரண்டும் சேர்ந்தது தான் த்வைதம்; அத்வைதம் என்பது ஒரே மதம் என்று பொருள்படும்." என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. தினமலர் அக்டோபர் 30 கதைமலரில் "மும்மூர்த்திகளில் ஒருவரான விஷ்ணுவிற்கு வாகனமாகவும், சிவனுக்கு மூலகாரணமாகவும் கருடாழ்வார் எப்படி இருக்க முடியும்?" என்ற கேள்விக்கு "சிவன்தான் ஆதி அந்தம் எல்லாம். சிவனுக்கு மூலகாரணம் எவரும் இல்லை. விஷ்ணுவிற்கு மட்டுமே கருடாழ்வார் வாகனமாகஉள்ளார்." என்று பதிலளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய அபத்தமான பதில்களை எழுதக்கூடாது என தினமலருக்கு அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சைவம் வைணவம் இரண்டும் சேர்ந்ததுதான் த்வைதம்" என்றும், "அத்வைதம் என்பது ஒரே மதம் என்று பொருள்படும்" என்றும் நம் நாட்டிலுள்ள மதங்களின் அரிச்சுவடியை அறிந்தவர்கள் கூட எழுதமாட்டார்கள். "'பரம்பொருளும் உலகமும் வெவ்வேறு' என்பது த்வைதம்; 'வெறும்அறிவானபரம் பொருள் ஒன்றே உண்மை; மற்றவை அனைத்தும் அடங்கிய உலகம் ஒரு பொய்த் தோற்றமே' என்பது அத்வைதம்" என்பதே இதற்கு சரியான பதில். இந்தக்கேள்விக்கு அபத்தமான பதிலை அளித்திருப்பதிலிருந்தே இந்தப்பதிலை எழுதியவர் த்வைதம், அத்வைதம், சைவம், வைணவம் ஆகிய மதங்களின் உண்மைகளை உணராதவர் என்று விளங்குகிறது. இரண்டாவது பதிலிலிருந்து இவர் ஒரு சைவர் என்பதும் விளங்குகிறது. நியாயமாக இதற்குப் பதிலளிப்பதாக இருந்தால் "உங்கள் கேள்வியே தவறு. 'கருடாழ்வார் சிவனுக்கு மூலகாரணம்' என்று யாரும் சொல்லவில்லை. 'திருமாலே சிவன் முதலான அனைவருக்கும் மூலகாரணம்' என்று கூறுவது வைஷ்ணவ மதம்; 'சிவனே அனைவருக்கும் மூலகாரணம்' என்று கூறுவது சைவமதம்."

http://acharya.org

என்று எழுதியிருக்கவேண்டும். தினமலர்ப் பத்திரிகை சைவர்களாலேயே நடத்தப்பட்டு, சைவச் சார்புடைய கட்டுரைகளையே மிகுதியாக வெளியிடுகிறது. முன் இதழ் சிறுவர் மலர் ஒன்றில் நாரதருக்கே பட்டைபட்டையாக விபூதி தீட்டப் பட்டிருந்த அதிசயத்தையும் கண்டோம். இன்று நம் நாட்டிற்கு வியாசர், வால்மீகி, பராசரர், சுகர் முதலானோர் இதிஹாஸ புராண கர்த்தாக்கள் அல்லர். இந்த நூல்களைப்பற்றி எதுவுமே அறியாமல், சைவ சம்பந்தப்பட்ட ஒரு சில தமிழ் நூல்களை மட்டும் படித்தவர்கள் தான் பொதுஜனப்பத்திரிகைகளிலும், டி.வி., வானொலி, சினிமா, நாடகம் போன்ற பொதுஜனத் தொடர்பு சாதனங்களிலும் தங்களையே புராண கர்த்தாக்களாக ஆக்கிக்கொண்டு, மனம் போனபடி புராணக் கதைகளைக் கற்பனையாக இவற்றில் சித்திரித்து வருகின்றனர். வேதத்திலும், மிகப் பழைமை பெற்ற இதிஹாஸ புராணங்களிலும், சங்க நூல்கள் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலும் "திருமாலே பரம்பொருள், மற்ற அனைவரும் அவனுடைய படைப்புக்களே" என்று ஒருமுகமாக முழங்கியிருப்பதை மறைத்து விட்டு, நாயன்மார்களுடைய தேவார திருவாசகங்களையும், அவர்களுக்கும் பின்னால் ஆதி சங்கரர் பெயரில் கற்பிக்கப்பட்ட சிவானந்த லஹரி, ஸௌந்தர்ய லஹரி முதலான நூல்களையும், மிகப் பிற்பட்ட சித்தர் பாடல்களையும் ஆதாரமாகக்கொண்டு "சிவனே பரம்பொருள்" என்றும் "சக்தியே பரம்பொருள்" என்றும் மனம்போனபடி சித்திரித்து வருகிறார்கள். தினமலர் நாளிதழில் ஆங்காங்கு நடைபெறும் சொற்பொழிவுகளை வெளியிடும் போதும் வைஷ்ணவர்களுடைய உபன்யாஸங்கள் எதையும் வெளியிடுவதில்லை. வைஷ்ணவரல்லாதாருடைய சைவ, சாக்தச் சொற்பொழிவுகளையே வெளியிடுகிறது தினமலர், உதாரணமாக பரமக்குடி சுந்தரராஜப்பெருமாள் கோவில் நவராத்திரி விழாவில் ராம கிருஷ்ணன் என்பவர் "சக்தியின் தத்துவம்" என்பது பற்றி உரையாற்றும் போது "சிவன் சேதநம் என்றும், சக்தி அசேதநம் என்றும் சொல்லப்படும்" என்றும் "அம்பிகை மூலப்ரக்ருதி எனவும் அழைக்கப்படுவாள். முத்தொழில் புரிபவளும் அவளே. 'அம்பிகையின் திருவடிகளில் மலரிட்டு வணங்கினால் அது மூவர் தலையிலும் விழும்' என்று சங்கரர் சொன்னார்" என்றும் கூறி,

http://acharya.org

அதற்குச் சில தமிழ்ப்பாட்டுகளையும் ஆதாரமாகக் காட்டியிருக்கிறார். [தினமலர் 6-11-93. பக்- 2] விஷ்ணுவைத்தாழ்த்திப் பேசும் இந்தச் சொற்பொழிவை எப்படிப் பெருமாள் கோயிலில் ஏற்பாடு செய்தார்கள் என்பதும், அங்கிருந்த வைஷ்ணவர்கள் இத்தகைய பேச்சை எப்படிப் பொறுத்துக்கொண்டிருந்தார்கள் என்பதும் விளங்கவில்லை. தினமலர்ப் பத்திரிகை இவ்வாறு ஒருதலைப்பக்ஷமாகக் கட்டுரைகளை வெளியிடாமல், சைவம் வைஷ்ணவம் ஆகிய இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்களின் சொற்பொழிவுகளுக்கும் இடமளித்து, கேள்வி—பதிலிலும் தக்கவர்களைக்கொண்டு திருத்தம் செய்து இனியாவது வெளியிட வேண்டும் என்று அறிவுறுத்துகிறோம்.

ஓர் அன்பர்

20. சென்னை—**113**. தரமணி ஸ்ரீஹயக்ரீவ வித்யாபீடத்தின் வெளியீடான "ஸ்ரீகாஞ்சீ பேரருளாளன்" என்னும் ஸ்ரீவைஷ்ணவ மாதப்பத்திரிகையில் "ஸ்ரீதத்வ ஸித்தாஞ்சன ஸங்க்ரஹம்" என்னும் தலைப்பில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பைத்தங்களுக்கு அனுப்பியுள்ளேன். இதன் ஆசிரியர் வித்வான் ஸ்ரீஉவே திருப்புட்குழி நரசிம்மதாதாசாரியஸ்வாமி, இக்கட்டுரை நம்முடைய விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தோடு பொருந்தியிருக்கிறதா என்று விமர்சிக்க வேண்டுகிறேன். இதனால் ஸம்பிரதாயச்சண்டைகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் வேண்டுகிறேன்.

ஸுதர்சனம் (552) ஸ்ரீமுககார்த்திகை இதழில் இக்கட்டுரையை விமர்சித்து "விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்" என்னும் கட்டுரையை எழுதியிருக்கிறேன். அதில் பிராட்டியைப்பற்றிய ஸ்ரீதேசிகனின் திருவுள்ளம் என்ன, மற்ற ஆசார்யர்களின் திருவுள்ளம் என்ன என்பதை விளக்கி, ஸ்ரீதத்வஸித்தாஞ்சன ஸங்க்ரஹத்தில் சொன்னபடி பிராட்டி தத்துவத்தை ஒப்புக் கொண்டால் நம்முடைய விசிஷ்டாத்வைத மதத்தின் அடிப்படைக்கே மூரணாகும் என்று ஸ்ரீதேசிகர் முதலான ஆசார்ய ஸ்ரீஸூக்திகளை ஆதாரமாகக் காட்டிச் சில கேள்விகளை வெளியிட்டு, இதை ஒரு விவாத விஷயமாக ஆக்காமல், அவரவர் கேள்விகளுக்குப் பதிலளித்து தங்கள் மனஸ்ஸாக்ஷியைத் திருப்தி செய்து கொண்டால் போதுமானது என்று எழுதியிருக்கிறேன்.

R. V. ஸ்ரீதரராமானுஜன், மதுரை.

21. ஸுதர்சனத்தில் வெளிவரும் "ஸ்ரீவிஷ்ணுசித்த விஜயம்-ஸ்ரீராமாயண நிர்ணயம்" தொடரில்— ஸ்ரீராமாவதாரத்திற்கு முன் பெருமாளுக்கு உதவும் பொருட்டு எல்லாத் தேவர்களையும் பிரமன் ஆணையிட்டிருக்க, சிவப்பிரான் மட்டும் ராக்ஷஸபக்ஷபாதியாகையாலே தன் அம்சமாக யாரையும் பிறப்பிக்கவில்லை என்று வால்மீகி ராமாயணத்தின் கருத்தை கோவிந்தராஜர் தம் உரையில் கூறியுள்ளதாக உள்ளது. இவ்வாறு ராக்ஷஸர்களிடத்தில் சிவப்பிரானுக்குப் பக்ஷபாதம் ஏற்படக்காரணம் என்ன?

சிவனுக்கு மற்ற தேவர்களைக்காட்டிலும் தமோகுணம் அதிகம். அதனால் தமோகுணம் மிகுந்துள்ள ஹிரண்யன், ராவணன், கும்பகர்ணன், பஸ்மாஸுரன் முதலான அஸுர ராக்ஷஸர்கள் சிவபக்தர்களாக ஆகித் தவம் செய்து அவரிடம் வரம்பெற்று அஸுரராக்ஷஸர்களுக்குத் தலைவர்களாக ஆனார்கள். ரஜஸ்தமோகுணம் மிகுந்தவர்களையும் படிப்படியாகத் திருத்துவதற்காக எம்பெருமானும் ப்ரஹ்ம ருத்ரர்களுக்கு அந்த குணங்களுள்ள அஸுர ராக்ஷஸர்களுக்குப் பல வரங்களை அளிக்கும் சக்தியைக் கொடுத்திருக்கிறான். ஆகையால் சிவன் அஸுர ராக்ஷஸ பக்ஷபாதியாயிருப்பதில் வியப்பில்லை. மேலும், சிவனுக்கு 'ஆஸுதோஷன்' (விரைவில் உகப்படைபவன்) என்று ஒரு பெயர் உண்டு. அஸுரராக்ஷஸர்கள் தன்னைக் குறித்துத் தவம் புரிந்தால் உச்சிகுளிர்ந்துபோய், விளைவுகளை அறியாமல் அவர்களுக்கு வரங்களை வாரிவழங்கும் இயல்வு சிவனுக்கு மிகுதி. தன்னால் வரங்களும், வாளும் அளிக்கப்பெற்ற இராவணனைக் கொல்லத் தான் உதவுவது சரியல்ல என்று சிவன் நினைத்திருக்கலாம். சிவனுக்கு இந்த தோஷத்தைத் தவிர்ப்பதற்காகவே கம்பன் 'சிவனுடைய அம்சமாகவே வாயு புத்திரனை அனுமன் பிறந்தான்' என்று தன் காவியத்தில் கூறினான்.

http://acharya.org

K A. பார்த்தசாரதி—சென்னை.

22. கடந்த பல வருடங்களாகப் பொதுஜனப் பத்திரிகைகளில் காமகோடிபீடாதிபதி முதலான பலர் விஷ்ணுவைத் தாழ்த்திக் கூறுவதை ஆதாரத்தோடு மறுத்து எழுதி வருகிறீர்கள். ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் இவ்வருடம் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கர் தமது அருள்மொழியில் பீடாதிபதியின் வாதங்களின் நேர்மையின்மையை விரிவாக விளக்கி வருவதை ஸுதர்சனம் வாசகர்களுக்குச் சுருக்கமாக எடுத்துக்காட்டும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீமதழகியசிங்கர் பரதத்வ நிர்ணயம் செய்து வருவதை—ஸமீபத்தில் அஹோபிலத்தில் அவரை தண்டன் ஸமர்ப்பித்த போது அடியேன் கொண்டாடிப் பேசியதை ஸுதர்சனம் [551] ஐப்பசி இதழ் பக்கம் 3ல் காட்டியிருக்கிறேன். மார்கழி இதழ் வரையில் விஷ்ணுபரத்வத்துக்கு முரணாகப் பிறர் பேசி வரும் வாதங்களை ஸ்ரீமதழகிய சிங்கர் விரிவாக மறுத்திருக்கிறார். ஐப்பசி ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவில் ஆதிசங்கரர் தம் பாஷ்யங்களில் விஷ்ணுபரத்வ நிர்ணயம் செய்திருப்பதைக் காட்டிவிட்டு, இந்த விஷயத்தை ஸ்ரீநாராயணபட்டத்ரி ஸ்ரீநாராயணீயத்தில் 'ஶ்ரீ ஶங்கரோऽபி பகவாந்' என்று தொடங்கும் ஶ்லோகத்தில் தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார். ['சங்கரரும் வைணவமும்' என்னும் நமது நூலில் ஶங்கரபாஷ்ய வாக்யங்களும் பட்டத்ரியின் ஶ்லோகமும் முன்பே நம்மால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன] மேலும் அப்பைய தீக்ஷிதர் தம்முடைய ஆநந்த ஸஹரீ வ்யாக்யானமான சந்த்ரிகையில் பராசரர், வ்யாஸர் முதலானோர் நிர்ணயித்த விஷ்ணு பரத்வத்துக்கு முரணாகப் பேசுபவர்களைத் தம்முடைய நாக்கு முன்வரவில்லை என்றும், இப்படி ஒருவன் பேசினால் அது வேதவைதிக த்ரோஹம் என்றும், அப்படிப் பேசுபவர்களுடைய தலை நூறு சுக்கல்களாக வெடித்துவிடுமென்றும் எழுதியிருப்பதை ஸ்ரீமதழகியசிங்கர் எடுத்துக்காட்டியிருக்கிறார். [நம்முடைய தமிழ் விவரணத்

http://acharya.org

தோடு கூடிய விசிஷ்டாத்வைத விஜயம் முதல் பாகத்தில் இது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது] அதற்கு மேல் ஸ்ரீமதழகியசிங்கர் எழுதியிருக்கும் அருள்மொழி வாக்யங்களை அடுத்தபடி தருகிறோம்.

"இப்படி இருக்கத் தற்காலத்தில் சிலர் சிவனையே பரதெய்வமாகக் கொள்வதும், அப்படியே பிறர்க்குச் சொல்வதும் அப்படியே அதைக் கேட்டு மற்றையவர்கள் விஷ்ணுவை த்வேஷிப்பதும் நடந்து வருகிறதே. இவையனைத்தும் கலிகோலாஹலத்தினால் ஏற்பட்ட விளைவுகள். ஸ்ரீமந்நாராயணனே பரதத்த்வம். மற்றைய தேவதைகள் —ப்ரஹ்மா முதலானோர் யாவருமே இவருக்குச் சரீரமாய் இருப்பவர்களே ஆவார். ஆகவே இவர்களைப் பரதெய்வமாக நினைக்கலாகாது. 'தேவதைகளுக்குள் பேதம் பாராட்டக் கூடாது. எல்லாத் தேவதைகளும் ஒன்றே; ஹரியும்—சிவனும் ஒன்றே' என்றெல்லாம் கூறிவருகிறார்கள். இம்மாதிரி சொல்வதால் பெரும் பாபம் உண்டு என்பதாக வ்யாஸரே மஹாபாரதத்தில் சொல்லியுள்ளார். ஹரியும் சிவனும் ஒன்றே என்பதோடு மட்டுமல்லாமல் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவுருவத்தின் நிறம் கருமை என்பதைக் கொண்டு இவனைத் தாமஸ தேவதையாகவும், சிவன் சாம்பல் பூசிக்கொண்டு வெண்மையாக இருப்பதால் இவனை ஸாத்த்விக தேவதையென்றும் வாய் கூசாமல் சாஸ்த்ரங்களுக்கு விருத்தமாகச் சொல்லி விஷ்ணு த்வேஷத்தை வெளியிட்டு வருகிறார்கள் சிலர். அதைப் பல பதிப்புகளில் அச்சேற்றி வெளியிட்டும் வருகிறார்கள். ஆகவேதான் உண்மை நிலையை எடுத்துச் சொல்ல இவ்வாறு நாம் எழுதவேண்டியிருக்கிறது. அச்சம் சிறிதுமின்றி விஷ்ணுத்வேஷத்தை ப்ரசாரம் செய்து வரும் இந்த நாளில் உள்ளதை உள்ளபடி எடுத்துச் சொல்லி எம்பெருமான் பெருமையை உணர்த்த வேண்டுவது மிகவும் ஆவச்யகம் என்பதை வாசகர்கள் உணர வேண்டும்."

கார்த்திகை இதழிலும் நாராயணனுக்கும் சிவனுக்கும் உள்ள பலவகை வேற்றுமைகளை விளக்கி, "இருவரையும் ஒருவர் என்று கூறவோ நினைக்கவோ கூடாது" என்று காட்டி "எம்பெருமான் ஒருவனே மோக்ஷம் தரவல்லவன்; மற்ற எவருக்கும் மோக்ஷம் தரவல்லமை கிடையாது" என்று நிலைநாட்டியுள்ளார் ஸ்ரீமதழகியசிங்கர். அதற்கு மேல் மார்கழி இதழில் "ஆரோக்₃யம் பா₄ஸ்கராத் இச்சே₂த் ....மோக்ஷமிச்சே₂த் ஜனார்த₃னாத்" என்னும் ப்ரஸித்₃த₄மான ஶ்லோ

http://acharya.org

கத்தைக் கொண்டு மோக்ஷத்தை ஜநார்த்தனனை எம்பெருமானிடமிருந்துதான் பெறவேண்டுமென்று நிலைநாட்டியுள்ளார். அதற்குமேல் காமகோடி பீடாதிபதி 'சங்கர விஜயம்' என்னும் நூலில் 23 வது பக்கத்தில் "மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" என்னும் பாடத்தைமாற்றி "ஜ்ஞாந தாதா மஹேச்வர:" என்று வெளியிட்டுள்ளதின் பொருந்தாமையை நிரூபித்துள்ளார். [இவ்விஷயம் ஸுதர்சனர் பதில் 11 வது சதகம் 57 வது கேள்வி-பதிலில் நம்மால் நிரூபிக்கப்பட்டுள்ளது.] அதற்குமேல் ஸ்ரீமத அழகியசிங்கர் ஸாதித்திருக்கும் சில அருள்மொழி வாக்யங்களை அப்படியே கீழே தருகிறோம்.

"இவ்வாறு எழுதும் பெரியவர் எல்லாம் தெரிந்தவர் என்று யாவராலும் போற்றப்படுகிறார். 'மோக்ஷம் இச்சேத் ஜநார்தநாத்' என்று ஒரு பாடம் உண்டு என்பதையும் அவர் அறிவார்; அப்படி அறிந்திருந்தும் இப்படி ஒரு பாடம் உண்டு என்றாவது எழுதியிருக்கலாமே; அதையும் செய்யவில்லை. இதிலிருந்து நம் எம்பெருமானுக்கு உள்ள பெருமையைச் சொல்வதில் விருப்பமில்லை என்பது தெள்ளென விளங்குகிறது. "பரமசிவனுடைய அருளினால் தான் ஜ்ஞானம் உண்டாக வேண்டும்" என்று இவர்கள் தரும் விளக்கமும் விஷ்ணுவின் பெருமையைக் குறைப்பதில் நோக்கமுள்ளதாகவே தெளிவாகிறது. "பரமசிவனுடைய அருளினால் தான்" என்ற இடத்தில் உள்ள 'தான்' என்ற சொல் எம்பெருமானால் ஜ்ஞானம் கிடைக்காது என்பதைத்தானே காட்டுகிறது. ஸர்வ ப்ரமாணப்ரஸித்தமான அர்த்தத்தை மறைத்து விஷ்ணுவின் பெருமையைக் குறைத்துக் கூறுபவர்களை உலகம் நிந்திப்பதில்லை, குறைகூறுவதில்லை. இதை மறுத்து ப்ராமாணிகங்களான அர்த்தங்களை வெளியிடுபவர்களைக் குறை கூறுகிறார்கள். இதுதான் இன்றைய உலக இயல்பு. இப்படிக் கூறுபவர்கள் (ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே) (10-10) என்று ஸ்ரீகீதையில் கண்ணன் தானே புத்தி யோகத்தைத் தருவதாகக் கூறியுள்ளதைக் கவனிக்க வேண்டும். கண்ணன் தான் ஈச்வரனை இருந்து கொண்டுதான் ஜ்ஞானம் தருகிறான் என்று இங்குக் கூறவில்லையே? தானாகத்தான் தருவதாகவேயன்றோ கூறுகிறான்."

இதற்குமேல் 'ஈச்வர' சப்தமும் சிவனைத்தான் குறிக்கும் என்னும் பீடாதிபதியின் வாதத்தை விரிவாக மறுத்துவிட்டு,

"ஆகையால் ஈச்வரசப்தமும் காரணப்பெயராய் ஸ்ரீவிஷ்ணுவையே குறிக்கிறது என்ற ஆதிசங்கரருடைய அபிப்பிராயம் இங்குத்தெளிவா

http://acharya.org

கிறது. இப்படிப் பலபிரமாணங்களால் எம்பெருமானுக்கு 'ஈச்வரன்' என்ற பிரஸித்தி இருக்கும்போது ஈச்வரன் என்ற சொல்லுக்குப் பரமசிவன் என்பதே அர்த்தம் என்றும் விஷ்ணுமுதலிய இறையம்சங்களைச் சொல்லும்போது ஈச்வரன் என்று குறிப்பிடவில்லை என்றும் (கலைமகள் பதிப்பு சங்கர விஜயம் 21 வது பக்கத்தில்) எழுதி அச்சிடப்பட்டிருப்பது பாமரர்களுக்கு மிகுந்த கலக்கத்தை உண்டு பண்ணுகிறது''

என்று நடுநிலைநின்று ஸாதிக்கிறார் ஸ்ரீமதழகியசிங்கர். இறுதியாக சங்ககாலத்தமிழர்கள் மோக்ஷம் அளிப்பவன் திருமாலே என்று கூறியிருப்பதையும்.

''தமிழர்கள் கூட ச்ரிய:பதியான நாராயணன் ஒருவன் தான் மோக்ஷம் தர வல்லவன், வேறு எவரும் மோக்ஷம் தர சக்தியற்றவர்கள் என்பதை நன்கு காட்டியுள்ளார்கள். 'நாறிணர்த்துழாயோன் நல்கினல்லது ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்' என்ற பரிபாடல் பாட்டு ஒன்று 'மணங்கமழும் திருத்துழாய சூடியவன் கொடுத்தாலல்லது பெருமை பெற்ற மோக்ஷம் ஏறுவதற்கு எளிதாகுமோ? எளிதாகாது' என்று எதிர்மறையினால் தெளிவாகக் காட்டுகிறது. துறக்கம்—மோக்ஷம். எம்பெருமான்தான் மோக்ஷம் கொடுப்பவன் என்று உடன்பாட்டில் கூறுவதைவிட, அவன் கொடுத்தாலல்லது மோக்ஷம் கிடையாது என்று எதிர்மறையினால் கூறுவது மிகுந்த நிச்சயத்தைத்தருவதாகும இப்படி மோக்ஷம் உள்பட ஸர்வபுருஷார்த்தங்களையும் தரவல்ல எம்பெருமானையும், இவ்வாறில்லாத மற்றைய தேவதைகளையும் ஒன்றாக ஸமமாக நினைப்பது கூடாது. சென்ற ஸஞ்சிகையில் கூறியுள்ளபடி மிகுந்தபாபத்தையும் தருவதாகும்.''

என்றுகாட்டி, நம்பாடுவானுடைய சரித்திரத்தில் உள்ள ச்லோகங்களைக்கொண்டு தேவதா ஸாம்யவாதம் தவறு என்று நிலைநாட்டி.

''இவ்வாறு எம்பெருமானுடைய பற்பல பெருமைகளைக் குறைத்துக்கூறுபவர்களுடைய பேச்சினால் மயங்கிவரும் ஆஸ்திக மக்களைத் தெளிவுபடுத்த வேண்டி இவ்வளவு தத்வங்களை எழுதவேண்டி நேர்ந்துள்ளது. அனைவரும் உண்மையைஉணர வேண்டும்.''

என்று நிறைவுபடுத்தியுள்ளார் ஸ்ரீமதழகியசிங்கர். ஸுதர்சனத்தில் நாற்பது வருடங்களாக நிலைநாட்டப்பட்டுவரும் விஷயங்களை ஸ்ரீமதழகியசிங்கர் அருள்மொழியில் ஆதாரமாக வலியுறுத்தியிருப்பது ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவரும் கொண்டாடத்தக்கதாகும்.

http://acharya.org

த. கு கோவிந்தசாமி. கும்பகோணம்.

23. ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஆடி மீ பத்திரிகையில் ஸ்ரீமஹாபாரதம் அநுஶாஸந பர்வம் 45 வது அத்தியாயத்தின் மொழி பெயர்ப்பில் சிவனுக்கு விஷ்ணுவைக் காட்டிலும் பலவிதமாகப் பரத்வம் சொல்லப்பட்டுள்ளது. இதே மஹாபாரதத்தில் கீதை முதலானவிடங்களில் சிவன் முதலான எல்லா தேவர்களைக் காட்டிலும் விஷ்ணுவுக்குப் பரத்வம் சொல்லப்பட்டிருப்பதோடு இது எப்படிப் பொருந்தும்?

மஹாபாரதத்தில் உபமன்யு உபாக்யானம் முதலிய சில பகுதிகள் பிற்காலத்தில் சிவ பக்ஷபாதிகளால் சேர்க்கப்பட்டவை என்பதையும், மஹாபாரதத்தை எழுதியவர் கணபதியே என்று கூறும் மஹாபாரதத்தின் தொடக்கத்திலுள்ள ஶ்லோகங்களும் ப்ரக்ஷிப்தமே (இடைச்செருகலே) என்பதையும் முன்னமே நாம் ஸுதர்சனர் பதிலில் காட்டியிருக்கிறோம். வர்த்தமான ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீமுக ஐப்பசி இதழில் இது பற்றி விரிவாக விசாரித்துத் தெளிவுபடுத்தியுள்ளார். அதன் ஸாரமான பகுதியை அடுத்து அளிக்கிறோம்.

இப்பொழுது நீங்களே சற்று யோசித்துப் பாருங்கள். இப்படி ஸத்யம் செய்து கேசவனே-நாராயணனே பரன்-த்யானிக்கத் தக்கவன் என்று தாமும் நிர்ணயம் செய்து உலகத்தவருக்கும் எடுத்துரைத்த வ்யாஸர் இவனிடமிருந்து பிறந்த சிவனே உயர்ந்தவன் என்று தம் வாயால் கூறியிருப்பாரா? ஒருக்காலும் கூறியிருக்கமாட்டார். ஆனால் மஹாபாரதத்தில் சிவனுடைய மாஹாத்ம்யம் காணப்படுகிறதே என்றால், பிற்காலத்தில் சிவபக்ஷபாதிகளான சிலர் சிவமாஹாத்ம்யத்தைக் கண்ணனும் மற்றும் ருஷிகளும் எடுத்துக்கூறுவதாகச் சில அத்யாயங்களை எழுதி இடை இடையே மஹாபாரதத்தில் சேர்த்து விட்டார்கள் என்பதே நம் பூர்வர்களுடைய ஸித்தாந்தம். பழைய பதிப்புகளில் இந்த அத்யாயங்கள் இல்லாமையும் இந்தக் கொள்கையை வலியுறுத்துகிறது. உபமன்யு என்ற மஹர்ஷி ஸ்ரீக்ருஷ்ணனுக்குச் சொன்னதாக உள்ள சிவ ஸஹஸ்ரநாமமும் இப்படி இடைச் செருகலாக நடுவே பிற்காலத்தவர்களால் சேர்க்கப்பட்டதே. ப்ரக்ஷிப்தம். 'கேசவனே பரதைவம்,

http://acharya.org

அவனை விட பரதைவம் வேறு எதுவும் கிடையாது' என்று ஸத்யம் செய்து கை தூக்கிக் கூறிய வ்யாஸர் எப்படித் தன் வாயாலே சிவன் பரம் தைவம் என்று கூறியிருப்பார்? என்பதை நீங்களே நன்கு யோசிக்க வேண்டும். எம்பெருமானுடைய பரத்வம்-பெருமை-ச்ருதிப்ரஸித்தம், மற்றையாருடைய பெருமை ச்ருதியிலும் இடம் பெறாதது; நம் செவிகளுக்கும் எட்டாதது. ஆக மஹாபாரதத்தில் இருப்பதாக வெளிவரும் சிவமாஹாத்ம்யத்தைக்கண்டு மதி படைத்த நீங்கள் மயங்கவேண்டாம். நம் முன்னோர் கூறியுள்ள பதில் இதுவே. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்துக்குப் பாஷ்யம் எழுதியுள்ள ஆதிசங்கரர் சிவஸஹஸ்ரநாமத்துக்கு ஏன் பாஷ்யம் எழுதவில்லை? அது அப்போதில்லை. ப்ரக்ஷிப்தம். அவர் வழியே வந்தவர்கள் இன்று சிவனை உயர்த்திக் கூறும் அளவுக்குத் தங்களுடைய பாஷ்யக்ரந்தங்களில் ஏன் அன்று சங்கரர் வழிகாட்டவில்லை? ஆதி சங்கரர் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர். எல்லா சாஸ்த்ரங்களில் உள்ள விஷயங்களையும் தலை கீழாக மாற்றி அமைக்கும்படியான ஜ்ஞானம் பெற்றவர். அவர் மனம் வைத்தால் ஸ்ரீஸஹஸ்ரநாமம் ஸ்ரீகீதை இவற்றைச் சிவபரமாகவே அதாவது சிவனைப் பற்றிக் கூறுவனவாகவே கொண்டு போயிருக்கலாமே! அப்படிச் செய்யாமல் ஸ்ரீஸஹஸ்ரநாமம் ஸ்ரீகீதை இரண்டும் ச்ரிய: பதியான எம்பெருமானைப் பற்றிக் கூறுவனவாகவே கொண்டுதான் பாஷ்யம் இட்டுள்ளார். இதனால் அவருடைய நேர்மையை-பக்ஷபாதமில்லாமையை நாமும், அவர்வழி வந்தவர்களும் நன்கு அறியவேண்டும்.

திருமதி ஸரளாரங்கநாதன், சென்னை—4

24. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஏகாதசி வ்ரதம் சில சமயங்களில் முழுவதும் துவாதசி திதி இருக்கும் அன்றைக்கு வருகிறது. இதற்குக் காரணம் என்ன?

பெரியோர்களிடமிருந்து கேள்விப்பட்டதைச் சுருக்கமாக எழுதுகிறேன். தசமியன்று ஸூர்யோதயத்திற்குப்பிறகு நவமி சிறிது வந்தாலும் அன்று தசமி வ்ரதம் (ஒருபோது உபவாஸமிருப்பது) அநுஷ்டிக்கப்படுவதில்லை. அதனால் ஏகாதசியன்றே தசமி வ்ரதமும் மறுநாள் துவாதசியன்றே ஏகாதசி வ்ரதமும் அநுஷ்டிக்கப்படுகிறது; தசமிக்கு நவமிவேதை இருக்கிறபடியால் இப்படி ஏகாதசி வ்ரதம் தள்ளிப்போகிறது. இப்படி

http://acharya.org

தசமிக்கு நவமிவேதை இல்லாதபோதும் ஏகாதசி வ்ரதம் தள்ளிப்போவதுண்டு. அதாவது-துவாதசியில் முதல் பாதம் ஹரிவாஸரம் என்று சொல்லப்படுகிறது. அந்த ஹரிவாஸரத்திலும் போஜனம் செய்யக்கூடாது. துவாதசி பாரணையோ ஸூர்யோதயத்திலிருந்து ஆறு நாழிகைக்குள் செய்யவேண்டும். துவாதசியன்று ஹரிவாஸரம் அது தாண்டி இருந்தால் மறுநாளே துவாதசி பாரணை செய்யவேண்டும். எனவே தான் முதல் நாளான துவாதசியன்றே ஏகாதசி வ்ரதம் அநுஷ்டிக்கப்படுகிறது.

R பாலாஜி—புத்தூர் அக்ரஹாரம்—திருச்சி—17

25. 9–1–94 அன்று தொலைக்காட்சியில் ஆதிசங்கரரைப்பற்றிய நாடகம் ஒளிபரப்பப்பட்டது. அதில் ஆதிசங்கரர் ‘திருமாலும் சிவனும் ஒருவரே’ என்றும், ‘வேதத்தில் கூறப்படும் எந்த தெய்வங்களையும் வணங்கலாம்’ என்றும், ‘ஆறுதெய்வங்களில் எவரையும் அடைந்து உய்யலாம்’ என்றும் கூறுவதாகக்காட்டப்பட்டது. ‘பரகாயப்ரவேசம்’ செய்து ராஜபத்நியுடன் துறவியான ஆதிசங்கரர் இல்லறம் நடத்தினார் என்றும் காட்டப்பட்டது. இவற்றுக்கெல்லாம் ஆதாரம் உண்டா?

ஆதிசங்கரர் காலம் கி—பி எட்டாவது நூற்றாண்டு என்று பெரும்பாலானவர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அவர் காலத்திற்கு சுமார் ஐந்நூறு வருடங்களுக்குப் பிறகு அவரைப் பற்றிய கதைகளைக்கூறும் ‘சங்கரவிஜயம்’ என்னும் சில நூல்கள் எழுதப்பட்டன. அவற்றை ஆதாரமாகக் கொண்டே இந்தத் தொலைக்காட்சி நாடகத்தை அமைத்திருக்கிறார்கள். நம்முடைய ‘சங்கரரும் வைணவமும்’ என்னும் நூலில் அவர் இயற்றிய ப்ரஸ்தாநத்ரய- ஸஹஸ்ரநாம பாஷ்யங்களிலிருந்து பல இடங்களை எடுத்துக்காட்டி அவர் நாராயணனையே சிவன் முதலான மற்ற எல்லாத்தெய்வங்களைக்காட்டிலும் மேலான பரதெய்வமாகக் கொண்டிருந்தார் என்பதைத் தெளிவாக விளக்கியிருக்கிறோம். நாராயணபட்டத்ரியும் தம் நாராயணீயத்தில் இதைத் தெளிவுபடுத்தியிருப்பதைக் காட்டியுள்ளோம்.

http://acharya.org

இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த திருவிசநல்லூர் ராமசுப்பாசாஸ்திரிகள் என்னும் அத்வைதியான மஹாவித்வான் தம்முடைய 'விஷ்ணுதத்வநிர்ணயம்' முதலான நூல்களில் ஆதிசங்கரர் தம் நூல்களில் விஷ்ணு பரத்வநிர்ணயம் செய்திருப்பவர் என்றும், ஆதிசங்கரர் சந்தனத்தால் ஊர்த்வ புண்ட்ரம் தரித்தவரேயொழிய பஸ்மதாரியல்லர் என்றும் அவருடைய நூல்களைக்கொண்டும், அவரது சிஷ்யரின் வசனத்தைக் கொண்டும் நிரூபித்திருப்பதையும் நம்முடைய 'சாதிமத ஆராய்ச்சி' (இரண்டாம் பாகம்), முதலான நூல்களில் எடுத்துக்காட்டியிருக்கிறோம். "ஆதிசங்கரர் பரகாயப்ரவேசம் செய்து பரதாரகமனம் செய்தார்." என்று கூறுவது அவரை மிகவும் இழிவுபடுத்துவது என்பதையே உணராதவர்கள் நாம் எவ்வளவு நிரூபித்தாலும் உண்மையை ஒருகாலும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள் என்பது தெளிவு. ஆதிசங்கரர் இயற்றிய பாஷ்யங்களுக்கு முரணாகப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பு வந்த சங்கரமடாதிபதிகள் இயற்றிய சிவானந்தலஹரி, ஸௌந்தர்யலஹரி முதலானவைகளை ஆதிசங்கருடையதாகப் பிடிவாதமாகப் பிரசாரம் செய்து வருபவர்கள் நாம் ஆதாரத்துடன் எடுத்துக்காட்டும் உண்மைகளை ஏற்கமாட்டார்கள் என்றாலும், உண்மையை மதிப்பவர்கள் தெளிவுபெறுவதற்காக இவற்றை நாம் எடுத்துக் காட்டுவது அவசியமாகிறது. ஸ்ரீமதழகியசிங்கரும் ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் இவ்வரும் பணியைச் செய்துவருவது மிகவும் கொண்டாடத்தக்கது. தை மீ ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவில், "ஞானபூமி" 1993 டிசம்பர் இதழில் வெளிவந்துள்ள கட்டுக்கதையான சரபக்கதையை எடுத்துக் காட்டி ஶ்ருதி, புராணம் முதலான ப்ரமாணங்களுக்கு இது மிகவும் முரண்பட்டது என்றும், உண்மையில் சரபமே நரசிங்கனால் வதம்செய்யப்பட்டது என்று ப்ரமாணங்கள் கூறுகின்றன என்றும் ஸ்ரீமதழகியசிங்கர் அருள்மொழியில் விரிவாகக் காட்டியிருப்பது அனைவராலும் காணத்தக்கது.

http://acharya.org

8. முரளி—அந்தணல்லூர்.

26. சமீபத்தில் மறைந்த காமகோடிப் பெரியவரின் சாதனைகளையும் வெற்றி தோல்விகளையும் நடுநிலை நின்று விளக்க வேண்டுகிறேன்.

கி. பி 1958 ம் ஆண்டுக்கு முன்னால் காமகோடி மடம் பொது மக்கள் பலரும் கேளவிப்படாத மடமாகவே இருந்தது. அப்போது சென்னையில் முகாமிட்டிருந்த பெரியவர் 'விஷ்ணுவுக்குத் தமோ குணம் உண்டு' என்னும் பிரசாரத்தைத் தொடங்கி, அது எல்லாப் பொது ஜனப்பத்திரிகைகளிலும் வெளிவரும்படி செய்தார். அதற்கு நாம் 'ஸாத்விக விஜயம்' என்னும் மறுப்புநூலை ஸுதர்சனத்தில வெளியிட்டு, அதன் பிரதியை இவருக்கும் அனுப்பினோம். அதற்கு நம் பெயரைக் குறிப்பிடாமலே பொது ஜனப்பத்திரிகைகளின் மூலம் பதில் கூற முனைந்தார். உடனே 'ஸாத்விக விஜய ஸந்தேஹ பரிஹாரம்' என்னும் தலைப்பில் ஸுதர்சனத்தில் வெளியிட்ட கட்டுரையில் இவரது பதில் பொருத்தமற்றது என்று நம்மால் ஆதாரத்தோடு நிரூபிக்கப் பெற்றது. இனி பதில் கூறினால் தாம் படுதோல்வி அடைய நேரிடும் என்பதை உணர்ந்து பதில் கூறுவதை நிறுத்தி விட்டார். எனினும், தம்முடைய மடத்திற்குப் பொதுஜனப்பத்திரிகைகளின் மூலம் மிகுந்த விளம்பரத்தைச் செய்து கொள்ள வேண்டும் என்றும், எப்படியாவது வைஷ்ணவத்தை அழித்து விடவேண்டும் என்றும் உறுதி கொண்டு ஹிந்து, தினமணி, போன்ற தினசரிப்பத்திரிகைகளிலும் விகடன், கல்கி, கலைமகள் போன்ற வாராந்தர, மாஸாந்தரப் பத்திரிகைகளிலும் தம்முடைய உபன்யாஸங்களை இடைவிடாமல் வெளிவரும்படி செய்து வந்தார். இதன் மூலம் அவர் தமக்கும் தம் மடத்திற்கும் மிகுந்த விளம்பரத்தை ஸம்பாதித்துக்கொண்டது அவருடைய நிகரற்ற சாதனையாகும். ஆனால், இந்த சாதனையைச் செய்வதற்காக அவர் தம் குருவான ஆதிசங்கரர் உருவாக்கிய அத்வைதக் கொள்கையையே அடியோடு மாற்றிக் கொள்ள வேண்டி வந்தது. "உலகம் முழுவதும் பொய்; வெறும் அறிவு மாத்திரமான பிரம்மம் ஒன்றே உண்மை" எனனும் அத்வைதக்

http://acharya.org

கொள்கையைத் தம்முடைய பிரசாரங்களில் அடியோடுகைவிட்டு, சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி 1) 'சிவன் தான் பரம் பொருள்' 2) 'சக்திதான் பரம் பொருள்' 3) 'இவை யெல்லாம் ஒன்றுதான்' 4) 'ஹரி ஸகுண ப்ரம்மம்' 'சிவன் நிர்க்குண ப்ரம்மம்' 'அம்பாள் தான் மாயை' என்றெல்லாம் பேசி, பத்திரிகைகள் மூலம்முன்னுக் குப்பின் முரணான இந்த வாதங்களைப் பிரசாரம் செய்ய முற் பட்டார். இதனால் அரசியல் வாதிகள், பொதுஜனப் பத் திரிகைகள், பாமர மக்கள் ஆகியோரிடையே இவருடைய புகழ் மேலும் மேலும் வளர்ந்தது. மடத்திற்கு பக்தர் கள் அளிக்கும் காணிக்கைகளும்கோடிக்கணக்கில் பெருகிற்று. அதைக்கொண்டு 'வேத ரக்ஷணம்' போன்ற பல நல்ல காரியங் களையும் செய்தார். இவையெல்லாம் இவருடைய பெரிய சாதனை கள் ஆகும். ஆயினும், 'வரதக்ஷிணை வாங்குவது கூடாது' 'பட்டுப்புடவைகள் வாங்கி உடுத்தக்கூடாது' என்பனபோன்ற இவருடைய பல அறிவுரைகள் இவருடைய சிஷ்யர்களில் பெரும்பான்மையானவர்களால் பின்பற்றப்படவில்லை.

வைஷ்ணவத்தை அழிக்கவேண்டும் என்னும் திட்டத்தின் படி ஆகமஸதஸ் முதலானவற்றை ஆங்காங்கு நடத்தி விஷ்ணு கோயில் அர்ச்சகர்கள், வைஷ்ணவர்களான வித்வான்கள், வைஷ் ணவ வேதவித்வான்கள் பலருக்கு ஏராளமான பண உதவி கள் செய்து அவர்களைத் தம்வசப்படுத்திக்கொண்டார். தமிழ் நாடெங்கும் யாத்திரைசெய்து ஆங்காங்குள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள வைஷ்ணவப் பிரமுகர்களுடன் வலுவில் தொடர்பு கொண்டு தமக்கு வசப்பட்டவர்களாக ஆக்கிக் கொண்டார். பத்திரிகைகள் மூலம் இவர் செய்த விஷ்ணுவைஷ் ணவதூஷணங்களில் ஒரு சில வருமாறு:— (இவற்றுக்கு மறுப் புரைக்கப்பட்டிருக்கும் ஸுதர்சனர் பதில் சதக எண்கள் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டிருக்கின்றன) (1) விஷ்ணுவின் சக்கரத்தைப் பிள்ளையார் வாயில்போட்டுக்கொண்டுவிட, பெரு மாள் அதைத்தோப்புக்கரணம் போட்டுப்பெற்றுக்கொண்டார். [2—29, 30] (2) உடல் பண்ணுகைப் போகிறது என்பதை உணர்த் தவே, வைஷ்ணவர்கள் திருமண் இட்டுக்கொள்கிறார்கள். [2—45] (3) ராமனுக்கு ராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரம்ம ஹத்தி, வீரஹத்தி, சாயாஹத்திதோஷங்கள் நீங்குவதற்குப்

http://acharya.org

பிராயச்சித்தமாக ராமன் மூன்று இடங்களில் லிங்கப்பிர திஷ்டை செய்தான். [2—65, 66. 10—77] (4) ராவணனாகிற பிராம்மணனையும், தாடகையாகிற பெண்ணையும், வாலியாகிற குரங்கையும் கொன்ற பாபத்துக்குப் பிராயச்சித்தமாக ராமன் மூன்று இடங்களில் லிங்கபபிரதிஷ்டை செய்தான். [2—53; 10—84] (5) விஷ்ணுகோயில்களில் பா(றை)வை மாநாடுகளைக் கிளப்பிவிட்டு ஏராளமான விஷ்ணுகோயில் பணத்தை விரய மடையச்செய்தார். [2—75] (6) ஜெகசிற்பியன், மு. மேத்தா, கண்ணதாசன் போன்ற நாவலாசிரியர்களைத் தூண்டிவிட்டு, ராமாநுசரைக் கொலைகாரராகவும், கிருமிகண்டனை நல்லவ னாகவும், குலசேகராழ்வாரை பஸ்மதாரியாகவும் சித்திரிக்கும் 'திருச்சிற்றம்பலம்' 'சோழநிலா' 'சேரமான் காதலி' போன்ற நாவல்களை 'விகடன்' 'கல்கி' முதலானவற்றில் எழுதச்செய்து அவற்றுக்குப்பரிசுகள் கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். தம் கருத்தாகவும் இவ்வாறு பேசியுள்ளார் [5—1; 8—82] 7) சைவவைஷ்ணவ ஆகமங்களில் அத்வைதமே சொல்லப்படு கிறது. [5—4] 8) "ஆண்டாள் திருப்பாவையில் 'தீக்குறளை சென்றோதோம்' என்று பாடியது திருக்குறளைக் கண்டிப்பதற் காக;" "ஆத்திசூடியில் 'அறனை மறவேல்' என்று, குழந்தைகள் சிவனை மறக்கக் கூடாது என்று உபதேசிக்கப்பட்டது" "'ஆழ்வார்' என்பதற்கு 'நல்லயௌவனத்தோடுகூடிய நங்கை' என்றுபொருள்" முதலான தமிழறிவின்மையைப்புலப்படுத்தும் பேச்சுக்கள் [5—19] 9) "எல்லா மதங்களும் ஒன்றுதான்— அத்வைதிகளுக்கே மோக்ஷம் [5—34] 10) காஞ்சி வரதராஜன் ஸந்நிதியிலுள்ள கஜானனரைக் கணபதியாக்கித் தம் சிஷ்யர் களைக் கொண்டு கணபதி உபநிஷத் முதலானவற்றைப் படிக்கச் செய்வது [5—39] (11) பாலுணர்வுப் பத்திரிகைநடத் தும் மணியனைக்கிளப்பிவிட்டு 'ஞானபூமி' எனும் பொய்ப்பிரசார மதப்பத்திரிகை நடத்தும்படிச் செய்து "இந்து மதத்துக்குப் பொதுவான மூலநூல் அல்லது நூல்களை உருவாக்கவேண் டும்", "பொதுவானமந்திரம் ஒன்றை Codify செய்யவேண்டும்" என்று கட்டளையிட்டது. [7-23] (12) கீதையில் சமரசவாதமும் சிவபாரத்வவாதமும் செய்தது [8—42; 10-99] (13) 'ஆதிசங்கா ரைப்போல் பொதுநலனுக்கல்லாது தேசிகன் தன்சொந்தநலனுக்

காக லக்ஷ்மியிடம் பொன்னை வேண்டினார்' என்று பேசியது. [8-58](14) மும்மூர்த்திகளும் அவர்களுடைய பத்னிகளும் பரா சக்தியிடமிருந்து உண்டானார்கள். [10—26] (15) ஸ்ரீரங்கம் கோயிலில் ஆதிசங்கரர் சிற்பம் இருப்பதாகப் பொய்வாதம் செய்தது. [11—1] (16) காஞ்சி வரதராஜர் கோயிலில் வேத வ்யாஸர் அத்வைதத்தைக் கூறுவதான சிற்பம் இருப்பதாகக் கூறிய பொய்வாதம். [11—2] (17) திருமலை எம்பெருமான் சக்தி என்றும், சிவன் என்றும், சுப்ரமணியன் என்றும் தாமும் தம் சிஷ்யர்களைக் கொண்டும் நெடுநாட்களாகப் பொய் வாதம் செய்து வந்தது. [10—64]

மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள இவருடைய வாதங்களுக்கு ஸுதர்சனர் பதில்களில் (பன்னிரண்டாவது சதகம் நடந்துகொண்டிருக்கிறது) ஆதாரத்துடன் மறுப்புரைகள் எழுதி வந்துள்ளோம். இதுதவிர விஷ்ணு சித்த விஜயம், சங்கரரும் வைணவமும், சங்ககாலத் தமிழர் சமயம் சாதிமத ஆராய்ச்சி, விசிஷ்டாத்வைத விஜயம் கம்பனின் சமயம், முதலான நூல்களிலும் மற்றும்பல கட்டுரைகளிலும் ஆயிரக்கணக்கான பக்கங்களில் இத்தகைய வாதங்களுக்கு விரிவான பதில் எழுதி விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை நிலைநாட்டி வருகிறோம். அவ்வப்போது அவரவர்களுக்கு இந்த நூல்களை அனுப்பியும் வருகிறோம். இதுவரை எவரும் இவற்றுக்குப் பதில் எழுதத் துணியவில்லை. பா(ஷ)வ மாநாடுகளுக்குக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து அவை விஷ்ணு கோயில்களில் நடத்துவதைப் படிப்படியாக ஒழியும்படி செய்ததிலும், இவருடைய வைஷ்ணவ விரோத துர்வாதங்களுக்கு ஆதாரத்துடன் மறுப்பெழுதி அடக்கியதிலும் ஸுதர்சனத்திற்குப் பெரும் பங்கு உண்டு. சமீபத்தில் ஸ்ரீமதழகிய சிங்கரும் கிளர்ந்தெழுந்து இத்தகைய வாதங்களுக்கு மறுப்பெழுதி வருவது நம்முடைய நிலையை உறுதிப்படுத்துகிறது. ஆக, வைஷ்ணவத்தை அடியோடு அழிக்கவேண்டும். என்னும் பீடாதிபதியின் எண்ணம் பகற்கனவாகி அதில் அவர் படு தோல்வி அடைந்தார்.

http://acharya.org

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மான் திருவேங்கடாசாரிய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

27. சென்னையிலிருந்து வெளிவரும் "புதியபார்வை" (16—30 செப்டம்பர் 1993) இதழில்" திருமழிசையாழ்வாரின் பாசுரங்கள் (ஒருபொதுநிலை ஆய்வு)" என்ற புத்தகத்தை விமர்சனம் செய்யும்போது தமிழ் எழுத்தாளரான சுஜாதா "தற்போது வைணவ மரபை அதிகமாக வளர்ப்பவர்கள் அய்யங்கார் இல்லை. அவர்கள் அமெரிக்கா போய் தம் அடையாளங்களைத் துறப்பதில்தான் அதிக கவனமாக இருக்கிறார்கள். தம் மரபின் தமிழையும் அதன் கருத்துக் களில் உள்ள எளிமையையும் மிகவும் ஆழமான பக்தியை யும் அவர்கள் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டுவது இல்லை. சில சமயம் அதற்காக அவமானப் படுகிறார்கள். 'ஐயங்கார் மோட்டார்கார்! வடகலையா தென்கலையா எச்சிற்கலையா" போன்ற கேலிகளை எல்லாம் அவர்களே உண்டுபண்ணிக் கொள்வார்கள். சிக்கன்கடிப்பதிலும் சிகரெட்குடிப்பதிலும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்" என்றும் மற்றும் புத்தக விமர்சனத்திற்குத் தொடர்பில்லாத பல தரக்குறைவான அவதூறுகளையும் எழுதியுள்ளார். இந்த விமர்சனம் அடங் கிய இதழையும், இதற்கு 'வாசகர் பார் வை' என்ற பகுதியில் ஸ்ரீமதி பிரேமாநந்தகுமார் அவர்கள் எழுதியுள்ள சிறப்பான மறுப்புரை அடங்கிய புதியபார்வை (16—31 அக்டோபர் 1993) இதழையும் தங்கள் பார்வைக்கு அனுப்பியுள்ளேன். ஷை கட்டுரையில் அடங்கியுள்ள கருத்துக்களை விமர்சிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

எழுத்தாளர் சுஜாதாவின் தகப்பனார் ஸ்ரீநிவாஸராகவா சாரியஸ்வாமி சிறந்த வைஷ்ணவராகவும் ஸுதர்சனத்தில் அபி மானம் உள்ளவராகவும் வாழ்ந்துவந்தார். அவருடைய குமார ரான இவர் கற்பனைக்கதைகள் எழுதும் சிறந்த எழுத்தாள ராகப் பெயர் பெற்றிருக்கிறார். அத்துடன் நில்லாமல் வைணவ விரோதமான பல காரியங்களைச் செய்துவருகிறார். பத்ரிநாரா யணனை பௌத்த விக்ரஹமென்று தவறாக விகடனில் எழுதி,

http://acharya.org

அதற்கு நம்முடைய மறுப்பைப்பெற்று வாய்திறவாமல் இருக்கிறார். டாக்டர் பட்டம் பெறுவதற்காக "திருமழிசையாழ்வார் பாசுரங்கள்" பற்றி நாயகர் குலத்தைச் சேர்ந்த ஒரு அம்மையார் எழுதிய புத்தகத்தை விமர்சிக்கும் வியாஜத்தில், தாம் பழகும் அமெரிக்காவில் வாழும் சிலவைஷ்ணவர்களையே அளவுகோலாகக்கொண்டு கிணற்றுத்தவளை மனப்பான்மையுடன் பொதுப்படையாக ஐயங்கார்களைத் தாக்குகிறார். டாக்டர் பட்டத்துக்காக எழுதப்படும் இது போன்ற நூல்களால் வைணவம் வளரவில்லை என்பதையும், புகழுடம்பாளரான ஸ்ரீ உ. வே. P. B. A. ஸ்வாமி, எந்தையார், அடியேன் போன்ற பலர் எழுதும் நூல்களைத் துணையாகக் கொண்டே பலர் டாக்டர் பட்டம் பெறுகிறார்கள் என்பதையும இவர் உணரவில்லை அந்தோ! சமீபத்தில் திரு. மருதுக்கோனார் என்பவரின் பேரனாய், தம் பாட்டனாரிடமிருந்து திருப்பாவைப் பாசுரங்களைக் கற்ற டாக்டர் ம. பெ. ஸ்ரீநிவாஸன் (தமிழ்ப்பேராசிரியர், மன்னர் துரைசிங்கம் அரசுக்கல்லூரி, சிவகங்கை) அவர்கள் எனக்கு எழுதிய 20-2-94 தேதி கடிதத்தின் ஒருபகுதி பின்வருமாறு:— "தங்கள் தந்தையாரின் திருப்பாவை உரையைப் படித்தபொழுது வைணவத்தில் ஊற்றமுண்டாகி, அந்த ஆர்வத்தை மதுரைப் பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன் (ஐயங்கார்) தூண்டித் துலங்கச் செய்ததால் 'இன்று ஆழ்வார்கள் ஈரத்தமிழில் உள்ள இலக்கிய வகைகள்' குறித்து ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறேன். இதற்கு ஆதிமூலமாய் அமைந்தது தங்கள் தந்தையாரின் திருப்பாவை வ்யாக்யானம், தொடர்ந்து தங்களின் வெளியீடுகள். ஆதலின் என் வளர்ச்சிக்குதவிய என் 'ஞானதந்தை'யாகிய தங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். 'தலையல்லால் கைம்மாறிலேன்' என்னும் நாச்சியார் திருமொழிதான் எனக்குக் கைகொடுக்கின்றது" என்பது. இதுபோன்ற பல கடிதங்களை அடியேன் அவ்வப்போது பெற்று வருகிறேன். வெளிநாடுகளில் வாழும் ஐயங்கார்கள் பலரும் நம்முடைய வெளியீடுகளை வாங்கி ஆர்வத்துடன் படித்துவருகிறார்கள். பாரததேசம் முழுவதும் இந்த 20 ம் நூற்றாண்டில் மஹாவித்வான் P B A ஸ்வாமி, காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி, வேளுக்குடி வரதாசாரிய

http://acharya.org

ஸ்வாமி, சதாபிஷேகம் ஸ்வாமி முதலான புகழுடம்பாளர்களும், இப்போதுமிருக்கும் ஸ்ரீரங்கம் R. நரசிம்மாசாரியர், ஸ்ரீவில்லிபுத்தூர் கண்ணன் ஐயங்கார், மதுரைப் பேராசிரியர் டாக்டர் இரா. அரங்கராஜன், சென்னை "யதிராஜ பாதுகா" ஆசிரியர் டாக்டர் V. V. ராமானுஜம், சென்னை "கீதாசார்யன்" ஆசிரியர் டாக்டர் M. A. வேங்கடகிருஷ்ணன், கோமடம் சம்பத்குமாராசாரியர், டாக்டர் K. A. மணவாளன், K. B. தேவராஜன், வேளுக்குடி கிருஷ்ணன், முக்கூர் லக்ஷ்மீநரசிம்மாசாரியர், தூப்புல் லக்ஷ்மீநரசிம்மன், கல்யாணபுரம் ஆராவமுதன், பால பண்டிதமணி திருமலாசார்யர் போன்றஐயங்கார்களும் தங்கள் எழுத்துக்கள் மூலமும், உபன்யாஸங்கள் மூலமும் வைணவத்தைப் பரப்பிவருவதை இவர் அறியார் போலும்! மேலும் தங்கள் காலக்ஷேபங்கள் மூலமும், உபதேசங்கள் மூலமும். சொற்பொழிவுகள் மூலமும், எழுத்துக்கள் மூலமும், வைணவத்தை வளர்த்து வரும் ஜீயர்களும். ஆசார்யர்களும், வித்வான்களும் உபய ஸம்ப்ரதாயத்திலும் நூற்றுக்கணக்கில் விளங்குவதை இவர்காணத் தவறியது ஏனோ? நமக்கு விளங்கவில்லை.

வைணவத்திற்கு நூல்வெளியிடுவதின் மூலமாகச் சேவை செய்துவருபவர்களின் விரிவானபட்டியலை, பிரேமாநந்தகுமார் அவர்கள் புதியபார்வை [16—31 அக் '93] இதழில் கொடுத்திருப்பதிலிருந்து உண்மை உணரப்பெற்று. தம்முடைய தரக் குறைவான எழுத்துக்களுக்கு சுஜாதா வருத்தம் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கிறோம். ஸ்ரீமதி பிரேமா நந்தகுமாரின் முற்கூறிய கடிதம் அடுத்தபடி கொடுக்கப்படுகிறது.

"புதிய பார்வை" யில் வெளிவந்த கடிதம்

புதிய பார்வை (செப்டம்பர் 16—30) இதழில் திருமழிசையாழ்வாரின் பாசுரங்கள் பற்றிய சுஜாதா எழுதிய விமரிசனம் படித்தேன்.

விமரிசனத்தில் சுஜாதா தனக்குத் தெரிந்த ஐயங்கார்கள் ஒரு சிலர் சிக்கனைக் கடிப்பது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் இந்த (வடகலை-தென்கலை-பூர்ண கலை)ப் பிரிவில் மிகமிக அல்பமான விழுக்காடுதான்.

அதேசமயம் ஐயங்கார் என்பதே மிகச் சிறிய பிரிவாக இருந்தாலும், அதைச் சேர்ந்த பெரும்பாலானோர் வைணவ மரபைப் பல இன்னல்களுக்கிடையே வளர்த்து வருகிறார்கள்.

புத்தகமாக அச்சிடும் ஐயங்கார்களை மாத்திரம் இங்கு சிறிது கவனிப்போம். திருச்சி புத்தூரைச் சேர்ந்த 'சுதர்சனம்' கிருஷ்ணசாமி ஐயங்காரின் பதிப்புகளைத் தமிழ் கூறும் நல்லுலகமும்

http://acharya.org

வைணவமும் என்றும் போற்றும். அப்படிப்பட்ட, வைணவ மரபு வளர்ச்சிக்கு இன்றியமையாத பதிப்புகள்.

சென்னையில் கோமளீசுவரன் பேட்டையில் இயங்கும் ஆழ்வார்கள் அமுத நிலையம் பதிப்புகள், வைணவத்திற்குப் பெருஞ்சேவை புரிகின்றன. தனிப்பெயர்கள் எண்ணிலடங்காதன. உதாரணமாக: வசுதா நாராயணன் (ஐயங்கார்) அமெரிக்காவிலிருந்து கொண்டு ஆறாயிரப்படிபற்றி The Way and the goal எனும் சீரிய புத்தகம் எழுதியுள்ளார். தற்சமயம் ஆங்கில மொழிபெயர்ப்பு தயாரித்து வருகிறார்.

அண்மையில் மறைந்த ஏ. கே. ராமானுஜம்கூட ஐயங்கார் தான். கன்னடதேசத்தில் வளர்ந்து அமெரிக்காவில் வாழ்ந்தவர். நம்மாழ்வாரின் பலபாசுரங்களை hymns for the Drowning என்ற மொழிபெயர்ப்பு மூலம் மேலை நாட்டில் பிரசித்தப்படுத்தியுள்ளார். இந்தியாவிலும் நிறைய ஐயங்கார்கள் சாதனை படைத்து வருகின்றனர்.

அண்மையில் வெளிவந்த டாக்டர் எம். வரதராஜனின் (ஐயங்கார்) 'பன்னீராயிரப்படி: ஓர் ஆய்வு' என்பது விரிவான சாதனை; அவருடைய 'வைணவ வழித்தோன்றல் வரலாறு' மணவாளமாமுனிகளின் 'உபதேசரத்தின மாலை' எனும் பிரபந்தத்தின் அழகிய தெளிவுரை. நரஸிம்மப்பிரியா, காஞ்சிப் பேரருளாளன் போன்ற பத்திரிகைகளிலும் ஐயங்கார்கள் முனைந்து நல்ல கட்டுரைகள் வரைந்து வைணவ மரபைப் போற்றி வளர்த்து வருகிறார்கள்.

இதே ஐயங்கார்கள் கன்னடத்திலும், தெலுங்கிலும் கூட வைணவ மரபைச் சிறப்பாக வளர்ப்பதை சுஜாதா அறியார்போலும் ஓரிரு உதாரணங்கள்.

கிருஷ்ணா ஜில்லா முசுநூருவில் ஸ்ரீ கோதா கிரந்தமாலை இயக்கிவரும் ஸ்ரீ கே. டி. எல். நரஸிம்மாசார்யலு தென்கலை ஐயங்கார். திவ்யப்பிரபந்தம் முழுவதற்கும் எளிய தெலுங்கில் பதவுரை, பொழிப்புரை பதிப்புகள் கொணர்ந்திருப்பதுமன்றி, வைணவத்தின் சீர்மை, எளிமை, ச(த?)த்துவ நிலை முதலியனவற்றை விளக்கும் பல உயர்ந்த புத்தகங்களை வெளியிட்டுள்ளார்.

விசாகப்பட்டணத்தில் வசித்துவரும் ஸ்ரீபாஷ்யம் அப்பளாசார்யலு (ஐயங்கார்) உபய வேதாந்தம் பற்றிப் புத்தகங்கள் பல எழுதி,

http://acharya.org

அற்புதமாக உபன்னியாசங்கள் ஆற்றி வைணவத்தைப்பரப்புகிறார். திருப்பாவை பற்றியும், பெரியவாச்சான் பிள்ளை முதலியோரது பகவத் விஷயக்ரந்தங்கள் நோக்கில் வால்மீகி ராமாயணம் பற்றியும் நடக்கும் அவரது சொற்பொழிவுத் தொடர்களை, பல ஊர்களில் ஆயிரக்கணக்கான மக்கள் எழுது சித்திரம் போல்அமர்ந்து கேட்டு வருகிறார்கள்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அவரது ஆங்கில திருப்பாவை விளக்கம் நாங்கள் சிரோபூஷணமாக தரிக்கும் பக்திப் பொக்கிஷம். இதேபோல் கர்ரி கிருவேங்கடம்மா (ஐயங்கார்) தெலுங்கில் பகவத் விஷயம் பற்றிய இனிய பதிப்புகளை வெளியிட்டு வருகிறார்.

குண்டூரில் தனகுதரம் வரதாசார்யுலு நடத்தும் 'ஸ்ரீராமானுஜ கீர்த்தி கௌமுதி க்ரந்தமாலை' வெளியிடும் புத்தகங்கள் ஆய்வுச் சுரங்கங்கள். தனிப்பெயர்கள் வேண்டுமா'? ஆசூரி மரிகண்டி புருஷோத்தமாசார்யலு, சிலகபாடி விஜயராகவாசார்யலு, கிடாம்பி ஸ்ரீநிவாஸ ராமானுஜாசார்யலு, ப்ரதிவாதி பயங்கரம் வேதாந்தாசார்யலு, சிஞ்சாபட்ணம் ஸ்ரீரங்காசார்யலு, 'வைணவத் திருநாமமுலு' எனும் நாடோடிப் பாடல்களைத் திரட்டி அச்சிட்டு அதோடு ஜோடியாக நல்லதொரு ஆய்வு நூல் வெளியிட்டுள்ள கிடாம்பி நரசிம்மாசார்யா-ஸர்வம் ஐயங்கார் மயம்!

ஏன், பிரசித்த வயலின் வித்வானும், வாக்கேயகாரருமாக விளங்குகின்ற நல்லான் சக்கரவர்த்துல கிருஷ்ணமாசார்யலு கூட ஒரு மாபெரும் அறிஞர். வைணவ மரபினைப் பரப்ப அயராது உழைத்து புத்தகங்கள் எழுதிவரும் ஐயங்கார்தான்.

பிரசித்த எழுத்தாளரும் ஆன்மிகச்செல்வருமான காலம் சென்ற டாக்டர் எக்கிராலா கிருஷ்ணமாசார்யாவும் ஐயங்கார்தான். அவரது கோதாவைபவம்எனும்தெலுங்குக்காவியம்இன்று வைணவன் எப்படி வாழ்வினை அமைத்துக் கொள்ளவேண்டுமென்று அழகாகச் சுட்டிக் காட்டுகிறது. அவரது சீடர் டாக்டர் மாபிதேவி கிருஷ்ணசாமியும் குருவகுத்த வழியில் சென்று வைணவத்திற்குச் சேவைசெய்து வருகிறார்.

சுஜாதா அவர்களது நோக்கு இன்னொரு வகையிலும் குறுகியதே; வைணவமரபை வளர்க்க வேண்டியவர்கள் ஐயங்கார்களே என்ற தொனி சரியில்லை; ஐயங்கார் ஒரு பிரிவுதான். வைணவம்

http://acharya.org

என்பது ஒரு பரந்த உயர்வான வாழ்க்கை நெறி. மானிடர்களது பொது சொத்து. வடமொழி தமிழ் இரண்டிலும் மறைகள் பெற்றுள்ள வைணவத்தை, சிறு பிரிவுகளாகக் காண்பது சரியல்ல

திரு. சுப்புரெட்டியார்போன்று மு. இராமசாமி, திரு ராமராஜன், பெருவளநல்லூர் பத்மநாப ரெட்டியார், பாவலர்மணி சித்தன் என்று பல எழுத்தாளர்கள் பக்தர்கள் செம்மையான வாழ்வு வாழ்பவர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருமே வைணவத்திற்கு மிக நல்ல சேவை செய்து வருகிறார்கள். வைணவத்தைப் புதிய பார்வையுடன் கணிக்கிறார்கள். இந்த வகையில் மு. ப. சியாமளாவும் நல்லதொரு ஆய்வு நூலைப் படைத்திருக்கிறார் என்று சேர்த்துக்கொள்ளவேண்டும்.

—பிரேமா நந்தகுமார்

V. ஸ்ரீதரன், மதுரை—1.

28. தினமலர் (6–2–94) "அறிவோமா ஆன்மீகம்" (ஞாயிறு மலர்) பகுதியில் "பகல் பத்து, இராப்பத்து என்றால் என்ன?" எனும் கேள்விக்கு "பகலில் ஆழ்வார்களுக்குத் திருமஞ்சனம் செய்து பாசுரம் பாடுவது பகல் பத்து" என்றும், "இரவில் வேதபாராயணம் செய்வது இராப்பத்து" என்றும் பதிலளித்துள்ளார் திரு வைரம் ராஜகோபால. விமர்சிக்கவேண்டுகிறேன்.

தினமலரில் 'ஆன்மிகம்' எழுதுபவர்கள் எவரும் வைணவ சமயதத்துவங்களையும் நடைமுறைகளையும் ஆழமாக அறிந்தவர்களல்லர். "தநுர்மாதத்தில் வைகுண்ட ஏகாதசிக்கு முன்பத்து நாட்களில் நடக்கும் உத்ஸவத்தில் நாலாயிர திவ்யப்ரபந்தங்களில் முதலிரண்டு ஆயிரங்களைப் பெருமாள் முன்னிலையில் பகலில் சேவிப்பது பகல்பத்து; நான்காம் ஆயிரமான திருவாய்மொழியை வைகுண்ட ஏகாதசி முதல் பத்து நாட்கள் உத்ஸவத்தில் இரவில் சேவிப்பது இராப்பத்து" என்பதை அறியாமல் எதெதையோ எழுதிக் குழப்புகிறார். இத்தகைய அபத்தமான பதில்கள் வரும்போது பலர் தினமலருக்கு உண்மையை எழுதிவந்தால் விமோசனம் பிறக்கலாம்.

http://acharya.org

V. ராகவன் சென்னை - 5.

29, குருபரம்பரை போன்ற புத்தகங்களில் ஆழ்வார்கள் ஆசார்யர்கள் ஆகியவர்களின் அவதாரகாலத்தைக் குறிக்கும்போது "கடபயாதி₃ ஸங்க்₂யை" என்னும் கணக்குப்படி வருஷத்தைக் குறிக்கிறார்கள். இந்தக் கணக்கிடும் முறையை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். "த₄ரா நரப₄" என்னும் சொல்லுக்குரிய ஆண்டினையும் எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கடபயாதி₃ ஸங்க்₂யைக்குரிய வாய்பாடாவது:— "காதி₃ நவ, டாதி₃நவ, பாதி₃ பஞ்ச, யாத்₃யஷ்ட" இதன் விளக்கமாவது:— க, க₂, க₃, க₄, ங, ச, ச₂, ஜ, ஜ₂ என்னும்ஒன்பது எழுத்துக்களுக்கும் உரிய எண்கள் முறையே 1-முதல் 9. வரை ஆகும். இதுபோலவே 'ட' வில் தொடங்கி 'த₄' வரைஒன்பது எழுத்துக்களுக்குரிய எண்கள் முறையே 1முதல் 9வரை ஆகும். ப, ப₂, ப₃, ப₄, ம என்னும் ஐந்து எழுத்துக்களுக்கும் உரிய எண்கள் முறையே 1முதல் 5வரை ஆகும், 'ய ர ல வ ஶ ஷ ஸ ஹ என்னும் எட்டு எழுத்துக்களுக்கும் உரிய எண்கள் முறையே 1முதல் 8வரை ஆகும். இந்த முப்பத்தொரு எழுத்துக்கள் தவிர்ந்த மற்ற உயிரெழுத்துக்களுக்கும் உயிர்மெய்யெழுத்துக்களுக்கும் உரிய எண் "0" (ஶூந்யம்) ஆகும். இனி வருஷத்தைக் கணக்கிடும் முறைபற்றிச் சில உதாரணங்களைக் கொடுக்கிறோம். "தீ₄ர்லப்₃த₄ா" என்னும் பத₃ம் சக வருஷப்படி எம்பெருமானாரின் அவதாரவருடத்தைக் குறிக்கிறது. இதில் மெய்யெழுத்துக்களைத் தள்ளி விட்டு மற்ற எழுத்துக்களின் எண்களைப் பார்த்தால் 9, 3, 9 வருகிறது. இப்படிவரும் எண்ணை கடபயாதி₃க் கணக்குப்படி திருப்பிப்போடவேண்டும். இந்த உதாரணத்தில் திருப்பிப் போட்டாலும் 9 3 9 தான் வரும். ஆக எம்பெருமானார் சக வருடம் 9 3 9 ம் வருடத்தில் (அதாவது கி-பி 1017 ம் வருடம்) அவதரித்தார் என்று தேறுகிறது. எம்பெருமானார் பரமபதம் அடைந்த வருடம் "த₄ர்மோ நஷ்ட:" என்று குறிப்பிடப்படுகிறது. இதில் மெய்யெழுத்துக்களைத் தள்ளிவிட்டு மற்ற

http://acharya.org

எழுத்துக்களுக்குரிய எண்கள் 9501 வருகிறது. இதைத்திருப்பி எழுதினால் 1059 வருகிறது. ஆக எம்பெருமானார் சகவருடம் 1059 ம் வருடத்தில் (கி—பி 1137) பரமபதம் அடைந்தார் என்று தேறுகிறது. பொய்கையாழ்வாருடைய அவதார வருஷம் (துவாபர யுகத்தில்) 'ஆஜ்ஞாதீ₄ ஸ்ரீசந்த₃ந'' என்னும் எழுத்துக்களால் கடபயாதிஸங்க்₂யைப்படி குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்குரிய எண் 0092680: எனவே இதைத் திருப்பி எழுதினால் துவாபரயுகம் 8629000 வது வருடத்தில் பொய்கையாழ்வார் அவதரித்தார் என்று தேறுகிறது. இப்படியே கண்டு கொள்வது. இந்தக் கணக்கின்படி ''த₄ராநரப₄'' என்னும் பதத்திற்குரிய எண் 9024 ஆகும். இதைத் திருப்பி எழுதினால் 4209 என்னும் எண்ணையே இப்பதம் குறிக்கிறது.

R. ரகுராமன் புத்தூர், திருச்சி-17.

30. தினமலரில் ''ஆன்மீகம் அறிவோமா?'' என்னும் பகுதியில் 'யோகவாசிஷ்டம்' என்னும் நூலைப்பற்றி அடிக்கடி விளக்கம் வருகிறது. இந்த நூலை எந்த மதாசாரியராவது தங்கள் நூல்களில் கையாண்டிருக்கிறார்களா? இது ப்ரமாண நூலாகுமா?

இந்தநூலை அப்பையதீக்ஷிதர்காலம் வரையில் (சுமார் 400 வருஷங்களுக்கு முற்பட்ட) எந்த மதாசாரியரும் ப்ரமாணமாக எடுத்ததாகத் தெரியவில்லை. இதில் உள்ள விஷயங்களும் ராமனை மிகவும் இழிவுபடுத்துவதாக அமைந்துள்ளன. வசிஷ்டர் ராமனுக்குக் கூறுவதாக விளக்கப்படும் உபதேசங்களும் சாஸ்திர விருத்தங்களாய் இருக்கின்றன. உதாரணமாக 'இந்திரனும் அகலிகையும்' என்னும் தலைப்பில் தினமலர் 11—4—94 இதழில் வெளிவந்துள்ள 12-வது பகுதியில் காணலாம். இந்திரன் என்ற தீயவனும், அகலிகை என்னும் ஒரு அரசியும் தகாத உறவு கொண்டு அரசனால் தண்டிக்கப்பட்டதாகவும், அந்த தண்டனைகளால் அவர்களுக்கு எந்தத் தீங்கும் வரவில்லையென்றும், அவர்கள் ஆத்மானந்தத்தில் திளைத்திருந்தார்கள் என்றும் இதில் எழுதப்பட்டுள்ளது. ''நீங்கள் எப்படி வலியை உணராமல் இருந்தீர்கள்'' என்னும் மன்ன

http://acharya.org

ணின் கேள்விக்கு "மன்னா! எந்த வேதனையும் எங்களைப் பிரிக்க முடியாது; இந்த உலகம் முழுவதும் எங்கள் வடிவமாகவே பார்க்கிறோம். எங்கள் காதலையே எங்கும் காண்கிறோம். நாங்கள் ஒருவரையொருவர் கண்டு மகிழ்ந்து பேரானந்தத்தை அனுபவிக்கிறோம். எங்கள் உடல்கள் பல கூறுகளாகச் சிதைக்கப் பட்டாலும் நாங்கள் உணரமாட்டோம்." என்று அவர்கள் பதிலுரைத்ததாகவும் எழுதப்பட்டுள்ளது. ஆண் பெண் உறவை மோக்ஷானந்தமாகச் சொல்லுவது சாக்த மதமேயாகும். அத்வைதிகள் அப்பைய தீக்ஷிதர் காலத்துக்குப் பிறகு பெரும்பாலும் சாக்தர்களாக மாறிய பின்பு அவர்களால் கற்பிக்கப்பட்டதே 'யோக வாசிஷ்டம்' என்னும் இந்நூல் என்பது தெளிவாகிறது. இதை ப்ரமாணமாகக் கொள்வதற்கு இடமேயில்லை.

R, பரத்—பங்களூர்.

31. பங்களூர் கல்பதரு ரிசர்ச் அகாடமியினால் வெளியிடப்பெற்றுள்ள, புரொபசர் எஸ். கே. ராமச்சந்திரராவ் என்பவர் எழுதியுள்ள Art and Architecture of Indian Temples என்னும் ஆங்கிலப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது :— "ஆந்திரப்பிரதேசம் திருமலையின் மேல் உள்ள புகழ்வாய்ந்த கோயில் முதலில் தோன்றிய ஆழ்வார்கள் காலத்தில் அதாவது கி. பி. மூன்றாவது நான்காவது நூற்றாண்டுகளில் இருக்கவில்லை. அவர்களுடைய தமிழ்ப் பாடல்கள் வேங்கடவன் திருவுருவம் வெயில் மழை ஆகியவற்றுக்கு உட்பட்ட திறந்தவெளியில் இருந்ததாகவும், அந்தத் திருவுருவத்தைச் சுற்றி, குட்டையான மதில்சுவர் மட்டுமே இருந்ததாகவும் வர்ணிக்கின்றன." என்று எழுதியுள்ளார். இந்தக் கூற்றுக்கு ஆதாரம் ஏதேனும் உண்டா?

இந்தக் கூற்றுக்கு ஆதாரம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. "மந்திபாய்வட வேங்கட மாமலை வானவர்கள் சந்தி செய்ய நின்றான்" முதலான பாடல்களில் நித்யஸூரிகளும் வானரர்களும் வேங்கடவனை ஒக்க ஆராதிக்கின்றனர் என்று ஆழ்வார்கள் அருளியிருப்பதைக் கண்டு இவர் இவ்வாறு எழுதியிருக்கலாம். "ஓண விழவில் ஒலியதிர பேணி வருவேங்கடவா" [நான்—திரு—41] என்று திருவேங்கட

http://acharya.org

மலையில் உத்ஸவத்தில் எம்பெருமான் எழுந்தருளுவதைத் திருமழிசையாழ்வார் குறிப்பிட்டிருக்கையாலே அந்த உத்ஸவ மூர்த்தியை வானரங்கள் முதலான விலங்குகளும் வணங்கியதாகவே கொள்ளவேண்டும்.

K. பார்த்தசாரதி—சென்னை—88

32. 6-2-94 இண்டியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகை பக்கம் 10ல் "மஹாவிஷ்ணுவின் மஹிஷி" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. அதில் துலுக்க நாச்சியார் அரங்கனிடம் காமுற்றுக் கோயிலுக்கு வந்து பிராண த்யாகம் செய்ததாகவும், அதனாலேயே ஸ்ரீரங்கத்தில் துலுக்க நாச்சியாருக்கு ஸந்நிதி இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. இதற்கு ஆதாரம் உண்டா?

மேல்கோட்டை திருநாராயண புரத்தில் செல்வப்பிள்ளை விக்ரஹத்தை எம்பெருமானார் டில்லி சென்று சுல்தானிடமிருந்து மீட்டு எழுந்தருளப் பண்ணி வந்ததாகவும், அப்பெருமானிடம் காதல் கொண்ட சுல்தானின் பெண் மேல்கோட்டை வந்து பெருமாளிடம் ஐக்யமானதாகவும் ப்ரபந்நாம்ருதம் [அத்தியாயம் 47, 48] முதலான நூல்களில் காணப்படுகிறது. ரங்கநாதன் விஷயத்திலும் இதுபோன்ற கதை கோயிலொழுகில் உள்ளது. துலுக்க நாச்சியார் செல்வப்பிள்ளையிடம் ஐக்கியமடைந்ததைக் குறிக்கும் வகையில் ஸ்ரீரங்கத்திலும் துலுக்க நாச்சியார் கதையும், ஸந்நிதியும் ஏற்பட்டிருக்கலாம். நம்பெருமாள் ரொட்டி வெண்ணெய் அமுது செய்வதும் திருமஞ்சனத்தில் லுங்கி சாத்திக் கொள்வதும் முஸ்லிம் தொடர்பைக் காட்டுவதாகக் கூறுவதும் தவறு. திருமஞ்சனத்தில் மட்டுமே சாத்தப்படும் சிவப்புவஸ்திரத்திற்குத் 'திருமஞ்சனக்கைலி' என்று பெயர். திருவெள்ளறை எம்பெருமான் போன்ற மற்ற திவ்ய தேசத்து அர்ச்சா மூர்த்திகளுக்கும் திருமஞ்சன சமயத்தில் மட்டும் இது சாத்தப்படுகிறது. ரொட்டி, வெண்ணெய் என்பது முஸ்லிம்களுடைய தனிப்பட்ட உணவு அல்ல. பெரும்பான்மையான வடநாட்டு இந்துக்களின் உணவாகும். எனவே வடநாட்டிலிருந்து எழுந்தருளிய ரங்கநாதன் ரொட்டி, வெண்ணெய் அமுதுசெய்வதில் ஆச்சரியமில்லை.

http://acharya.org

T. A. பாஷ்யம் சென்னை—1

33. 24—4—94 'கல்கி'யில் கேள்வி-பதிலில் "மறைந்த காஞ்சி பெரியவர் பிராமணரல்லாத—குறிப்பாக தாழ்த்தப் பட்ட மக்களுக்கு என்ன செய்தார்? தமிழ் மொழிக்கு என்ன தொண்டாற்றினார்?" என்ற கருப்பண்ணசாமியின் கேள்விக்கு "காலணித் தொழிலாளி உள்பட அனைத்துக் கலைஞர்களுக்கும் ஆதரவு தந்து (சதஸ்) விழா நடத்தினார். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று வலியுறுத்தினார். திருப்பாவை திருவெம்பாவை போன்ற இலக்கியங்களை மக்களிடையே பிரபலப்படுத்தினார். இன்னும் எத்தனையோ? கறுப்புக் கண்ணாடியைக் கழற்றிவிட்டால் கருப்பண்ண சாமிக்குத் தெளிவு பிறக்கும்" என்று பதிலுரைக்கப் பட்டுள்ளது. இதை விமர்சிக்கக் கோருகிறேன்.

மறைந்த பீடாதிபதி சில இடங்களில் ஆகம சிற்பசதஸ் நடத்தியதன் நோக்கம் வேறு. வைஷ்ணவாகமங்களில் 'நீறு பூசிய பாஷண்டியை விஷ்ணுவைப் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் வணங்கக் கூடாது' என்று விதிக்கப்பட்டுள்ளது. அதை மாற்றி, அவர்களை கௌரவித்து சன்மானம் கொடுக்கும் வியாஜத்தில் அவர்களைத் தன்னை வணங்கச் செய்வதற்காகவும், 'ஆகம பண்டிதர் முதல் காலணித் தொழிலாளி வரை எல்லோரையும் ஒன்று கூட்டி சதஸ் நடத்தினார்' என்ற பெயர் பெறவுமே இத்தகைய 'சதஸ்'கள் ஒரு சில இடங்களில் நடத்தப் பட்டன. இதனால் சமூகத்தில் யாருக்கும் எந்த நிரந்தரமான பயனும் விளையவில்லை. பாவை மாநாடுகள் நடத்தியதன் நோக்கமும் திருமாலைத் தூஷிக்கும் வெம்பாவையை விஷ்ணு கோயில்களில் முழங்கச் செய்யவேண்டும் என்பதே. திருப்பாவை ஏற்கனவே மார்கழி மாதத்தில் நடைபெறும் உபந்யாஸங் களால் பாரததேசமெங்கும் மிகப் பிரபலமாக இருந்தது. மற்ற பாவை அப்படிப் பிரபலமாக இல்லையே என்னும் எண்ணத் தாலே இரு பாவைகளையும் ஒன்றாகச் சேர்த்து வைணவச் சிறுவர்களையும் வெம்பாவையைப் படிக்கச் செய்தார்.

http://acharya.org

வைஷ்ணவர்களின் ஒருமுகமான எதிர்ப்பினால் இது சில வருடங்களில் ஓய்ந்தது. உண்மையில் திருப்பாவையின் மேல் தமக்குத் துவேஷமே உள்ளது என்பதை "தீக்குறளைச் சென்றோதோம்" என்று ஆண்டாள் திருப்பாவையில் திருக்குறளைத் தாக்கியிருக்கிறாள் என்று அபத்தமாகப் பிரசாரம் செய்து, வைணவப்பத்திரிகைகளாலும், குமுதம் பத்திரிகையாலும் கண்டனம் செய்யப்பட்டு வெற்றிகரமாகப் பின் வாங்கினார் பீடாதிபதி. தமிழ் மொழிக்கு இவர் செய்த 'தொண்டு'களில் மற்றும் சில:— (1) ஆத்திச்சூடியில் 'திருமாலுக்கு அடிமை செய்' என்று உபதேசித்த ஔவையார் சிவனைப்பற்றி ஒன்றும் கூறவில்லையே என்னும் ஆதங்கத்தாலே "அறனை மறவேல்" என்ற 'ற' கரத்திற்குரிய வாக்கியத்தை "அரனை மறவேல்" என்று திருத்தி 'சிவனை மறக்காதே' என்று உபதேசிப்பதாகத் திரித்துக் கூறினார். இடையின 'ர' கரத்திற்குரிய "அரவமாட்டேல்" என்னும் வாக்கியம் முன்னமே வந்திருப்பதைக் காணவில்லை. நாம் பலமுறை எடுத்துக் காட்டியும் திருத்திக் கொள்ள மனமும் இல்லை. (2) கொச்சைத்தமிழில் ஆங்கிலச் சொற்களையும் இடையிடையே அடிக்கடி புகுத்தித் தாம் செய்த உபன்யாசங்களை அப்படியே அச்சிட்டு வெளியிடச்செய்து தமிழ்க் கொலை செய்தது. மறைந்த பின்பும் 'கல்கி' இந்தத் தமிழ்க் கொலைச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. அடுத்த கேள்வியின் பதிலில் இத்தகைய ஒரு சொற்பொழிவிலிருந்து சில மாதிரிகள் கொடுக்கப்பட்டுள்ளன. காமகோடி • பக்தி வெறியாகிற காமாலையால் பீடிக்கப்பட்டிருக்கும் 'கல்கி'யின் கண்களுக்கு எத்தனை முறை ஆதாரத்துடன் எடுத்துக்காட்டினாலும் இந்த உண்மைகள் புலப்படமாட்டா.

S. முரளி, அந்தணல்லூர்

34. 22—5—94 'கல்கி' இலவச இணைப்பாக, காமகோடி பீடாதிபதியின் ஒரு நீண்ட சொற்பொழிவை 'அருள் அருவி' என்னும் பெயரில் வெளியிட்டிருக்கிறது. அதில் தங்களுடைய 'சங்கரரும் வைணவமும்' என்னும் நூலின் ஒரு சில பகுதிகளுக்குப் பதிலுரைக்க முயன்றிருக்கிறார். அது சரியான பதிலா என்று விமர்சிக்க வேண்டுகிறேன்.

http://acharya.org

இக்கட்டுரையில் பின்வரும் வாக்கியங்களில் நாம் 'சங்கரரும் வைணவமும்' என்னும் நூலில் எடுத்துக்காட்டிய முக்கியமான விஷயங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறார். (1) "ஜகத் வ்யாபாரத்துக்குக் காரண சக்தி என்று சொன்னேனே, அதை ஆசார்யாள் தம்முடைய பாஷ்யப் புத்தகங்களில் 'நாராயண' என்ற பெயராலேயே குறிப்பிட்டிருப்பார்." (2) "ஆகக்கூடி, ஜகத்துக்குக் காரணப் பொருளாக இருக்கப்பட்ட மூலத்துக்கு ஆசார்யாள் நாராயணப் பேர் கொடுத்தே பாஷ்யப் புஸ்தகங்களில் எழுதியிருக்கிறது." "ஆனால தாமே சங்கரனின் அவதாரமாயிருப்பதால் தம்மையே சொல்லிக்கொள்ளக்கூடாது என்று நாராயணனைச் சொன்னார்" என்று இதற்கு ஒரு காரணத்தைக் கற்பிக்கிறார். ஆனால் மனஸ்ஸாக்ஷி உறுத்து கையால் "நார என்கிற ஜீவாத்மாக்களுக்கு இரண்டு அர்த்தத்திலும் அயனமாக இருக்கிறவன் நாராயணன். கடைத்தேறும் வழியான ப்ரம்ம வித்யா சாஸ்திரமாக இருப்பவன் அவனே "அத்யாத்ம வித்யா வித்யாநாம்" என்று அவனே கிருஷ்ண பரமாத்மாவாக வந்த போது (கீதையில்) சொல்லிக் கொண்டிருக்கிறான். அந்த வித்யையின் முடிவாக, பலனாகச் சென்று சேரும் இருப்பிடமான பரப்ரஹ்மமாக இருப்பவனும் அவனே. ஆகையினாலேதான் ப்ரஹ்மவித்யா குரு பரம்பரையைச் சொல்லும் போதும் "நாராயணன்" என்று ஆரம்பிக்கிறது. ஆகையால் ப்ரஹ்ம வித்யா சாஸ்திரமான பாஷ்யப்புஸ்தகத்தில் நாராயண நாமத்தைச் சொல்லுவது ரொம்பவும் பொருத்தமானதே" என்று இவர் 'உண்மையான காரணத்தையும் தன்னையும் மீறி வெளியிட்டிருக்கிறார். நாம் நமது "சங்கரரும் வைணவமும்" என்னும் நூலின் ஒரு பகுதியான "ஆதிசங்கரர் ஷண்மதஸ்தாபகரா?" என்னும் கட்டுரையில் [4 5 6 பக்கங்களில்] சங்கரர் தமது ப்ருஹதாரண்யகம் [3—7—3] அந்தர்யாமி ப்ராஹ்மண பாஷ்யத்தில், உபநிஷத் வாக்கியத்தில் பரம்பொருளின் பெயரைக் குறிக்காதபோதிலும், 'நாராயணாக்ய:" [நாராயணன் என்னும் பெயரை உடையவன்] என்று பரப்பொருளின் தனிப்பெரும் பெயரைக் குறிப்பிடுகிறார் என்பதையும், இதற்குக் காரணத்தை விளக்க வந்த ப்ராசீனரான வார்த்திககாரர் "வியாஸருடைய

http://acharya.org

சித்தாந்தப்படி எல்லா தேவர்களுக்கும் பரமாத்மாவாயிருப்பவன நாராயணனே ஆகையாலே "நாராயணாக்யு:" என்று பாஷ்யகாரர் குறிப்பிட்டுள்ளார்" என்று எழுதயிருப்பதையும், இந்த வார்த்திகத்துக்குட் டீகையிட்ட ஆனந்தகிரி எனனும் ப்ராசீனரான அத்வைதாசாரியரும "நாராயணனே வேதத்தில் காட்டப்பட்டுள்ள பரம்பொருளாகையாலே பாஷ்ய வார்த்திகங்கள் இப்படி அமைந்துள்ளன." என்று எழுதியிருப்பதையும் எடுத்துக்காட்டியுள்ளோம். தம்முடைய பூர்வாசார்யர்களுடைய நிர்ணயத்திற்கு விரோதமாக, காமகோடி பீடாதிபதி ஒரு புதுக்கற்பனையை இதில் செய்துள்ளார் என்று விளங்குகிறது. மேலும் அந்த ப்ருஹதாரண்யக பாஷ்யத்திலேயே ஆதிசங்கரர் 'பசுபதியான உருத்திரன் ப்ரஹ்மத்தால் படைக்கப்பட்டவன்' என்று காட்டியிருப்பதையும், கீதை 6-47, 7-23 முதலான ச்லோக பாஷ்யங்களில் "சிவன் முதலான தேவர்களை உபாஸிப்பவர்களுக்கு மோக்ஷம் இல்லை' என்றும் 'நாராயணனை உபாஸிப்பவர்களுக்கே மோக்ஷம்உண்டு' என்றும் காட்டியிருப்பதையும் 6, 7, 8 பக்கங்களில் எடுத்துக்காட்டியிருக்கிறோம். இதற்கெல்லாம் எந்த பதிலும் சொல்ல முடியாதாகையாலே பீடாதிபதி இவற்றைத் தொடவேயில்லை. சிவானந்தலஹரி, ஸௌந்தர்யலஹரி முதலான இதரதேவதா ஸ்தோத்ரங்கள் ஆதிசங்கரரின் காலத்திற்குப்பிறகு பலநூற்றாண்டுகள் வரையில் எவராலும் கையாளப்படாமையாலே, அவை ஆதிசங்கரர் இயற்றியவை அல்ல என்று நாம் நிலைநாட்டியிருப்பதற்கு எந்த பதிலையும் கூறாமல், அவற்றை ஆதிசங்கரருடையதாக வைத்துக்கொண்டு வாதம் செய்கிறார். இவற்றிலிருந்து பீடாதிபதியின் வாதங்கள் வீண் வாதங்களே என விளங்குகிறது. "பதில் வைத்திருக்கிறேன். கொஸ்ச்சின் பேப்பர், ஆன்ஸர் பேபர் எல்லாம் 'ப்ரிபேர்' பண்ணிக்கொண்டுதான் கதை அளக்க வந்திருக்கிறேன்" என்று இவரே ஒப்புதல் வாக்குமூலம் அளித்தபடி இந்தக் 'கல்கி'க்கட்டுரையில் வெறும் கற்பனைக் கதைஅளப்புதான் இருக்கிறதே தவிர உண்மை ஏதும் இல்லை என்று தெளிவாகிறது.

http://acharya.org

அ. வே. தனுஷ்கோடி, விருதுநகர்

35. 26–7–93ல் வெளிவந்த ஸுதர்சனம் [548] இதழில் ஸுதர்சனர் பதில்' 12-வது சதகம் 13-வது கேள்வியின் பதிலில் 'தர்சனம்' என்னும் ஆங்கிலக் காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் "யோக ரஹஸ்யம்" நாதமுனிகளுடையதாக இருக்கமுடியாது என்று விளக்கி எழுதியிருந்தீர்கள். 1994 மே மீ 'தரிசனம்' இதழில் ஒரு கட்டுரையில் தங்களது கருத்தின் ஆங்கிலமொழி பெயர்ப்பும், அதற்கு பாண்டிச்சேரி பிரெஞ்சுக்கழகத்திலிருக்கும் Dr. வி. வரதாச்சாரி என்பவரின் பதிலும் (ஆங்கிலத்தில்) கொடுக்கப்பட்டுள்ளது. பதிலை விமர்சிக்க வேண்டுகிறேன்.

நம்முடைய பதிலைத் தாங்கிநிற்கும் 548 வது இதழ் 1993 ஜுலை 26 ம் தேதியன்றே 'தரிசனம்' இதழின் விலாசத்திற்கு அனுப்பப்பட்டது. அது பற்றி விமர்சித்திருக்கும் தரிசனத்தின் மே—94 இதழ் இதுவரை நமக்கு அனுப்பப்படவில்லை. இது பத்திரிகை தர்மத்திற்கு முரணானது. நிற்க. டாக்டர் வி. வரதாச்சாரியின் விமர்சனத்தை ஆராய்வோம். டாக்டர் வரதாச்சாரி அவர்கள் நாதமுனிகளின் சிஷ்யர்களைக்குறிக்கும் போது அவருடைய முக்கிய சிஷ்யராய், அவரிடமிருந்து அருளிச் செயலையும் அதன் அர்த்தங்களையும் பரப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்டவராய், அதனாலேயே உய்யக்கொண்டார் என்று நாதமுனிகளால் அபிமானித்து அழைக்கப்பட்டவரான ஸ்ரீபுண்டரீகாக்ஷர் என்னும் உய்யக்கொண்டாரைக் குறிக்காமல் விட்டுவிட்டார். குருகைக்காவலப்பன் முதலான ஏழு அப்ரஸித்த சிஷ்யர்களைக் குறித்திருக்கும்போது, வாக்ய குருபரம்பரையிலும் ஶ்லோககுருபரம்பரையிலும் ஸ்ரீவைஷ்ணவ உலகம் அனைத்தாலும் தினந்தோறும் அநுஸந்திக்கப்படுபவரான ஸ்ரீபுண்டரீகாக்ஷரான உய்யக்கொண்டாரை ஏன் விட்டார் என்று இவர் விளக்கக்கடமைப்பட்டுள்ளார். "நாதமுனிகள் பக்தியே வடிவெடுத்த யோகி என்று ஸ்தோத்ரரத்னத்தின் தொடக்கத்தில் யாமுனாசார்யர் அருளியிருப்பதால் அவருடைய யோகரஹஸ்யம் பக்தியோகத்தை விரிவாக

http://acharya.org

விளக்குவதாகவே அமைந்திருக்கமுடியும்" என்று நாம் எழுதியிருந்தோம். இதற்கு பதிலெழுதப் புகுந்த டாக்டர் 'ஸ்தோத்ர ரத்னத்தின் முதல் ஸ்லோகத்தில் ஆளவந்தார் நாதமுனிகளின் பக்தி கடல் போல் ஆழ்ந்தது என்றே குறிப்பிட்டிருக்கிறார்.'' என்றும், "இதிலிருந்து நாதமுனிகளை பக்தியோகி என்று கூறுவது வெறும் ஊகமே" என்றும், "ஆகையால் யோக ரஹஸ்யம் பக்தி யோகத்தை விளக்குவது என்று காட்ட இது சரியான நிரூபணம் ஆகாது" என்றும் எழுதியிருக்கிறார். ஸ்தோத்ரரத்னத்தின் மூன்றாவது ஸ்லோகத்தில்

"அபரிமித அச்யுத ப₄க்திதத்வ ஜ்ஞாநாம்ருதாப்₃தி₄ பரிவாஹ ஶுபை₄: வசோபி₄: |
லோகே அவதீர்ண பரமார்த்த₂ ஸமக்₃ரப₄க்தியோக₃ாய நாத₂முநயே ||"

[அளவில்லாத ப₄க₃வத் ப₄க்தி, உண்மையறிவு ஆகிய அமுதக் கடலின் பரிவாஹம் (வெளிப்பாடு) போன்று மங்களமாக விளங்கும் ஸ்ரீஸூக்திகளாலே, இவ்வுலகத்தில் அவதாரம் செய்திருக்கிற பரம புருஷார்த்தமாயும் பரிபூர்ணமாயும் இருக்கிற பக்தியோகத்தை உடையவராகிற யோகிகளில் சிறந்தவரான நாதமுனியை] என்று ஆளவந்தார் பரிபூர்ணமான பக்தி யோகத்தை உடையவர் நாதமுனி என்று மிகத் தெளிவாக அருளிச் செய்திருக்கிறார். "வசோபி₄:" என்னும் பதத்தால் இவ்விஷயம் அவருடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்தே விளங்குகிறது என்றும் காட்டியிருக்கிறார். "வசோபி₄:" என்னும் பதத்திற்கு பா₄ஷ்யமிட்ட ஸ்ரீவேதாந்த தேசிகர் "வசோபி₄:— பரதத்வ பரமஹித பரமபுருஷார்த்த₂ விஷயைர் ந்யாயதத்வாதி₃ ப்ரப₃ந்த₄நிவேஶிதை: அந்யைஶ்ச வாக்யை: |" ['வசோபி₄:' என்னும் பத₃த்தாலே பரதத்வத்தையும், பரமஹிதத்தையும், பரம புருஷார்த்த₂த்தையும் விளக்கும் ந்யாயதத்வம் முதலான பிரபந்தங்களிலுள்ள வாக்கியங்களாலும் (முக்தகங்களான) மற்ற வாக்கியங்களாலும்] என்று உரையிடுவதன் மூலம், நாதமுனி பக்தியோகம் உடையவர் என்னும் விஷயம் இவருடைய ந்யாயதத்வம் முதலான பிரபந்த வாக்கியங்களிலிருந்து விளங்குகிறது என்று தெளிவாக

http://acharya.org

அருளிச்செய்துள்ளார். இவர் அருளிச்செய்த பிரபந்தங்கள்—ந்யாயதத்வம், யோக ரஹஸ்யம் ஆகிய இரண்டே என்பது அனைவரும் இசைந்தது. ஆகையால் 'ஆதி₃' ஶப்₃த₃த்தால் ஸ்ரீதேசிகர் எடுத்திருப்பது யோக ரஹஸ்யமாகவே இருக்க முடியும். ஆக, யோக ரஹஸ்யம் பக்தியோகத்தை விரிவாக விளக்குவது என்று நாம் எழுதியது வெறும் ஊகமே என்றும், அதற்குச் சான்றில்லை என்றும் டாக்டர் எழுதியது ஆராய்ச்சியின்மையாலேயே என்று விளங்குகிறது. 'யோகரஹஸ்யம்' பதஞ்ஜலியோக ஸூத்ரத்தைப்பற்றியதே என்று இவர் முடிவுகட்டுவது ஆளவந்தாரின் ஸ்ரீஸூக்திகளுக்கும் ஸ்ரீதேசிகரின் பா₄ஷ்யத்திற்கும் முரண்பட்டது என்றும் தெளிவாக விளங்குகிறது. "சடகோபர் ஶடமர்ஷண கோத்ரத்தில் உதித்தவர் என்று அச்சிடப்பட்டிருக்கும் யோக ரஹஸ்யத்தில் காணப்படுவதற்கு வரலாற்று நூல்களில் ஆதாரமில்லை" என்று நாம் எழுதியிருந்தோம். அதை டாக்டர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் சடகோபர் நாதமுனிகளுக்கு ஆசார்யராகையாலே சடகோபரையும் "ஶட₄மர்ஷணகுலதிலகம்" என்று சொல்லலாம் என்று வாதிடுகிறார். இது விதண்டாவாதம் என்பது தெளிவு. குருபரம்பரை நூல்களிலும் ஈடு முதலிய பூர்வாசார்ய க்ரந்தங்களிலும் நாதமுனிகளிடமிருந்து பக்தியோகத்தைப் பெற்ற குருகைக்காவலப்பன் யோக₃நிலையில் எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து அநுப₄வித்து வந்ததாகவே உள்ளதாக நாம் எடுத்துக்காட்டியிருந்தோம். இதற்கு, குருபரம்பரை முதலான நூல்கள் நம்பத்தகாதவை என்றும் ஆசார்யர்களைப் புகழ்வதற்காக ஏற்பட்டவை என்றும் பதில் கூறுகிறார். குருபரம்பரை நூல்களிலும் பூர்வாசார்ய க்ரந்தங்களிலும ஆளவந்தாருக்குக் குருகை காவலப்பன் தாம் பரமபதிக்கும் தினத்தைக் குறித்துக்கொடுத்து அன்று வந்து நாதமுனிகளிடமிருந்து பெற்ற யோகரஹஸ்யத்தைத் தம்மிடமிருந்து உபதேசம் பெறும்படி கூறியதாகவும், அன்றைய தினம் திருவனந்தபுரத்தில் இருந்த ஆளவந்தார் இது நினைவிற்கு வந்து "ஒரு ஆகாய விமானம் பெற்றிலோமே திருக்குருகைக் காவலப்பனிடமிருந்து உபதேசம் பெற" என்று வருந்தினாரென்றும், யோகரஹஸ்யம் அது முதல் வைஷ்ணவ ஸமூஹத்திற்கு நஷ்டமாகிவிட்டது என்றும் அருளிச் செய்யப்

http://acharya.org

பட்டுள்ளது. இவற்றையெல்லாம் நம்பத்தகாதவை என்று கூறும் டாக்டர்—இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கிருஷ்ணமாசாரியருக்கு ஆழ்வார் திருநகரியில் நாதமுனிகளே ஒரு கிழவராக வந்து தோன்றி இந்த யோக ரஹஸ்யத்தை வாய் வார்த்தையாக உபதேசித்தார், கிருஷ்ணமாசார்யர் பல வருடங்கள் அதை நினைவில் வைத்துக்கொண்டு இந்நூலை எழுதினார் என்று கூறப்படும் இந்த நூலை நம்பத்தக்கது என்று எழுதுவது மிகவும் ஆச்சர்யமாக இருக்கிறது. நடுநிலையாளர்கள் இதைச் சிறிதும் ஏற்கமாட்டார்கள்.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்

36. கல்கியில் 'ஓம் என்று சொல்லுவோம்' என்னும் தலைப்பில் 'கமலமணாராஜன்' என்னும் புனைபெயருடையவரால் பெரும்பாலும் சிவன் கோவில்களின் தலபுராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு கோயில் கட்டுரைகள் எழுதப்படுகின்றன. அதில் 22–5–94 இதழில் அன்பில் சிவன் கோயிலைப்பற்றி எழுதும் போது, "இந்தச் சிவனை விஷ்ணு பூஜித்தார்" என்றும் "பிரம்மா தான் செய்த அபசாரத்திற்கு இங்கு வந்து பரிகாரம் தேடிக் கொண்டு மீண்டும் சிருஷ்டித் தொழிலைப் பெற்றார்" என்றும் கதை எழுதப்பட்டுள்ளது. விமர்சிக்க வேண்டுகிறேன்.

தலபுராணங்கள் பெரும்பாலும் ஒரு சில நூற்றாண்டுகளுக்குள் எழுதப்பெற்றவை என்பது அனைவரும் அறிந்ததே. கம்ப்யூட்டர், ராக்கெட் யுகமான இக்காலத்தில் இத்தகைய அபத்தக்கதைகளை வெளியிட்டு அனைவருடைய நகைப்புக்கும் இடமாகி 'கல்கி' தன்னைத்தானே தாழ்த்திக்கொள்கிறது. பிரமனின் தலையை சிவன் கிள்ளியதையும் அதனால் தலை கையில் ஒட்டிக்கொண்டு சிவன் உலகெங்கும் பிச்சை எடுத்துத் திரிந்ததையும், விஷ்ணுவாலேயே அதற்குச் சாபவிமோசனம் ஏற்பட்டதையும் மிகப்பழைய இதிஹாஸபுராணங்கள் முழங்குகின்றன. ஆழ்வார்களும் இதை எடுத்துக் காட்டியுள்ளனர். உத்தமர்—பிக்ஷாண்டார் கோயிலும், கண்டியூரிலுள்ள பெருமாள் சிவன் கோயில்களும், மயிலைக்கபாலீ கோயிலும் இதற்கு அசைக்கமுடியாத சான்றுகளாக விளங்குகின்றன. சைவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் கதையை கல்கி ஒரு நாளும் வெளியிடாது. விஷ்ணுவையும், பிரமனையும் தாழ்த்திப் பேசும் கட்டுரைகளையே வெளியிடும். இந்த சைவ வெறியைக் கல்கி கைவிடும் என்று தோன்றவில்லை.

http://acharya.org

எஸ். முரளி, அந்தணல்லூர்.

37 10–7–94 கல்கியில் "ஓம் என்று சொல்லுவோம்" என்னும் தலைப்பில் வெளியிடப்படும் கட்டுரைத்தொடரில் மாப்பலத்திலுள்ள ஒரு காளி கோயிலைப்பற்றி எழுதப் பட்டுள்ளது. அக்கோயில் பூசாரி "அம்மா நின்று கொண்டிருப்பது சிவன் நெஞ்சில் ஒருகாலும் தொடையில் ஒரு காலுமாய்; இப்படி கிடந்த நிலையில்தான் சர்வேச்வரன் அம்மாவின் கோபத்தைத் தணிக்கவேண்டியிருந்தது." என்று கூறினாராம். "அம்மாவின் இடக்கரத்தில் ஓங்கிய நிலையில் ஓர் வெட்டரிவாள், இன்னும் ஓர் இடக்கரத்தில் வெட்டப் பட்ட அரக்கனின் தலை......அம்மாவின் இருபுறமும் சீறிய உருவில் ஊளையிடும் நரிகள், அம்மா ச்மசான (சுடுகாடு) தேவதை அல்லவா? இந்த அம்மாவின் திருநாமம் பவதாரிணி" என்று எழுதப்பட்டு அதுபோல் காளியின் சித்திரமும் காணப்படுகிறது. விமர்சிக்க வேண்டுகிறேன்.

சுடுகாட்டுத் தேவதைக்கு இத்தகைய உருவமும் செயலும் பொருத்தமானதே. "காணிலும் உருப்பொலார் செவிக்கினாத கீர்த்தியார்" என்று திருமழிசையாழ்வார் அருளியதை அவர்களுடைய கோயில்களே நிரூபிக்கின்றன. இப்படிப்பட்ட தெய்வத்தைப் பரப்பொருளாகவும், அவளுடைய காலின்கீழ் மிதிபடும் தெய்வத்தை சர்வேச்வரனாகவும் சொல்லிக்கொண்டு, அதைப்பலதரப்பட்ட மக்கள் படிக்கும் 'கல்கி'யில் வெளியிடுவது தான் நமக்கு வியப்பையும் வருத்தத்தையும் விளைக்கிறது.

ஸாரநாதகோபாலன், சேப்பாக்கம், சென்னை—5.

38. விஷ்ணுசித்த விஜயம் ஸ்ரீராமாயண நிர்ணயத்தில் "வேதத்தில் சிவன் இல்லை" என்னும் தலைப்பில் "ருத்திரன் என்னும் தெய்வமே உண்டு" என்று காட்டப்பட்டுள்ளது. இதிஹாஸபுராணங்களிலும், அருளிச்செயல்களிலும் அவற்றின் வ்யாக்யானங்களிலும் ருத்திரனையே சிவன் என்று குறித்திருப்பதற்குக் காரணம் என்ன?

வேதத்தின் பூர்வபாகத்தில் ருத்ரன் என்ற தேவதை பல இடங்களில் குறிக்கப்படுகிறது. 'சிவன்' என்னும் பெய

http://acharya.org

ரோடு ஒரு தேவதை குறிக்கப்படவில்லை என்னும் விஷயமே ஸ்ரீராமாயண நிர்ணயத்தில் காட்டப்பட்டுள்ளது. ஆனால் உத்தரபாகமான உபநிஷத்துக்களிலும் ஆழ்வார்கள் ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளிலும் அந்த ருத்ரன் சிவன் என்று குறிக்கப்படுவது உண்மையே. சதபதப்ராஹ்மணத்தில் ப்ரஜாபதியாகிய பிரமன் உஷஸ் எனப்படும் விடியற்காலை வேளைக்கு அபிமானியான தன் தேவியிடம் வீர்யத்தை விட்டாரென்றும், ஒருவருடத்தில் அந்த வீர்யம் ஒருபிள்ளையாகப் பிறந்ததாகவும், பிறந்தவுடனே அது அழுததாகவும் தன் பாபங்கள் போவதற்கு (பரமாத்மாவின்) நாமங்களை வைக்கும்படி தந்தையான பிரமனிடம் அந்தப்பிள்ளை கூறியதாகவும், பிறந்தவுடன் அழுததால் 'ருத்ரன்' (அழுதவன்) என்று பிரமன் பெயர் வைத்ததாகவும் கூறப்படுகிறது. மற்றும் சில பெயர்களை இட்டதாகவும் சொல்லப்படுகிறது. வேதத்தின் பூர்வபாகத்தில் எங்குமே இந்த தேவதையைக் குறித்து சிவன் என்னும் பெயர் சொல்லப்படவில்லை. ஆனாலும், வேதத்தின் உத்தரபாகமான உபநிஷத்துக்களிலும் இதிஹாஸபுராணங்களிலும் ருத்ரனுக்கு 'சிவன்' என்னும் பெயர் காணப்படுகிறது. இதற்குக்காரணமும் ஸ்ரீபாகவதத்தில் "யச்செளச நிஸ்ஸ்ருத ஸரித்ப்ரவரோதககேந தீர்த்தேந மூர்த்நி வித்ருதேந ஶிவ: ஶிவோபூத்" [எவனுடைய திருவடியை விளக்கியதால் விழுந்த கங்கையின் நீரைத் தலையில் தரித்ததனால், சிவன் சிவனானான்] என்று கூறப்பட்டது. இவற்றிலிருந்து, தன் புத்திரனுக்குப் பிறக்கும்போது பிரமனால் இடப்பெற்ற முக்கியமான பெயர் 'ருத்ரன்' என்றும், 'ஶிவன்' என்று பெயரிடப்படவில்லை என்றும், அதனாலேயே வேதத்தின் பூர்வபாகத்தில் ருத்ரநாமத்தாலேயே அந்த தெய்வம் குறிக்கப்பட்டதென்றும், திரிவிக்கிரமாவதாரத்தின்போது திரிவிக்கிரமனின் ஸ்ரீபாததீர்த்தமான ஆகாச கங்கையை ருத்ரன் தரித்து, சிவனாக (பாபம் நீங்கியவனாக) ஆனதால் அதிலிருந்து அவனுக்கு 'சிவன்' என்ற பெயரும் ஏற்பட்டதென்றும், அப்பெயர் உபநிஷத்துக்களிலும், இதிஹாஸ புராணங்களிலும், ஆழ்வார்கள் ஆசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளிலும் ஆதரிக்கப்பட்டதென்றும் விளங்குகிறது. ஆகையால், எந்த முரண்பாடும் இல்லை.

http://acharya.org

R. பார்த்தசாரதி, புதுடெல்லி.

39. ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் என்பவர் எழுதிய ராமானுஜரின் வாழ்க்கைச் சரிதத்தில் ராமானுஜர் தாம் பரமபதம் ஏகும்போது சிஷ்யர்களுக்கு "பக்தர்களும் பகவானும் ஒன்றே" என்று உபதேசித்ததாக எழுதியிருக்கிறார். இது உண்மையா?

இதற்கு எந்த நூலிலும் ஆதாரமில்லை. இவ்வாறு எழுதப் பட்டிருந்தால் அது சரியல்ல. அத்வைதியான நூலாசிரியர் தம்முடைய கொள்கையை ராமானுஜரிடம் ஏற்றுகிறார் என்றே கொள்ளவேண்டும்.

கோ. முத்துகிருஷ்ணராமானுஜதாஸர், மயிலாடுதுறை.

40. எங்கள் இல்லத்தில் பத்தாண்டு காலமாக குழலூதும் கண்ணன் எழுந்தருளியிருக்கிறார். 13-7-94 தினமணியில் 'ஆன்மிகம்' என்ற தலைப்பில் "குழலூதும் கண்ணன் வீட்டிலிருக்கக்கூடாது" என்று ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதர் என்பவர் எழுதியுள்ளதாக உள்ளது. இது சரியா?

கண்ணன் ஆராதனைக்கு எளியவன். பல கோயில்களிலும் திருமாளிகைகளிலும் வேணுகோபாலப்பெருமாள் குழலூதும் நிலையிலேயே இருக்கிறார். ஆதாரமில்லாமல் செய்திப் பத்திரிகைகளில் வரும் இத்தகைய கட்டுரைகளுக்கு மதிப்பளித்துக் கலக்கமடைய வேண்டாம்.

ஆர். ரகுராமன், புத்தூர், திருச்சி—17.

41. 22-6-94 ஹிந்து பத்திரிகையில் என். யஜ்ஞவராஹாசார்யர் என்பவர் பெரியாழ்வாருக்கு 'ராமாண்டார்' என்பதே இயற்பெயர் என்றும், பெருமாளை மாப்பிள்ளையாகப் பெற்றதால் 'பெரியாழ்வார்' என்னும் பட்டம் ஏற்பட்டதென்றும், அவர் மனிதகுலத்திற்கு யஜ்ஞங்களைச் செய்யுமாறு உபதேசித்தார் என்றும், அவர் யாகங்கள் செய்வதில் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்ததால் 'விஷ்ணு சித்தர்' என்று பெயர்பெற்றார் என்றும் உபந்யஸித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றுக்கு ஆதாரம் உண்டா?

http://acharya.org

பெரியாழ்வாருக்கு "ராமாண்டார்" என்னும் பெயர் உள்ளதாகக் கூறியிருப்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை. அவருக்குப் பெற்றோர் இட்டபெயர் 'விஷ்ணுசித்தர்' என்பதே. அவர் திருப்பல்லாண்டின் இறுதியிலும், பெரியாழ்வார் திருமொழிப் பதிகங்களினும் தம்முடைய பெயரை விஷ்ணு(விட்டு)சித்தர் என்றே குறிப்பிடுகிறார். அவர் தம் திவ்யப்ரபந்தங்களில் எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் செய்யும்படியும், அவனிடம் பக்தி செலுத்தும்படியும், அவனைச் சரணடையும்படியும், அவனுடைய திருநாமங்களைக் குழந்தைகளுக்கு வைக்கும்படியும் சொல்லியிருக்கிறாரேயொழிய யக்ஞங்கள் செய்யும்படி எந்த இடத்திலும் உபதேசிக்கவில்லை. ஆகையால், அதனால் அவர் "விஷ்ணு சித்தர்" என்று பெயர் பெற்றார் என்று கூறுவதும் பொருந்தாது. "விஷ்ணுசித்தர்" என்னும் பெயருக்கு "விஷ்ணுவை மனத்தில் கொண்டவர்" அல்லது "விஷ்ணுவின் மனத்தில் வாழ்பவர்" என்றே பொருளாகும். இதில் முதற் பொருளை "விட்டு சித்தன் மனத்தே கோயில் கொண்ட கோவலனை" [பெரியாழ் திரு 5—4—11] என்று அவரே வெளியிட்டிருக்கிறார். யாகங்கள் செய்வதற்கும் விஷ்ணுசித்தர் என்னும் பெயருக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. "மங்களாசாசனத்தில் மற்றுமுள்ள ஆழ்வார்கள் தங்கள் ஆர்வத்தளவுதானன்றி—பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர்ப்பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வார் என்னும் பெயர்" [உபரத் 18] என்று மணவாளமாமுனிகள் பட்டர்பிரானுக்குப் பல்லாண்டு பாடியதில் விஞ்சியிருந்ததாலேயே பெரியாழ்வார் என்னும் பெயர் வந்ததாகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். பரதத்துவ நிர்ணயம் செய்ததாலே 'பட்டர் பிரான்' என்ற பெயர் பெற்றவருக்கு எம்பெருமான் காட்சியளித்தவுடன் பொங்கும் பரிவாலே பல்லாண்டு பாடியதாலேயே 'பெரியாழ்வார்' என்னும் பெயர் விளைந்தது என்று கொள்வதே பொருத்தமாகும்.

http://acharya.org

A. V சேஷரத்னம், ஸ்ரீரங்கம்

42. 11—9—94 கல்கி வார இதழில் அருள்வாக்கு என்னும் தலைப்பில் "மஹாவிஷ்ணு மோகினி ரூபத்தில் சிவனிடம் சாஸ்தாவைப் பிள்ளையாகப் பெற்றார்" என்று மறைந்த காமகோடி பீடாதிபதி கூறியதாக வெளியிடப் பட்டிருக்கிறது. இந்தக் கதையால் சிவனுக்கு ஏற்றமோ விஷ்ணுவுக்குத் தாழ்ச்சியோ சித்திக்குமா?

இவ்விஷயம் முன்னமே ஸுதர்சனர் பதிலில் விமர்சிக்கப் பட்டுள்ளது. மோகினி ரூபத்தில் இருந்த புருஷோத்தமனான விஷ்ணுவைக் கண்டு சிவன் துரத்திக் கொண்டு ஓடினாரென்றும், அப்பொழுது சிவனுடைய வீரியம் விழுந்து சாஸ்தா உண்டானான் என்றும் கதை கூறுகிறார்கள். இதனால் 'புருஷோத்தமனே பெண்ணுருவம் எடுத்திருக்கிறான் என்பதைக் கூட அறியாமல் அவரைத் துரத்திக் கொண்டு ஓடினார்' என்னும் குற்றமும், 'விட புருஷர்களைப் போலே பெண்ணைக் கண்டவுடன் சிவனுக்கு வீரியம் விழுந்தது' என்னும் குற்றமும் ஏற்படுகிறது. அவர்கள் கூறும் இக்கதை உண்மையாயிருந்தால், 'சிவன் பரம் பொருளல்ல' 'காமக்ரோதங்களுக்கு வசப் பட்ட ஓர் ஸம்ஸாரி ஜீவனே' என்பதை உலகிற்கு விளக்குவதற்காக மஹாவிஷ்ணு ஆடிய நாடகமே இது என்று விளங்குகிறது. பீடாதிபதி இதை எழுதியதின் மூலம் சிவனுக்குத் தாழ்வையே நிலைநாட்டினார் என்றும் விளங்குகிறது. 'அரியல்லால் தேவியில்லை' என்று நாயன்மார்களில் ஒருவரான அப்பர் எழுதியுள்ளதற்கு நம்பிள்ளையிடம் ஒரு சைவர் பொருள் கேட்டபோது "சிவனுக்கு இப்படித் தாழ்வைக் கூறும் விஷயத்தைக் கூறியவர் அறிவிலியாகவும், நம்பத்தகாதவராகவும் உள்ளவர் என்று நினைப்பதே சிவபக்தனான உனக்குத் தக்கது" என்று நம்பிள்ளை கூறிய பதில் இங்கு நினைக்கத் தக்கது. "பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்தானை" [பெரியதிருமொழி 2—5—8] என்ற பாசுரத்தின் வ்யாக்யானத்தில் இந்த ஐதிஹ்யம் காட்டப்பட்டுள்ளது.

S. முரளி, அந்தணல்லூர்

43. சென்னை அம்பத்தூரில் வசிக்கும் திருவாளர்கள் V. வெங்கட்ராமன், A J. கோதண்டபாணி, D V. சக்ரபாணி ஆகிய அன்பர்கள் மூலமாக ஒரு துண்டுப் பிரசுரம் கிடைத்தது. அதில், சாரோனின் ரோஜா என்ற கிறிஸ்துவர் 1) இந்துக்களின் வேதங்களில் எந்த இந்து தெய்வத்தின்

http://acharya.org

பெயரும் இல்லை 2) தன்னைப் பிறர்க்குப் பலியாக்கும் ஏசுவே பிரஜாபதி. 3) இயேசுகிறிஸ்துதான் வேதத்தில் பேசப் பட்டுள்ளார். 4) பாகவத ஸ்கந்த வேதத்தில் பிரஜாபதி பிறப்பு கூறப்படுகிறது. 5) இதிஹாஸங்கள் கட்டுக்கதை என்பன போன்ற பொய்யுரைகள் மலிந்த பிரசாரங்களைச் செய்துள்ளார். அதைக் கண்ணுற்ற அடியேன் அந்தப் பிரசுரத்தில் கண்டுள்ள அபத்தங்களை ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி மறுத்து அவருக்குக் கடிதம் எழுதினேன். நேரடியாகப் பதிலளிக்க இயலாத அவருக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு சென்னை — 12-ல் உள்ள 'மெய்வழி' பத்திரிகை ஆசிரியர் பல விதண்டாவாதங்களைச் செய்து பதிலெழுதியிருந்தார். அவரது கூற்றுக்களை மறுத்து விட்டுக் கடைசியாக நான்கு கேள்விகளைக் கேட்டு அவற்றுக்கு நடுநிலை நின்று பதிலளிக்கக் கோரினேன். அவற்றுக்குப் பதிலளிக்கத் திராணியில்லாமல் மீண்டும் விதண்டாவாதங்களையே செய்துள்ளார். இது தொடர்பான கடிதப்போக்குவரத்தை இத்துடன் தங்கள் பார்வைக்கும் விமர்சனத்திற்கும் அனுப்பியுள்ளேன்.

நம்நாட்டில் அரசியலமைப்புச்சட்டப்படி அளிக்கப்பட்டுள்ள மதசுதந்திரத்தையும் சிறுபான்மையினருக்கான சலுகைகளை யும் தவறாகப் பயன்படுத்திக் கிறிஸ்துவர்கள் வெளிநாட்டு மிஷனரிகளின் பணபலத்தைக் கொண்டு இத்தகைய விஷமத்தனமான செய்கைகளில் ஈடுபடுகிறார்கள். கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது நம்முடைய வேதம். அதற்குப் பல மதாசார்யர் கள் உரையிட்டுக் காத்துள்ளார்கள். கிறிஸ்துவமதத்திற்குச் சம்பந்தமேயில்லாத பரம் பொருளான விஷ்ணுவும், அவருக்குக் கீழே பிரமன், உருத்திரன், இந்திரன், வருணன் முதலான தேவர்களும் அதில் சொல்லப்பட்டுள்ளனர். உண்மைநிலை இப்படியிருக்க, பணத்திற்காகவும், பெண்களுக்காகவும், பதவிக்காகவும் கடந்த சில நூற்றாண்டுகளில் இந்துக்களா யிருந்து மாறியவர்களே விதண்டாவாதச் சுவடிகளை வெளி யிடும் இந்தக் கிறிஸ்துவர்கள். பொருளாதாரரீதியாக சமுதா யத்தின் கீழ் மட்டத்திலுள்ளோரை இவ்வாறு ஆசைகாட்டி மத மாற்றம் செய்த புதுக் கிறிஸ்துவர்கள், படித்த மக்களை யும் அவ்வாறே ஏமாற்றலாம் என்ற முயற்சியில தங்களால் சிறிதும் புரிந்து கொள்ள முடியாத தொன்மையான வடமொழி யில் அமைந்த வேதங்களுக்கு, தங்கள் மனத்தில் தோன்றிய

http://acharya.org

வற்றையெல்லாம் அர்த்தமாகக் கூறியும் எழுதியும் வருகிறார்கள். இதே போன்ற விஷமத்தை முஸ்லிம்களும் செய்து வருவதாக திரு பா. லக்ஷ்மீ நாராயணன் (இராமநாதபுரம்) என்பவரும் எடுத்துக்காட்டி அதற்குச் சான்றாக நாகர்கோயிலிலிருந்து வெளிவரும் 'உங்கள் தூதுவன்' என்ற பத்திரிகையில் வெளிவந்த ஓர் அபத்தக் கட்டுரையையும் இணைத்துள்ளார். இதில் பவிஷ்ய புராணத்தில் மகமது நபியைக்கூறுவதாகச் சில ச்லோகங்கள் காட்டப்பட்டுள்ளன. அதில் 'மிலேச்சன்' என்ற சொல்லால் அவரைக் குறிப்பிட்டுள்ளது. இதற்குப் பொருள் வேதத்திற்குப் புறம்பானவன், வேததுரோகி என்பது. இதைக் கூடப்புரிந்து கொள்ளாமல் அதை முகமது நபிக்குப் பெருமையாக எழுதுவது நகைப்புக்குரியது. இத்தகையமுறைகேடான கிறிஸ்துவ முஸ்லிம் பிரசாரங்களுக்கு ஆங்காங்குள்ள வைதிக மதங்களைச் சார்ந்த அன்பர்கள் அவ்வப்போது உடனுக்குடன் எதிர்ப்புக் குரல் கொடுக்கவேண்டும். அவர்களது இலவசத்துண்டு வெளியீடுகளையும் மலிவுப் பிரசுரங்களையும் அறவே புறக்கணிக்கவேண்டும். அவர்களது வாதங்களின் பொய்ம்மையை மறுக்க நம் மதக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பெரியோர் வாயிலாகக் கேட்டும் நம் மத நூல்களைப் படித்தும் தகுதி பெற வேண்டும். அமெரிக்கா ஆஸ்திரேலியா போன்ற மேல் நாடுகளில் வாழ்கின்ற ஏராளமான படித்த கிறிஸ்துவர்கள் கிருஷ்ணன் எம்பெருமானின் பெருமையையும் பாகவதம் பகவத் கீதை போன்ற நம்முடைய நூல்களையும் நன்கு கற்றுணர்ந்து கிருஷ்ணபக்தர்களாகி ஹரேகிருஷ்ண இயக்கத்தின் மூலம் பிரசாரம் செய்து வருகின்றனர். எனவே இங்குள்ள கிறிஸ்துவர்கள் முஸ்லிம்களின் பொய்ம்மை வாதங்களை மறுத்து உண்மையை நிலைநாட்டும் பணியில் ஹரேகிருஷ்ண இயக்கத்தினரையும் துணை கொள்ளவேண்டும்.

ஜெ. சத்தியமூர்த்தி, எடையார்.

44. "T. ராஜேந்தரின் உஷா" (1—4—1994) இதழில் பேராசிரியர் டாக்டர் தெய்வநாயகம் என்பவர் எழுதிய 'சிதம்பரம் கோயில் பறையருக்கு உரியதே' என்ற கட்டுரையில்

http://acharya.org

"இதேபோல் ஸ்ரீரங்கத்திலும் ஆண்டாண்டுகாலமாகப் பூஜித்துவந்த பாணர்களின் வழிவந்தவர் கொலைசெய்யப் பட்டு அவர் திருப்பாணாழ்வார் என்று இன்றும் சிலையாக வைக்கப்பட்டிருக்கிறார். பாணர்களே மீண்டும் பூஜைகள் செய்ய அனுமதிக்கவேண்டி அங்கும் தியானப்போராட்டம் நடத்துகிறோம். ஸ்ரீரங்கத்தில் உள்ள கோயில் அதன் கட்டிடக் கலை எல்லாமே திராவிடர் கலை. ஆக, திராவிடர் களுக்குரியகோயில்களை மீட்கவேண்டியது நம் கடமை" என்று எழுதப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் உண்மையுள்ளதா? என்று தெளிவிக்க வேண்டுகிறேன்.

கோயில்களிலோ அவைகள் அமைந்துள்ள ஆகமங் களிலோ தொடர்பும் நம்பிக்கையும் இல்லாத கிறிஸ்தவர் இதை எழுதியிருப்பவர். இவருக்கும் அந்தணநல்லூர் முரளி தக்க பதிலடி கொடுத்திருக்கிறார். அதற்கு இன்றளவும் பதில் இல்லை. நம் வாசகர் பலர் தெளிவுவேண்டுவதால் இங்கு விளக்குகிறோம். அரங்கன் ஆணையினால் லோகசாரங்கமா முனிவர் என்ற வைதிக பிராம்மணோத்தமர் தோளில் எழுந் தருளி அமலனாதிபிரான் அருளிச்செய்து பத்தாவதுபாட் டாக 'அண்டர்கோன் அணியரங்கன் என்னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்று அரங்கனுடன் கலந்தவர் திருப்பாணாழ்வார். இந்த வரலாறு குருபரம்பரை நூல்களில் காணக்கிடைக்கிறது. இவரது திருநக்ஷத்திரத்தை ஆண்டுதோறும் கார்த்திகை ரோகிணியில் அனைத்து வைணவத் திருக்கோயில்களிலும் கொண்டாடி வருகின்றனர். உண்மை இப்படியிருக்க, அவர் பூஜை செய்தார் என்றும், அவர் கொலைசெய்யப்பட்டார் என்றும் ஆதாரமில்லாமல் எழுதுவதும், அதை ஒரு சினிமாக்காரர் பத்திரிகை வெளி யிடுவதும், எழுதியவர், வெளியிட்ட பத்திரிகை ஆகியோரின் மோசடிமனப்பான்மையையும், மட்டரகமான ரசனையையுமே காட்டுகிறது. எழுத்துரிமையை இப்படித் தவறாகப்பயன் படுத்தி இனமதத்வேஷத்தைவளர்க்கும் இத்தகையபத்திரிகை களைத் தடைசெய்வதே நாகரிகமான அரசின் கடமையாகும் என்று அரசுக்கு அனைவரும் உணர்த்தவேண்டும்.

http://acharya.org

வேங்கடம், சமயபுரம்.

45. 7-1-95 சனிக்கிழமை இரவு 8-30 மணிக்கு ராஜ் டி. வி. நிகழ்ச்சியில் ஒளிபரப்பிய கம்பன் விழா நிகழ்ச்சியில் பேசிய அறிவொளி என்பவர் கம்பன் தன் கடவுள் வாழ்த்துப்பாடல்களில் முதலில் த்வைதத்தையும், இரண்டாவதாக அத்வைதத்தையும், மூன்றாவதாக விசிஷ்டாத்வைதத்தையும் பாடியிருக்கிறான் என்று கூறினார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

பேசியவருக்கு அத்வைதம், விசிஷ்டாத்வைதம், த்வைதம் ஆகிய மூன்றின் தனித்தன்மைகளும் தத்துவ விளக்கமும் தெரியாது என்று தோன்றுகிறது. அத்வைதத்தின் தனித்தன்மை 'உலகம் பொய்' என்பது. அதைக்கம்பன் எங்கும் பாடவில்லை. உலகம் முழுவதும் பரமாத்மாவான திருமாலுக்கு சரீரமாயிருக்கிறது; அதனாலே திருமாலை உலகமாகவே சொல்லலாம் என்று கம்பன் பல பல பாடல்களில் காட்டியிருக்கிறான். இதுவே விசிஷ்டாத்வைதத்தின் தனித் தன்மை. த்வைதத்தில் இந்தக்கொள்கையை ஒப்புக்கொள்வதில்லை. நம்முடைய 'கம்பனின் சமயம்' என்னும் நூலில் கம்பன் விசிஷ்டாத்வைதியே என்று நூற்றுக்கணக்கான கம்பராமாயணப் பாடல்களின் மூலம் நிரூபித்திருக்கிறோம். அங்கு கண்டு கொள்க.

T. A. பாஷ்யம் சென்னை—1

46. 13—2—94 'இதயம் பேசுகிறது' இதழில், முக்தா ஸ்ரீநிவாஸன் என்னும் சினிமா இயக்குநர் காஞ்சீபுரம் யானைக்குத் திருமண் இடுவது பற்றிய வழக்கை எடுத்துக் கொண்டு கிண்டல் செய்துள்ளார். இதேபோல் சங்கராச்சாரியர் (ஜயேந்திரசரஸ்வதி) தண்டத்தை விட்டுத் தலைக் காவேரிக்கு ஓடியதைக் கிண்டல் செய்தீர்களா? என்று வினவி இதயம் ஆசிரியர் மணியனுக்குக்கடிதம் எழுதியிருக்கிறேன். பதில் வந்தால் தெரிவிக்கிறேன். இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கவும்.

http://acharya.org

இதே விஷயம் பற்றி துக்ளக் (15—7—80) பத்திரிகையில் கிண்டல் செய்து கட்டுரை வெளியான போது ஸுதர்சனர் பதில் 4—40 ல் விரிவாக விமர்சிக்கப்பட்டுள்ளது. வைஷ்ணவ விரோதப் போக்குள்ளவர்களால் நடத்தப்படும், இங்குள்ள பொதுஜனப் பத்திரிகைகள் திருமண்காப்பைக் கேலி கிண்டல் செய்வதையே தம்முடைய பிறவிப்பயனாகக் கொண்டுள்ளார்கள். ஸுதர்சனர் பதில் 4—58 லும் ஆனந்தவிகடன் திருமண் காப்பை '111' என்று எழுதியதற்கான கண்டனத்தைக் காணலாம். இத்தகைய விஷமச்செயல்களுக்குக் கண்டனம் தெரிவித்து அவர்களுக்குக் கடிதம் எழுதுவதோடல்லாமல், வைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமையையும் உறுதியையும் வளர்க்கவேண்டியதே ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவருடைய கடமையாகும்.

இரா. நாமதேவ், இராமாநுசதர்சன சபை, தஞ்சாவூர்

47. (1) வைணவத்தில் தென்கலை—வடகலைப் பிரிவு தோன்றக்காரணமென்ன? (2) எப்போது தோன்றியது? (3) இந்நிலைமாறி ஒன்றுபட்ட வைணவத்தை எப்படிக் காண்பது? (4) வைணவத்தில் ஜாதி நிலை என்ன?

இக்கேள்விகளனைத்தும் பாரதீய பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ ஸபை-பொன்விழா மலர் போன்றவற்றில் நம்மால் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறுகிறோம் இங்கு. (1) ஜீவன் மோக்ஷமடைவதற்குத் தன் முயற்சி தேவையா இல்லையா முதலான சில விஷயங்களில் கி. பி பதினாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீ வேதாந்த தேசிகருக்கும் அவருக்கு முன்னிருந்த ஆசாரியர்களுக்கும் கருத்து வேற்றுமை விளைந்தது. தென்கலை வடகலைப் பிரிவு தோன்றக்காரணம் இதுவே. (2) முன்னிருந்த ஆசார்யர்கள் தன் முயற்சி ஜீவன் மோக்ஷமடைவதற்குத் தடையாகுமேயொழிய உபாயமாகாது என்று திருவுள்ளம் பற்றினார்கள். ஜீவன் மோக்ஷமடையத் தன் முயற்சியும் வேண்டும் என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம் பற்றினார். இவ்வாறு இரு சம்பிரதாயங்களுக்கு அடிப்படையாகச் சில கருத்து வேற்றுமைகள் தோன்றின. பதினைந்தாவது நூற்றாண்டில் வாழ்ந்த மணவாள மாமுனிகள் காலம் வரையில்

http://acharya.org

ஸ்ரீவைஷ்ணவர்களிடையே திருமண்காப்பில் பேதம் இருந்ததற்கு அவர்களுடைய நூல்களில் எந்த ஆதாரமும் இல்லை. சுமார் முந்நூறு வருடங்களுக்குட்பட்ட நூல்களிலேயே திருமண் காப்பு ஒரு திருவடியின் ஆகாரமா? (வடகலை), இரண்டு திருவடிகளின் ஆகாரமா? (தென்கலை) என்னும் சர்ச்சை வைஷ்ணவர்களால் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கோர்ட் வழக்குகளும் முந்நூறு வருடங்களுக்குட்பட்டவையே. தென்னாட்டு திவ்ய தேசங்களில் பெரும்பாலானவை தென்கலைத் திருமண்காப்போடு விளங்குவதும், வடகலைத் திருமண்காப்போடு விளங்கும் திவ்யதேசங்களில் அவை மாற்றப்பட்டதாகக் கோர்ட் வழக்குகள் விளைந்திருப்பதும், ஆழ்வார்கள் காலத்திலிருந்து வைஷ்ணவத்தைப் பரப்பிவரும் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவர்களில் வடகலைப் பிரிவு இல்லாமலிருப்பதும், அரையர்கள் போன்ற ப்ராசீன வகுப்பினரிலும் வடகலைப் பிரிவு இல்லாமலிருப்பதும், ஆசார்யபுருஷர்களிலும் பெரும்பான்மையினர் தென்கலைத் திருமண் காப்புடன் இன்றளவும் ஸேவை ஸாதிப்பதும், கோயில்களை ரக்ஷிப்பதற்காகப் பல நூற்றாண்டுகளுக்கு முன் தோன்றிய ஸ்ரீவைஷ்ணவ மடங்களிலும் பெரும்பான்மையானவை தென்கலை சம்பிரதாயத்தைச் சேர்ந்தவையாயிருப்பதும் தென்கலையே முற்பட்டது என்று நடுநிலையாளர்க்கு நன்கு விளக்குகின்றன. (3) கொள்கை அடிப்படையில் அமைந்துள்ள இந்த இரண்டு சம்பிரதாயங்களையும் ஒன்று படுத்துவது இயலாது. கோயில்களில் இப்போது இருக்கும் நிலைக்கு ஊறு விளைக்காது, அனைவரும் மதித்து நடப்பதன் மூலமும், சம்பிரதாயக் கொள்கைகளில் பரஸ்பர சகிப்புத்தன்மையோடு வாழ்வதன் மூலமும் இரு பிரிவினரும் தங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.

4. சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ள நாலு வர்ணங்கள் வைணவத்திலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றன. ஆகையால் இந்த நாலு வர்ணங்களை அழிப்பது என்னும் நிலை வைணவத்திற்குப் புறம்பானது. 'ஒருவன் வைணவனானால் ஜாதியால் ஏற்படும் குறைபாடு அவனுக்கு இல்லை, அவனுக்கு மிகுந்த உயர்வே உண்டு' என்பதே வைணவத்தின் அடிப்படைக் கொள்கையாகும்.

http://acharya.org

S. ஸ்ரீசைலா, அணுசக்தி நகர், பம்பாய்—94

48. தத்தாத்ரேய வழிபாடு மஹாராஷ்டிர மாநிலத்தில் சிறப்பாகக் காணப்படுகிறது. தத்தாத்ரேயர் பற்றி நம் பூர்வாசாரியர்கள் கருத்து என்ன?

புராணங்களில் அத்ரி முனிவருக்கும் அநஸூயைக்கும் விஷ்ணு, பிரமன், சிவன் ஆகிய மும்மூர்த்திகளின் அம்சமாக முறையே தத்தாத்ரேயர், பிருகு, துர்வாஸர் எனும் மூன்று முனிவர்களும் குழந்தைகளாகப் பிறந்ததாகக் கூறப்படுகிறது. வைஷ்ணவ சாஸ்திரங்களிலும் வரலாற்று நூல்களிலும் தத்தாத்ரேயர் த்ரிதண்டி ஸந்யாஸியாகச் சித்திரிக்கப்படுகிறார். மேலக்கோட்டை திருநாராயணபுரத்தில் தத்தாத்ரேயருடன் தொடர்பு கொண்ட பரிதான சிலையில் (கல்யாணி புஷ்கரிணிக்கு அருகில் உள்ளது) எம்பெருமானார் தத்தாத்ரேயரின் நினைவாகப் புதிய காஷாயவஸ்திரத்தை ஏற்றுக் கொண்டார் என்று வரலாறு கூறுகிறது. ஸ்ரீதேசிகன் யதிராஜஸப்ததி—62 ம் ஶ்லோகத்தில்

"காஷாயேண க்3ருஹீதபீதவஸநா
தண்டைஸ்த்ரிபி4ர் மண்டி3தா
ஸாமூர்த்திர் முரமர்த்த3நஸ்ய ஜயதி
த்ரய்யந்தஸம் ரக்ஷிணீ"

[காஷாயத்தால் கைக்கொண்ட பீதாம்பரத்தையுடையதாய், த்ரிதண்டத்தால் அழகுபெற்றதாய், வேதாந்தத்தை நன்கு காப்பதாயுள்ள தத்தாத்ரேயரான எம்பெருமானுடைய அந்த பாஷ்யகாரரென்னும் வடிவம் மேம்பட்டு விளங்குகிறது.] என்று தத்தாத்ரேயரை எம்பெருமானாரைப் போன்ற த்ரிதண்டி ஸந்யாஸியாகக் காட்டியுள்ளார். இப்படியிருக்கும்போது. அத்வைதிகளில் சிலர், மும்மூர்த்திகளைப் போல் மூன்று தலைகளைக் கொண்டவராகவும் நாய்களோடு சேர்ந்திருப்பவராகவும் தத்தாத்ரேயரின் சித்திரத்தைத் தீட்டியுள்ளார்கள். இதற்கு ஸாத்விக சாஸ்திரங்களில் எந்த ஆதாரமும் இல்லை.

http://acharya.org

அம்மாள் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி (திருவெள்ளறை கீழத் திருமாளிகை) ஸ்ரீரங்கம்.

49. ஸ்ரீரங்கம் உடையவர்ஸந்நிதியில்தொன்றுதொட்டு தினந்தோறும் திருப்பாவை சாற்றுமுறை கோயில் அத்யாபகர்களால் நடைபெற்று வருகிறது. இதை மாற்றி நம் பெருமாள் திருமுன்பே திருப்பதியில் நடைபெறுவதுபோல் திருப்பாவை சாற்றுமுறை நடைபெறவேண்டுமென்றும், அத்யயன உத்ஸவத்தின்போது மற்ற ஆழ்வார்களுடன் ஆண்டாளையும் எழுந்தருளப்பண்ணுதது அவர் பெண் என்பதால் என்றும், ஆண்டாளை எழுந்தருளப்பண்ணவேண்டும் என்றும் சென்னைவாழ் ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலர் பத்திரிகைக் கட்டுரைகளில் கிளர்ச்சி செய்கிருர்கள். இது தொடர்பாக சென்னைப்பதிப்பு இண்டியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகையில் ஜனவரி 95ல் கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. இது முறையா என விமரிசிக்கவேண்டுகிறேன்.

தொன்றுதொட்டு நிலவிவரும் கோயில் மரபுகளை நினைத்தபடி மாற்றுவது பல அபாயங்களுக்கும், அதன் விளைவான வழக்குகளுக்கும், சண்டை சச்சரவுகளுக்கும் இடம் கொடுக்கும். ஸ்ரீரங்கம் கோயிலில் நினைவு தெரிந்த நாட்களாக எம் பெருமானுர் ஸந்நிதியிலேயே தினந்தோறும் திருப்பாவை சாற்றுமுறை நடக்கிறது. இதை திடீரென்று மாற்றினுல், இதை முன்னுதாரணமாகக்கொண்டு மற்றும் பல மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று கோரிக்கை எழும். ஸ்ரீரங்கத்தில் இருந்தவர்களும், தற்போது உள்ளவர்களுமான ஜ்ஞான சீல வயோவ்ருத்தர்கள்— நம்பெருமாள் எம்பெருமானுருக்கு உபயவிபூதி ஸாம்ராஜ்யம் கொடுத்தபோது திருப்பாவை சாற்றுமுறை உடையவர் ஸந்நிதியில் நடைபெற வேண்டுமென்று நியமித்ததாகவும், அதற்காகவே பெரிய பெருமாள் நம்பெருமாள் திருவுருவம் அங்கு சித்திரரூபமாக எழுந்தருளியிருப்பதாகவும் பெரியோர்கள் பணிப்பர் என்றும்

ஸ—18

http://acharya.org

விளக்கியுள்ளனர்; மேலும் ஆரியபடாள் வாசலுக்குள் பெரிய பெருமாள் திருமுன்பே ஸப்ப்ரோக்ஷணகாலங்களில் தென்கலை மிராசு அத்யாபகர்களும் அரையர் ஸ்வாமியும் மட்டுமே சாற்று முறை செய்கிறார்கள். மார்கழிமாதம் முப்பது நாட்களும் அரையர்ஸ்வாமிகள் மட்டுமே. பெரியபெருமாள் நம்பெருமாள் திருமுன்பே திருப்பாவை ஸேவிக்கின்றனர்; இதில் எந்த மாறுதலையும் செய்வதற்கு அவர்கள் அநுமதிக்கமாட்டார்கள். மீறிச் செய்யமுயன்றால் வழக்குகள் ஏற்படும். ஆண்டாள் ஸ்ரீ பூமிதேவிகளைப்போலே எம்பெருமானுடைய தேவிமார் கோஷ்டியில் சேர்ந்தவர். ஆழ்வார்களைப்போலே பக்தர்கள் கோஷ்டியில் சேர்ந்தவரல்ல. மேலும், ஸ்ரீரங்கத்தில் ஆண்டாள் பெரிய பிராட்டியாரைப்போலே படிதாண்டாப்பத்தினியாக விளங்குகிறார். இக்காரணங்களால் ஆண்டாளை ஆழ்வார்களோடு எழுந்தருளச் செய்யும் பழக்கம் ஸ்ரீரங்கத்தில் இல்லை. இதை உணர்ந்து பத்திரிகைகள் மூலம் கிளர்ச்சி செய்பவர்கள் ஆறியிருப்பது நல்லது.

ஸ்ரீ உ. வே. P. B ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீவேங்கடேச தேவஸ்தானம், பனஸ்வாடி, பம்பாய்.

50. மஹாராஷ்டிரத்தில் 'வார்க்கரி' சம்ப்ரதாயம் (ஞானேச்வரர், துக்காராம் பிரவர்த்திப்பித்தது) குஜராத்தில் ஸ்வாமி நாராயண சம்ப்ரதாயம் என்று இருக்கிறது. ஸ்ரீ ராமானுஜருடன் தொடர்பு சொல்லுகிறார்கள். ஆனால் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் நடைமுறையிலுள்ள ஆசாரங்கள் எதுவும் கிடையாது. ஆனாலும் ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களாகச் சொல்லப்படுகிறார்கள். இதுபற்றித் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

பிராம்மண தம்பதிகளுக்குப் பிறந்தவன் அவன் பிராம்மணர்க்குரிய ஆசாரத்தைக்கைக்கொள்ளாவிடினும் அவன் சட்டத்தின்பார்வையில் பிராம்மணனே.சாஸ்திரத்தின் கண்ணோக்கில் பிராம்மணனாகான். அதுபோலவே வைஷ்ணவ தம்பதிகளுக்குப் பிறந்தவன் வைஷ்ணவ ஆசாரங்களைக் கைக்கொள்ளாவிடினும்சட்டத்தின் கண்ணோக்கில் வைஷ்ணவனே. சாஸ்திரத்தின் கண்ணோக்கில் வைஷ்ணவனல்லன்.

http://acharya.org

K V. பாஷ்யம், திருவல்லிக்கேணி, சென்னை.

51. இக்காலத்தில் காரியாலயங்களுக்குச் செல்பவர்கள் காலை மாலை ஸந்தியாவந்தனங்களை உரியகாலத்தில் அனுஷ்டித்தாலும் மாத்யான்னிகத்தைக் காலையில் உரிய காலத்திற்கு முன்பே அனுஷ்டிக்கநேருகிறது. காலம்கடந்த பிறகு செய்யவேண்டிய காலாதீத ப்ராயச்சித்தமான அர்க்ய ப்ரதானமும் அளிக்கமுடியாது. காலத்திற்கு முன் செய்வதால் பயனில்லை என்று சிலர் கூறுகிறார்கள். தேவரீர் கருத்தைத் தெரிவிக்கவேண்டுகிறேன்.

ஸ்ரீவைஷ்ணவர்களாகிய நாம் பகவானுடைய ஆஜ்ஞா கைங்கர்ய ரூபமாகவே சந்தியாவந்தனம் செய்கிறோம். ஒரு பலனை உத்தேசித்துச்செய்வதில்லை. ஆகையால் மாத்யான்னிகத்தைக் கைவிடுவதைவிட, வேறுவழியில்லாமையால் உரிய காலத்திற்கு முன்பு செய்வது தக்கது. அமாவாஸ்யா தர்ப்பணத்திற்கும் இந்த நியாயம் பொருந்தும்.

S. முரளி, அந்தணல்லூர்.

52. 26-2-95 கல்கி இதழில் 'சிவராத்ரி சிலிர்ப்பு' என்னும் கட்டுரையில் திருமலையில் திருவேங்கடமுடையான்சிவராத்ரியன்றுசிவவேடத்தில்பவனிவந்தாரென்றும் 'துளசிமாலைக்கு பதில் வில்வமாலையும், நெற்றியில் வைர விபூதிப்பட்டையும் தீபாராதனை ஒளியில் பளிச்சிட்டன' என்றும் எழுதியிருந்தது. இதைக்கண்டித்துக் கல்கிக்கு நான் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி 19-3-95 கல்கி வட்டமேஜை பகுதியில் வெளியிடப்பட்டுள்ளது. உண்மையில் திருவேங்கடமுடையான் சிவவேடம் தரிக்கிறாரா?

திருமலை திருப்பதியில் விசாரித்தபோது திருவேங்கடமுடையான் அப்படி எந்த நாளிலும் சிவவேடம் தரிப்பதில்லை என்று தெரியவருகிறது. ஆயிரம் வருடங்களாகவே திருவேங்கடவனை வேறுதெய்வமாக மாற்ற சைவர்கள் அரும்பாடு பட்டு வருகிறார்கள். ஸ்ரீராமானுஜர் காலத்திலேயே பல ப்ரமாணங்களைக்காட்டி இத்தகைய முயற்சி முறியடிக்கப்பட்டது. சமீபகாலத்தில் காமகோடி பீடாதிபதியும் அவருடைய பக்தர்

http://acharya.org

களும் இந்தப்பொய்ப் பிரசாரத்தை அடிக்கடி செய்து தக்க ஸுதர்சனர் பதிலைப்பெற்று வருகிறார்கள். குமுதம் பத்திரிகையிலும் ஒருமுறை "திருவேங்கடவன் திருமாலே" என்னும் விஷயம் நம்மால் ஐயத்துக்கு இடமின்றி நிலைநாட்டப் பட்டது. அப்படியிருக்கையில் இந்த அண்டப்புளுகுக்குக் கல்கிப் பத்திரிகை ஆதரவளிப்பது அதனுடைய வைணவ விரோதப் போக்கையே காட்டுகிறது.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்.

53. தென்கலை-வடகலை சம்ப்ரதாயக்கொள்கைகளில் முக்கியமான வேற்றுமையை விளக்க வேண்டுகிறேன்.

18, 19, 20—3—95 தேதிகளில் திருச்சி வானொலியில் சிந்தனைச் சுடர் நிகழ்ச்சியில் "வேதாந்ததேசிகரின் சிந்தனைகள்" நம்மால் வழங்கப்பட்டது. இது இந்த 95 மார்ச் இதழில் வெளியிடப்பெற்று இந்த சதகத்துக்கு அநுபந்தமாகவும் இணைக்கப் பட்டுள்ளது. இதை கீதா வ்யாக்யானத்தில் பலவிடங்களில் விரிவாக விளக்கியிருக்கிறேன்.

N. சுந்தரராஜன், சென்னை—26

54. 5—3—95 தினமணிகதிர் இணைப்பில் பக்கம் 16ல் 'நிஜமா சிலையா' என்றதலைப்பில் "ஸ்ரீரங்கம் உடையவர் ஸந்நிதி மூலவர் திருமேனி அவரதுஉடலேயா அல்லது சிலையா" என்னும் பிரசனை அலசப்பட்டு ஒருமுடிவுமில்லாமல் விடப் பட்டுள்ளது. தங்கள் கருத்தும் கொடுக்கப்பட்டுள்ளது. விரிவாக விளக்கவேண்டுகிறேன்.

'ஸுதர்சனர் பதில்' ஒன்பதாவது சதகத்தில் 88 வது கேள்விக்கு பதிலில் இந்த விஷயம் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதில் உடையவர் திருமேனி சுதையினாலானதே என்று காட்டப்பட்டுள்ளது. அங்கு கண்டு கொள்க. மேற்படி புத்தகம் இப்போதும் நம்மிடம் கிடைக்கும்.

http://acharya.org

மணவாள ராஜஹம்ஸம், பவானி

55. 9—4—95 தினமலரில் சிதம்பரம் (?) கச்சபேச்வரர் கோயில் திருட்டு பற்றிய செய்தியில் 'இக் கோயில் திருமால் ஆமையாக வடிவெடுத்துச் சிவனை வழிபட்ட தலம்' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. விமர்சிக்க வேண்டு கிறேன்.

V. அண்ணாசாமி ஐயங்கார், பம்பாய்-19.

56. சிருங்கேரி சிஷ்யர்களால் வெளியிடப்படும் 'அம்மன் தரிசனம்' என்னும் பத்திரிகையின் ஆகஸ்ட் 94 இதழில் சாலுகுமாரன் என்பவர் திருமால் சிவனைத் தாமரை மலரால் அர்ச்சிக்கும்போது தன் தாமரைக்கண்ணைப்பிடுங்கி அர்ச்சனை செய்தாரென்றும் அதனால் உகந்த சிவன் அவருக்கு ஸுதர்சன சக்கரத்தை அளித்தார் என்றும் எழுதப் பட்டுள்ளது. விமர்சிக்க வேண்டுகிறேன்.

இன்றுள்ள சைவர்களும், சைவர்களாகவும் சாக்தர்களாகவும் மாறிவிட்ட அத்வைதிகளும் தங்கள் மதக்கொள்கைகளை உள்ள படி அறியாமையால் அவற்றைப்பிரசாரம் செய்வதில்லை. வேதங்களிலோ ஸ்ம்ருதி இதிஹாஸபுராணங்களிலோ வடமொழி தென்மொழியிலுள்ள பண்டை இலக்கியங்களிலோ காணப் படாதவையாய் மிகப்பிற்காலத்தில் எழுந்தவையான ஸ்தல புராணங்களில் சிவனுக்குப் பெருமையை ஏறிடுவதற்காகத் திருமாலைத் தாழ்த்தி எழுதப்பட்ட இத்தகைய பொய்க்கதை களைப் பிரசாரம் செய்வதையே தங்களுடைய கடமையாகக் கொண்டு விட்டார்கள். மதாசார்யர்களால் கையாளப்பட்ட பிரமாணங்களிலோ பழைய இலக்கியங்களிலோ காணப் படாததிலிருந்தே இக்கதைகள் பொய்யானவை என்பதை நாம் ஏற்கனவே ஸுதர்சனர் பதில்களிலும், தலையங்கங்களி லும், சங்ககாலத்தமிழர் சமயம் 'சாதிமத ஆராய்ச்சி' போன்ற நூல்களிலும் பல முறை கண்டித்துள்ளோம். இருந்த போதி லும் லஜ்ஜையில்லாமல் தங்கள் பத்திரிகைகளில் திருப் பித்திருப்பி இப்பொய்க்கதைகளை வெளியிடுகிறார்கள். ஆகை யால் இத்தகைய செய்திகளைப் பொருட்படுத்தாமலிருப்பதே நல்லது. 1983 மே மாத ஸப்தகிரி இதழில் இது சம்பந்த

http://acharya.org

மாக நாம் எழுதி வெளிவந்த "புராணங்கள் பற்றிய ஓர் ஆராய்ச்சி" என்னும் கட்டுரையை ஸுதர்சனர் பதில் ஏழாவது சதகத்திற்கு அனுபந்தமாக இணைத்துள்ளோம். இதில் இதுபற்றி விரிவாகக் காணலாம். கச்சபேச்வரர் பற்றி 10 வது சதகம் 45 வது கேள்வியின் பதிலில் ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. முன்னமேயே பதிலளிக்கப்பட்டுள்ள இத்தகைய கேள்விகளை மீண்டும் மீண்டும் அன்பர்கள் அனுப்பவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

B. லக்ஷ்மீநாராயணன், ராமநாதபுரம்.

57. எம்பெருமானையே உபாய உபேயங்களாகக் கொண்ட நாம் ஸந்த்யாவந்தன மந்த்ரங்களை அனுஸந்திக்கும்போது மற்ற பல தேவதைகளிடமிருந்து பல பலன்களை வேண்டுவதாக மந்திரங்களில் காணப்படுகிறது. இது நம் ஸ்வரூபத்துக்குப் பொருந்துமா?

ஸந்த்யாவந்தன மந்த்ரங்கள் பகவதாஜ்ஞையை அனுஸரித்து அவனுக்குக் கைங்கர்யமாகவே ஸ்ரீவைஷ்ணவர்களால் அனுஸந்திக்கப் படுகின்றன. ஆகையால் மந்திரங்களில் பல பயன்களை விரும்புவதாக இருந்தாலும் "மா ப₂லேஷு கதா₃சந" என்று கீதையில் கண்ணன் சொன்ன ரீதியில் அந்தப்பலன்களில் பற்றுவைக்காமலே நாம் அவற்றை அனுஸந்திக்கிறோம். தேவதைகளைக் குறிக்கும் சொற்களும் நேரேயோ, அல்லது அந்த தேவதைகளுக்கு அந்தர்யாமியாய் இருக்கும் முறையிலேயோ எம்பெருமானையே குறிக்கின்றன என்பது நம்முடைய உறுதியான நிர்ணயம். சாஸ்திரங்களில் 'ஸந்த்யாவந்தனம் முதலானவற்றை எம்பெருமானுடைய ஆணையாக அனுஷ்டிக்கவேண்டும்' என்று விதித்திருக்கையாலும், அவ்வாறு அனுஷ்டிக்காமல் விட்டால் அவனுடைய ஆணையை மீறியதாகுமாகையாலும் நாம் நித்திய நைமித்திக கர்மங்களை அனுஷ்டிக்கிறோம். அந்த தேவதைகளுக்கு ஆராதனம் என்னும் நினைவுடன் அல்ல. அந்தப் பலன்களில் விருப்பத்தையும் நாம் கொள்வதில்லை. ஸ்மார்த்தர்கள் அந்தந்த தேவதைகளுக்கு ஆராதனமாகவே இவற்றைநினைத்து அந்தப் பலன்களை உத்தேசித்து இவற்றைச் செய்கிறார்கள். இதுவே வைஷ்ணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உள்ளவித்தியாசம்.

http://acharya.org

S கௌஸல்யா, ஷோலாப்பூர் (58, 59 கேள்விகள்]

58. பிராட்டி புருஷகாரமாயிருப்பவள் என்று சொல்லப் படுகிறாள். இந்தப்பதத்தின் பொருளை விளக்க வேண்டு கிறேன்.

"புருஷம் கரோதி இதி புருஷகார:" [புருஷனுகச் செய்கிறு ளாகையால் புருஷகாரம் எனப்படுகிறாள்] என்பது இப் பதத்தின் வ்யுத்பத்தி. இங்கு புருஷசப்தமும் பரமபுருஷன், ஜீவாத்மா ஆகிய இருவரையும் குறிக்கிறது. ஸம்ஸாரி ஜீவன் எம்பெருமானை அடையாமல் 'அஸத்' ஸமமாயிருக்கும் போது, உபதேசத்தைச் செய்தும், அருள் புரிந்தும் அவன் எம்பெருமானை அடையும்படி செய்கிறாளாகையாலே, அவனைப் புருஷனுக்குகிறாள். பரமபுருஷன் ஜீவனுடைய குற்றங்களைப் பார்த்து அவனை வெறுத்திருக்கும்போது, தன்னுடைய அழகாலும், உபதேசத்தாலும் அவனுடைய ஸ்வாதந்திரி யத்தைப் போக்கி, கருணை முதலான குணங்களை வெளிப்படுத்தி அவன் ஜீவனுக்கு மோக்ஷமளிக்கும்படி செய்கிறாள்; "புரு ஸநோதி இதி புருஷ:" [மிகப்பெரிய பலனை மோக்ஷத்தை அளிப்பவன் புருஷன்] என்கிற வ்யுத்பத்தியின்படி அவனையும் புருஷனுக்குகிறாள். ஆக இப்படி ஸம்ஸாரி ஜீவனையும் பரமபுருஷனையும் புருஷன் என்னும் சொல்லுக்குத் தகுதி பெற்றவர்களாக்குகிறாளாகையாலே, பிராட்டி புருஷகாரமாயிருப்பவள் எனப்படுகிறாள்.

59. ராமனைக் காட்டிலிருந்து அயோத்திக்குத் திரும்ப அழைத்து வரச்சென்ற பரதன் பாதுகைகளின்மீது ராமனை ஏறச்செய்து, அதைத் தன் தலையில் சுமந்து வந்து பாதுகா பட்டாபிஷேகம் செய்தான் என்று ராமாயணத்தில் வருகிறது. இதற்காக பரதன் அயோத்தியிலிருந்து பாதுகையைக் கொண்டு சென்றானென்றால், ராமன் அயோத்திக்குத் திரும்பி வர மறுத்து விடுவான் என எதிர் பார்த்தான் என்று தேறுகிறது. இது பொருந்துமா?

"பொன்னால் அலங்கரிக்கப்பட்ட பாதுகைகளில் ஏறியருள வேண்டும்" என்று பரதன் வஸிஷ்டரின் நியமனத்தின்பேரில் ராமனைப் பிரார்த்தித்தான் என்று ராமாயணத்தில் வருகிறது.

http://acharya.org

எனவே ராமன் காட்டில் அணிந்திருந்த மரப்பாதுகையல்ல இது. 'பொன்னால் அலங்கரிக்கப்பட்ட பாதுகை' என்பதால், ராமனை இசையச் செய்து அவனுடைய தவவேடத்தை நீக்கி, அரசர்க்குரிய வேடத்தை ஏற்றுக்கொள்ளச் செய்வதற்காக, எல்லாத் திருவாபரணங்களையும், பொன்னால் அலங்கரிக்கப்பட்ட பாதுகையையும் பரதன் கூட எடுத்துச் சென்றிருக்க வேண்டும்; ராமன் இசையாமையாலே, பாதுகைகள் மட்டும் இப்படிப் பயன்பட்டன என்று கொள்வதே பொருந்தும்.

R. A. ராமன், பங்களூர்-78.

60. தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் "ப்ரபத்தி" என்றால் என்ன? ஆசார்யன் ஸமாச்ரயணம் செய்யும்போது 'ப்ரபத்தி' அல்லது 'ஆத்ம ஸமர்ப்பணம்' செய்து வைக்கிறாரா?

"த்வமேவ உபாயபூதோ மே பவ இதி ப்ரார்த்தநா மதி: ஶரணாகதி:" ['நீயே உபாயமாவாயாக' என்று எம்பெருமானைப் பிரார்த்திக்கும் அறிவே ஶரணாகதியாகும்] "ததேக - உபாயதா - யாச்ஞா ப்ரபத்தி: ஶரணாகதி:" [எம்பெருமானையே 'உபாயமாக ஆவாய்' என்று யாசிப்பதே 'ப்ரபத்தி' என்றும் 'ஶரணாகதி' என்றும் சொல்லப்படுகிறது] என்று பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் 'ப்ரபத்தி' அல்லது ஶரணாகதியின் லக்ஷணம் சொல்லப்பட்டது. 'ஆத்மஸமர்ப்பணம்' முதலானவை இந்த ப்ரபந்நனுக்கு ஏற்படக்கூடிய ஸ்வபாவங்களாகவும் நிர்ணயிக்கப்பட்டது. ஆசார்யன் பஞ்சஸம்ஸ்காரத்தின்போது த்வய மந்திரத்தை உச்சரிக்கச் செய்வதின் மூலம் சிஷ்யனை எம்பெருமானையே உபாயமாகப் பற்றச்செய்கிறான். இதுவே தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தில் ப்ரபத்தியநுஷ்டானமாகக் கொள்ளப்படுகிறது. 'எம்பெருமானே உபாயமாக வேணும்' என்னும் நினைவாகவே இருப்பதால், இதையும் ஒரு ஸாத்யோபாயமாக நினைக்கக்கூடாது என்பது தென்னாசாரியர்களின் கொள்கை. ஆனால் இப்படிப் பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொண்டு மனம் போனபடி வாழ்ந்தால் அவன் ப்ரபந்நனாகான். பரமபுருஷனையே உபாயமாகவும் உபேயமாகவும் உறுதிபூண்டு மறந்தும் புறந்தொழாதவனாய் வாழ்க்கை நடத்துபவனே ப்ரபந்நனாவான்.

http://acharya.org

Dr. M. A. வேங்கடகிருஷ்ணன், ஆசிரியர், கீதாசார்யன், சென்னை 5

61. ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிக்கு அடுத்தபடியாக, தேவரீர் ஆற்றிவரும் ஸம்ப்ரதாயத்தொண்டுகளுக்கு ஸ்ரீவைஷ்ணவ வுலகமே கடமைப்பட்டுள்ளது......அரங்கன் முன்னே அனுதினமும் திருப்பாவை அனுஸந்திக்கப்படுவதில்லை என்ற குறை நீங்கவேண்டும் என்று கீதாசார்யனில் சில மாதங்களுக்குமுன் வெளியிடப்பட்டபோது, "திருப்பாவை அநுஸந்தானம் அரங்கன் திருமுன்பே ஏற்படுமாயின் அதில் நானும் கலந்துகொள்கிறேன்' என்று தேவரீர் ஸாதித்தது. சமீபத்தில் ஸுதர்சனர் பதில் 12–49 கேள்வி பதிலில், "இது விஷயமாகப் பத்திரிகைகள் மூலம் கிளர்ச்சி(?) செய்பவர்கள் ஆறியிருப்பது நல்லது" என்றெழுதியிருப்பது ஏன்? விளக்கவேண்டுகிறேன்.

"கலந்துகொள்கிறேன்" என்று சொன்னபோதே "இதை நடைமுறைக்குக் கொண்டுவருவதில் பலசிக்கல்கள் உள்ளன" என்றும் கூறினேன். ஸ்ரீரங்கம் கோயிலினுள் அருளிச்செயலை அநுஸந்திக்கும் உரிமை குறிப்பிட்ட சிலர்க்கே உள்ளது. ஏற்கனவே நினைவுதெரிந்த நாள் முதல் உள்ள மரபை மாற்றி, புதிதாகத் திருமலையிற்போல் தினந்தோறும் பெரிய பெருமாள் திருமுன்பே திருப்பாவை சாற்றுமுறையைத் தொடங்கினால், உரிமையில்லாத பலர் கூட்டத்தோடு சேர்ந்து திருப்பாவை அநுஸந்திக்க வருவார்கள். இதனால் கலவரமும் வழக்குகளும் விளையும் என்று ஸ்ரீரங்கத்தில் உள்ள பெரும்பாலான ஸ்ரீவைஷ்ணவர்கள் கருதுகிறார்கள். அதனாலேயே "ஆறியிருப்பது நல்லது" என்று ஸுதர்சனர் பதிலில் எழுதினேன். "பத்திரிகைகள் மூலம் சர்ச்சை செய்பவர்கள்" என்னும் பொருளிலேயே "பத்திரிகைகள் மூலம் கிளர்ச்சி செய்பவர்கள்" என்று எழுதப்பட்டது. வேறு எந்தப் பொருளிலும் அல்ல.

http://acharya.org

ஸோ. கிருஷ்ணய்யங்கார். ஹாஸன்.

62. நாலாயிர திவ்யப்ரபந்தத்தில் மூன்றும் ஆயிரத்திற்கு 'இயற்பா' என்ற பெயர் ஏற்படக் காரணம் என்ன?

மற்ற மூன்று ஆயிரங்களும் பண்ணிசையில் அமைத்துப் பாடக்கூடியவையாகையாலே அவற்றுக்கு 'இசைப்பா' என்று பெயர் ஏற்பட்டது. அப்படியல்லாமல் பாராயணம் செய்வதற்கு மட்டும் உரிய பாடல்களாகையாலே இசைப்பாவிற்கு எதிர்த்தட்டாக 'இயற்பா' என்று பெயர் ஏற்பட்டது.

கோபாலகிருஷ்ண பட்டாசார்யர், பொன்னேரி.

63. தினமணி பத்திரிகையில் மார்ச்—94 ல் 'சுப்புடு' என்னும் சங்கீத விமர்சகர் "ஸ்மார்த்தர்களுக்கு வைகுண்டப்ராப்தியில்லை; கைலாச ப்ராப்திதான் உண்டு; ஸ்மார்த்தர்கள் வெங்கடாசலபதியின் பக்தர்களாயிருந்தாலும் கைலாசமே கிட்டும்" என்று எழுதியுள்ளார். இவர் கருத்துப்படி ஸ்மார்த்தர்கள் அனைவரும் 'ந ச புநராவர்த்ததே' என்று கொண்டாடப்படும் வைகுண்டப்ராப்தியை இழந்தவர்கள் என்று தேறுகிறது. சுப்புடுவின் மேற்கண்ட கருத்தை விமர்சிக்கப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்மார்த்தர்களிலும் ஸ்ரீக்ருஷ்ணப்ரேமி போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் விஷ்ணுபக்தர்களாக வாழ்கிறார்கள். சிவனைக்காட்டிலும் விஷ்ணுவே மேலான பரம்பொருள் என்று மதிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கைலாச ப்ராப்தியே என்று முடிவுகட்ட சுப்புடுவுக்கு அதிகாரமில்லை. சங்கீத விமர்சனத்தோடு மட்டும் நின்றால் இவருக்கும் நல்லது. உலகுக்கும் நல்லது.

T. N. வெங்கடேசராமானுஜம், மேட்டுப்பாளையம்.

64. பஞ்சஸம்ஸ்காரம் வாழ்வில் ஒருமுறை செய்துகொள்வதா? அல்லது இஷ்டம்போல் பல ஆசார்யர்களிடம் பலமுறை செய்துகொள்ளுவதா?

http://acharya.org

ஒருமுறை செய்துகொள்வதே வழக்கம். ஸ்த்ரீ சரீரத்திற்கு மாங்கல்யதாரணம் போலே, ஆத்மாக்களுக்கும் ஆசார்யனால் செய்யப்படும் பஞ்சஸம்ஸ்காரம் ஒருதடவை செய்துகொள்வதே பெரியோர்களின் அனுஷ்டானம்.

V விஜயராகவன், சென்னை—4.

65. 24—10—94 'ஹிந்து' பத்திரிகையில் அக்நிஹோத்ரம் ராமானுஜதாதாசார்யர் "வேதாந்த தேசிகரே சரணாகதிக்கொள்கையை ஸ்தாபித்தவர்" என்றும், 'விபீஷணன் மோக்ஷத்திற்காக சரணாகதி பண்ணினான்' என்றும் கூறியிருப்பதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

நாதமுனிகள் தொடங்கி எம்பெருமானார் நடுவாக மணவாளமாமுனிகள் ஈறாக உள்ள ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யர்கள் அனைவரும் சரணாகதி ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தவர்களே. ஆனால் "'கத்யத்ரயம்' ஸ்ரீராமானுஜருடைய க்ரந்தம் அல்ல" என்று விதண்டாவாதம் செய்யும் 'அஹோரா'வுக்கு இது புரியாது. சரணாகதியின் ஸ்வரூபஸ்வபாவங்களைப்பற்றி தேசிகருக்கும் முற்பட்ட ஆசார்யர்களுக்குமிடையே கருத்து வேற்றுமை உள்ளது என்பதைப் பலமுறை விளக்கியிருக்கிறோம். இந்த சதகம் 53 வது கேள்வியின் பதில் காண்க. விபீஷணன் சரணமடைந்தது ராமப்ராப்திக்கே; ஆனால் ராமனிடமிருந்து மோக்ஷம் கிட்டும் என்பதையும் அறிந்தவனே அவன். எனவே விபீஷண சரணாகதி மோக்ஷத்திற்காக என்று கூறுவதில் தவறில்லை.

R. A ராமன், பங்களூர். (66, 67 கேள்விகள்)

66. ஸாஷ்டாங்க ப்ரணாமம் என்றால் என்ன?

"இரண்டு கைகள், இரண்டு கால்கள், தலை ஆகிய ஐந்து ஸ்தூலமான அங்கங்கள் தரையில் படும்படியாகவும், மனம், புத்தி, அபிமானம் என்னும் மூன்று மனநிலைகளும் நமஸ்

http://acharya.org

கரிக்கப்படுபவரிடம் ஒருமுகப்படும்படியாகவும் வணங்குவது ஸாஷ்டாங்கப் ப்ரணாமம்" என்று ஶாஸ்த்ரங்களில் லக்ஷணம் சொல்லப்படுகிறது. நெஞ்சம் மனனம் செய்யும்போது மனம் எனப்படுகிறது. தீவிரமாகச் சிந்திக்கும்போது சித்தம் அல்லது புத்தி எனப்படுகிறது. 'தான்' என்னும் தன்முனைப்புக் கொள்ளும்போது அபிமானம் அல்லது அஹங்காரம எனப்படுகிறது. மனத்தின் இந்நிலைகளெல்லாம் ஒடுங்கி, வணங்கப்படுபவரையே சிந்தித்துக்கொண்டு முற்கூறிய ஐந்து ஸ்தூலமான அங்கங்கள் தரையில் படும்படு வணங்குவதே ஸாஷ்டாங்க நமஸ்காரம் என்று தேறுகிறது.

67. (1) ஸம்ஸாரி (2) ப்ரபந்நன் (3) ஸ்ரீவைஷ்ணவன் (4) ஏகாந்தி (5) பரமைகாந்தி யார் யார்?

(1) ஆத்மாவைப்பற்றியோ பரமாத்மாவைப்பற்றியோ சிந்திக்காமல் உலகவாழ்க்கையிலேயே ஈடுபட்டு, கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவரிடம் பாசம் வைத்திருப்பவன் ஸம்ஸாரி ஆவான். (2) தன் விருப்பம் நிறைவேறுவதற்காக, அதை அளிப்பதற்குத் திறமையும் கருணையும் உடையவனைத் தஞ்சமாகப்பற்றுபவன் ப்ரபந்நனாவான். (3) இவ்வுலகனைத்தும் விஷ்ணுவின் உடைமையே என்று அறிந்து, ஓர் ஆசார்யனிடம் பஞ்சஸம்ஸ்காரம் பெற்றவன் ஸ்ரீவைஷ்ணவன் எனத்தக்கவன். (4) ஸ்ரீவைஷ்ணவனாக இருந்துகொண்டு, எம்பெருமானிடம் அவனையும் மற்ற பயன்களையும் விரும்புபவன் 'ஏகாந்தி' ஆவான். (5) ஸ்ரீவைஷ்ணவனாக இருந்துகொண்டு எம்பெருமானையே உபாயமாகவும் உபேயமாகவும் உறுதிபூண்டு மற்ற உபாயங்களிலும் உபேயங்களிலும் பற்றில்லாமலிருப்பவனே பரமைகாந்தி ஆவான்.

http://acharya.org

S. தேவநாதன், கடலூர்—1

68. நம் ஸம்ப்ரதாயத்தில் எம்பெருமானார் சிஷ்ய பரம்பரையில் வந்த ஆசார்யர்களையே ஆஶ்ரயிக்கவேண்டும் என்றும், ரஹஸ்யத்ரயத்தின் பொருளை உபதேசம்பெற வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இரண்டும் வெவ்வேறு ஆசார்யர்களிடம் ஆகலாமா? இன்று ஸமாஶ்ரயணம் செய்யும் ஆசார்யர்களிடம் ஆசார்யலக்ஷண பூர்த்தியில்லாமல் இருக்கிறதே? எம்பெருமானாரே உத்தாரக ஆசார்யர் என்பதின் பொருள் என்ன? எந்தெந்த க்ரந்தங்களைக் காலக்ஷேபம் கேட்பது?

எம்பெருமானார் நியமித்த 74 ஸிம்ஹாஸநாதிபதிகளின் சந்ததியில் வந்தவர்களில் ஞானம் அனுஷ்டானம் இரண்டிலும் சிறந்தவர்களாய் இருப்பவர்களிடம் ஆஶ்ரயிப்பது நல்லது. அப்படிப்பட்டவர் கிடைக்காவிட்டால் கூடிய வரையில் ஞானம் அனுஷ்டானம் இவைகளை உடைய சிம்மாசநாதிபதிகள் பரம்பரையில் வந்தவர்களிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துகொண்டு முமுக்ஷுப்படி முதலானவற்றைக் காலக்ஷேபம் சொல்லக் கூடிய வித்வான்களிடம் முக்யமான ரஹஸ்யக்ரந்தங்களையாவது கற்கலாம். இவ்விருவரில் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தவரே முக்யமான ஆசார்யர் ஆவார். க்ரந்த காலக்ஷேபம் சொல்லுபவர் அந்த ஆசார்யனுடைய பெருமையைச் சொல்லுகிறவரே ஆவார். அந்த முக்ய ஆசார்யரிடம் ஆசார்யலக்ஷணபூர்த்தியில்லையே எனில்: அதற்கு ஸதாசார்யர்கள் கூறும் ஸமாதானம் பின்வருமாறு:— ஆசார்யலக்ஷண பூர்த்தியுள்ளது எம்பெருமானார் ஒருவருக்கே. பஞ்சஸம்ஸ்காரம் செய்த ஆசார்யர் அந்த எம்பெருமானாரோடு ஸம்பந்தத்தை நமக்கு உண்டாக்கித் தருபவர். நம்பெருமாள் எம்பெருமானாரோடு ஸம்பந்தமுடைய அனைவர்க்கும் பேறு தப்பாது என்று (கத்யத்ரயத்தில்)உறுதியளித்திருக்கையால் பஞ்சஸம்ஸ்காரம் செய்த ஆசார்யரிடம் ஆசார்யலக்ஷணபூர்த்தியில்லாவிடினும் பேற்றுக்குக் குறையில்லை. எல்லா க்ரந்தங்களையும் காலக்ஷேபம் கேட்க வேண்

http://acharya.org

டும் என்னும் அவசியமில்லை. ரஹஸ்யத்ரயத்தை விளக்கும் முமுக்ஷுப்படியைக் கேட்டாலும் போதும். இயன்றவரையில் மற்ற க்ரந்தங்களையும் கேட்கலாம். "எம்பெருமானார் திருவடிகளே தஞ்சம்' என்னும் உறுதியுடன் மறந்தும் புறந்தொழாமையுள்ளவர்களாய், பஞ்சஸம்ஸ்காரம் செய்த ஆசார்யனிடம் பக்தியுடையவர்களாய், பகவதபசாரம், பாகவதாபசாரம் முதலானவற்றை விலக்கி வாழ்பவருக்குப் பேறு தப்பாது.

K. ஜகந்நாதன், சென்னை-28

69. ஸுதர்சனர் பதில் 12–59ல் (இதழ் 569) "பரதன் ராமனுக்குக் காட்டிலேயே பட்டாபிஷேகம் செய்வதற்காகத் திருவாபரணங்கள் முதலானவற்றை எடுத்துச் சென்றான்" என்று எழுதியுள்ளது. அயோத்யா காண்டம் ஸர்க்கம் 79 ஶ்லோகங்கள் 10, 11 இதை வலியுறுத்துகின்றன. அவற்றைப் பொருளுடன் வாசகர்களுக்கு வெளியிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

பரதவாக்யமான மேற்படி ஶ்லோகங்கள் பொருளுடன் தரப்படுகின்றன.

ஸர்க்கம் 79 — ஶ்லோகம் 10

ஆபிஷேசநிகம் சைவ ஸர்வமேததுபஸ்க்ருதம் ।
புரஸ்க்ருத்ய கமிஷ்யாமி ராமஹேதோர் வநம் ப்ரதி॥

[ஸித்தமாயிருக்கிற இந்த அபிஷேக ஸாமக்ரிகள் எல்லாவற்றையும் ஸ்ரீராமருக்காக எடுத்துக்கொண்டு காட்டிற்கே செல்லப்போகிறேன்.]

ஸர்க்கம் 79— ஶ்லோகம் 11

தத்ரைவ தம் நரவ்யாக்ரமபிஷிச்ய புரஸ்க்ருதம் ।
ஆநேஷ்யாமி து வை ராமம் ஹவ்யவாஹமிவாத்வராத் ॥

[அங்கேயே ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் செய்து புருஷோத்தமரான அவரை முடிசூட்டப்பெற்றவராய், யாகசாலையிலிருந்து த்ரேதாக்நியை எவ்வண்ணமோ அவ்வண்ணமே இப்பொழுதே அழைத்து வரப்போகிறேன்.]

http://acharya.org

A ஸத்யநாராயணன், திருக்கண்ணங்குடி.

70. "மு. ப. சியாமளா" என்பவர் எழுதிய "திருமழிசை ஆழ்வார் பாசுரங்கள் ஓர் ஆய்வு" என்னும நூலில் "திருமழிசையாழ்வார் சமணம், பௌத்தம், சைவம், மாயாவாதம் இவற்றில் இருந்து பின்னர் வைணவசமயத்துக்குவந்தார்" என்று கூறப்பட்டுள்ளது. ஆழ்வார் மாயாவாதமாகிய அதவைதத்திலும் இருந்தார் என்றால் ஆழ்வார் ஆதிசங்கருக்குப் பிற்பட்டவரா? அல்லது ஆதிசங்கருக்கு முன்னமே யாராவது "உலகம் பொய்" என்னும் மாயாவாதத்தைப் பரப்பி வந்தனரா? இவற்றை விளக்கக்கோருகிறேன்.

ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலேயே ஆழ்வார் மாயாவாதத்தையும் ஆராய்ந்ததாக உள்ளது. எட்டாம் நூற்றாண்டில் பிறந்த ஆதிசங்கருக்கு முற்பட்டவரே திருமழிசையாழ்வார். ஆயினும் ஆதிசங்கரர் விரிவாகப் பரப்பிய மாயாவாதம் ப்ரஹ்மஸூத்ரகாரர்காலத்திலேயே 'ஔடுலோமி' என்பவரால் 'மோக்ஷமடையும்போது ஜீவன் ப்ரஹ்மமாகிறான்' என்னுமளவுக்குக் கூறப்பட்டுவந்ததை ப்ரஹ்மஸூத்ரத்தில் வியாஸர் கண்டித்திருக்கிறார். 'கூடிநான்கில நல்லுறைப்பு' [திருவாய் 8-8-9] என்னும் பாட்டில் நம்மாழ்வாரும் மாயாவாதத்தைக்கண்டித்திருக்கிறார். ஆனால் ஆதிசங்கருக்கு முற்பட்ட காலத்தில் மாயாவாதம் சான்றோர்களால் மிகுதியாக ஏற்கப்படவில்லை என்னும் உண்மை எட்டாம நூற்றாண்டுக்கு முற்பட்ட தென்மொழி வடமொழி இலக்கிய நூல்களிலிருந்து தெளிவாக விளங்குகிறது.

இரா. நாமதேவ் தஞ்சாவூர் (71, 72 கேள்விகள்)

71. ஆகமமுறைகளில் வைகாநஸம், பாஞ்சராத்ரம் இவைகளின் விளக்கமும் அதன்படி ஸந்நிதி கைங்கர்யம் செய்பவர்களின் வித்தியாசமும் யாவை?

நாராயணனின் அவதாரமான 'விகநஸ்' என்னும் ரிஷியால் உபதேசிக்கப்பட்டது வைகாநஸ ஆகமம். ஸ்ரீமந் நாராயணனால் ஔபகாயனர், சாண்டில்யர் முதலான ஐந்து

http://acharya.org

ரிஷிகளுக்கு ஐந்து ராத்ரிகளில் உபதேசிக்கப் பெற்றது பாஞ்சராத்ர ஆகமம். வைகாநஸ ஆகமப்படி கோயில்களில கைங்கர்யம் செய்பவர்கள் ஒரு தனி ஸமூஹமாயிருக்கிறார்கள். தங்களுக்கு கர்ப்பத்திலேயே நாராயணன் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து விடுகிறான் என்னும் காரணத்தை முன்னிட்டு அவர்களில் பலர் ஆசார்யர்களிடம் பஞ்ச ஸம்ஸ்காரம் பண்ணிக்கொள்ளுவதில்லை பாஞ்சராத்ரத்தில ஆசார்யரிடம் பஞ்சஸம்ஸ்காரம் செய்துகொள்வது அவசியம். பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துகொண்ட எந்த ப்ராஹ்மண ஸ்ரீவைஷ்ணவரும் பாஞ்சராத்ர அர்ச்சகரிடம் தீக்ஷைபெற்று பாஞ்சராத்ரக்கோயில்களில் திருவாராதனம் செய்யலாம்.

72. ஸமாச்ரயணம் செய்துகொண்டவர்களுக்கு இறுதிக்கடன் செய்யும்போது அதை இறக்குவதாக ஒரு சடங்கைச் சிலர் செய்கிறார்கள். இது முறையா? முறையென்றால் இதன் பொருள் என்ன?

'ஆசார்யன் அளித்த சங்கு சக்கர முத்திரைகளோடு சரீரத்தை எரிக்கலாகாது' என்னும் கருத்தாலே பாகவத ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலர் இச்சடங்கைச் செய்வதாகக் கூறுகிறார்கள். ஆனால் சிஷ்டாசாரத்தில் இது இல்லை.

S. ஸ்ரீசைலா, அணுசக்திநகர், பம்பாய்—94.

73. பக்தி பண்ணுவது, உபாஸனை, பக்தியோகம் இம்மூன்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

பொதுவாக, பரமாத்மா அல்லது பெரியோர்களிடம் சிறியோர்கள் அன்பு செலுத்துவது பக்தி பண்ணுவது என்று வழங்கப்படுகிறது. உபாஸனை, பக்தியோகம் இரண்டும் ஒரே பொருளை உடையவை. தனக்குரிய கர்மங்களை, பற்றற்று அனுஷ்டிக்கையாகிற கர்மயோகம், ஜீவாத்மாவாகிற தன் ஸ்வரூபத்தைத் தியானிக்கையாகிற ஜ்ஞானயோகம் ஆகியவற்றை ஆத்மாவைக் காணும் வரையில் நீண்டநாள் அனுஷ்டித்து அதனால் பரமாத்மாவிடம் பக்திபிறந்து, அந்த பக்தியை நேரே எம்பெருமானைக் காண்பது போன்ற நிலைவரும் வரையில் மோக்ஷஸாதனமாக அனுஷ்டிப்பது பக்தியோகம் என்றும் உபாஸநம் என்றும். 'ப்ரஹ்மவித்யை' என்றும் உபநிஷத்துக்களிலும் கீதை முதலான சாஸ்திரங்களிலும் சொல்லப்படுகிறது.

http://acharya.org

M. பத்மநாபன் மதுரை-1 (74, 75 கேள்விகள்)

74. நமது பாரததேசத்தில் நெடுங்காலமாக மத மாற்றங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. அவற்றுக்கும் பிறகு வந்த இஸ்லாமிய, கிறிஸ்தவ மதமாற்றங்களுக்கும் உள்ள வேற்றுமை யாது? இவற்றை வைதிகச் சமயங்கள் எவ்வாறு எதிர்கொண்டன?

பண்டைக்காலத்தில், பொதுவாக மதத்தலைவர்கள் வாதப் போர்புரிந்து தோற்றவர்கள் வென்றவர்களின் மதத்தைத் தழுவினார்கள். இது மனமாற்றத்தால் ஏற்பட்ட மதமாற்றம். பௌத்த ஜைனமதங்கள் அரசர்களை மதம்மாற்றுவதன் மூலம் பொதுமக்களையும் மதம்மாற்றி இந்நாட்டில் பரவின. அப்படி மதம் மாற்றப்பட்ட அரசனான விட்டலதேவராயனை ராமானுஜர் மறுபடியும் வைஷ்ணவமதத்தைத் தழுவும்படி செய்தார். ஞானசம்பந்தர் வரலாற்றிலும் இத்தகைய செய்தி காணப்படுகிறது. கிருமிகண்ட சோழன் "சிவாத் பரதரம் நாஸ்தி" [சிவனைக் காட்டிலும் மேலானதில்லை] என்றெழுதிய ஓலையில் மதத்தலைவர்களைக் கையெழுத்திடச்சொல்லி நிர்ப்பந்தித்ததும், அதனால் கூரத்தாழ்வான் கண்ணிழந்ததும், பெரியநம்பி உயிரிழந்ததும், பல விஷ்ணு கோயில்கள் இடிக்கப்பட்டதும் வரலாற்றுச் செய்திகள். இஸ்லாமியர் பாரததேசத்தின் மீது படையெடுத்தபின்பு கத்தி முனையிலே பல்லாயிரக்கணக்கானவர்களை மதம் மாற்றினார்கள். இணங்காதவர்களைக் கொன்று குவித்தார்கள். இது கத்திமுனையில் ஏற்பட்ட மதமாற்றம். இது வடநாட்டில் மிகுதி; தென்னாட்டில் குறைவு. சுமார் இருநூறு வருடங்களாக மேலைநாடுகளிலிருந்து வாணிபநிமித்தமாக பாரதத்திற்கு வந்து பாரதநாட்டின் ஆட்சியைப்பிடித்த வெள்ளையர்களின சலுகைகளோடு பல பாதிரிமார்கள் இந்நாட்டுக்கு வந்து, பணம், பதவி, கல்வி, பெண்கள் முதலானவற்றின் மூலம் நடுத்தர கீழ்மட்ட மக்களில் லக்ஷக்கணக்கானவர்களை, கத்தியின்றியே மதம் மாற்றினார்கள். வைதிக மதங்களைச்

http://acharya.org

சேர்ந்தவர்கள் பலர் இந்த நூற்றாண்டில் தங்கள் மதங்களில் நம்பிக்கை குறையப்பெற்று 'எம்மதமும் சம்மதம்' என்னும் சமரசவாதத்தையும், வெளிநாட்டாரளித்த 'இந்து மதம்' என்னும் பெயரையும் ஏற்றுக்கொண்டது இத்தகைய மத மாற்றங்களுக்குப் பெரிதும் துணைசெய்தது. வைஷ்ணவர்கள் தங்களுடைய ஒருதெய்வக் கொள்கையில் உறுதியாயிருந்தமையால் மதமாற்றங்களால் அவர்கள் பெருமளவு பாதிக்கப் படவில்லை. 'ஆரிய சமாஜம்' முதலான சில அமைப்புகள் மதம் மாறியவர்களைத் திரும்பவும் இந்துக்களாக மதம் மாற்றுவதற்குச் சில சடங்குகளை ஏற்படுத்தி அதில் ஒரு சிறிதே வெற்றி கண்டனர். அத்வைதிகளோ, சைவர்களோ, வைஷ்ணவர்களோ மதம்மாறிச் சென்றவர்களைத் தங்கள் மதத்திற்குத் திரும்ப அழைக்கப் பெரிய முயற்சிகள் எதுவும் எடுக்கவில்லை. கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் மதம் மாற்றுவதைத் தங்கள் மதக்கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டு, விடாமல் 'இந்து'க்களை மதம்மாற்றுகிறார்கள். 'இந்து'க்கள் பலதார மணத்தைச் சட்டபூர்வமாகத் தடை செய்ததையும் குடும்பக்கட்டுப்பாட்டையும் மனப்பூர்வகமாக ஏற்றுக்கொண்டுள்ளனர். இஸ்லாமியர்கள் குடும்பக்கட்டுப் பாட்டை ஏற்றுக்கொள்ளாமையாலும், பலதாரமணத்தாலும் அவர்களுடைய ஜனத்தொகை பெருகிவருகிறது. கிறிஸ்த வர்கள் மதமாற்றத்தைத் தீவிரமாகச் செய்துவருவதால் அவர்களுடைய ஜனத்தொகையும் கூடிவருகிறது. இந்நிலை நீடித்தால் வரும் நூற்றாண்டில் 'இந்து'க்கள் சிறுபான்மை யாகி விடும் அபாயம் உள்ளது. இதைத் தடுக்க வேண்டு மென்றால் சைவர்களும் வைஷ்ணவர்களும் தங்களிடையே சகிப்புத் தன்மையுடன், அவரவர் மதங்களில் உறுதியா யிருந்து, அநுட்டானங்களை உண்மையாகக்கடைப்பிடித்து, சம ரசவாதத்தைக் கைவிட்டு, மதப்பிரசாரத்தையும் சிறப்பாகச் செய்து, கீழ்மட்டத்திலுள்ள மக்களைக் கிறிஸ்தவ இஸ்லாமிய பொய்ப்பிரசாரங்களில் மயங்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

http://acharya.org

75. பெரிய நம்பி 'ப்ருஹச்சரணம்' என்ற வகுப்பில் தோன்றியதாக வரலாறு கூறுகிறது. தற்சமயம் இந்த வகுப்பு ஸ்மார்த்தர்களிடம் மட்டுமே காணப்படுகிறது. அப்படியானால் அந்தக்காலத்தில் அந்தணர்களிடையில் ஸ்மார்த்தர்கள் என்றும் வைணவர்கள் என்றும் பிரிவுகள் ஏற்படவில்லையா? இது காலக்ரமத்தில் வந்ததா?

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பு தென்னாடு தண்டகாரண்யம் என்று பெயர் பெற்ற காடாகவே இருந்தது என்பது ஸ்ரீராமாயணத்தில் காணக்கிடக்கிறது. பிற் காலத்தில் நான்கு வர்ணத்தார்களும் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்குக் கூட்டம் கூட்டமாகக் குடியேறினார்கள். அப்படிவந்த பிராம்மணர்களில் சோழதேசத்தில் முதன் முத லில் வந்து குடியேறியவர்கள் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ பிராம மணர்கள். அதனால் அவர்கள் 'சோழியர்கள்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டார்கள். 'ஆதிதிருவெள்ளறை' என்று அழைக்கப்பெற்ற சோழநாட்டுத் திவ்யதேசத்தின் ஸ்தல புராணத்தில் ராமனுடைய முன்னோனை சிபிச்சக்கர வர்த்தி இந்த திவ்யதேசத்திற்கு 3700 பூர்வசிக ஸ்ரீவைஷ் ணவ பிராம்மணர்களையும், பலலாயிரக்கணக்கான *மற்ற வர் ணத்தவர்களையும் குடியேற்றியதாகக்கூறப்பட்டுள்ளது. கால க்ரமத்தில் இந்தப்பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவபிராம்மணர்கள் திரு மாலிருஞ்சோலை, திருமோகூர், திருக்கோட்டியூர், ஆழ்வார் திருநகரி, தென் திருப்பேரை முதலிய திவ்யதேசங்களுக்குக் குடிபெயர்ந்திருக்கிறார்கள். எம்பெருமானார் மேலக்கோட்டை திருநாராயணபுரத்தை ப்ரதிஷ்டை செய்தபோது, திருவெள் ளறையிலிருந்து 52 பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவ குடும்பங்களை அங்கு பெருமானுக்கு ரக்ஷையாகக் குடியேற்றினார் என்று 'கோயிலொழுகு' கூறுகிறது. ஆழ்வார்களில பிராம்மணர் களில அனைவரும் பூர்வசிகையினராகவே இருப்பதிலிருந்து ஆழ்வார்கள் காலம் வரையில் தென்னாட்டு ஸ்ரீவைஷ்ணவ பிராம்மணர்களனைவரும் இந்த வகுப்பினராகவே இருந்தனர் என்று தெரிகிறது. இதர பிராம்மணர்களிலும், மலையாளத்தி

* சோழ அரசர்கள் 'சிபிச்சக்ரவர்த்தியின் மரபில் வந்தவர்கள்' என் னும் பொருளுடைய 'செம்பியன்' என்னும் அடைமொழி பெற்றிருப் பதைக் காணலாம்.

http://acharya.org

லுள்ள நம்பூதிரிகளும், சிதம்பரம் தீக்ஷிதர்களும் இன்றளவும் பூர்வசிகையுடன் காட்சியளிப்பது தென்னாட்டுக்கு முதன் முதலில் வந்தவர்கள் இவ்வகுப்பினரே என்பதை உறுதிப்படுத்துகிறது. இவர்கள் வந்து சிலநூற்றாண்டுகளுக்குப் பிறகு வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்குக் கூட்டமாக வந்து வடக்கேயுள்ள காஞ்சீபுரம் முதலானவிடங்களில் குடியேறியவர்கள் அபரசிகையுடையவர்களாகவும் சிறிது ஆசாரபேதமுடையவர்களாகவும் இருந்தபடியால் 'வடமர்கள்' என்றழைக்கப்பட்டனர். அதற்குப் பிறகு சில நூற்றாண்டுகளில் மேலும் ஆசாரபேதங்களுடன் பெரும் கூட்டமாக வடநாட்டிலிருந்து தென்னாட்டுக்கு வந்த பிராம்மணர்கள் அக்காரணத்தாலேயே 'ப்ருஹச்சரணம்' என்றழைக்கப்பட்டார்கள். ஏறக்குறைய இதேகாலத்தில் பிராம்மணர்களில் எண்ணாயிரம் குடும்பங்கள் குடியேறி 'அஷ்டஸஹஸ்ரம்' (எண்ணாயிரம்) என்று பெயர் பெற்றனர். இந்தப் பிராம்மணர்கள் எல்லோருமே அக்காலத்தில் விஷ்ணுவையே பரம்பொருளாகக் கொண்டிருந்தனர் என்பது சங்கர பாஷ்யம் முதலான நூல்களிலிருந்து விளங்குகிறது. இவர்களில் சிலர் வேதங்களையும் மநு முதலான ஸ்ம்ருதிகளையும் பிரமாணமாகக் கொள்ளுவதோடு வேத வியாஸர் காலத்திலேயே இருந்ததாகத் தெரியும் பாஞ்சராத்ரம் வைகாநஸம் என்னும் ஆகமங்களையும் அவற்றின் அடிப்படையில் அமைந்த ஆழ்வார்களின் அருளிச்செயல்களையும் பிரமாணமாகக்கொண்டனர். மற்றும் சிலர் வேதங்களையும், ஸ்ம்ருதிகளையும் மட்டுமே பிரமாணமாகக் கொண்டனர். அதனால் முந்திய பிரிவினர் 'வைஷ்ணவர்கள்' என்றும், பிந்திய பிரிவினர் 'ஸ்மார்த்தர்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். ஆழ்வார்களுக்கு முற்பட்ட சங்க காலத்திலிருந்த வில்லிபுத்தூர்ப்பகவர் என்னும் த்ரிதண்டி ஸந்யாஸி (முக்கோற்பகவர்) காலத்தில் இந்தப் பிரிவு ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது வில்லிபுத்தூர்ப்பகவர் வார்த்தையிலிருந்து விளங்குகிறது. எம்பெருமானார் காலம் வரையில் பிராம்மணர்களிடையே ஸ்மார்த்தர்களோடு வைஷ்ணவர்களோடு வாசியற அனைவரிலும், சோழியர், வடமர், ப்ருஹச்சரணம், அஷ்டஸஹஸ்ரம் என்னும் பிரிவுகள்

http://acharya.org

இருந்தன என்பது குருபரம்பரை நூல்களிலிருந்து விளங்குகிறது. ஒவ்வொரு பிரிவினரும் மற்ற பிரிவினரிடம் கொள்வினை கொடுவினை (பெண் கொடுத்து வாங்குதல்) செய்து கொள்வதில்லை. இவ்வகுப்பினரிடையே பாமரர்கள் ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்வும் பாராட்டிக்கொண்டிருந்தனர். இது வடமரான ஸ்ரீமத் ராமாநுஜருடைய தேவிகளுக்கும் ப்ருஹச்சரணரான பெரிய நம்பி தேவிகளுக்கும் நடந்த கிணற்றடிச் சண்டையிலிருந்து விளங்குகிறது. வடம வகுப்பைச் சேர்ந்த கூரத்தாழ்வான் குமாரரான ஸ்ரீபராசர பட்டருக்கு விவாஹத்திற்காகப் பெண் பார்க்கும் காலத்தில் பெரியநம்பி வம்சத்தவர்களிடமே தகுந்த மணமகள் கிடைத்தமையால், பாமரர்களிடையே உள்ள இந்த வகுப்பு பேதத்தை உடைக்க வேண்டுமென்று திருவுள்ளம் பற்றிய எம்பெருமானார் வடமம் ப்ருஹச்சரணம் முதலான அபரசிகை ஸ்ரீவைஷ்ணவ ப்ராம்மணர்களிடையே இந்த வகுப்பு பேதத்தை உடைத்து, அந்தத் திருமணத்தை நடத்தி வைத்தார். ஆயினும் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் சிகாபேதம் இருந்தபடியால் அந்த வகுப்பு பேதத்தை உடைக்கவில்லை. பூர்வாசார்யர்கள் காலத்திலும் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்பும் இந்த இரு வகுப்பினரிடையே சிஷ்யாசார்ய ஸம்பந்தம் இருந்ததேயொழிய பெண் கொடுத்து வாங்குதல் இல்லை. பிற்காலத்தில் வடமர் ப்ருஹச்சரணம், அஷ்டஸஹஸ்ரம் என்னும் பிரிவுகள் ஸ்மார்த்தர்களிடையே இருந்தபோதிலும் ஸ்ரீவைஷ்ணவர்களிடையே அடியோடு மறைந்துவிட்டது. சிகையே பெரும்பாலும் மறைந்து வருகிற இக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களிடையே கொள்வினை கொடுவினைகளில் பூர்வசிகை அபரசிகை பேதமும் மறைந்து வருகிறது.

நல்லேந்திரன், மண்ணச்சநல்லூர். A. கோவிந்தராஜன், கதிராமங்கலம்.

76. (ஸுதர்சனர் பதில்) 72வது கேள்வியில் குறித்துள்ளபடி சங்குசக்கர முத்திரைகளை இறக்குவதற்காக வெகு தூரத்திலிருந்து வைஷ்ணவர்களை அழைத்துவந்து

செலவு செய்து சடங்கு செய்வதற்குப்பயந்து கொண்டே பலர் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துகொள்ளத் தயங்குகிறார்கள். ஆகையால் இறக்கும் சடங்கு செய்வது தேவையா? அதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா என்று தெரிவிக்கப் பிரார்த்திக்கிறோம்.

பஞ்சஸம்ஸ்காரத்தை இறக்கும் சடங்குக்கு சாஸ்திரங்களில் எந்த ஆதாரமும் இல்லை. ஆகையால் அதற்காகப் பயந்து பஞ்சஸம்ஸ்காரம் செய்து கொள்ளாமல் விட்டுவிட வேண்டியதில்லை.

R. தேவராஜன், ஈரோடு.

77. திருநாம ஸங்கீர்த்தனத்தின் பெருமை அருளிச்செயலில் காணப்பட்டாலும், உடையவர் காலத்திலிருந்து ஆசார்யர்களிடம் ஏன் காணப்படவில்லை? உடையவர் காலத்தில் இருந்த உய்யக்கொண்டார் பக்தி நிஷ்டராக இருந்ததாகத் தெரிகிறது. பிற்காலத்தில் இத்தகைய பக்தி நிஷ்டர்கள் மறைந்ததற்குக் காரணமென்ன?

திருநாம ஸங்கீர்த்தனம் ஸ்வயம் பிரயோஜனமாகச் செய்வது சிறந்ததே. மோக்ஷம் அல்லது மற்ற பயன்களைக் கருதிச் செய்வது சிறந்ததல்ல. ஸ்வயம் பிரயோஜனமான திருநாம ஸங்கீர்த்தனத்தின் பெருமையே திருமாலை முதலான ஆழ்வார்களின் அருளிச்செயல்களில் விரிவாகச் சொல்லப்பட்டது. ஆசார்யர்கள் காலத்தில் 'மோக்ஷத்திற்காகவும் தன் முயற்சி கூடாது' என்னும் சிறந்த கொள்கை வலுப்பெற்றதால், எளிதில் உபாயாந்தரமாக மாறக் கூடியதிருநாம ஸங்கீர்த்தனத்தை ஆசார்யர்கள் அதிகமாக ஆதரிக்கவில்லை. பிற்காலத்தில் ஆழ்வார்களை அடியொற்றி ஸ்ரீவைஷ்ணவ பாகவத பஜனை கோஷ்டிகள் ஸ்வயம் பிரயோஜனமான திருநாம ஸங்கீர்த்தனத்தைச் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். மோக்ஷத்தின் பொருட்டு முயற்சி செய்வது அத்யந்த பரதந்த்ரமான ஜீவாத்ம ஸ்வரூபத்தோடு முரண்பட்டது என்னும் கொள்கை வலுப்பெற்றதாலும், செயற்கரியதாகையாலும் பக்தி யோகமும் பூர்வாசார்யர்கள் காலத்திற்குப் பிறகு மறைந்துவிட்டது.

http://acharya.org

அ. வெ. கிருஷ்ணசாமி, அய்யனேரி

78. ஆழ்வார்கள் தம் பதிகங்களில் ப₂ல ஶ்ருதிப் பாட்டில் அப்பதிகங்களில் வல்லவர்கள் வைகுந்தம் சேருவர் என அறுதியிட்டுக்கூறுகிறார்கள். ஸ்ரீவசநபூ₄ஷணம் முதலிய ரஹஸ்யங்கள் ஆசார்யாபிமானம், ஆசார்ய நிஷ்டை ஆகியவை முமுக்ஷுக்களுக்கு அவசியம் இருக்கவேண்டு மென்று வலியுறுத்திக் கூறுகின்றன. ஆழ்வார்கள் சொல்லியபடி பாட்டுக்களை ஓதினால் மட்டும் போதாதா? ஆசார்யனை அடைவது அவசியமா?

பதிகங்களில் வல்லவராவது என்றால் அவற்றைப் பொருளுடன் ஓர் ஆசாரியனிடமிருந்து அறிந்து அநுஷ்டிக்க வேண்டும் என்றே பொருள். ஓதுவது மாத்திரம் கற்பயனளிக்காது. "ஸ கு₃ருமேவாபி₄க₃ச்சே₂த்" [முண்ட₃க 1-1-12] [ப்₃ரஹ்ம ஜ்ஞானத்தைப் பெறுவதற்கு ஆசார்யனையே அடையவேண்டும்] என்றும், "ஆசார்யவாந் புருஷோ வேத₃ தத்த்வம்" [சா₂ந் 6-16-2] [ஆசாரியனையுடைய புருஷனே உண்மையறிவைப் பெறுவான்] என்றும்,

'யஸ்ய தே₃வே பரா ப₄க்திர் யதா₂ தே₃வே ததா₂ கு₃ரௌ ।
தஸ்யைதே கதி₂தா ஹ்யர்த்தா₂: ப்ரகாஶந்தே மஹாத்மந: ॥
[ஶ்வேதா 6-23]

[எவனுக்குப் பர தெய்வத்திடம் மேலான ப₄க்தியுள்ளதோ, தெய்வத்திடம் போலே ஆசார்யனிடமும் மேலான ப₄க்தியுள்ளதோ அந்த மஹா புருஷனுக்கே உபதே₃ஶிக்கப்பட்ட இவ்வர்த்த₂ங்கள் விளங்கும்] என்றும் உபநிஷத்துக்கள் ஓதின. ஆகையால் ஆசார்யனிடம் ப₄க்தியோடு அவனுடைய அபி₄மானத்திற்குப் பாத்திரமாக நடந்து கொள்பவர்களே பாசுரங்களில் வல்லவர்களாவர் என்பது தெளிவாகிறது. ஆகையால் எந்த முரண்பாடும் இல்லை.

V. ஸ்ரீநிவாஸன், ஸ்ரீரங்கம்

79. 31—7—95, 1—8—95 தினமலர் இதழ்களில் "ஆன்மிகம் அறிவோமா" என்னும் தலைப்பில் புத்த மதத்தைப் பற்றி ஒரு கட்டுரை வந்துள்ளது. இதில் பல

http://acharya.org

விஷயங்களுக்கிடையில், "புத்த சமயம் கடவுள் மறுப்புச் சமயம் என்பது தவறு. புத்தர் கடவுளை மறுக்கவில்லை. அவர் 'கடவுள் இருக்கிறாரா? நான் இருக்கிறேனா? இந்த உலகம் உண்மையா? பொய்யா?' என்பன போன்ற பயனற்ற ஆராய்ச்சிவேண்டாம் என்று கூறினார்" என்றும். "மிகப்பழங்காலத்தில் இந்துக்களிடம் நிலவிய தூய சமயத்தையே மறுமலர்ச்சி பெறச்செய்து தம் கொள்கைகளை முழக்கம் செய்தார் புத்தர்" என்றும் எழுதப்பட்டுள்ளது. இது உண்மையா?

இது அடியோடு தவறு. புத்தமத நூல்களையோ, வைதிக மத நூல்களையோ எதையும் கற்காமல் மேல் நாட்டவர்கள் எழுதிய சில கற்பனை ஆராய்ச்சி நூல்களைக் கொண்டு எழுதப்பட்டது இக்கட்டுரை. புத்த மதம் 'கடவுள் இல்லை' என்று மாத்திரம் சொல்லவில்லை. 'உலகமே பொய்' என்றும் சொல்லுகிறது. இந்த புத்த மதக் கொள்கைகளை ப்ரஸ்தான த்ரயங்களில் ஒன்றான ப்₃ரஹ்ம ஸூத்ரத்திலும் அதற்கு பா₄ஷ்யம் இயற்றிய சங்கரர், ராமாநுஜர் முதலான மதாசார்யர்களாலும் கண்டிக்கப்பெற்றன. இந்து மதம் என்று ஒரு மதம் இருப்பது போல் இக்கட்டுரையில் எழுதியிருப்பதும் முழுப்பொய். இந்தியா என்று வெள்ளையர்களால் பெயர் சூட்டப்பெற்ற நம் பா₄ரத நாட்டில் நிலவும் அத்₃வைதம், விசிஷ்டாத்₃வைதம் (வைஷ்ணவம்), த்₃வைதம், சைவம முதலான பல மதங்களின் தொகுப்புக்கு இந்து மதம் என்று மேல் நாட்டாரால் பெயர் வைக்கப்பட்டது. அதைப் பற்றிக் கொண்டு இத்தகைய பத்திரிகைக் கட்டுரைகள் குழப்ப வாதங்களைச் செய்து வருகின்றன. தினமலர் போன்ற பத்திரிகைகளில் வெளிவரும் இத்தகைய கட்டுரைகள் எந்த மதத்திலும் தெளிவை உண்டாக்கமாட்டா; மேன்மேலும் குழப்பத்தையே விளைக்கும் என்பதைக் காண்கிறேம்.

R. ரகுராமன், புத்தூர், திருச்சி-17

80. 30–7–95 கல்கியில் 'ஆடி என்னும் ஆன்மிக மாதம்' என்ற கட்டுரையில் மயிலை கபாலீசுவர தலைமை அர்ச்சகர் விச்வநாத சிவாசாரியர், ஆடிப் பூரத்தன்று

http://acharya.org

பார்வதி சிவனை அடையத் தவம் செய்ததாகவும், இதே ஆடிப் பூரத்தன்றுதான் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளின் தேர்த்திருவிழா நடப்பதாகவும். 'ஒரு வகையில் பார்த்தால் ஆண்டாள் வேறு அம்பாள் வேறு அல்ல' என்ற ஐக்கியத்தைச் சுட்டிக்காட்டும் திருநாள் (ஆடிப்பூரம்) என்றும் எழுதியிருக்கிறார். இதை விமர்சிக்க வேண்டுகிறேன்.

இது வெறும் பிதற்றல் என்பது சிறுவர்க்கும் விளங்கும். ஒரே நாளன்று பல மதங்களைச் சேர்ந்த பல திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இது கொண்டு 'திருவிழாக்களில் கொண்டாடப்படும் தெய்வங்கள் ஒன்று' என்று அறிவுள்ளவர் எவரும் சொல்லமாட்டார்கள். வேதத்தில் விஷ்ணு பத்னியாகச் சொல்லப்பட்ட பூமிதேவியின் அவதாரமாக ஆண்டாள் திருவாடிப்பூரத்தன்று தோன்றினாள். வேத உபநிஷத்துக்களில் விஷ்ணுவால் படைக்கப்பெற்றவராகச் சொல்லப்பட்ட சிவனையடைய ஆடிப்பூரத்தன்று பார்வதி தவமிருந்தாளென்பதால் ஆண்டாளும் பார்வதியும் ஒன்று என்று எழுதுவது விலவறச் சிரிக்கத் தக்கது. போலிச் சமரச வாதம் செய்து செய்து அறிவுக் குருடாகிவிட்ட 'கல்கி'யில் இத்தகைய கட்டுரைகள் வெளிவருவது பொருத்தமானதே.

D. ஆராவமுத ராமாநுஜதாஸர், காஞ்சீபுரம் (81, 82 கேள்விகள்.)

81. 'ப்ரபந்நனை விட சரணாகதன் ஒரு படி உயர்ந்தவன்' என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். இந்த வேற்றுமையை விளக்கக் கோருகிறேன்.

வைஷ்ணவ சாஸ்திரங்களில் 'ப்ரபத்தி', 'ஶரணாகதி' என்னும் பதங்களும் 'ப்ரபந்நன்', 'சரணாகதன்' என்னும் பதங்களும் ஒரு பொருளுடையவையாகவே பெரும்பாலும் வழங்கப்படுகின்றன. ஆனால் ஸ்ரீவசந பூஷண மீமாம்ஸா பாஷ்யம் முதலான க்ரந்தங்களில் "சரணாகதியில் உபாய புத்தி கொள்ளும்போது அது 'ஸ்வகத ஸ்வீகார நிஷ்டை' யாகிறது. அந்த ஸ்வகத ஸ்வீகார நிஷ்டனை சாஸ்திரங்கள் மிகுதியாக ப்ரபந்ந ஶப்தத்தால் வழங்குகின்றன. ஶரணாகதி

http://acharya.org

யில் உபாய புத்தி கொள்ளாதபோது அது 'பரகத ஸ்வீகார நிஷ்டை' யாகிறது. சாஸ்திரங்கள் பரகத ஸ்வீகார நிஷ்டையை மிகுதியாக சரணாகத சப்தத்தால் குறிக்கின்றன" என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆயினும் சாஸ்த்ரங்களும் பூர்வாசார்யர்களும் ப்ரபத்தி - சரணாகதி சப்தங்களையும், ப்ரபந்ந - சரணாகத சப்தங்களையும் பர்யாயமாகவே (ஒரே பொருளுடையவையாகவே) வழங்குகையால், சரணாகதியில் உபாய புத்தி வைப்பவர்களை 'ஸ்வகத ஸ்வீகார நிஷ்டர்' என்றும், உபாய புத்தி கொள்ளாதவர்களை 'பரகத ஸ்வீகார நிஷ்டர்' என்றும் வழங்குவதே பொருத்தமானது என்பது நம் கருத்து. 'ஸ்வார்த்த மோக்ஷத்தைப்பெறும் ஸ்வகத ஸ்வீகார நிஷ்டனைக் காட்டிலும் பரார்த்த மோக்ஷத்தைப் பெறும் பரகத ஸ்வீகார நிஷ்டன் உயர்ந்தவன் என்பது தென்னாசார்ய ஸம்ப்ரதாயம்.

82. ஆழ்வார்கள் ஒவ்வொரு நித்ய ஸூரிகளின் அவதாரம் என்று குரு பரம்பரை நூல்கள் கூறுகின்றன. ஆனால் 'நம்பிள்ளை ஈடு', 'ஆசார்யஹ்ருதயம்' முதலான நூல்கள் ஆழ்வார்கள் எம்பெருமானால் திருத்தப்பட்ட ஸம்ஸாரிகளே என்று நிர்ணயிக்கின்றன. இந்த முரண்பாட்டை எப்படி நீக்குவது?

"மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து" [திருவாய் 2 6-8] முதலான நூற்றுக்கணக்கான பாசுரங்களில் ஆழ்வார்கள் தங்களை அநாதிகாலமாக பத்த ஜீவர்களாக இருந்து இப்பிறப்பில் எம்பெருமானால் மயர்வற மதிநலமருளப் பெற்றவர்களாகவே குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். அகச் சான்றான இதுவே முக்கியமானது. இதற்கு முரணில்லாமலேயே மற்ற நூல்களில் ஆழ்வார்களைப்பற்றி ஓரோர் நித்யஸூரியின் அவதாரம் என்று கூறியிருப்பதற்குப் பொருள் கொள்ளவேண்டும். அப்படிக் கொள்ளும்போது பத்த ஜீவர்களான ஆழ்வார்களுக்குள் ஒவ்வொரு நித்ய ஸூரியின் சக்தியானது எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையால் உட்புகுந்து செயல்பட்டதால் ஒவ்வொரு ஆழ்வார் ஒவ்வொரு நித்ய ஸூரியின் அம்சாவதாரமாகக் குறிக்கப்படுகிறார் என்றே கொள்ளவேண்டும். ஆழ்வார்களை எம்பெருமானுடைய சக்த்யாவேசாவதாரமாகத் திருவுள்ளம் பற்றியே ஸ்ரீவேதாந்ததேசிகரும் அவர்களை அபிநவ தசாவதாரமாகப் பேசினார்.

http://acharya.org

V. ஸ்ரீநிவாஸன், திருநின்றவூர்.

83. ஸ்ரீ உ வே ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி இயற்றிய ஸ்ரீவரதராஜஸ்தவ வ்யாக்யானத்தில் 72 ம் ஶ்லோகத்தின் உரையில் 'கேவலம் ஸ்வேச்சயைவாஹம் ப்ரேக்ஷே கஞ்சித் கதாசந' என்ற வசநத்தை எடுத்து 'இந்த வசநம் ப்ராமாணிகர்களான முன்னோர்களால் எங்கும் எடுத்தாளப்படாத வசநமாகும்' என்று எழுதியுள்ளார். இதைவிமர்சிக்க வேண்டுகிறேன்.

இந்த வசநம் பாஞ்சராத்ர ஸம்ஹிதைகளில் ஒன்றான லக்ஷ்மீதந்த்ரத்தில் 13 வது அத்தியாயத்தில் 11 வது ஶ்லோகமாகக் காணப்படுகிறது. இதை ஸ்ரீவசநபூஷணம் 397 ம் ஸூத்ரவ்யாக்யானத்தில் மணவாளமாமுனிகள் மேற்கோளாகக் காட்டியுள்ளார்; மற்றும் பல பூர்வாசார்யர்களும் இதைமேற்கோளாகக் காட்டியுள்ளனர். ஸ்ரீவத்ஸாங்காசார்ய ஸ்வாமி கவனமில்லாமல் எழுதியுள்ளார் என்று தெரிகிறது. திருத்திக்கொள்வார் என்று நம்புகிறேன்.

Dr. A V ரங்காசார்ய ஸ்வாமி, திருச்சித்ரகூடம்.

84. உத்தமூர் ஸ்வாமியின் 'ப்ரபந்தரக்ஷை' என்னும் நூலில் பெரியதிருமொழி 5-5-9 திருவரங்கப் பாசுரத்திற்கு உரையிடும்போது, அதில் மங்களாசாஸநம் செய்யப்பெற்ற திருவரங்கம் திருக்கோவலூருக்கருகில் உள்ள திருவரங்கக் கோயில் என்று எழுதியிருக்கிறார். இதுபற்றி விமர்சிக்க வேண்டுகிறேன்.

கீர்த்தி மூர்த்தியான D T தாதாசார்யஸ்வாமி அவருடைய தம்பியின் பெயரில் 'திருவரங்கமாராய்ச்சி' என்னும் நூலை எழுதி, அதில் 'ஆழ்வார்கள் திருவரங்கம் என்று சொல்லுமிடமெல்லாம் திருக்கோவலூர்த் திருவரங்கமே' என்று எழுதியிருந்தார். இது ஸ்ரீதேசிகனுள்ளிட்ட ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் விருத்தமானது, பொருந்தாது என்று அந்த ஸ்வாமி நிலவுலகில் எழுந்தருளியிருந்த போதே 'ஸ்ரீரங்கராஜ விஜயம்' என்னும் நூலின் மூலம் அசைக்க முடியாதபடி நிலைநாட்டியுள்ளோம். அந்த க்ரந்தத்தைப் பாராமல் உத்தமூர் ஸ்வாமி எழுதியிருக்கலாம். 'ஸ்ரீரங்கராஜ விஜயம்' இப்போதும் நம்மிடம் கிடைக்கும். தபாற்கூலி உள்பட விலை ரூ 6—00.

http://acharya.org

S R நளினி, ஸ்ரீரங்கம்.

85. பாலமித்ரா செப்டம்பர் 95 இதழில் "சென்னையில் ஸ்ரீ கல்கிபகவான் யாகம்" என்ற தலைப்பில் கல்கி பகவான் பிறந்ததாகக் கூறுகிறார்களே? அது உண்மையா?

நானே கல்கி என்று அவ்வப்போது பலர் கூறுகிறார்கள். இருந்தவிடம் தெரியாமல் போகிறார்கள். புராணங்களில் லக்ஷக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகே கல்கி அவதாரம் நிகழப்போவதாகக் கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்க, குமுதம், தினமலர் முதலான பல பத்திரிகைகளில் விளம்பரம் செய்து, ஏராளமான பாமரமக்களைத் திரட்டி, பணம் புகழ் முதலானவற்றிற்காகச் செய்யப்படும் இத்தகைய பொய்ப் பிரசாரங்களை நம்பவேண்டாம்.

A சத்யநாராயணன், திருக்கண்ணங்குடி (86, 87)

86. மறந்தும் புறந்தொழா மாந்தர்களாக இருக்க வேண்டிய சில ஸ்ரீவைஷ்ணவ வித்வான்கள் சிவபரமான உபந்யாஸங்கள் செய்கிறார்கள். இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

இது வைஷ்ணவர்களுக்குத் தகாததே. உபந்யாஸங்களைப் பிழைக்கும் வழியாகக் கொண்டுள்ள சிலர் இவ்வாறு செய்கின்றனர் இப்போது இது மிகவும் குறைந்திருக்கிறது.

87. ஸ்ரீவைஷ்ணவர்கள் பட்டுப்புழுவைக் கொன்று தயாரிக்கப்படும் பட்டுவஸ்த்ரங்களை அணியலாமா?

ஶாஸ்த்ரங்களில் பட்டுவஸ்த்ரங்களுக்கு ஓர் சுத்தி சொல்லப்பட்டுள்ளது. அதனால் பகவானுக்கும் அந்த வஸ்த்ரங்களைச் சாத்துகிறார்கள். வைதிகர்களைவரும் அதைப் பயன்படுத்துகிறார்கள். மான்தோல் முதலானவற்றை ரிஷிகள் முதலானவர்களனைவரும் பயன்படுத்தியிருப்பதாக அறிகிறோம். சாஸ்திரங்களில் விதித்திருக்கும் விஷயங்களை ஆராய்வதற்கு நமக்கு அதிகாரமில்லை. பட்டு வஸ்த்ரம் வேண்டாம் என்று வைராக்யத்துடனிருந்தால் சிறப்பே.

http://acharya.org

B T ராமானுஜாசார்யர், குண்டூர்.

88. திருவாய்மொழி [4—6—9] ஈட்டில் "இந்நோய்க்கும் ஈதே மருந்து" என்னும் தொடருக்கு அவதாரிகையாக "சம்பறுத்தார்க்கைக்குப் போகவேணுமோ" என்றுஉள்ளது. அரும்பதவுரைகளில் இதற்கு விளக்கமில்லை. விவரிக்க வேண்டுகிறேன்.

திருவேங்கடராமானுஜஜீயர் ஸ்வாமி தம்முடைய பூர்வாச்ரமத்தில் அடியேனுக்குக் காலக்ஷேபம் ஸாதிக்கும்போது இதைப் பின்வருமாறு விளக்கியருளினர். "கண்ணபிரான் கழல் வாழ்த்துமின்—ஏழ்மைப் பிறப்புக்கும் சேமம்" என்று "கண்ணபிரான் கழலை வாழ்த்தினல் நமக்கு எலலாப்பிறப்புக்கும் சேமமாகும்" என்று கட்டுவிச்சி தாய்மார்க்குக் கூறுகிருள். அதற்குமேல் தாய்மார், "நாங்கள் ஜன்மங்களில ரக்ஷகமாயிருப்பதைக் கேட்கவில்லை; இப்போது இவளுடைய நோய்க்குப் பரிஹாரத்தைச் சொல்லுவாயாக" என்று வினவ, அதற்குப் பதில் "சம்பறுத்தார்க்கைக்குப் போகவேணுமோ? (இக்நோய்க்கும் ஈதே மருந்து)" என்று கட்டுவிச்சி சொல்லுவதாக ஈட்டில் உள்ளது. 'சம்பு-அறுத்து ஆர்க்கைக்குப் போக வேணுமோ?' என்று இங்கு பதம் பிரிக்கவேண்டும். 'சம்பு' என்பது யானையடிப்புல் என்று சொல்லப்படும் நீளமும் அகலமும் உறுதியும உள்ள ஒருவகைப் புல்லாகும். அப்புல்லை அறுப்பவர்கள் அதைக் கட்டுவதற்கு ஒருகயிற்றைத் தேடிப்போக வேண்டியதில்லை. அந்தப்புல்லிலேயே இரண்டு மூன்றை எடுத்து அதைக கட்டிவிடுவார்கள். "சம்பு அறுத்து அதை ஆர்க்கைக்கு—கட்டுவதற்கு—வேறென்றைத் தேடிப் போகவேண்டுமோ? அதுபோலே ஏழ்மைப் பிறப்புக்கும் சேமத்திற்காக நீங்கள் கண்ணபிரான் கழல் வாழ்த்தினல் போதும்; அதுவே இவளது நோய்க்கும் மருந்தாகிவிடும். வேறெரு மருந்தை நாடிப்போகவேண்டியதில்லை" என்பதே இந்த ஈட்டு ஸ்ரீஸூக்தியின் கருத்து.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மான் ஸ்ரீ. திருவேங்கடாசார்ய ஸ்வாமி. ஸ்ரீரங்கம்.

89. தென் திருப்பேரை மஹாஸம்ப்ரோக்ஷண மலரில் Dr. S குலசேகரன் (மத்திய தோலாராய்ச்சி நிலையம் சென்னை 20) அவர்கள் 'தென் திருப்பேரையும் நம்மாழ்வா

http://acharya.org

றும்' என்றதலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அவர் அக்கட்டுரையில் "ஆதிசங்கரருடைய உபநிஷத் பாஷ்யங்கள் தாய்விடு சென்று நம்மாழ்வாருக்குப் பரிசயமாகி, அதனாலேயே வேதாந்தக்கருத்துக்களை அவர் திருவாய்மொழியில் சொல்லியிருக்கவேண்டும். அவருடைய உபநிடதப் பயிற்சிக்கு இதைவிடச் சிறந்த காரணம் வேறெதுவும் தெரியவில்லை'' என்று எழுதுகிறார். ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தில் இது சரியானதா?

'உலகம்பொய்; ஜீவாத்மா முக்தி நிலையில் பரமாத்மாவோடு ஒன்றாகிறான்' என்பது ஆதிசங்கரரின் அத்வைத வேதாந்தக்கொள்கை. இந்த மாயாவாதக் கொள்கை ஆதிசங்கரருக்கு முன்னும் இருந்தது. ப்ரஹ்மஸூத்ரத்திலேயே 'ஔடுலோமி' என்பவர் கூறியிருக்கும் இந்தக் கொள்கையை ஸூத்ரகாரரான வேதவ்யாஸர் மறுக்கிறார். இதுபோலவே ஸ்ரீராமானுஜர் ப்ரஹ்மஸூத்ர விளக்கமான தம்முடைய ஸ்ரீபாஷ்யத்தில் விசிஷ்டாத்வைத வேதாந்தக் கருத்துக்களை மஹரிஷிகளான போதாயனர், டங்கர், (தமிழ் நாட்டிலிருந்த த்ரமிடர் முதலான பூர்வாசார்யர்கள் தம்முடைய நூல்களில் கூறியிருக்கிறார்கள் என்று அருளியுள்ளார். விசிஷ்டாத்வைத வேதாந்தக் கருத்துக்கள் சங்கநூல்களிலேயே. குறிப்பாக பரிபாடலில் மிகுதியாகக்காணப்படுகின்றன இதை நாம் சங்ககாலத்தமிழர் சமயம், சாதிமத ஆராய்ச்சி முதலான நூல்களில் எவரும் அசைக்கவொண்ணாதபடி நிலைநாட்டியிருக்கிறோம். நம்மாழ்வார் சங்ககாலச்சான்றோர்கள் வழிவந்தவராகையாலே விசிஷ்டாத்வைத வேதாந்தக் கருத்துக்கள் அவருடைய ரத்தத்தில் ஊறியிருந்தவை. எம்பெருமானால் மயர்வற மதிநலமருளப்பட்டுத் தம் திருவாய்மொழியில் வெளிப்படுத்தினார். எனவே வேதாந்தக் கருத்துக்களுக்கு அவர் சங்கரரிடம் செல்லவேண்டிய அவசியமே இல்லை, உண்மையில் 'கூடிற்றாகில் நல்லுறைப்பு' [திருவாய் 8-8-9] என்னும் பாட்டில் 'ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றாகிவிடுகிறது' என்ற அத்வைதக்கொள்கையைப் பரிஹாஸம் செய்கிறார் நம்மாழ்வார். ஆகையால், முனைவர் குலசேகரனின் கூற்று சிறிதும் பொருந்தாது. வடமொழி நூல்களில் பழக்கமில்லாமல், தமிழ் நூல்களை மட்டுமே அறிந்த இத்தகையோரின் ஆராய்ச்சிகள் நுனிப்புல் மேய்ந்தவையாகவே முடியும்.

http://acharya.org

ஸ்ரீநிவாஸராமாநுஜதாஸர், செய்யனூர்பேட்டை (90,91,92கேள்வி)

90. வைதிக புத்திரர்கள் பரமபதம் சென்று மீண்டதாக ஆழ்வார் வாக்கு. பரமபதம் செல்பவர்கள் மீள்வதில்லை என்பது ஶாஸ்த்ரக்கொள்கை. இதை எப்படிப் பொருந்த விடுவது?

"இடரின்றியே" [திருவாய்3—10—5] என்று தொடங்கும் திருவாய்மொழியின் ஈட்டில் இது விளக்கப்பட்டுள்ளது. "படர் புகழ்ப் பார்த்தனும் வைதிகனும் உடனேறத் திண்தேர் கடவி, சுடரொளியாய் நின்றதன்னுடைச்சோதியில்" என்னும் பகுதியின் வியாக்கியானத்தில் "கண்ணன் பரமபதத்திற்குள் அர்ஜுனனையும் வைதிகனையும் அழைத்துச் செல்லாமல் வெளியிலேயே நிறுத்தித் தான்போய் வைதிகன் பிள்ளைகளைப் பரமபதத்திற்குள்ளிருந்து அழைத்து வந்தான்" என்று அருளிச்செய்யப்பட்டுள்ளது. கர்ம சம்பந்தம் கழிந்து வைதிக புத்திரர்கள் வைகுந்தம் புகாமையாலே இவர்கள் மீண்டதில் எந்தப்பொருந்தாமையுமில்லை என்றும் விளக்கப்பட்டுள்ளது. கர்மசம்பந்தம் இல்லாதவர்களே போகவேண்டிய பரமபதத்திற்கு இவர்கள் எப்படிப்போனார்கள் என்னும் கேள்விக்குப் பின்வருமாறு விடையளிக்கப்பட்டிருக்கிறது. பரமபதத்தில் ஸ்ரீ பூமி நீளாதேவிகளாகிற நாச்சிமார் கண்ணனை அங்கு வரவழைத்துக் காணவேண்டுமென்று விரும்பியதாலேயே பரமபதநாதன் அவர்களைக் கொண்டுசென்று கண்ணனை அங்கு வரவழைத்தான் என்றபடி.

91. மிகவும் ஆர்த்தியுடையவனாய், கண்ணனிடம் சரமஶ்லோகம் கேட்ட அர்ஜுனன் பரமபதம் பெற்றதாகத் தெரியவில்லையே? இது ஏன்?

ஒரு விஷயத்தைக் கேட்பது வேறு. அதன்படி அநுஷ்டிப்பது வேறு. கீதை உபதேசித்துப் பல வருடங்களுக்குப் பிறகு அர்ஜுனன் கீதையில் சொன்ன அனைத்தையும் மறந்து விட்டதால், அவனைக் கடுமையாகக் கண்டித்து கண்ணன் அநுகீதையை உபதேசித்தான் என்று மஹாபாரதத்தில் வருகிறது. ஆகையால் சரமஶ்லோகார்த்தத்தின்படி நடக்கவில்லையாகையாலே அவன் மோக்ஷமடையவில்லை என்றே கொள்ளவேண்டும்.

http://acharya.org

92. திருமண் காப்பு அணிவது ஆழ்வார்கள் காலத்திலும் இருந்ததா? இல்லை பிறகு வந்ததா? சில வைஷ்ணவர்கள் பிறகு வந்ததாகக் கூறுகிறார்களே!

பெரியாழ்வாரும் நம்மாழ்வாரும் பன்னிருநாமப்பாட்டுக்கள் பாடியிருப்பதாலும், 'திருநாமமிட்டு' [பெரியாழ் திரு **3—4—8**] முதலான அருளிச்செயல்களிலிருந்தும் ஆழ்வார்கள் காலத்திலேயே பன்னிருதிருநாமமிட்டுக்கொள்ளும் வழக்கம் பிரசித்தமாயிருந்தது என்று விளங்குகிறது. மஹாபாரதத்திலும் புகழப்படும் பாஞ்சராத்ர சாஸ்திரத்திலும, பராசர விசிஷ்ட பரமதார்ம சாஸ்திரம் முதலான ஸ்ம்ருதிகளிலும் ஊர்த்வபுண்ட்ரதாரணம் விவரிக்கப்படுகையால் ரிஷிகள் காலத்திலேயே இது வைணவர்களுக்குரிய சின்னமாயிருந்ததுஎன்றுவிளங்குகிறது.பூர்வாசார்யர்களால்உபநிஷத்துக்களிலிருந்தும் திருமண்காப்புக்கு ப்ரமாணம் எடுக்கப்பட்டுள்ளது.

T S ஸ்ரீநிவாஸன், சென்னை-17.

93. இந்தியா டுடே (தமிழ் ஆகஸ்ட் [6—10]—95) இதழில் "எண்ணம்" என்ற தலைப்பில் "தலைவனைத் துதிபாடுவதில் ……… தமிழ் மக்களை மிஞ்ச யாராலும் முடியாது" என்று கூறி, "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன் என்றார் நம்மாழ்வார்" என்று எழுதப்பட்டுள்ளது, இதை விமர்சிக்கவேண்டுகிறேன்.

நம்மாழ்வார் அந்தத் திருவாய்மொழியில் [**4-4**] தலைமகள் நிலையை அடைந்து, திருமாலைப்போல் தோன்றும் பொருள்களையும் திருமாலாகவே மயங்கிப்பாடுகிறார். "ஒன்றிய திங்களைக் காட்டி ஒளிமணி வண்ணனே என்னும்" "நின்ற குன்றத்தினை நோக்கி நெடுமாலே வாவென்று கூவும்" [திருவாய் **4—4—4**] முதலானவிடங்களில் அத்திருவாய்மொழியில் திங்கள், குன்றம், மழை முதலான பல பொருள்களைத் திருமாலாகவே மயங்கிப் பாடுகிறார். இது கொண்டு திங்கள், குன்றம், மழை முதலானவற்றைத் துதிபாடுகிறார் என்று ஆகுமா? அதுபோலவே திருவுடை மன்னரையும் துதிபாடுவதாக ஆகாது. திருவுடை மன்னரைக் கண்டு திருமாலாகவே மயங்கிப் பாடுகிறார் என்றே ஆகும். "சொன்னால் விரோதமிது" [திருவாய் **3—9**] என்னும் பதிகம்

http://acharya.org

முழுவதிலும் நம்மாழ்வார் "மானிடரைத் துதி பாடாதீர்கள், மாதவனையே ஏத்துங்கள்" என்று மாநிலத்து உயிர்களுக்கெல்லாம் உபதேசிக்கிறார். "வாய் கொண்டு மானிடம் பாட வந்த கவியேனல்லேன்" [3—1—1] என்று தம்மைப் பறைசாற்றிக் கொள்கிறார் நம்மாழ்வார். அத்தகையவரை மன்னரைத் துதிபாடினார் என்று எழுதுவது அறிவின்மையால் விளைந்தது.

A சத்யநாராயணன், திருக்கண்ணங்குடி.

94. ஸ்ரீ காஞ்சீ P A ஸ்வாமி ஸுதர்சனசதக வியாக்கியானத்தில் "பாணாஸுரனைக் கொல்ல நினைத்த கண்ணன் சிவனுடைய வேண்டுகோளுக்கிணங்கக் கொல்லாமல் விட்டான்" என்று எழுதியுள்ளார். "ப்ரஹ்லாதன் ஸந்ததியினரைக் கொல்லமாட்டேன்" என்று நரசிங்கன் முன்னமே வரமளித்திருக்கும்போது, ப்ரஹ்லாதனின் வம்சத்தில் வந்த பாணாஸுரனை எம்பெருமான் கொல்ல நினைத்தது முரணன்றோ?

கண்ணன் பாணனைக் கொல்ல நினைத்தது ஸ்ரீவிஷ்ணு புராணத்திலேயே உள்ளது. எம்பெருமான் நிரங்குஶ ஸ்வதந்த்ரன். 'ஆயுதமெடுக்கமாட்டேன்' என்று சொல்லி ஆயுதமெடுத்தவன். அத்தகையவன் பாணன் செய்த அக்கிரமத்தைக் கண்டு அவனைக் கொல்ல நினைத்ததில் தவறில்லை. எனினும் சிவனுடைய பிரார்த்தனையினால் கொல்லாமல் விட்டதால் ப்ரஹ்லாதனுக்குக் கொடுத்த வரமும் பிழைத்தது.

M. கலைவாணி, பாண்டிச்சேரி—3

95. பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் எழுதிய "அர்த்தபஞ்சகம்" என்னும் நூலில் பக்கம் 41 ல் "த்ரிமூர்த்தி சுவரூபமாகிய நாராயணனை நோக்கியே இந்த நோன்பு நோற்கத்தக்கது என்பது ஆண்டாளுடைய உள்ளக்கிடக்கை" என்று எழுதியுள்ளார். நாராயணனை த்ரிமூர்த்தி ஸ்வரூபமாக ஆண்டாள் வழிபட்டாளா?

ஆண்டாள் பாட்டுக்களில் எங்கும் நாராயணன் த்ரிமூர்த்தி ஸ்வரூபன் என்று சொல்லவில்லை. "நாராயணனே நமக்கே பறைதருவான்" என்று தொடக்கத்திலும், "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று இறுதியிலும் நாராயணனான கண்ணனைக் குறித்துப்பாடியிருக்கிறாள். ஆகையால் திரு சுப்புரெட்டியார் எழுதியிருப்பது தவறு.

http://acharya.org

T ரங்கராமாநுஜ அய்யங்கார், பள்ளத்தூர்.

96. 18—8—95 'தினபூமி' யின் இணைப்பான 'ஆன்மிக பூமியில் 'திருநீற்றின் மகிமை' என்ற தலைப்பில் "திருமாலும் திருநீறு தரித்துக்கொண்டிருக்கிறார் என்பது திருவாய்மொழியிலிருந்து தெரிகிறது" என்று எழுதியிருக்கிறது. உண்மையை உலகுக்கு விளக்க வேண்டுகிறேன்.

"கரியமேனி மிசை வெளிய நீறு சிறிதே இடும் பெரியகோலத் தடங்கண்ணன்" [திருவாய் 4—5—6] என்னும் பாட்டைக் கண்டு சிலசைவர்கள் கண்ணன் திருநீறு அணிந்ததாகமயங்கி இப்படித் திரித்துக் கூறுவதுண்டு. கண்ணன் கஸ்தூரி திலகமிட்டுக்கொண்டிருந்தான் என்பது இதிஹாஸபுராண காவ்யாதிகளில் ஸித்தம். 'பஸ்மம்' இட்டுக்கொண்டிருந்தான் என்று எங்குமில்லை. "கரியமேனி மிசை வெளிய நீறு சிறிதே இடும் பெரிய கோல" என்னும் தொடர் தடங்கண்ணனுக்கு விசேஷணமாகும். 'வெளிய நீறு' என்பது அஞ்ஜன சூர்ணத்தைக் குறிக்கிறது. 'கரிய விழியினுடைய அழகுக்குமேலே அளவாக இடப்பட்ட அஞ்ஜன சூர்ணத்தை உடையதாய், பெருத்து அழகியதான திருக்கண்களையுடையவன்" என்று இப்பதத்துக்குப் பொருள். "அயில் வேற்கண் அஞ்சனத்தின் நீறணிந்து" [சிறிய திருமடல்] என்று கண்ணுக்கு அஞ்ஜனப்பொடியிடும் வழக்கம் உண்டென்று சொல்லப்பட்டது காண்க, ஈட்டில் இந்த அர்த்தத்தோடு, தமிழ்ப்புலவர் ஒருவர் வேறொரு பொருள் கூறியதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. "கரி—குவலயாபீடமாகிற யானை, அம்மேனிமிசை—கண்ணனுடைய அழகிய திருமேனியிலே, வெளிய—சீற்றம்கொண்டுவர, (அதனை) நீறு சிறிதே இடும்—பொடியாக்கும்" என்பது அப்பொருள். அக்காலத் தமிழர்கள் ப்ரமாணங்களுக்கு முரணில்லாதபடி இவ்வாறு பொருள் கொண்டனர். இக்காலத் தமிழர்கள் ப்ரமாணங்களைப் பற்றிக் கவலை கொள்ளாமல் மனம்போனபடி பொருளுரைக்கின்றனர். 'நீறு' என்னும் பதத்திற்குச் 'சாம்பல்' என்று மட்டும் பொருளல்ல, 'பொடி' என்ற பொருளும் உண்டு. "அஞ்சனத்தின் நீறு" என்று சிறிய திருமடலில் திருமங்கையாழ்வார் அஞ்ஜனப் பொடியையும், "மாயன் தமரடி நீறு" [திருவாய் 4—6—6]என்று நம்மாழ்வார் பாகவதர்களின் அடிப்பொடியையும் குறித்திருப்பது காணலாம்.

http://acharya.org

R. ஜெயந்தி M. A. M. Phil, மதுரை-3.

97. நெல்லை வழக்குரைஞர் திரு கி. பட்சிராஜன் (194/4, ஏஷியட் காலனி, சென்னை 101) அவர்கள் "தானே தானே ஆனுன் (நம்மாழ்வார் திருவுள்ளம்)" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள சிறு நூலில், "முருகன் திருமாலின் அவதாரம். 'வைணவர்களும் சிவகுமாரவடிவத்திலேயே பரமனை வணங்கவேண்டும்' என்பது நம்மாழ்வார் கொள்கை. 'நின் கையில் வேல்போற்றி' என்று கூறிய ஆண்டாள் கருத்தும் அதுவே" என்று எழுதியுள்ளார். இதைவிமர்சித்து வைணவ உலகுக்குத் தெளிவை உண்டாக்க வேண்டுகிறேன்.

நமது நண்பரான திரு கி. பட்சிராஜன் நீண்டநாளாக 'முருகன் திருமாலின் அவதாரம்' என்னும் ஒரு தீர்மானத்தைத் தாமே செய்துகொண்டு, 'இதற்கு ஆதாரம் உண்டா'என்று நம்மையும் மற்றும் பலரையும் கேட்டுவந்தார். "ஆதாரம் எதுவும் இல்லை. இதிஹாஸ புராணங்களிலும், ஆழ்வார்களின் அருளிச்செயலிலும் அதற்கு முரணான பல பகுதிகள் உள்ளன" என்று நாம் தெளிவுபடுத்தினேம். அதைக் கருத்தில் கொள்ளாது, இப்பொழுது தம்முடைய கற்பனையை நூலாக வடித்திருக்கிருர், "மானுங்கார மனங்கெட" [திருவாய்10-7-11] 'தமர்கள் கூட்ட வல்வினையை' [திருவாய் 8—10—9] என்னும் பாட்டுக்கள் தம்முடைய கொள்கைக்கு ஆதாரம் என்கிருர். அந்தப் பாட்டுக்களில் அவருடைய கொள்கைகள் அணுவளவும் இல்லை. "ஸ்ரீர் தேவஸேனு விப்ரேந்த்₃ர தே₃வஸேனுபதிர் ஹரி:" [விஷ்ணு புராணம் 1—8—28] என்னும் ஶ்லோகத்தில் தேவஸேநாபதியான கந்தனையும் ஶ்ரிய:பதியையும் ஒன்ருகக் கூறியிருப்பதைப் பிரமாணமாகக் காட்டுகிருர். "பெண்களெல்லாம் லக்ஷ்மியே; ஆண்களெல்லாம் பகவான் ஹரியே" என்று அடுத்துவரும் ஶ்லோகத்தில் இருப்பதால், பட்சிராஜனின் கருத்துப்படி எல்லா ஆண்களுமே பகவானுடைய அவதாரமாகச் சொல்லவேண்டிவரும். கீதையில் விபூ₄த்யத்₄யாயத்தில் (10ம் அத்தியாயம்) 'மாதங்களில் நான் மார்கழி, மலைகளில் இமவான்,ஸேனைத்தலைவர்களில்

http://acharya.org

கந்தன், ருத்ரர்களில் சங்கரன்' என்று சொன்னதுபோல் இங்கும் "சிறந்த வஸ்துக்களிலெல்லாம் ஹரியின் சிறப்பே வெளிப்படுகிறது" என்னும் பொருளையே இது தரும். விஷ்ணு தர்மோத்தரத்திலிருப்பதாக அத்தியாயம்ச்லோகம்எண்முதலானவற்றைக் காட்டாமல் ஒருச்லோகத்தை எடுக்கிறார். அதன் பொருளும் விளங்கவில்லை. அதுவும் இத்தகையதாகவே இருக்கும். "நேர் சரிந்தான் கொடிக்கோழி கொண்டான்" [திருவாய் 7-4-8] என்னும் பாடலில் நம்மாழ்வார் 'பாணாஸுரயுத்தத்தில் முருகன் கண்ணனிடம் தோற்று ஓடினான்' என்று தெளிவாக அருளிச்செய்கிறார். இதிஹாஸ புராணங்களிலும் மற்ற ஆழ்வார்களுடைய ஸ்ரீ ஸூக்திகளிலும் இப்படியே உள்ளது. அப்படியிருக்க, 'நம்மாழ்வார் முருகனைத் திருமாலின் அவதாரம் என்று குறிப்பிட்டார்' என்றும், "'நின் கையில் வேல் போற்றி' என்ற ஆண்டாள் கருத்தும் அதுவே" என்றும், ஸகல சாஸ்திரங்களையும் கரைகண்ட பெரியவாச்சான்பிள்ளை முதலான மஹாசார்யர்களின் உரைகளுக்கு முரணாக, வடமொழியும் அறியாத இவர் எழுதுவதும், 'வைணவர்களும் சிவகுமாரவடிவத்திலேயே பரமனை வணங்கவேண்டும்' என்று வைணவர்களுக்குக் கட்டளையிடுவதும் நகைக்கத் தக்கதாய் இருக்கிறது. ஒரு சாஸ்திரி 'ஓய் பட்சிராஜய்யங்காரே! உமக்குப் பெருமாள் அநுக்கிரகம் இருக்கிறது' என்று கூறி இரண்டு ச்லோகங்களை எடுத்துரைத்ததையும், மாதாஜி என்னும் பெண்மணி ஆண்டிவேடம் தாங்கிய முருகன் விக்கிரகத்தைக் கொடுத்ததையும் பிரமாணமாகக் கொண்டு, அந்த முருகனைக் கோயிலாழ்வாரில் வைத்து ஆராதிக்கத் தொடங்கியிருக்கும் இவருடைய இந்நூலை உண்மை வைணவர்கள் எவரும் ஏற்க மாட்டார்கள். உண்மைச் சைவர்களும் இவருடைய கொள்கையை ஏற்கமாட்டார்கள்.

மேற்படி புத்தகத்தின் மேலட்டையிலும் முகப்புப் பக்கத்திலும் "சமர்ப்பணம்: வானமாமலை 30 வது பட்டம் சின்னக் கலியன் இராமாநுஜ ஜீயர் ஸ்வாமி திருவடிகட்கு" என்று அச்சிடப்பட்டிருந்ததால், இது விஷயமாக ஸ்ரீவானமாமலை மடத்துடன் தொடர்பு கொண்டோம்; ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவானமாமலை ஜீயர் ஸ்வாமி

http://acharya.org

ளாதித்துள்ள ஸ்ரீமுகத்தில், "இப்புத்தகத்திலுள்ள கருத்துக்களை நம் ஸ்ரீமடமோ நாமோ ஆதரிக்கவில்லை என்பதே உண்மை நிலை. நம்முடைய இக்கருத்தைத் தக்க ஆப்தர்மூலம் ஸ்ரீ பட்சிராஜய்யங்காரிடம் கூறுவித்துமிருந்தோம். அவரும் யாம் ஆதரிக்கமாட்டோமென்பது தமக்குத் தெரிந்ததே என்று நமக்குச் சொல்லியனுப்பியிருந்தார். எனவே இவ்விஷயத்தில் ஸ்ரீமடம் பற்றியும், நம்கருத்துப்பற்றியும் சிறிதளவும் குழப்பம் ஏற்பட விரகில்லை என்பதை வற்புறுத்திக் கூறுகிறோம்" என்று அருளியுள்ளார்.

திருவெள்ளறை கீழத்திருமாளிகை அம்மான் ஸ்ரீ திருவேங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

98. 1995 கல்கி தீபாவளிமலரில் ரா. கணபதி 'ராஜ ஸந்யாஸி ராமஸமானர்' என்னும் கட்டுரையில் "'துறவி வேந்தர்' என்று சொன்னால் போதும். கண்ணெதிரே நிற்கும் ஸ்ரீமஹா பெரியவாளான ஸத்குரு பரமாத்மனின் ரூபம். 'யதிராஜர்' என்பதின் நேர் தமிழாக்கம்தான் துறவி வேந்தர். அன்றொருநாள் 'யதி ராஜர்' என்ற மாத்திரத்தில் விசிஷ்டாத்வைதத்தின் விசேஷ ப்ரவர்த்தனரான ஸ்ரீராமாநுஜரையே அதுகுறித்தது. இன்றோ அத்வைத ஸ்வரூபமான—இது காரணமாகவே ஸகல ஸித்தாந்தங்களுக்கும் மூர்த்தமான—பெரியவாளே யதிராஜராக உலகனைத்தாலும் வணங்கப்படுகிறார்" என எழுதியுள்ளார். இக்கருத்தை விமர்சிக்க வேண்டுகிறேன்.

இக்காலத்திலுள்ள எவரையுமே பழங்காலத்திலிருந்த மதாசார்யர்களோடு ஒப்பிடுவது மிகவும் பொருத்தமற்றது. காமகோடி பீடாதிபதியை அவருக்கு முன்னோராகக் கூறப்படும் ஆதிசங்கரரோடு ஒப்பிடுவதே மிகவும் பொருத்தமற்றது. ஆதிசங்கரர் "உலகம் பொய், பிரம்மம் ஒன்றே மெய்" என்னும் அத்வைத ஸித்தாந்தத்தைப் பரப்பிக்கொண்டு உலக வாழ்க்கையில் பற்றற்று வாழ்ந்தவர். மறைந்த பீடாதிபதியோ இப்போதிருக்கிற பீடாதிபதிகளோ மடத்தை நிர்வகிப்பது என்னும் பெயரில் கோடிக்கணக்கான பணத்திலே புரளுபவர்

http://acharya.org

கள். துறவி பொன்னைக் கையாலும் தொடக்கூடாது என்னும் சாஸ்திரவிதியை மீறித் தங்களுக்குப் பலமுறை கனகாபிஷேகம் செய்து கொள்ளுகிறார்கள். தான் பின்பற்றுவதாகச் சொல்லும் அத்வைதமதத்தையாவது இவர்கள் பரப்புகிறார்களா என்றுபார்த்தால், சைவர்களாகவும் சாக்தர்களாகவும்வாழ்ந்து பிறருக்கும் அதையே உபதேசிக்கிறார்கள். தமது பாஷ்யங்களில் ஒருமுகமாகவும் உறுதியாகவும் 'நாராயணனே ஸகுணப்ரம்மம்' என்று ஆதிசங்கரர் அறுதியிட்டிருக்க, இவர்கள் அதற்கு முரணாகவும், முன்னுக்குப்பின் முரணாகவும் சிவபரத்வவாதம், சக்திபரத்வவாதம்முதலானவற்றைச்செய்து கொண்டு அதைப்பிறர்க்கும் உபதேசிக்கிறார்கள். விஷ்ணுவை ஸகுண ப்ரஹ்மமாகக்கொண்டு அத்வைதமதத்தைஸ்தாபித்த ஆதிசங்கரரையே ஷண்மதஸ்தாபனாசார்யாராக ஆக்கி, அவர் கனவிலும் கருதாத சைவம், சாக்தம், காணபத்யம், கௌமாரம், ஸௌரம் என்னும் மதங்களை அவர் ஸ்தாபித்ததாகப் பெரும் புளுகைப் பிரசாரம் செய்து வருகிறார்கள். இத்தகையவரை ஆதிசங்கரரோடேயே ஒப்பிட இயலாது. அப்படியிருக்க, ஆதிசங்கரருடைய அத்வைதக் கொள்கையைத் தம்முடைய ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களில் தலையெடுக்க முடியாதபடி கண்டித்தவரும், ஜ்ஞானபக்தி வைராக்யங்களின் சிகரமாயிருந்தவருமான யதிராஜரோடு இவரை ஒப்பிடுவதும், இவரை யதிராஜர் என்று அழைப்பதும், நம்நாட்டில சிருங்கேரி, பூரி, துவாரகை, ஜ்யோதிர்மடம் ஆகிய நாலு இடங்களிலுள்ள பெரிய அத்வைதமடங்களும், அவற்றின் லக்ஷக்கணக்கான சிஷ்யர்களும் மிகத்தாழ்வாக மதிக்கும் ஒருவரை "யதிராஜராக உலகனைத்தாலும் வணங்கப்படுகிறார்" என்று எழுதுவதும் அடாத செயல்களில் தலையானதாகும். "உலகனைத்தாலும்" என்னும் சொல்லுக்கு பதிலாக, "ஊழல் நிறைந்து ஓட்டுவேட்டையாடும் அரசியல்வாதிகள் பலராலும், சோரம்போகும்கதைகளையும், சினிமா விமரிசனங்களையும், பெண்களின் அரைநிர்வாணப் படங்களையும் வெளியிட்டு மக்களைக் கெடுக்கும் பத்திரிகைகளாலும்" என்று எழுதியிருந்தால் உண்மையாயிருந்திருக்கும். மதத்துறையில் இத்தகைய

http://acharya.org

அடாத செயல்களைப் பலவருடங்களாகச் செய்து கலியை வளர்த்துவரும் 'கல்கி' பத்திரிகை மீண்டும் அதைச் செய் திருப்பதில் நமக்கு வியப்பில்லை.

S. முரளி, அந்தணல்லூர்,

99. 'சுகி சிவம்' என்பவர் 24—9—95 கல்கி இதழில் 'ஒருதலம், ஒருபாடல், ஒருநயம்—8' என்னும் தலைப்பில் திருமாலிருஞ்சோலை மலையைப் பழமுதிர்சோலை என்றும், அதைத் திருமால், முருகன் இருவரும் உறைவிடமாகக் கொண்டுள்ளனர் என்றும் பொருள் தொனிக்கும்படி எழுதி யுள்ளார். இது மிகவும் வைணவவிரோதச் செயல் என்றும் பொதுஜனப் பத்திரிகையான கல்கியில் இதுபோன்ற கட்டு ரைகள் அடிக்கடி வெளியாகின்றன என்றும், குறிப்பாக 26—2—95 கல்கி இதழில் சிவராத்ரி சிலிர்ப்பு என்னும் கட் டுரையில் திருவேங்கடமுடையான் நெற்றியில் விபூதிப் பட்டைபளிச்சிட்டதுஎன்றுஎழுதியிருந்ததை மறுத்து நான் எழுதியபோது அதில் ஒருசில வரிகளையே கல்கி வெளியிட் டது என்றும், இதைப்பார்க்கும்போது கல்கி வைஷ்ணவ த்வேஷத்திற்காகவே செயல்படுகிறதோ என்று நினைக்க வேண்டியுள்ளது என்றும், இனியாவது இத்தகைய மனப் பான்மையைக் கல்கி விடவேண்டுமென்றும் எழுதியிருந் தேன். அத்துடன் திருமாலிருஞ்சோலைமலை ஐந்து ஆழ் வார்களாலும் ஆண்டாளாலும் மங்களாசாஸனம் செய்யப் பட்டதென்றும் ஆழ்வார்களுக்கு முற்பட்ட சங்க இலக்கியங் களில் ஒன்றான பதினைந்தாம் பரிபாடலில் திருமாலிருஞ் சோலைமலையில் திருமால் மட்டுமே எழுந்தருளியிருப்பதாகப் பாடப்பட்டுள்ளது என்றும், சங்க இலக்கியங்கள் எதிலுமே திருமாலிருஞ்சோலையில் முருகன் இருந்ததாகக் காணப்படா ததே 'பழமுதிர்சோலை' திருமாலிருஞ்சோலையிலிருந்துவேறு பட்டதெனக் காட்டுகிறதென்றும், ஆகவே 'திருமாலிருஞ் சோலைமலை பெருமாள் ஒருவருக்கே உரித்தான திவ்ய தேசம். அதில் முருகனுக்கோ அல்லது பழமுதிர்சோலைக்கோ

http://acharya.org

சிறிதும் இடமில்லை' என்றும், சிலப்பதிகாரத்திலும் இதற்குச் சிறிதும் ஆதாரமில்லை என்றும் எழுதியிருந்தேன். பிற்காலத்தில் முருகபக்தர்கள் திருமாலிருஞ்சோலையில் பெருமாள் மண்டபம் ஒன்றை ஆக்கிரமித்து முருகன் கோயில் கட்டியதையும் அதை எதிர்த்து வைணவர்கள் உயர்நீதி மன்றம்வரையில் வழக்குதொடுத்து, அது பழமுதிர்சோலையல்லவென்று தீர்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என்றும், அதற்கு முரணாக சுகி சிவம் எழுதியுள்ளது இலக்கிய ஆதாரங்களுக்கு முரணாகவிருப்பதோடல்லாமல் கோர்ட்டை அவமதிப்பதும் ஆகும் என்றும் எழுதியிருந்தேன். இதில் நான் எடுத்துக் காட்டியிருந்த இலக்கிய ஆதாரங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, கோர்ட் அவமதிப்பாகும் என்னும் ஒரு பகுதிமட்டும் 29—10—95 கல்கியில் வெளியிடப்பட்டுள்ளது. அதை ஸுதர்சனம் வாசகர்கள் அறிந்துகொள்வதற்காக ஸுதர்சனத்தில் வெளியிட வேண்டுகிறேன்.

29—10—95 கல்கி இதழில் வட்டமேஜை பகுதியில் வெளியான கடிதம் வருமாறு:— முருகபக்தர்கள் திருமாலிருஞ்சோலைமலையை முருகனுக்கு உறைவிடமாக்க முயற்சி செய்ததின் விளைவாக, சுமார் முப்பது வருடங்களுக்குள் அரசாங்க பலத்தில், அழகருக்குச் சொந்தமான மண்டபத்தில் நூதன முருகன் கோயில் கட்டப்பட்டது. அதை எதிர்த்து வைணவர்கள் வழக்குத் தொடுத்தனர். அதுசென்னை உயர்நீதி மன்றம் வரைவந்து. நூதன முருகன் கோயில் நிலைநாட்டப்பட்டு, பழமுதிர்சோலை என்று அழைக்கப்படக்கூடாது என்ற தீர்ப்பும் அளிக்கப்பட்டுள்ளது. எனவே முருகபக்தர்களின் ஆக்கிரமிப்பு கோர்ட் தீர்ப்புமூலம் நன்கு நிலைநாட்டப்பட்டது. இந்நிலையில் 'திருமாலிருஞ்சோலைமலையை முருகனுக்கும் உறைவிடமாகக் கொள்ளலாம்' என்று எழுதுவது சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பை அவமதிக்கும் செயலாகும்.

—அந்தணல்லூர் S. முரளி.

http://acharya.org

வித்வான் ஸ்ரீ உ வே R. நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

100. எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யம் அருளிச்செய்யும் போது கூரத்தாழ்வானைத் திருவெழுத்துச் சாத்துபவராகக் கொண்டு அருளிச்செய்தார் என்று நெடுநாட்களாகப் பெரியோர்களிடம் கேட்டிருக்கிறேன். ஆத்மஸ்வரூப விஷயகமான விசாரத்திலும் ஐதிஹ்யம் காணப்படுகிறது. ஆனால் சிலர் நடாதூராழ்வானையும் துணையாகக்கொண்டு எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்ய நிர்மாணம் பண்ணியருளினார் என்று பிரசாரம் செய்து வருகிறார்கள். வஸ்து தத்வம் எது? விமர்சிக்கவேண்டுகிறேன்.

எம்பெருமானாரைப் பற்றிய வரலாற்று நூல்களில் அதி ப்ராசீனமானது ஆறாயிரப்படி குருபரம்பரையேயாகும். அதில் (நமது பதிப்பில் பக்கம் 222—223) 'கூரத்தாழ்வானை ப்ரதானமான உசாத்துணையாகக்கொண்டு அவர் திருவெழுத்துச்சாத்த எம்பெருமானார் ஸ்ரீ பாஷ்யத்தை அருளிச் செய்தருளினார்' என்றும், உடையவர் ஆழ்வானைப் பார்த்து "நான் சொன்ன பாஷ்யவாக்யம் உம்முடைய திருவுள்ளத்திற்கு ஒத்திருந்தாலொழிய நீர் திருவெழுத்துச் சாத்த வேண்டா" என்று நியமித்திருந்தாரென்றும், ஓரிடத்தில் ஆழ்வான் திருவெழுத்துச் சாத்தாமலிருந்தாரென்றும் உடையவர் முதலில் சீற்றங்கொண்ட போதிலும் வாக்யார்த்தத்தை ஆலோசித்த பின்பு சீறியதற்கு அநுதபித்து ஆழ்வான் திருவுள்ளப்படியே வாக்யத்தை மாற்றி அமைத்தார் என்றும் காணப்படுகிறது. அவ்விடத்திலேயே "முதலியாண்டானையும், அருளாளப் பெருமாள் எம்பெருமானாரையும் மற்றுமுள்ள முதலிகளையும் கூட்டிக்கொண்டு எழுந்தருளியிருந்து ஸ்ரீபாஷ்யம் ஸாதித்தார்" என்று உள்ளது. "மற்றுமுள்ள முதலிகள்" என்னும் தொடரில் அவருடைய மற்றொரு மருமகனை நடாதூராழ்வானும் சேர்ந்திருந்தார் என்பதற்கு,

http://acharya.org

"யஸ்மின் பதம் யதிவரஸ்ய முகா2த் ப்ரணேதுர்
நிஷ்க்ராமதே3வ நித3தே4 நிக3மாந்த பா4ஷ்யம் |
தஸ்யைவ தம் ப4க3வத: ப்ரியபா4கி3நேயம்
வந்தே3 கு3ரும் வரத3விஷ்ணுபதா3பி4தா4நம் ||"

[ஸ்ரீபாஷ்யகாரரான யதிராஜரின் திருமுகத்தினின்றும் வெளிவரும்போதே, ஸ்ரீபா4ஷ்யமானது எவரிடம் அடியிட்டுத் தங்கிற்றோ, அந்த ப4க3வத்3பா4ஷ்யகாரருக்கு இனிய மருமகனாக எவர் இருந்தாரோ, அத்தகைய வரதவிஷ்ணுவென்னும் திருநாமமுடைய ஆசார்யரை (நடாதூராழ்வானை) வணங்குகிறேன்.] என்னும் (குருபரம்பரை பக்கம் 327 ல் எடுக்கப்பட்டுள்ள) அவருடைய இந்தத் தனியனே ப்ரமாணம். அவரும் ஸ்ரீபா4ஷ்யத்தைத் திருவெழுத்துச் சாத்தினார் என்பதற்கு ப்ரமாணம் இல்லை. ஸ்ரீவேதாந்த தேசிகர் தம்முடைய ந்யாய ஸித்தாஞ்ஜநத்தில். நடாதூராழ்வான் தமது க்3ரந்த2த்தில் "அணுவான ஜீவாத்மா முக்தி நிலையில் விபு4வாகி விடுகிறது" என்று ஸ்ரீபா4ஷ்யத்திற்கு விருத்தமாக ஸாதித்திருப்பதாக எடுத்துக் காட்டியுள்ளார். இதைக்காணும்போது, கூரத்தாழ்வானுக்கு எம்பெருமானார் அளித்த பெருமை நடாதூராழ்வானுக்கு இருந்திருக்கமுடியாது என்றே தோன்றுகிறது. ஸ்ரீபா4ஷ்யம் எழுதிவரும்போது எம்பெருமானார் மேல்நாட்டுக்கு எழுந்தருளிவிட்டபடியாலும், எம்பெருமானார் திரும்பவெழுந்தருளியபோது கூரத்தாழ்வான் கண்ணிழந்துவிட்டபடியாலும், எஞ்சிய பகுதியை, திருவெள்ளறையில் அவதரித்த ஸ்ரீவிஷ்ணுசித்தரைக்கொண்டு எம்பெருமானார் எழுதச் செய்தார் என்றும், அவர் ஆழ்வானைப்போலவே மேதா4விலாஸத்துடன் திருவெழுத்துச் சாத்துவதைக் கண்டு உகந்து 'எங்களாழ்வானோ' என்று எம்பெருமானார் அபி4மானித்தார் என்றும், அதனால் ஸ்ரீவிஷ்ணுசித்தருக்கு 'எங்களாழ்வான்' என்னும் பெயர் ஏற்பட்டது என்றும் எங்களாழ்வான் பரம்பரையினர் ஐதிஹ்யம் கூறிவருகின்றனர். இதற்குப் பூர்வ க்ரந்தங்களில் பிரமாணமில்லையாயினும் "எங்களாழ்வான்" என்னும் திருநாமம் இந்த ஐதிஹ்யத்தை வலியுறுத்துகிறது.

பனிரண்டாவது சதகம் முற்றிற்று.

http://acharya.org

அநுபந்தம்-1] 14—12—95 குமுதத்தில் வெளிவந்தது

நவாப் கொடுத்ததல்ல!

வைஷ்ணவ ஸுதர்சனம் என்ற பத்திரிகையின் ஆசிரியர் திரு. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் (ஸுதர்சனர்) அண்மையில் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார். கடிதத்திலிருந்து:

16—11—95 குமுதத்தில் ஆற்காடு இளவரசர் திரு. முகமது அப்துல் அலி அவர்களின் பேட்டி வெளிவந்துள்ளது. அதில் அவர், 'ஸ்ரீரங்கம் ரங்கநாதஸ்வாமி கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இடம் எங்கள் மூதாதையர் கொடுத்ததுதான். நவாப் தோட்டம் என்று இப்பொழுதும் ஸ்ரீரங்கத்தில் இடம் உள்ளது' என்று பேசியுள்ளார்.

ஸ்ரீரங்கத்தில் திருமால் சயனித்திருக்கும் திருக்கோலத்தை சிலப்பதிகாரத்தில் காடு காண்காதையில் இளங்கோவடிகள் வர்ணித்துள்ளார்.

அகநானூறு 137-ம் பாடலில் திருவரங்கத்தில் திருமாலுக்குப் பங்குனிப் பெருந்திருவிழா நடப்பதைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. இவற்றிலிருந்து திருவரங்கம் பெரிய கோயில் இரண்டாயிரம் வருடத்துக்கு முன்பே நிர்மாணிக்கப்பட்டது என விளங்குகிறது. 14-ம் நூற்றுண்டில் நிகழ்ந்த மாலிக்காபூர் படையெடுப்பின் போது முஸ்லிம்களால் பல அட்டூழியங்கள் இக்கோயிலில் நிகழ்த்தப்பட்டன என்பது வரலாற்று உண்மை. இப்படியிருக்க, ஒரு சில நூற்றுண்டுகளுக்குள் ஏற்பட்ட ஆற்காடு நவாப் ஸ்தாபனம் ஸ்ரீரங்கம் கோயிலை நிர்மாணிக்க இடமளித்ததாக இளவரசர் பேசுவது உண்மையற்ற பேச்சாகும். இத்தகைய பேச்சுக்களால் இளவரசர் கூறுவது போல் மத நல்லிணக்கம் வளராது—ஸுதர்சனர்.

இது குறித்து 'திருவரங்கன் உலா' எழுதிய ஸ்ரீ வேணுகோபாலனைக் கேட்டபோது:

திருவரங்கக் கோவிலின் ஆரம்பம் சரித்திரத்தில் புதைந்துள்ள திரேதாயுகம்! வால்மீகி ராமாயணமும், கருடபுராணம் பிரம்மாண்டபுராணம், பத்ம புராணம், மத்ஸ்யபுராணங்களும் இதைக் காட்டுகின்றன.

சங்கத்தின் அகநானூறு இதைப் பாடுகிறது. சிலப்பதிகாரம் அரங்கத்தைக் குறிக்கிறது.

ஆழ்வார்கள் ஒருவர் நீங்கலாக அனைவரும் திருவரங்கத்தைப் பாடி இருக்கிறார்கள்: (பாடாத மதுரகவி ஆழ்வார் தமது குரு நம்மாழ்வாரைத் தவிர வேறு யாரையும் பாடவில்லை). இந்த ஆழ்வார்களின் காலம் முதலாம் நூற்றுண்டிலிருந்து ஏழாம் நூற்றாண்டு வரை.

http://acharya.org

தற்போதுள்ள கோவில் அமைப்புகளைப் பார்த்தால் 1300 ஆண்டுகளாக இவை வளர்ந்து வந்துள்ளன என்று கூறுகிறார்கள்.

பிற்காலப் பல்லவர்கள், பிற்காலப் பராந்தக சோழன், பிற்காலப் பாண்டியர், விஜயநகர அரசர்கள், மதுரை திருச்சிகளை ஆண்ட நாயக்கர்கள் யாவருமே கோவில் வளர்ச்சியில் பங்கு கொண்டிருக்கிறார்கள்.

இவர்களது 400க்கு மேற்பட்ட கல்வெட்டுகளும், பதின்மூன்று தாமிரசாஸனங்களும் கோயிலில் இருக்கின்றன.

1311, 1328 இரு ஆண்டுகளிலும் டில்லித் துருக்கியப் படைகள் இந்தக் கோவிலைத் தாக்கி உள்ளன. (இபின் பட்டுடா பிரயாணங்கள் உள்பட பல சான்றுகள்.)

விஜய நகரத்தார் ஆட்சியில் கோயிலின் சொத்துகள் வளர்ந்ததில் சில விவரங்கள்: கோவில் ஸ்தலத்தாரான கிருஷ்ணராய உத்தம நம்பி, விஜய நகர மன்னர்கள் ஹரிஹர, புக்கர்களிடமிருந்து 17,000 பொன் தானம் பெற்று கோவிலுக்கு வாங்கிய கிராமங்கள் 106. அமைச்சர்கள், சேனாபதிகளிடமிருந்து 5000 பொன் பெற்று வாங்கிய கிராமங்கள் 13. ஸ்ரீரங்காசாரிய உத்தம நம்பி என்பார் தம்காலத்தில் 18000 பொன் சேர்த்து வாங்கிய கிராமங்கள் 101. இந்த வகையில் 1534-ல் கோவிலுக்குச் சொந்தமான கிராமங்கள் 232. (பெயர்கள் ஜாபிதா உள்ளன).

மேலே குறிப்பிட்ட இத்தனை நிகழ்ச்சிகளுக்கும் இத்தனை ஆண்டுகளுக்கும் அப்பால்தான் நவாபுகள் அரசாட்சியே தென்னிந்தியாவில் உற்பத்தியாயிற்று. (கி பி 1698)

இவர்களில் யாராவது கோவிலுக்கு நிலங்கள் மான்யம் கொடுத்திருக்கலாம்.

அத்தகைய மத நல்லிணக்கம் பிற்காலத்தில் வந்துவிட்டது. 'உத்தம நம்பி வைபவம்' என்னும் நூல் கீழே உள்ள செய்தியைத் தருகிறது:—

கி. பி. 1748 க்கு மேல் திருச்சிராப்பள்ளி, நவாப் ஷீராஸ்வதீன் தேவுல்லா மஹும்மதலி கான் பஹதூரின் வசமாயிற்று. அவர் ஸ்ரீரங்கம் கோயில் நிர்வாஹங்களைக் கவனிக்கையில் இந்த 80 கிராமங்களையும் (ஏற்கெனவே கோயிலுக்குச் சொந்தமானவை) சுரோத்திரியமாய் புத்ர பௌத்ர பாரம்பரியமாய் அனுபவித்து மூன்று கோவில் காரியங்களையும் நிர்வஹித்துக்கொண்டு வருஷத்துக்கு ரூ 60000 கொடுத்துவரும்படியாக ஏற்பாடு செய்தார் என்று கண்டிருக்கிறது.

எனவே திருவரங்கம் கோவில் இருப்பிடத்திற்கான நிலத்தை நவாபுகள் கொடுத்தார்கள் என்பது சரியல்ல.

http://acharya.org

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

விசிஷ்டாத்வைத ஸம்ரக்ஷணம்

[(ஸுதர்சனர்) ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
ஆசிரியர், ஸ்ரீவைஷ்ணவஸுதர்சனம்—திருச்சி—620017]

1. நம்முடைய எம்பெருமானார் தரிசனத்திற்கு விசிஷ்டாத்வைதமதம் என்று பெயர். "ஸகல சேதநாசேதநங்களையும் சரீரமாகக்கொண்ட ப்ரஹ்மம் ஒன்றே" என்று கொள்ளும் மதம் என்பது இதற்குப் பொருள். இத்தகைய ஈஶ்வரன் ஒருவனேயாகையாலேயே "ந்யாய ஸித்தாஞ்ஜநம்" முதலான க்ரந்தங்களில் "ஸ்வஜ்ஞாந ஸ்வேதரஸமஸ்தத்3ரவ்ய ஶரீரகத்வம்" [தன்னுடைய ஜ்ஞாநமும் தானும் தவிர்ந்த மற்ற எல்லா த்ரவ்யங்களையும் ஶரீரமாகக் கொண்டிருக்கை] என்று ஈஶ்வர லக்ஷணம் சொல்லப்பட்டது. இத்தகைய 'ஈஶ்வரத்வம்' தேசிகனையுள்ளிட்ட நம்முடைய பூர்வாசார்யர்கள் எவராலும் பெரியபிராட்டியாருக்குக் கூட இசையப்படவில்லை. "யாநி ச ப்3ராஹ்மே புராணே 'ஸர்வாதிஶாயிநீ ப்ரீதி:' 'ஸர்வோத்க்ருஷ்டா ஸர்வமயீ' 'அநௌபம்யா நிர்விகல்பா' இத்யாதீ3நி லக்ஷ்மீநாமாநி தாந்யபி 'ந தத்ஸமஶ்சாப்4யதி4கஶ்ச த்3ருஶ்யதே' 'யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்' 'தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்' 'க்ஷராத்மாநாவீஶதே தே3வ ஏக:', 'ஏக இந்த்3ரராஜா ஜக3தோ ப3பூ4வ', 'ஶாஸ்தா சராசரஸ்யைக:' 'ஏக: ஶாஸ்தா ந த்3விதீயோऽஸ்தி ஶாஸ்தா' 'ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய' இத்யாதி3 ப்ரமாணக3ணாநுஸாரேண ப4க3வத்3வ்யதிரிக்த ஸர்வாபேக்ஷயா தந்மஹிஷ்யா: ப்ரகர்ஷம் விவக்ஷந்தி|" [ப்3ராஹ்மபுராணத்தில் லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தில் "அனைவரிலும் மேம்பட்டவள்" "அனைவரிலும் உயர்ந்தவள், அனைவருமாய் இருப்பவள்," "உபமானமற்றவள்", என்னும் நாமங்கள் படிக்கப்படுகின்றன. "பரமாத்மாவுக்கு ஸமமானதோ அல்லது மேம்பட்டதோ ஒன்றும் இல்லை" "எவனைக்காட்டிலும் மேலானது எதுவும் இல்லையோ", "ஈஶ்வரர்க்கெல்லாம் மேலான மஹேஶ்வரனாய் இருக்கும் அவனை", "அசேதனப் பொருள்களையும் ஜீவர்களையும் நியமிக்கும் தேவன் ஒருவனே" "இவ்வுலகிற்கு ஒருவனே அரசன்", "அசைவனவும் அசையாதனவுமான எல்லாப் பொருள்களையும் நியமிப்பவன் ஒருவனே", "ஒருவனே நியமிப்பவன், நியமிக்கும் இரண்டாவது பொருள் கிடையாது", "அனைத்தையும் நியமிப்பவன் விஷ்ணுவே" முதலான ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களையொட்டி எம்பெருமானைத் தவிர மற்றவர்களைக் காட்டிலும் பிராட்டியின் பரத்வத்தை அந்த நாமங்கள்

http://acharya.org

கூறுவன என்றே கொள்ளவேண்டும்.] என்று ஸ்ரீவேதாந்த தேசிகர் சது:ஶ்லோகீ இரண்டாவது ஶ்லோகபா4ஷ்யத்தில் அருளியிருப்பதைக் காணலாம்.

2. 'ஜக3த்காரணமாய் ஸர்வாத்மாவாய் ஸர்வேஶ்வரனாயிருப்பவன் ஒருவனே என்று எண்ணிறந்த வேதஶாஸ்த்ர வாக்யங்கள் முழங்குவதாலேயே, உப4யவிபூ4தியைக் குறித்துப் பிராட்டிக்கு ஶேஷித்வமும், ஈஶ்வரத்வமும் இருந்தபோதிலும், பெரும்பாலான நம்முடைய பூர்வாசார்யர்கள் இரண்டு ஈஶ்வரர்களைக் கொள்வது விசிஷ்டாத்வைதத்திற்கு முரண்படும் என்பதாலே, பிராட்டியை ஜீவகோடியிலேயே கொண்டு, அவளுடைய ஈஶ்வரத்வம் முதலான பெருமைகள் எம்பெருமானுடைய நித்யேச்சையால் ஏற்பட்டவை என்று திருவுள்ளம் பற்றினார்கள். ஈஶ்வரனுக்கு அஸாதா4ரண லக்ஷணமான ஜக3த்காரணத்வத்திலும், மோக்ஷப்ரத3த்வத்திலும் ப்ரதா4னமான அந்வயம் பிராட்டிக்கு இல்லை என்று நிர்ணயித்தார்கள்.

3. பெரியபிராட்டியார்விஷயமாகப் பேரறிவாளர்களான பூர்வாசார்யர்களிடையே ஐந்துவிதமான கருத்துகள் நிலவிவந்தன என்று ஸ்ரீவேதாந்ததேசிகர் சது:ஶ்லோகீ நாலாவது ஶ்லோகபா4ஷ்யத்தில் விளக்குகிறார். அவையாவன:—

(1) பிராட்டி ஜீவகோடியைச் சேர்ந்தவளே. அதனால் அணுஸ்வரூபத்தை உடையவளே. ஆயினும் எம்பெருமானுடைய ஸ்வரூபத்தை நிரூபிக்குமவளாய் இருக்கையாலே, அக4டிதக4டனா சக்தியினாலே எம்பெருமான் விபு4வாயிருந்தபோதிலும் அணுப்பொருள்களிலும் ஸ்வரூபம் முழுவதும் வியாபித்திருப்பதுபோலே, இவளும் அணுஸ்வரூபையாய் இருந்தபோதிலும் அந்த சக்தியாலே எம்பெருமானுடைய விபு4ஸ்வரூபம் முழுவதும் வியாபித்திருக்கிறாள். ["யதா2 ஸர்வக3த:" (விபு.1-8-17) என்னும் ஶ்லோகவ்யாக்2யானத்தில் எங்களாழ்வானாகிற விஷ்ணுசித்தரும், பரந்தரஹஸ்யத்தில் பெரியவாச்சான்பிள்ளையும், சது:ஶ்லோகீ வ்யாக்யானத்தில் நாயனாராச்சான்பிள்ளையும் இந்தப் பக்ஷத்தை ஆதரித்தனர்.]

(2) இவள் ஜீவகோடியைச் சேர்ந்தவளானாலும் இயல்வாகவே விபு4ஸ்வரூபத்தையும் உடையவள். 'ஈஶ்வரபரதந்த்ரசேதனனாயிருக்கை' என்று ஜீவலக்ஷணத்தைக் கொண்டுவிடலாம்.

(3) இவள் சேதனையாகையாலே அசித்தைக்காட்டிலும் வேறுபட்டவள். ஸ்வரூபத்தில் விபு4வாகையாலே ஜீவர்களைக் காட்டி

http://acharya.org

லும் வேறுபட்டவள். பாரதந்த்ர்யமுடையவளாகையாலே ஈச்வரனைக் காட்டிலும் வேறுபட்டவள். ஆக, இவள் மூன்று வகுப்பிலும் சேராதவள். இவளுடைய ஸத்தை எம்பெருமானுக்கு அதீநமானது. எம்பெருமானுடைய பெருமை இவளால் ஏற்படுவது. [இவ்விஷயம் முதல் நான்கு பக்ஷங்களுக்கும் பொதுவானது.]

(4) இவளுடைய ஸத்தை எம்பெருமானுக்கு அதீநமாயிருந்த போதிலும் இவள் உபயவிபூதிக்கும் சேஷியாயிருக்கையாலும், அனைத்தையும் வியாபித்திருக்கையாலும் இவளை ஈச்வரகோடியிலேயே சேர்க்கவேண்டும். அனைவருக்கும் சேஷியாய் இருக்கை முதலானவை ப்ரஹ்மமான ஸர்வேச்வரனுக்கு லக்ஷணம். அவனையொழிந்தமற்றவர்களுக்கு சேஷியாயிருக்கை ஈச்வரியான இவளுக்கு லக்ஷணம். ஜகத்காரணத்வம் முதலான ப்ரஹ்மலக்ஷணம், ப்ரஹ்மமான எம்பெருமான் ஒருவனுக்கே உரியது. ஆகையால் அவனே ஸர்வேச்வரனாகவும் ஒத்தாரும் மிக்காரும் இல்லாதவனாகவும் ஆகிறான். இந்த நான்கு பக்ஷங்களையும் இப்படி வர்ணித்துவிட்டு முதல் பக்ஷத்தில் அகடிதகடனா சக்தியாலே பிராட்டிக்கு விபுத்வம் என்று கூறியிருப்பதைக் கண்டித்துவிட்டு "2, 3, 4 பக்ஷங்கள் ஒன்றுக்கொன்று மிகநெருங்கியவை. ஜீவன், ஈச்வரன் முதலான பெயர்களிலேயே கருத்து வேற்றுமை" என்று ஸாதித்துவிட்டு, "ப்ராகுக்தேந ஸஹைதேஷு பக்ஷேஷ்வத்ர சதுர்ஷ்வபி| ஸ்வதந்த்ரபதி நித்யேச்சாஸித்தம் ஸர்வமிதம் ச்ரிய: || அபி சைவம் ந தஸ்யேசே கச்சநேத்யாதிதர்சநாத்| அதச் சதுர்பி: அப்யேதை: பத்யாவைச்வர்யவிச்ரம: ||" [முதல் பக்ஷத்தோடு கூடிய இந்த நாலுபக்ஷங்களிலும் பிராட்டிக்கு இந்தப் பெருமையெல்லாம் ஸ்வதந்த்ரனான பர்த்தாவின் நித்ய இச்சையால் விளைவது; "அந்த எம்பெருமானை நியமிப்பவன் எவனுமில்லை" முதலான வேதவாக்யங்களைக்கொண்டு இப்படி நிர்வஹிக்கப்படுகிறது, ஆகையால் இந்த நாலுபக்ஷங்களிலுமே எம்பெருமானிடமே முக்யமான ஈச்வரத்தன்மை தேறி நிற்கிறது.] என்று கூறி, "இவள் நாரஸப்தார்த்தமாயிருந்தபோதிலும் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலேயே ஈச்வரவகுப்பில் சேர்ந்த இவளுக்கு ப்ரதாந ப்ராப்யத்வம் முதலானவற்றைக் கொள்ளத்தடையில்லை. உலகைப் படைப்பது முதலானது இவளுடைய ப்ரீதிக்காகவே ஆகையாலே ஜகத்காரணத்வத்திலும் இவளுக்கு அந்வயம் கூறுவதிலும் முரணில்லை", என்று தொடங்கி நாலாவது பக்ஷத்தை விரிவாக விளக்குகிறார் ஸ்ரீதேசிகன்.

(5) இறுதியாக ஐந்தாவது பக்ஷத்தைச் சுருக்கமாகப் பின் வருமாறு விளக்குகிறார் ஸ்ரீதேசிகன்:—"அத்ர ஸர்வபூதேச்வரத்

http://acharya.org

வாதி₃ வசந ஸாம்யாத் அஸ்யாகு₃ணபூ₄வ: உப₄யேச்சா₂ப்ரயுக்த இதி கேசித₃ாஹு:— அந்யோந்யேச்சா₂விகா₄தாதி₃நிவ்ருத்தௌ தத்பரத்வத:| ஐககண்ட்₂யமபே₄ஷாணும் ஆகூ₃மாநாம் ப₄வத் வித்||'' ['' 'ஈஶ்வர: ஸர்வபூ₄தாநாம்' 'ஈஶ்வரீம் ஸர்வபூ₄தாநாம்' என்று முறையே எம்பெருமானையும் பிராட்டியையும் ஏகரீதியாக வேதவாக்கியங்கள் எல்லா ஜீவர்களுக்கும் ஈஶ்வரர்களாகக் கூறுகிற படியால், இவள் எம்பெருமானைவிட அமுக்யமாய் இருப்பது இருவருடைய விருப்பத்தாலும் ஏற்பட்டது. 'ஒருவர் விருப்பத்தை ஒருவர் மறுப்பதில்லை' என்று கருத்துரைத்தால் இந்த இரண்டு வேதவாக்கியங்களும் ஒரே பொருளைத் தருபவையாகும். என்று சிலர் கூறுகிறார்கள்.] ஐந்தாவது பக்ஷத்தைப்பற்றி ஸ்ரீதேசிகன் ஸாதித்திருப்பது இவ்வளவே. முந்திய நாலு பக்ஷங்களிலும் எம் பெருமானுக்கே முக்கியமான ஈஶ்வரத்வம் என்று கூறிவிட்டு, இந்தப் பக்ஷத்தை ப்ரஸ்தாபிக்கையாலும், ஸர்வபூ₄தேஶ்வரத்வவசநம் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸமமாகச் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறுகையாலும் பிராட்டிக்கும் முக்கியமான ஈஶ்வரத்வத்தை இந்தப் பக்ஷத்தைச் சேர்ந்தவர்கள் கருதியிருக்கிறார்கள் என்று விளங்குகிறது. முதல் பக்ஷத்தைக் கண்டித்திருப்பதால் அது தேசிகன் உகந்ததல்ல என்பது தெளிவு. மற்றநாலு பக்ஷங்களில் எது தாம் உகந்தது என்பதை இந்த ப்ரகரணத்தில் அவர் தெளிவு படுத்தவில்லை. சது:ஶ்லோகீ பா₄ஷ்யத்தில் மற்றவிடங்களிலுள்ள ஸ்ரீஸூக்திகளையும், அவருடைய மற்ற க்ரந்தங்களிலுள்ள ஸ்ரீஸூக்திகளையும் கொண்டே அதை நாம் அறியவேண்டியுள்ளது. அப்படி அவருடைய க்ரந்தங்களை ஆராயும்போது 'அவர் ஐந்தாவதான கடைசிப்பக்ஷத்தைத் திருவுள்ளம் பற்றவில்லை' என்பது அவருடைய ஸ்ரீஸூக்திகளிலிருந்தே விளங்குகிறது. அவருடைய எல்லா ஸ்ரீஸூக்திகளையும் நடுநிலைநின்று ஆராய்ந்தால் அவர் 'பிராட்டிக்கு உப₄யவிபூ₄தி போஷித்வம் முதலானவை இருப்பதை யிட்டு அவளை ஈஶ்வரகோடியிலேயே சேர்க்கவேண்டும்' என்னும் நாலாவது பக்ஷத்தையே ஆதரித்திருக்கிறார் என்பது தெளிவாகவே விளங்குகிறது இதை நிலைநிறுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

4. இப்படியிருக்கும்போது, சென்னை - 113. தரமணியிலிருந்து ஸ்ரீஹயக்ரீவவித்யாபீடத்தின் மூலம் வெளிவரும் ''ஸ்ரீகாஞ்சீபேரருளாளன்'' என்னும் ஸ்ரீவைஷ்ணவமாதப் பத்திரிகையில் தொடர்ச்சியாக வந்த ''ஸ்ரீதத்வஸித்தாஞ்சன ஸங்க்ரஹம்'' என்னும் நூலின் தொகுப்பை நமது அன்பர் ஒருவர் நமக்கு அனுப்பி அதை ஸுதர்சனத்தில் நடுநிலைநின்று விமர்சிக்கவேண்டுமென்றும், அப்படி

http://acharya.org

விமர்சிப்பதால் ஸம்ப்ரதாயச் சண்டைகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றும் எழுதியிருக்கிறார்.

5. என்றும் ஸம்ப்ரதாயச் சண்டைகள் நம்மால் ஏற்பட்டதோ அல்லது வளர்ந்ததோ இல்லை. ஸம்ப்ரதாயபேதவிஷயங்களை நம்முடைய க்ரந்தங்களில் ஆங்காங்கு குறிப்பிட நேர்ந்தபோதும் இரண்டு ஸம்ப்ரதாய ஆசார்யர்களின் திருவுள்ளங்களையும் அவரவர்கூறும் காரணங்களோடு விளக்கி, எந்த ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளையும் கண்டிக்காமல் எடுத்துக்காட்டுவதே நம் வழக்கம். இப்போது நம் பார்வைக்கு வந்திருக்கும் ஸங்க்ரஹ நூலில் ''எம்பெருமானுக்குள்ள ஜகத்காரணத்வம், மோக்ஷப்ரதத்வம், ஸர்வஜகச்சரீரித்வம், ஸர்வஜகந்நியந்த்ருத்வம் முதலான ஈச்வரலக்ஷணங்களெல்லாம் பிராட்டிக்கும் துல்யமாக உண்டு. பகவான் பிராட்டிக்கு சரீரமல்ல; அதுபோல் பிராட்டியும் பகவானுக்கு சரீரமல்ல; தேவியை பகவான் நியமிக்க முடியாது; பிராட்டிக்குள்ள பத்நீத்வம் விக்ரஹத்தில் மாத்திரமே; ஸ்வரூபத்தில் கிடையாது. எம்பெருமான் பிராட்டியைக் குறித்து சேஷியாயிருப்பது இயற்கையானது அல்ல. அவளுடைய அநுமதியால் செயற்கையாய் விளைந்ததேயாகும். பிராட்டிக்கு பகவத்பாரதந்த்ர்யம் செயற்கையானது. ஸ்வாதந்த்ர்யமே அவளுக்கு ஸ்வரூபம். இப்படியே ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளும் எம்பெருமானார் பட்டர் முதலான பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளும் கூறுகின்றன.'' என்று எழுதப்பட்டுள்ளது.

6. உண்மையில் இவையனைத்தும் தேசிக ஸ்ரீஸூக்திகளுக்கும், எம்பெருமானார், பட்டர் முதலான மற்ற பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கும் மிகவும் முரண்பட்டவையாய், விசிஷ்டாத்வைதமதத்தின் அடிப்படையையே தகர்ப்பவையாய் உள்ளன. ஆனாலும் நாம் இதை எவ்வளவு விளக்கினாலும் அபிநிவேசமுடையவர்களுக்கு, வித்வான்களாயிருந்தபோதிலும் இதை இசையும் மனப்பான்மை விளையாது. ஆகையால், அத்தகைய வித்வான்களுடைய மனஸ்ஸாக்ஷியைக் குறித்து நாம் சில கேள்விகளை அடுத்தபடியாகத் தருகிறோம். அவரவர் தம் நெஞ்சறிய அவற்றுக்குப் பதிலுரைத்துத் தங்களுடைய மனஸ்ஸாக்ஷியைத் திருப்தி செய்து கொண்டால் போதுமானது. நாம் எழுதியிருப்பதில் ஸாரம் இருக்கிறதென்று இந்த வித்வான்கள் எவருக்கேனும் தோன்றினால், அவர்கள் நமக்கு எழுதலாம். அவர்கள் விரும்பினாலொழிய அவர்களுடைய கடிதங்கள் நம்மால் வெளியிடப்படாது. இனி, கேள்விகளைத் தருகிறோம்.

http://acharya.org

வித்வான்களின் மனஸ்ஸாக்ஷியைக்குறித்துச் சில கேள்விகள்

1. "ஸர்வபூ4தேஶ்வரீ" என்று ஸமஸ்தபத3மாயிராமல் "ஸர்வபூ4தாநாம் ஈஶ்வரீ" என்று வ்யஸ்த பத3மாயிருப்பதால் ஸர்வபூ4தேஶ்வரனுடைய பத்னி என்ற பொருள் கொள்ளமுடியாது; ஆகையால், "ஸர்வபூ4தாநாம் ஈஶ்வர:" என்று படிக்கப்பட்ட எம்பெருமானைப்போலே, "ஸர்வபூ4தாநாம் ஈஶ்வரீ" என்று ஸ்ரீஸூக்தத்தில் படிக்கப்பட்டிருப்பதால், ஈஶ்வரனுக்குப்போலே இவளுக்கும் முக்2யமான ஈஶ்வரத்வம் கொள்ளவேண்டும் என்கிறது ஐந்தாவது பக்ஷம். இந்தப் பக்ஷத்தைத் தாத்பர்யசந்த்ரிகையில் கண்டித்துள்ளார் தேசிகன். எங்கே? எனில்; கீ3தாபா4ஷ்யத்தின் தொடக்கத்தில் பிராட்டியைப் பற்றிய "அநவதி4காதிஶய-அஸங்க்2யேய கல்யாண கு3ணக2ண-ஶ்ரீவல்லப4:" என்னும் தொடரில் 'அநவதி4காதிஶய' என்னும் பதத்தை விவரிக்கும்போது "அநவதி4காதிஶயத்வவசநாத் ஈஶ்வரவ்யதிரிக்த- அஶேஷசேதநாசரஸ்யாபி தது3ஶ்வர்யஸ்ய ஈஶ்வராபி4மதத்வாத் ந த்3வைராஜ்யாதி3 தோ3ஷ: | 'அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணு பத்நீ' இதி விஷ்ணு பத்நீத்வவேஷேண ஹி ஸர்வஸ்ய ஜக3த இயம் ஈஷ்டே | 'ஈஶ்வரீம் ஸர்வபூ4தாநாம்' இத்யத்ர து, யத்3யபி ஸர்வபூ4தாநாம் இதி ப்ரதிஸம்ப3ந்தி4 நிர்த்தே3ஶாத் ஸ்த்ரீப்ரத்யயாநுஸாரேண ஈஶ்வரபத்நீதி விவக்ஷா ந ஶக்யா, தத2ாऽபி வாக்யாந்தரப3லாத் அர்த்த2ஸ்ய தத2ாத்வஸித்3தி4: |" [(பிராட்டியின் கல்யாண கு3ணங்கள்) எல்லையற்ற மேன்மையை உடையவை என்று கூறியதால், "ஈஶ்வரனைத் தவிர்ந்த மற்ற அனைவரையும் நியமிக்கவல்ல இவளுடைய நியமனஸாமர்த்2யம் ஈஶ்வரனுக்கு இஷ்டமாகையால் 'இரண்டு ஈஶ்வரர்கள்' முதலான தோ3ஷம் இல்லை; "விஷ்ணுவுக்குப் பத்தினியாயிருப்பதால் இவ்வுலகிற்கு ஈஶ்வரியாயிருக்கிறாள்" என்னும் வேதவாக்யத்தின்படி விஷ்ணுவுக்குப் பத்தினியாயிருப்பதனாலன்றோ இவள் அனைத்துலகையும் நியமிக்கிறாள். 'ஸர்வபூ4தங்களுக்கும் ஈஶ்வரி' என்னும் ஸ்ரீஸூக்த வாக்யத்தில், (யாருக்கு ஈஶ்வரி என்னும் கேள்வியெழ) 'ஸர்வபூ4தங்களுக்கும்' என்று நியமிக்கப்படுபவர்களைப் பிரித்துச் சொல்லியிருப்பதால், ஈஶ்வரபத்னியென்று பொருள்கொள்ள முடியாது என்பது உண்மையானாலும், முன் எடுத்த ('அஸ்யேஶாநா ஜக3தோ விஷ்ணுபத்நீ' எனும்) வாக்யத்தின் ப3லத்தாலே இவ்வாக்யத்திலும் விஷ்ணுபத்னியாயிருப்பதாலேயே இவள் ஈஶ்வரியாகிறாள்

http://acharya.org

என்று கொள்ளவேண்டும்] என்று ஸர்வஜ்4தேஶ்வரத்வவசந ஸாம்யத்தைக் கொண்டு பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸமமான முக்2யேஶ்வரத்வத்தைச் சொல்லும் ஐந்தாவது பக்ஷத்தை மிகத் தெளிவாகக் கண்டித்திருக்கிறார் தேசிகன். இவர் ஐந்தாவது பக்ஷத்தையே தழுவினார் என்று நீங்கள் கூறுவது இந்த ஸ்ரீஸூக்திக்கு முரண்பட்டதல்லவா?

2. ஶரணாகதி க3த்3யத்தில் பிராட்டியைப் பற்றிய முதல் சூர்ணையில் 'அநவதி4காதிஶய' என்னும் பத3த்தை விவரிக்கும் போது பிராட்டிக்கு எம்பெருமானோடுள்ள பலவகையான ஸாம்யத்தை விவரித்துவிட்டு, "ந ச ஏதாவதா ப4க3வதோ நிஸ்ஸமாப்4யதி4கத்வவிரோத4:; ப்ரத்யுத தத்ப்ரதிஷ்ட2ாபநமேவ | 'ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ' இதி ஶ்ருதே: | ந ஹ்யேவம்வித4பத்நீவிஶிஷ்டத்வம் கஸ்யசித3ந்யஸ்யாஸ்தி, யேந தத்ஸாம்யாதி3ஶங்கா ஸ்யாத்| உபப்3ருஂஹிதம் ச-'அப்ரமேயம் ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா' இதி | ஏவம் அஸ்யா: ஶீலாதீ3நாம் அநவதி4காதிஶயத்வேऽபி அவிரோத4:|" [பிராட்டிக்கு எம்பெருமானோடு பலவகையில் ஸாம்யம் கூறுவது, எம்பெருமான் ஒத்தார் மிக்காரையில்லாதவன் என்பதோடு முரண்படாது; நேர்மாறாக, அவன் ஒத்தார் மிக்காரையில்லாதவன் என்பதையே உறுதிப்படுத்தும்; எப்படியெனில்; இவ்வண்ணமாகப் பல பெருமைகளில் தன்னோடு ஒத்த பத்னியோடு கூடியிருக்கை (பிராட்டியையுள்ளிட்ட) வேறு எவர்க்கும் இல்லையே; அப்படியிருந்தால்தானே இவனுக்கு ஒத்தாரோ மிக்காரோ உண்டோ, என்று ஐயமுற முடியும். ஸ்ரீராமாயணத்திலும் "ஜனகராஜன் திருமகளைத் தனக்கென்று இட்டுப்பிறந்த (ஸ்ரீராமபிரானுகிற) தத்துவத்தின் பெருமை அளவிடவொண்ணாததன்றோ" என்று இவ்விஷயம் விளக்கப்பட்டதன்றோ; இவ்வண்ணமாகப் பிராட்டியின் ஶீலாதி3 கு3ணங்கள் எல்லையற்ற மேன்மையை உடையவையானாலும் 'ஒத்தாரும் மிக்காருமில்லாதவன் எம்பெருமான்' என முழங்கும் ஶ்ருதி விரோத4ம் வராது.] என்று ஸாதித்திருக்கிறார் ஸ்ரீதேசிகன். அவர் ஐந்தாவது பக்ஷத்தைத்தழுவியிருந்தால், ஆக்ஷேப ஸமாதா4னங்கள் இப்படி அமைய இடமேயில்லையென்பதை மறுக்கமுடியுமா?

3. ஸங்க்3ரஹ நூலில் ஜக3த்3வ்யாபாரமாகிற ப்3ரஹ்ம லக்ஷணம் எம்பெருமானுக்கேயிருந்தபோதிலும், முக்தர்களுக்கில்லாத ஜக3த்3வ்யாபாரஶக்தி இவளுக்கும் இருக்கையால், இவள் ப்3ரஹ்மமல்லாவிடிலும் முக்2யமான ஈஶ்வரியேயாகிறாள் என்று வாத3ம் செய்யப்படுகிறது. சது:ஶ்லோகி 2-வது ஶ்லோகத்தின்

http://acharya.org

பா₄ஷ்யத்தில் "ஸாத்வதோக்தம் தே₃வ்யாஸ் தாத்₃ருக்த்வமபி ஶ்ருதிஸ்ம்ருதி பூர்வாபராதி₃ப்ரஸித்₃த₄ பத்நீத்வாத்₃யநுகு₃ணம் யோஜ்யம் ! கிஞ்ச யதா₂ முக்தஸ்ய ப₄க₃வதா பரமஸாம்யே ஶ்ருதிஸ்ம்ருத்யாதி₃ஸித்₃தே₄ऽபி 'ஜக₃த்₃வ்யாபாரவர்ஜம்' இதி லக்ஷணபே₄தை: ஆகாரை: வைஷம்யம் ஸ்தா₂ப்யதே ததா₂த்ராபி ப₄வதி; பி₄ந்நலக்ஷணம் இதி ச தத்ரைவோக்தம் | " [ஸாத்வத ஸம்ஹிதையில் பிராட்டி பெருமாளோடு ஒத்தவள் என்று கூறியிருப்பது, ஶ்ருதி, ஸ்ம்ருதிகள், (ஸம்ஹிதையின்) முன் பின்பகுதிகள் முதலானவற்றில் பிரசித்தமான பத்னீத்வம், (பாரதந்த்ர்யம்) முதலானவற்றுக்கு அனுகு₃ணமாகவே நயனம் செய்யத்தக்கது. மேலும், முக்தாத்மாவுக்கு ஶ்ருதி, ஸ்ம்ருதி முதலானவற்றில் எம்பெருமானோடு மேலான ஒற்றுமை சொல்லப்பட்டிருந்த போதிலும், 'ஜக₃த்₃வ்யாபார வர்ஜம்' என்று ஸூத்ரத்தில் சொல்லப்பட்டலக்ஷணமாயிருக்கும் தன்மைகளில் வேறுபாடு எப்படி நிலை நிறுத்தப்படுகிறதோ, அப்படியே இங்கும் வேறுபாடு உண்டு. 'பெருமானும் பிராட்டியும் வேறுலக்ஷணமுடையவர்' என்று (ஸாம்யத்தைக்கூறும்) அந்த ஸாத்வதஸம்ஹிதா வாக்யத்திலேயே சொல்லப்பட்டதன்றோ] என்னும் ஸ்ரீஸூக்தியோடு உங்கள் வாத₃ம் முரண்படவில்லையா?

4. ஸ்ரீராமமிஶ்ரர் என்னும் ஸோமாசியாண்டான் ஷட₃ர்த்த₂ ஸங்க்ஷேபம் எனும் நூலில் "உப₄யாதி₄ஷ்டா₂நம் ச ஏகம் ஶேஷித்வம்" [பெருமானும் பிராட்டியுமான மிது₂னத்திற்கு, சேதனரைக் குறித்து உள்ள ஶேஷித்வம் ஒன்றே] என்று ஸாதித்துள்ளதை ஸ்ரீதே₃ஶிகன் அடிக்கடி எடுத்துக்காட்டுகிறார். 'சேதனர் அனைவரும் இருவருமான சேர்த்தியிலேயே அடிமை செய்யவேண்டும். பிரித்து அடிமை செய்யலாகாது' என்று இதிலிருந்துதேறுகிறது. இதை ஸ்ரீவைஷ்ணவ பூர்வாசார்யர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏகஶேஷித்வ ந்யாயத்தைஎடுத்துக்காட்டாகக்கொண்டு, 'இருவரிடமுள்ள ஈஶ்வரத்வம் ஜக₃த்காரணத்வம் முதலானபெருமைகள் எல்லாம் ஒன்றேயாகையால் ஈஶ்வரர் இருவரல்லர்' என்று ஸங்க்₃ரஹநூலில் வாதம் செய்யப்பட்டுள்ளது, இது எப்படிப் பொருந்தும்? ந்யாய ஸித்₃தா₄ஞ்ஜநத்தில் ஈஶ்வரபரிச்சே₂த₃த்தில் இந்த ஷட₃ர்த்த₂ ஸங்க்ஷேபபங்க்திகள் முழுவதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. [ஸுத₃ர்ஶனம் ஸ்ரீமுக ஐப்பசி (551) இதழில் வெளியிடப்பட்டுள்ள ஆசார்யவைபவ மஞ்ஜரியில் 17-வது இலக்கத்தில் (பக்கம் 115, 116) இந்தப் பங்க்திகள் பொருளுடன் கொடுக்கப்பட்டுள்ளன.] அதில் "பத்யு: பத்ந்யா அபீதி லோக

http://acharya.org

ஸித்₃த₄ம் | உப₄யாதி₄ஷ்ட₂ாநம் ச ஏகம் ஶேஷித்வம் | [கணவனுடைய உடைமை மனைவிக்கும் உடைமை என்பது உலகில் காணப்படும் நியாயம். ஆகையால், பிராட்டியிடமும் பெருமாளிடமும் (உலகைக்குறித்து) உள்ள ஶேஷித்வம் ஒன்றே என்று கொள்ளவேண்டும்.] என்பது ஸாரமான பகுதி. இந்த நியாயத்தைக்கொண்டு இருவரிடமுமுள்ள ஈஶ்வரத்வம், ஜகத்₃காரணத்வம் முதலானவைையெல்லாம் ஒன்றே என்று எப்படித்தேறும்? மேலும், அந்தப் பங்க்திகளில் சோமாசியாண்டான் '''உலகில் ஶரீரம் பத்னியாயிருப்பதில்லையே; இங்கு ஶரீரமான பிராட்டி எப்படிப் பத்னியாயிருக்கமுடியும்?'' என்னும் கேள்வியைக் கேட்டுக்கொண்டு, ''அசித்தாகையாலே நம் ஶரீரம் நமக்குப் பத்னியாயில்லை; வேத₃த்தால் பத்னியாக ஸித்₃தி₄க்கும் பிராட்டி விஷயத்தில் இந்தக் கேள்வி பொருந்தாது'' என்று பதிலுரைத்திருக்கிறார். ஆநந்த₃ாதி₃ கு₃ணங்களைப்போல் பிராட்டி ஸ்வரூபத்தினால் மட்டும் த₄ரிக்கப்படுபவளாயிராமல், மற்ற சரீரங்களைப்போல் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தாலும் த₄ரிக்கப்படுபவளாயிருக்கிறாள் என்றும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். இந்தப் பங்க்திகளை மேற்கோளாகக்காட்டுகையாலே தேசிகனும் பிராட்டி பெருமானுக்கு ஶரீரம் என்றும், நியமிக்கப்படுபவள் என்றும் ஏற்றுக்கொண்டிருக்கிறார் என விளங்குகிறது. ''பிராட்டி பெருமானுக்கு ஶரீரமல்ல; நியாம்யையல்ல'' என்று நீங்கள் கூறுவது ஸ்ரீதே₃ஶிகன் திருவுள்ளத்துக்கு முரணானதல்லவா?

5. ''எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றும்'' என்று எம்பெருமானார் அருளியிருக்கையாலும், ''தத₃ந்தர்ப₄ாவாத் த்வாம் ந ப்ருத₂கு₃பி₄த₄த்தே ஶ்ருதிரபி'' [ஸ்ரீகு₃ண-28] [எம்பெருமானோடு சேர்ந்திருக்கையால் வேதம் பிராட்டியாகிற உம்மைத் தனியாகச் சொல்லவில்லை] என்று பட்டர் அருளியிருக்கையாலும், எம்பெருமானுக்கு ஶ்ருதியில் சொன்ன ஈஶ்வரத்வம், ஜகத்₃காரணத்வம் முதலான எல்லாத் தன்மைகளும் பிராட்டிக்கும் உண்டு என்பதே எம்பெருமானாருக்கும் பட்டருக்கும் ஸித்₃த₄ாந்தம் என்று ஸங்க்₃ரஹநூல் கூறுகிறது. எம்பெருமானாருடைய வார்த்தையை விளக்கும் பட்டருடைய அந்த ஶ்லோகத்தின் இறுதிப் பாத₃த்தின் முன்பாத₃ம் ''த்வமாஸீர் மாத: ஸ்ரீ: கமிதுரித₃மித்த₂ந்த்வ விப₄வ:'' [தாயே! நீரே எம்பெருமானின் ஸ்வரூபஸ்வப₄ாவங்களை நிருபித்துத்தருபவளாயிருக்கிறீர்] என்று உள்ளது. இதோடு சேர்த்துப் பார்க்கும்போது ''இப்படி நிருபகபூ₄தையாயிருந்துகொண்டு அவனோடு

http://acharya.org

சேர்ந்திருக்கையால் வேதம் உம்மைத் தனியாகச் சொல்ல வில்லை'' என்றே உத்தரார்த்த₄த்தின் பொருள் தேறும். இதற்கு மூல மான எம்பெருமானார் வார்த்தையும் ''ச்ருதிவாக்யங்களில் நிருப் யனான எம்பெருமானைச் சொன்னவிடத்திலெல்லாம் நிருபகையான பிராட்டியையும் சொன்னதாக ஆகும்'' என்றே பொருள்படும். இதனால் நிருப்யனான எம்பெருமானிடமுள்ள எல்லாத் தன்மை களும் நிருபகையான பிராட்டிக்கும் உண்டு என்று சொன்னதாக ஆகிவிடுமா? 'நிருப்யமான க₄டத்தைச் சொன்னவிடமெல்லாம் நிரு பகமான க₄டத்வத்தையும் சொன்னதாக ஆகும்' என்பது உண் மையே; இது கொண்டு அந்த கடத்திலுள்ள பொன்மயமாயிருக்கை, மஞ்சள் நிறமுடையதாயிருக்கை முதலானவை நிருபகமான க₄டத் வத்திற்கும் உண்டு என்று தேறிவிடுமா?

6. ''யுவயோ: ஸ்வாதந்த்ர்யமத்யாங்குலம்'' [ஸ்ரீகு₃ண 53] என்று பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்று ப₄ட்டர் ஸாதித்திருப்பதால் இருவரும் ஸ்வதந்த்ரர்களே என்றும், 'ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி'' [ஸ்ரீகு₃ண 31] என்று ப₄ட்டரால் பிராட்டிக்குச் சொல்லப்படும் பாரதந்த்ர்யம் முன் சொன்ன ஸ்வாதந்த்ர்யத்துக்கு அநுகுணமாக, பிராட்டியின் விருப் பத்தால் செயற்கையாய் உண்டாவது என்று கொள்ளவேண்டும் என்றும் வாதம் செய்கிறது ஸங்க்ரஹநூல். இருவர்க்கும் ஸ்வாதந் த்ர்யத்தைச் சொல்லும் ஶ்லோகத்தின் முன்பகுதியையும், முன் பின் ஶ்லோகங்களையும் காணும்போது, ''ஸ்வத: விஷ்ணோ: ஸ்வ மஸி'' (31) என்று பிராட்டிக்கு இயற்கையானதாகச் சொன்ன பாரதந்த்ர்யத்திற்கு முரணில்லாமலே ப₄ட்டர் ஸ்வாதந்த்ர்யத்தைக் கூறியிருக்கிறார் என விளங்கும். ''ஸ்வரூபம் ஸ்வாதந்த்ர்யம் ப₄க₃வத இத₃ம்'' என்னும் இருபத்தெட்டாவது ஶ்லோகம் பெருமானுக்கு ஸ்வாதந்த்ர்யத்தை ஸ்வரூபமாக (இயல்வானதாக)ச் சொல்லுகிறது. ''ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி'' என் னும் முப்பத்தொன்றும் ஶ்லோகம் ரத்னத்திற்கு ஒளிபோலே பெரு மாளுக்குப் பிராட்டி இயல்வான உடைமையாயிருக்கிறாள் என்று கூறுகிறது. 'மாதர் மைதி₂லி'' என்று தொடங்கும் ஐம்பதாவது ஶ்லோகம் பிராட்டியின் பொறுமை, கருணை முதலான கு₃ணங்கள், பெருமானுடைய அக்கு₃ணங்களைக் காட்டிலும் மிகமிகவிஞ்சிநிற் கின்றன என்று நிலைநாட்டுகிறது. 'நேதுர் நித்ய ஸஹாயிநீ'' என்னும் ஐம்பத்துமூன்றாவது ஶ்லோகத்தில்—எம்பெருமான் ஸ்ரீராம னாக அவதரித்தபோது, மைதிலியான பிராட்டி காட்டில் கல்லிலும் முள்ளிலும் மெல்லடிக்கள் குருதிசோர நடந்தது, பெருமானைப் பிரிந்து பத்துமாசம் அசோகவனத்தில் வாழ்ந்தது முதலான துன்பங்களை ஏற்றுக்கொண்டதைக் கூறி ''தி₄க் கருணாம் தி₄க₃ஸ்து யுவயோஸ்

http://acharya.org

ஸ்வாதந்த்ர்யம் அத்யங்குஶம்'' [உங்களுடைய கருணைக்கு ஒரு 'திக்'காரம்; உங்களுடைய தடுக்கமுடியாத ஸ்வாதந்த்ர்யத்துக்கு ஒரு 'திக்'காரம்] என்று சேதநர்களை ரக்ஷிப்பதற்காக திவ்யதம்பதி துன்பங்களை ஏற்றுக்கொண்டதற்குக் காரணமான அவர்களுடைய கருணையையும் ஸ்வாதந்த்ர்யத்தையும் திக்கரிக்கிறார் பட்டர். இங்கு 'ஜனனி' என்று பிராட்டியை விளித்து ஶ்லோகத்தைத் தொடங்கியபோதிலும், முடிவில் திக்கரிக்கும்போது 'யுவயோ:' என்று பெருமானையும் சேர்த்துக்கொள்கிறார். 'நித்ய ஸஹாயிநீ' என்று பெருமானுக்கு ஆஶ்ரித ரக்ஷண காரியங்களில் துணை புரிபவள் பிராட்டி என்று உணர்த்துகிறார். முன் ஶ்லோகங்களில் ஸ்வாதந்த்ர்யத்தைப் பெருமானுக்கு ஸ்வரூபமாகவும், பிராட்டி கருணையில் விஞ்சியவளாகவும் கூறியதற்கும், பிராட்டிக்குப் பாரதந்த்ர்யமே ஸ்வரூபம் என்று கூறியதற்கும் சேர, கருணாதிக்காரம் பிராட்டியின் கருணைக்கும், ஸ்வாதந்த்ர்ய திக்காரம் பகவத் ஸ்வாதந்த்ர்யத்துக்குமே அந்வயிக்கும் என்பது தெளிவாகிறது. இரண்டுமே இருவருக்கும் அந்வயிக்குமானாலும், சேதநரை ரக்ஷிப்பதற்குத் துன்பங்களை ஏற்றுக்கொள்ளும் விஷயத்தில் ஸ்வாதந்த்ர்யம் இங்கு சொல்லப்படுகிறதேயொழிய, பரமாத்மாவுக்குரிய ஸ்வாதந்த்ர்யம் இங்கு சொல்லப்படவில்லை. 'நித்யஸஹாயிநீ' என்று பிராட்டியைக்குறிப்பிடுகையாலே இந்த ஸ்வாதந்த்ர்யத்தையும் பிராட்டி எம்பெருமானுடைய திருவுள்ளத்தைப் பின்பற்றி ஏற்றுக்கொள்கிறாள் என்பது விளங்கும். இங்ஙனமிருக்க, 'யுவயோ: ஸ்வாதந்த்ர்யம்' என்றதால் பெருமானுக்குத் துல்யமான ஸ்வாதந்த்ர்யம் பிராட்டிக்கும் உண்டு என்று எப்படிப் பொருள்படும்?

7. ஸங்க்ரஹநூல் 'முக்யமான ஈஶ்வரத்வமே பெருமானுக்குப் போலே பிராட்டிக்கும் உண்டு' என்று கூறுகிறது. இந்தக் கருத்தை ஶ்ரீதேஶிகன்மேல் ஏறிடுவதற்காக, நாம் இதுவரை எடுத்துக்காட்டியிருக்கும் அவருடைய ஶ்ரீஸூக்திகளுக்கு முரணாக 'ஐந்தாவது பக்ஷமே ஶ்ரீதேஶிகனின் பக்ஷம்' என்று கூறுகிறது. இப்படிக் கொள்வதற்காக- ''தத் தஸ்ய ஸத்ருஶம் பவேத்'' என்று தன்னை ரக்ஷித்துக் கொள்ளவும் தனக்கு ஸ்வாதந்த்ர்யம் இல்லை என்று கூறியவளும், தன் பதிபாரதந்த்ர்யத்தை நிலைநாட்டுவதற்காக வால்மீகியின் ஆஶ்ரமத்தில் பலவருடங்கள் பிரிந்துவாழ்ந்தவளுமான பிராட்டிக்கு ஸ்வாதந்திரியத்தைஏறிடும் ஸாஹஸகாரியத்தைச் செய்கிறது ஸங்க்ரஹநூல். இச்செயல்கள் இதிஹாஸ ஶ்ரேஷ்டமான ஶ்ரீராமாயணத்திற்கும், அதற்குப் பிராட்டியின் பாரதந்த்ர்யபரமாகவே கருத்துரைத்திருக்கும் பட்டர், தேஶிகன் முதலான ஆசார்யர்களின் ஶ்ரீஸூக்திகளுக்கும் முரண்பட்டதல்லவா?

http://acharya.org

8. "ஸகலசேதநாசேதந விசிஷ்டமான தத்வம் ஒன்றே" என்று கூறுவதினாலேயே "விசிஷ்டாத்வைதம்" என்று பெயர் பெற்றிருக்கும் நம் மதத்தை, "ஸகல சேதநாசேதந விசிஷ்டமான தத்வம் ஒரு மிது$_2$நம்" என்று கூறுவதன் மூலம் விசிஷ்டத்வைதமாக்க முற்படுகிறது ஸங்க்ரஹ நூல். இப்படி நம்முடைய மதத்தின் அடிப்படைக்கே முரணான பக்ஷத்தை ஏற்றுக்கொண்டும் ஸங்க்ரஹகாரரால் பிராட்டிக்கு ப்$_3$ரஹ்மத்வத்தைச் சொல்ல முடியவில்லை. இவ்வாறு ஐந்தாவது பக்ஷத்தை ஏற்றுக்கொள்வதைவிட, விசிஷ்டாத்வைத மதத்தின் அடிப்படைக்கு எந்தத் தீங்கும் செய்யாததாய், பிராட்டியை ஈச்வரகோடியில் சேர்ப்பதான நாலாவது பக்ஷத்தை ஏற்றுக்கொண்டு அதையே ஸ்ரீதேசிக பக்ஷம் என்று இசைவதற்கு என்ன தடை ?

முடிவுரை

ஸாராஸார விவேகம் அறிந்தவர்களாய், நடுநிலைநிற்கும் நல்லோர்களாய், மாத்ஸர்யமற்றவர்களாய், ப்ரமாண பரதந்த்ரர்களான பல பெரியவர்கள் உப$_4$யஸம்ப்ரதா$_3$யத்திலும் இன்றும் பலர் இருக்கிறார்கள் என்னும் எண்ணத்தாலேயே நாம் இக்கட்டுரையை எழுதினோம். அத்தகைய பெரியவர்கள் ஒரு சிலராவது நம் கருத்தை ஏற்பார்கள் என்று நம்புகிறோம்.

[இக்கட்டுரை நமது ஸுதர்சனர் பதில் பனிரண்டாவது மதகத்திற்கு அனுபந்தமாக இணைக்கப்படுகிறது.]

---

http://acharya.org

திவ்ய ப்ரபந்த சிந்தனைகள்

ஸுதர்சனர் ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்
ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்,
3 B, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி—620017.

[திருச்சி வானொலியில் '93 டிசம்பர் 22, 23, 24 தேதிகளில் காலை மணி 5-55 சிந்தனைச் சுடரில் ஒலிபரப்பப்பட்டது]

1. தத்துவம்—உண்மைப்பொருள்கள்

நாம் யார்? இவ்வுலகில் பிறப்பதற்கு முன் எங்கிருந்தோம்? இறந்த பின்பு எங்குபோவோம்? உலகில் உண்மைப்பொருள்கள் எத்தனைவகைப்படும்? இவ்வுலகத்துன்பங்களிலிருந்து நாம்விடுபட வழியுண்டா? விடுபட்டபின் நாம் பெறும்பயன் என்ன? என்னும் கேள்விகளுக்கு உலகிலுள்ள பற்பல மதங்கள் அந்தந்த மதத்தை உண்டாக்கிய சான்றோர்களின் மொழிகளை ஆதாரமாகக்கொண்டு பலவாறு பதில் உரைக்கின்றன.

நம்நாட்டில் அநாதிகாலமாக வழங்கிவரும் வேதங்களும் அவற்றின் இறுதிப்பகுதியான உபநிஷத்துக்களும் இக்கேள்விகளுக்கு விரிவாகவும் விளக்கமாகவும் பதில் உரைக்கின்றன. வால்மீகி, வியாசர், பராசரர் முதலானோர் இயற்றிய இதிஹாஸங்களும் புராணங்களும் இந்த வேத விளக்கங்களைத் தெளிவுபடுத்துகின்றன. மகாபாரதப்போரின் போது கண்ணன் அர்ஜுனனுக்கு உபதேசித்த கீதை இவையனைத்தின் சாரமாக விளங்குகிறது. இவை வடமொழியில் அமைந்தவை. வேதங்களை அடிப்படையாகக் கொண்டமையால் இந்த மதம் 'வைதிகமதம்' என்றும், உண்டாக்கியவர் எவருமில்லாமல் அநாதி காலமாக வழங்கி வருகையால் ஸநாதநமதம் என்றும் பெயர் பெற்றுள்ளது.

பரிபாடல் முதலான சங்ககால நூல்களில் அக்காலச் சான்றோர்களால் இம்மதக்கொள்கைகள் இரண்டாயிரம்

http://acharya.org

ஆண்டுகளுக்கு முன்பே வேதங்கள் கீதை முதலானவற்றை ஆதாரமாகக்கொண்டு தமிழில் விளக்கப்பட்டுள்ளன சங்க காலச்சான்ருேர்களின் வழியில் தோன்றிய ஆழ்வார்கள் அச்சான்ருேர்களின் வழியிலேயே வேதம் கீதை முதலான ப்ரமாண நூல்களை ஆதாரமாகக்கொண்டு நாலாயிரம் பாட்டுக்கள் கொண்ட திவ்யப்ரபந்தத்தில் இம்மதக்கொள் கைகளைச் செவிக்கினிய செஞ்சொற்களால் அருளிச் செய்தனர். பரமனுடைய அருள் கொண்டு தோன்றியவை யாகையாலே இவற்றுக்கு அருளிச்செயல் என்றும் பெயர் உண்டு

"போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா" முதலான உபநிஷத்வாக்யங்கள் அனுபவிப்பவனை ஜீவன், அவனல் அனுபவிக்கப்படும் அறிவற்ற ஜடப்பொருள், இவ்விரண்டையும் ஆட்சி புரியும் இறைவன் என உண் மைப் பொருள்களை மூன்ருகக் காட்டுகின்றன. அந்த இறைவன் தன்னல் படைக்கப்பட்ட பிரமன் முதலான தேவர்களுக்கெல்லாம் தேவனுயிருப்பவன் என்றும், அள வற்ற பெயர்களை உடையவன் என்றும், தன்னல் படைக்கப் பட்ட ஜீவர்களுக்கும் ஜடப்பொருள்களுக்கும் தன்பெயர் களையே படைப்புக்காலத்தில் வைத்தான் என்றும், ஜீவர் கள் தன்னைப் புரிந்துகொள்வதற்காக நாராயணன் விஷ்ணு முதலான சிலபெயர்களைப் பிறர்க்குக் கொடுக்காமல் தனக்கே உரியவையாகக் கொண்டான் என்றும், பிரளய காலத்தில் ஜீவர்களையும் ஜடப்பொருள்களையும் தன்னுள் ஒடுக்கிக்கொள்கிருன் என்றும், அவையனைத்தும் அவனது உடல் என்றும், அவன் அவற்றை உள்நுழைந்து ஆட்சி புரியும் அந்தர்யாமி என்றும் முழங்குகின்றன.

சங்ககாலச் சான்ருேர்களும் பரிபாடலில் "மூ ஏழ் உல கமும் உலகினுள் மன்பதும் மாயோய்! நின்வயின் பரந் தவை உரைத்தேம், மாயாவாய்மொழி உரைதர" முத

http://acharya.org

லானவிடங்களில் எல்லா உலகும் அதிலுள்ள ஜீவர்களும் மாயோனுகிற திருமாலிடமிருந்தே தோன்றுகின்றன என்றும், பிரளய காலத்தில் அவனிடமே ஒடுங்குகின்றன என்றும், அவற்றை அந்தர்யாமியாய் இருந்து காப்பவன் அவனே என்றும் வேதம் கூறுவதாக உரைக்கின்றனர்.

"போதில் மங்கை பூதலக்கிழத்தி தேவி, அன்றியும்,
போது தங்கு நான்முகன் மகன் அவன் மகன் சொலில்,
மாது தங்கு கூறன் ஏற தூர்தியென்று வேதநூல்
ஓதுகின்ற துண்மை அல்லதில்லை மற்றுரைக்கிலே."

என்று திருச்சந்தவிருத்தம் முதலான திவ்யப்ரபந்தங்களில் ஆழ்வார்களும் இதையே வேதமதமாக விளக்குகின்றனர். ஆழ்வார்களில் தலைவரான நம்மாழ்வாரும் தம்திருவாய் மொழியில் "இல்லதும் உள்ளதும் அல்லது அவனுரு" முதலானவிடங்களில் அழியக்கூடியதாகையால் 'இல்லது' எனப்படும் ஜடப்பொருளைக் காட்டிலும், என்றும் அழியா மலிருப்பதாகையாலே 'உள்ளது' எனப்படும் ஜீவர்களைக் காட்டிலும் வேறுபட்டவன் இறைவன் என்றும். உடலில் உயிர் மறைந்திருப்பதுபோலே அவன் இவையனைத்திலும் மறைந்துள்ளான் என்றும், படைப்புக்கடவுளான பிரமனையும் படைப்புக்காலத்தில் தன் உந்தித்தாமரையில் படைத்த திருமாலே அவன் என்றும், அறிவற்றதான 'அசித்', அறிவுள்ள 'சித்' ஈஶ்வரனுகிற இறைவன் என்று மூன்று வகைப்பட்ட உண்மைப்பொருள்களின் நிலையை விளக்கி, 'உளன் சுடர்மிகு சுருதியுள்' என்றும், 'மறையாய நால் வேதத்துள் நின்ற மலர்ச்சுடரே' என்றும் இவ்விஷயங் களுக்கு ஆதாரம் வேதங்களே எனக் காட்டுகிருர்.

ஆக, ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களில் சித், அசித், ஈஶ்வரன் என்னும் மூன்று உண்மைப்பொருள்களைக் காட்டியுள்ளார்கள் என விளங்குகிறது.

http://acharya.org

2. உபாயம்—தக்கநெறி

பரம்பொருளை அடைவதற்கு வழியைக் குறித்தும் வேதங்கள் பலவிடங்களில் ஓதுகின்றன. இடைவிடாமல் அன்புடன் அவனைத் தியானிப்பதாகிற பக்தி நெறியும், அவனைக்கொண்டே அவனை அடைவதாகிற சரணாகதி நெறியுமாகிற இரண்டு நெறிகள் அவற்றில் முக்கியமானவை. இடைவிடாமல் தியானிக்கும் பக்திநெறி அனைவர்க்கும் எளியதன்று. அவனையே தஞ்சமாகக்கொண்டு அவன் திருவடிகளில் விழுவது அனைவர்க்கும் எளியது. இந்த எளிய சரணாகதிவழியை "மோக்ஷமடைய விரும்பும் நான் பிரமனை முன்படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்த பரமனை சரணமடைகிறேன்" என்று உபதேசிக்கிறது உபநிஷத். கீதையின் முடிவான உபதேசமான சரம ஶ்லோகத்தில் கண்ணனும் இதையே காட்டினான்.

இதையே "நாறு இணர்த்துழாயோன் நல்கினல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறுதுறக்கம்" என்றும், "மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி மாஅயோயே" என்றும் பரிபாடலில் சங்ககாலச் சான்றோர்களும் முழங்கினர்.

இந்த சரணாகதி நெறியையே ஆழ்வார்கள் தம் திவ்ய ப்ரபந்தங்களில் பலவிடங்களில் உபதேசித்தனர். "என்னை வேறு எவராலும் ரட்சிக்க இயலாது; என்னைக் காத்துக் கொள்ள என்னாலும் இயலாது; அடையத்தக்க பேறான நீயே அடையும் வழியான ஆறாகவும் நின்று என்னைக் காத்தருள வேணும்" என்று இறைவனான நாரணனின் திருவடிகளில் விழுவதே சரணாகதி எனப்படுகிறது: இதையே நம்மாழ்வார் "நோற்ற நோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்றும், "என்னான் செய்கேன் யாரே களைகண்" என்றும்,

"அகலகில்லேன் இறையும்என்று அலர்மேல்மங்கையுறைமார்பா
நிகரில் புகழாய்! உலகம்மூன்றுடையாய் என்னை ஆள்வானே
நிகரில்அமரர் முனிக்கணங்கள் விரும்பும் திருவேங்கடத்தானே
புகலொன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து
புகுந்தேனே"

http://acharya.org

என்றும், ''நாகணைமிசை நம்பிரான் சரணேசரண் நமக்கு'' என்றும், தம் அனுஷ்டானத்தின் மூலம் காட்டினார். ''கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்'' என்று பிறர்க்கும் உபதேசித்தார். ''நாராயணனே நமக்கே பறைதருவான்'' என்று திருப்பாவையின் தொடக்கத்திலும், ''இறைவா! நீதாராய் பறை'' என்று இறுதியிலும் ஆண்டாளும் இதை உபதேசித்தாள்.

சரணமடையும்போது நம்முடைய குற்றங்களைக்கண்டு உலகத்தந்தையான நாரணன் சீறக்கூடுமாகையாலே கருணைமிக்க உலகத்தாயான லக்ஷ்மீ தேவியை முன்னிட்டுக் கொண்டே அவனைச் சரணமடையவேண்டும். இதை ''ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ—இஷ்டம் மநிஷாண'' என்று வேதங்களில் தலைசிறந்த பகுதியான புருஷஸூக்தம் முழங்கிற்று. மக்களாகிற நம்மை தந்தையின் சீற்றத்தை ஆற்றிச் சேரவிடும் தாயின் செயலான இதை, பாஞ்சராத்ர சாஸ்திரம் 'புருஷகாரம் செய்தல்' எனப்பேசும். ''நின் திரு வரை அகலம் தொழுவோர்க்கு உரிதமர்துறக்கமும் உரிமை நன்கு உடைத்து'' என்று பரிபாடலில் சங்ககாலச் சான்றோர்களும் பிராட்டியோடு கூடிய திருமார்பை உடைய திருமாலைத் தொழுவோர்க்கே வீடுபேறு கிடைக்கும் எனப் பேசினர். இதனாலேயே ''அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல்மங்கை உறை மார்பா'' என்று அலர்மேல் மங்கையை முன்னிட்டுக்கொண்டே திருவேங்கடமுடையானைச் சரணம் புகுந்தார் நம்மாழ்வார். திருப்பாவையில் ''நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்'' என்று நப்பின்னைப் பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு கண்ணனைச் சரணம் புகுந்தாள் ஆண்டாள்.

''ஆசார்யதேவோ பவ'' முதலான வேதவாக்யங்கள் பரமபுருஷனைச் சரணமடைந்த ஓர் ஆசார்யனைப்பற்றி இருப்பது பரமனை நேரேபற்றுவதிலும் சிறந்தது என ஓதிற்று. கீதையில் கண்ணனும் ''உண்மை அறிந்த ஞானிகள் உனக்கு உபதேசிப்பர்'' என்றான். இதைப் பின்பற்றி நம்மாழ்வாரின் சீடரான மதுரகவியாழ்வார் கண்ணி

http://acharya.org

நுண் சிறுத்தாம்பில் ''தேவு மற்றறியேன்'' என்று நாரணனையும் விட்டு, ''திருக்குருகூர் நம்பிக்கு அன்பனாய் அடியேன் சதிர்த்தேன் இன்றே'' என்று நம்மாழ்வாரையே சரணாகப் பற்றினார். ''கோளரியை, வேறாக ஏத்தியிருப்பாரை வெல்லுமே, மற்றவரைச் சார்த்தியிருப்பார் தவம்'' என்று எம்பெருமானைத் தஞ்சமாகக் கொள்வதைக்காட்டிலும் அவனடியாரைத் தஞ்சமாகக் கொள்வது சிறந்தது என்று திருமழிசைப்பிரானும் நான்முகன் திருவந்தாதியில் அருளினார்.

ஆக, ஆழ்வார்கள் திவ்யப்ரபந்தங்களில் பரமபுருஷனை, அல்லது அவனையறிந்த ஆசார்யனைச் சரணடைந்து அவனருளாலே அவனை அடைவதாகிய சரணாகதி நெறியையே காட்டியுள்ளார்கள் என விளங்குகிறது.

3. புருஷார்த்தம்—பயன்

இவ்வுலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டபின் நாம் பெறும் பயன் மோக்ஷம் என்றும், துறக்கம் என்றும், வீடு என்றும் சொல்லப்படும். வேதங்களும், கீதையும், ப்ரம்ம சூத்திரங்களும் நல்விடு அடையும் ஜீவன் அர்ச்சிராதி கதி என்னும் சிறந்தவழியிலே அழைத்துச்செல்லப்பட்டு இவ்வுலகிலுள்ள தாழ்வுகள் எதுவும் இல்லாததாய், சோதிமயமானதாய், பரமபதம் எனப்படுவதான வீட்டுலகம் சென்று பரமபுருஷனை அடைந்து பேரின்பம் பெற்றுப் பரமனுக்குப் பணிபுரிகின்றான் என முழங்குகின்றன. ''தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:'' என்னும் ரிக்வேத வாக்யம் விஷ்ணுவினுடையதான பரமபதத்தில் எப்போதும் அவனை அனுபவிக்கும் நித்யஸூரிகள் வாழ்கின்றனர் என்கிறது. புருஷஸூக்தம் ''ஹ்ரீச்ச தே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ'' என்று அங்கு பரமன் ஸ்ரீ பூமி தேவிகளுடன் வாழ்கிறான் என்றும், ''நமோ ருசாய ப்₃ராஹ்மயே, ருசம் ப்₃ராஹ்மம் ஜநயந்த: தே₃வா அக்₃ரே தத₃ப்₃ருவந்'' என்று அங்குள்ள அயர்வறுமமரர்களான நித்யஸூரிகள், 'நம:' என்னும்

http://acharya.org

சொல்லைச் சொல்லிப் பரமனுக்குப் பணிபுரிந்து உகப்பிக்கிறார்கள் என்றும் கூறுகிறது.

இவ்வேத வாக்யங்களைப் பின்பற்றி, சங்ககாலச் சான்றோர்கள் முதல் பரிபாடலில்—ஆயிரம் தலைகளுடைய ஆதிசேஷனாகிற ஆசனத்தில் திருமகளை மார்பில் கொண்ட திருமால் வீற்றிருக்கிறான் என்றும், அவனுக்கு நித்யஸூரிகள் பணிபுரிகிறார்கள் என்று வேதம் கூறுவதாகவும் முழங்குகின்றனர். மூன்றாம் பரிபாடலில் ''மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி மா அயோயே'' என்றும், பதினைந்தாம் பரிபாடலில் ''வீறுபெறு துறக்கம்'' என்றும், ''அரிதின் பெறு துறக்கம்'' என்றும் இந்த வீட்டுலகை அடைந்தவர்களுக்கு மறுபிறவி இல்லை என்று சொல்லப்பட்டது. ''ஏறுதல் எளிதோ'' என்றதாலே இவ்வீட்டுலகை அடைய அர்ச்சிராதிகதியாலேஏறிச்செல்லவேண்டும் என உணர்த்தப்பட்டது. ''தாமரைக் கண்ணன் உலகு'' என்று இவ்வீட்டுலகம் திருமாலுடையது எனத் திருவள்ளுவராலும் திருக்குறளில் குறிக்கப்பட்டது.

வேதங்களையும், கீதையையும் மேலான பிரமாணமாகக் கொண்ட இச்சான்றோர்களின் வழிவந்த ஆழ்வார்களும் இவ்வீட்டுலகைப் பற்றிப் பலவிடங்களில் பேசுகின்றனர். ''சூழ்விசும்பணி முகில்'' என்ற திருவாய்மொழியில் நம்மாழ்வார் – பரமபதத்திற்குச் செல்லும்போது முக்தியடையும் ஜீவனை அர்ச்சிராதி கதியிலுள்ள தேவர்களும் வைகுந்தத் தமரரும் வரவேற்றுக் கொண்டாடுவதைக் கூறி, ''வந்து அவர் எதிர்கொள்ள மாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை'' என்று அந்த முக்தஜீவனைப் பரமபுருஷன் எதிர்கொண்டழைக்கிறான் என்றும், அவன் அங்குள்ள அடியார்களோடு சேர்ந்து பேரின்பம் அடைகிறான் என்ம்று அருளினார். ''தேவிமாராவார் திருமகள் பூமி ஏவ மற்றமரர் ஆட்செய்வார்'' என்று ஸ்ரீபூமிதேவிகளோடு கூடிய நாரணனுக்குப் பணிபுரிவதே அங்குள்ளவர்களுக்கு மேலான பயன் என்றும் காட்டினார்.

http://acharya.org

இப்படி ஜீவன் வீட்டுலகம் சென்று பரமாத்மாவை அனுபவிப்பது தாழ்ந்த சகுண பிரம்ம மோக்ஷமே என்றும், ஜீவன் பிரம்மமாகவே ஆகிவிடுவதே உயர்ந்த மோக்ஷம் என்றும் கூறும் சங்கரரின் மாயாவாத அத்வைதக் கொள்கையை,

''கூடிற்ருகில் நல்லுறைப்புக் கூடாமையைக் கூடினல்
ஆடற்பறவை யுயர் கொடி எம் மாயனுவது; அதுவதுவே''

என்னும் பாசுரத்தில்; ''ஜீவன் பிரம்மமாகிவிட முடிந்தால் நல்லதுதான்! ஆனல் முயற்கொம்பு முதலான இல்லாத பொருள்கள் உண்டானல்தான் ஜீவன் கருடவாகனனுன பரம்பொருள் ஆக முடியும். ஜீவன் ஜீவனுகத்தான் இருப்பான்'' என்று கூறி மறுக்கிருர்.

வைகுண்ட ஏகாதசியான இன்று திருவரங்கம் முதலான வைஷ்ணவாலயங்கள் அனைத்திலும், முக்த ஜீவன் அர்ச்சிராதிகதி வழியாகப் பரமபதம் செல்வதை உணர்த்துவது போலே, நம்பெருமாள் முதலான அர்ச்சா மூர்த்திகள் பரமபதவாசலைத்திறந்துகொண்டு திருமாமணிமண்டபம் சேர்வது அமைந்துள்ளது. ஜீவாத்மாவுக்குப் பரமபதம் சென்று பரமனுக்குப் பணிசெய்து அவனை உகப்பிப்பதே மேலான பேறு என்னும் வேதாந்த விழுப்பொருளைத் தாமே அனுபவித்து உலகிற்கு அறிவித்த நம்மாழ்வாரின் நினைவாக—எல்லா திவ்யதேசங்களிலும் இராப்பத்து பத்தாம்திருநாளில் 'ஆழ்வார் மோக்ஷம்' என்னும் உற்சவம் கொண்டாடப்படுவதும், அதில் அர்ச்சாமூர்த்தியான நம்மாழ்வாரை ''சூழ்விசும் பணிமுகில்' என்னும் அர்ச்சிராதிகதி விளக்கத் திருவாய்மொழியை இசைத்துக்கொண்டு எழுந்தருளச் செய்து எம்பெருமான் திருவடிகளில் சேர்ப்பதும், ''அவாவற்றுவீடுபெற்ற குருகூர்ச் சடகோபன்'' என்று நிறைவடையும் திருவாய்மொழியின் இறுதிப்பதிகத்தை அங்கு இசைப்பதும் பலநூற்ருண்டுகளாக அடியார்களால் அனுபவிக்கப் படுகிறது.

http://acharya.org

ஆசார்யர்களின் சமுதாயச் சிந்தனைகள்

[திரு. எஸ். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், எம் ஏ. பி எல்,
அட்வகேட், —(ஸுதர்சனர்) ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
8, பி, புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி 620017]

[தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத் தத்துவ மையத்தில் நடந்த வைணவக் கருத்தரங்கில் 24—8—94 ல் ஆற்றியஉரை]

இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பரிபாடல் முதலான சங்க கால நூல்களில் சங்க காலத் தமிழர் கண்ட வைதிக மதமாக விளங்கும் வைணவம் பிற்காலத்தில் ஆழ்வார்களால் வளர்க்கப் பெற்று, அவர்கள் காலத்திற்குப்பின் கி. பி. 9 வது நூற்றாண்டில் வாழ்ந்த ஸ்ரீமந் நாதமுனிகள் தொடங்கி கி. பி. 14வது நூற்றாண்டில் வாழ்ந்த மணவாள மாமுனிகள் ஈறாக உள்ள பற்பல ஆசாரியர் களால் நிலைநாட்டப்பெற்று, பாரத நாடு முழுவதும் லட்சக்கணக் கான பொதுமக்களின் வாழ்க்கை முறையாக அமையும்படி பிரசாரம் செய்யப்பட்டது. ஆழ்வார்களும், அவர்களை அடியொற்றிய ஆசாரி யர்களும், சங்க காலச் சான்றோர்கள் பரம்பரையில் வந்தவர்கள்; ஆகையாலே சங்க காலத்தில் தமிழ் நாட்டிலிருந்த சமயத் தெளிவும், சான்றோர்கள் காட்டிய சமுதாய நோக்கும், நீதிகளும் மிகவும் மாறிவிட்டது கண்டு மனம் வெதும்பி, சங்க காலத் தமிழர் கண்ட வேதமதமான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தை மறுபடியும் மக்களிடையே பரப்பி அச்சீரழிவைப் போக்கினார்கள். இதை நன்கு உணர, சங்க காலத்திலிருந்த சமய நிலையையும், சமுதாய வாழ்விற்குச் சான்றோர்கள் காட்டிய நெறி முறைகளையும், அவற்றுக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட சீரழிவையும் நாம் சுருக்கமாக ஆராய வேண்டியது அவசியமாகும்.

பரிபாடல்களை ஆராய்ந்தால், எல்லாப் பொருள்களையும் நல்லோர்களுக்குப் புலப்படுத்துகையாலே 'புலம்' என்றும், மற்றவர் களுக்கு மறைக்கையாலே 'மறை' என்றும், ஆசாரியனின் வாய் மூலமாகவும், சீடனின் செவி மூலமாகவுமே பரவுகையால் முறையே 'வாய்மொழி' என்றும் 'கேள்வி' என்றும், ஏட்டில் எழுதப்படாமை யால் 'எழுதாக் கிளவி' என்றும் புகழப்படும் வேதங்களில் திருமால் ஒருவனே அனைத்துலகையும் படைத்து அளித்து அழித்து ஆட்சி புரியும் பரம்பொருள் என்று ஓதப்படுவதாக முழங்கியிருப்பதைக் காணலாம். திருமாலைப் பற்றிய பின்வரும் பரிபாடல் வரிகள் இங்கு சான்றாகக் கொள்ளத்தக்கன.

http://acharya.org

*முதற்பரிபாடல்

"நின் வலவயின் நிறுத்தும் ஏவல் உழந்தமை கூறும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே", "நலம் முழுது அளைஇய புகர் அறு காட்சிப் புலமும், பூவனும் நாற்றமும் நீ", "வாய்மொழிப்புலவ"

*இரண்டாம் பரிபாடல்

"வடு இல்கொள்கையின் உயர்ந்தோர் ஆய்ந்த கெடு இல் கேள்வியுள் நடு ஆகுதலும்", "கேழல் திகழ்வரக் கோலமொடு...... முதுமைக்கு ஊழி யாவரும் உணரா ஆழிமுதல்வ! ......உள்ளுநர் உரைப் போர் உரையொடு சிறந்தன்று". "நின்னது திகழ் ஒளி சிறப்பு இருள் திருமணி, கண்ணே புகழ்சால் தாமரை அலர் இணைப்பிணையல், வாய்மை வயங்கிய வைகல், சிறந்த நோன்மை நாடின் இருநிலம், யாவர்க்கும் சாயல் நினது வான் நிறை என்னும் நாவல் அந்தணர் அருமறைப் பொருளே; அவ்வும் பிறவும் ஒத்தனை, உவ்வும் எவ்வயினோயும் நீயே", "கேள்வியுள் கிளந்த ஆசான் உரையும்—நின் உருபு"

*மூன்றும் பரிபாடல்:

"மா அயோயே! மா அயோயே! மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி மணி திகழ் உருபின் மாஅயோயே! ——மூ ஏழ் உலகமும் உலகினுள் மன்பதும் மாயோய்! நின் வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர வலந்து! வாய்மொழி ஓடை மலர்ந்த தாமரைப் பூவினுள் பிறந்தோனும் தாதையும் நீ என மொழியுமால் அந்தணர் அருமறை!! பதினாயிரம் கை முதுமொழி முதல்வ" "முன்னை மரபின் முதுமொழி முதல்வ!" "கால முதல்வனை; ஏஎ இன கிளத்தலின் இனைமை நற்கு அறிந்தனம்" "வேதத்து மறை நீ" "தொல் இயல் புலவ."

*நாலு, பதின்மூன்று, பதினைந்தாம் பரிபாடல்கள்

"அவை நின் ஓர் அன் ஓர் அந்தணர் அருமறை" (4) "பாப்புப் பகைமயக் கொடியெனக் கொண்ட கோடாச் செல்வனை ஏவல் இன் முதுமொழி கூறும்; சேவல் ஓங்கு உயர் கொடிச் செல்வ நல் புகழவை (13) நலம் புரீஇ அஞ்சீர் நாம வாய்மொழி இது என உரைத்தலின்" (15)

சங்க கால நூல்களான எட்டுத்தொகையில் ஒன்றான பரிபாடலில் இப்போது கிடைக்கும் ஏழு பாடல்கள் திருமாலைப்பற்றியவை; எட்டுப்பாடல்கள் முருகனைப் பற்றியவை. பத்துப்பாட்டில்

---

* இப்பரிபாடல்களுக்கு நமது சாதிமத ஆராய்ச்சி முதல் பாகத்தில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

http://acharya.org

ஒன்றான திருமுருகாற்றுப்படை முழுவதும் முருகனைப் பற்றியது. இவை தவிர எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களிலும், தொல்காப்பியமாகிற இலக்கண நூலிலும் பல இடங்களில் திருமால், பலராமன், சிவன், முருகன், காடுகாள் அல்லது காடுகிழாள் எனப்படும் காளி, இந்திரன், வருணன் முதலான தெய்வங்களைப் பற்றிய பல குறிப்புகளும் வந்துள்ளன.

இவையனைத்தையும் நடுநிலை நின்று ஆராய்ந்தால் "உலகனைத்தையும் படைத்து அளித்து அழிக்கும் உலக முதற் காரணனாயிருக்கை (2) எங்கும் நிறைந்த ஸர்வ வியாபகனாயிருக்கை (3) எல்லாம் அறிந்த ஸர்வஜ்ஞனாயிருக்கை (4) எல்லாம் வல்ல ஸர்வ சக்தனாயிருக்கை (5) மறுபிறப்பு அறுத்து வீட்டுலகை அளிப்பவனாயிருக்கை (6) குணங்கள் அனைத்துக்கும் கொள்கலமாகவும், தாழ்வுகள் அற்றவனாகவும் இருக்கை (7) எவராலும் அளவிட்டு அறிய முடியாத அரும்பொருளாயிருக்கை (8) தேவர்கள் அனைவருக்கும் ஆதிதேவனான தேவாதி தேவனாய் இருக்கை (9) உயிர்களுக்கெல்லாம் இயற்கை உறவினனாயிருக்கை (10) மறைகளில் இப்பெருமைகள் அனைத்தும் உடைய முழுமுதல்வனாய் முழங்கப்படுகை என்னும் பரம்பொருளுக்குரிய தன்மைகளெல்லாம் திருமால் ஒருவனுக்கே சங்க காலச் சான்றோர்களால் கூறப்படுவதையும், மற்ற தெய்வங்களுக்கு இந்தப் பெருமைகள் குறிக்கப் படாததையும் காண்கிறோம். நேர்மாறாக அத்தெய்வங்களுக்கு அவரவர்களுக்குரிய பெருமைகளோடு சில தாழ்வுகளும் கூறப்பட்டிருப்பதைக் காண்கிறோம். திருமாலே பரம்பொருள் எனக்காட்டும் அவனுடைய அவதாரச் செயல்கள் பலபலவும் சங்கநூல்களில் காணக்கிடக்கின்றன. ஆனால் பிற்கால நூல்களில் திருமாலுக்குத் தாழ்வைக் காட்டுவதற்காகக் கூறப்படும் அடிமுடிதேடிய கதை, கண்ணைப் பிடுங்கி அருச்சனை செய்த கதை, மச்சமூர்த்தியை அழித்த கதை, ஆமையின் ஓட்டைப்பிரித்த கதை, வராகத்தின் கொம்பை ஒடித்த கதை, சரபமாகி நரசிங்கனை அழித்த கதை, திரிவிக்கிரமனின் தோலை உரித்துப் போர்த்துக்கொண்ட கதை முதலான புராணக் கதைகளில் ஒன்றுகூட சங்க காலச் சான்றோர்களால் கையாளப்படாதிருப்பதையும் காண்கிறோம். கந்த புராணத்தில் முருகனைப் பிரமன், திருமால், சிவன் ஆகிய மும்மூர்த்திகளைக் காட்டிலும் பெரியவன் என்று காட்டுவதற்காகக் கூறப்படும் செய்திகளில் ஒன்றுகூட முருகனைப் பற்றிய சங்ககாலப் பாடல்கள் எதிலும் காணப்படவில்லை.

http://acharya.org

"உலகம் பொய்; ஜீவனும் பரம் பொருளும் ஒன்று. பரம்பொருளை மாயை மறைக்கையால் உலகத் தோற்றம் உண்டாகிறது" என்று கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஆதி சங்கரர் நிலைநாட்டிய அத்துவைதக் கொள்கைகள் சங்க நூல்களில் எங்குமே காணப்படவில்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழிப் பெரும் புலவனான காளிதாசன் தனது குமார சம்பவம் முதலான காவியங்களில் 'மும்மூர்த்திகளான திருமால், பிரமன், சிவன் ஆகிய மூவரும் ஒரே பரம்பொருளின் மூன்று வடிவங்களே'' என்று கூறிய திரிமூர்த்தி ஐக்ய வாதமும் சங்க நூல்களில் எங்கும் காணப்படவில்லை. உலகனைத்துமாயிருக்கை என்னும் பெருமை திருமால் ஒருவனுக்கே கூறப்பட்டது. அதற்குக் காரணம் அனைத்துலகையும் உடலாகக் கொண்டு அவற்றை வியாபித்து அந்தர்யாமியாயிருக்கையே ஆகும் என்னும் விசிஷ்டாத்வைத மதத்தின் தனிப்பெரும் கொள்கை சங்க நூல்களில் பலவிடங்களில் முழங்கப்பட்டது. ''செடுஇல் கேள்வியுள் நடு ஆகுதலும்'' என்று இரண்டாம் பரிபாடலிலும், ''இனைத்து என எண் வரப்பு அறியா யாக்கையை'', ''அனைத்தும் நீ அனைத்தின் உட்பொருளும் நீ ஆதலின்'' என்று மூன்றாம் பரிபாடலிலும், ''இவ்வும், உவ்வும், அவ்வும், பிறவும் ஏமம் ஆர்ந்த நிற்பிரிந்து, மேவல் சான்றன எல்லாம்'' என்று நாலாம் பரிபாடலிலும், ''அதனால் நின் மருங்கின்று மூ ஏழ் உலகமும்'' என்று பதின்மூன்றாம் பரிபாடலிலும் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டது. இவ்வண்ணமாகச் சங்க காலத்தில் சான்றோர்களிடையே சமயத் தெளிவு சிறப்பாகக் காணப்படுகிறது. பிற்காலத்தில் எழுந்த பல மதங்கள் சங்க காலத்தில் சான்றோர்களால் ஆதரிக்கப்படவில்லை என்றும் விளங்குகிறது.

சமய நிலை இவ்வாறிருக்க, சான்றோர்கள் கைக்கொண்டு பிறர்க்கும் உபதேசித்த ஒழுக்க நெறிகள் சங்க காலத்தில் எவ்வாறிருந்தன என்பதை இனி ஆராய்வோம்.

''நூலே கரகம் முக்கோல் மணையே ஆயுங்காலை அந்தணர்க்குரிய''

[(1) பூணூல் (2) கரகம் எனப்படும் பாத்திரம் (3) முக்கோல் எனப்படும் திரிதண்டம் (4) வீற்றிருப்பதற்குரிய மணை என்னும் நான்கும் முற்றும் துறந்த முனிவர்க்கு உரியவை.] என்று தொல்காப்பியர் கூறுவதிலிருந்து பூணூலும், திரிதண்டமும் தரித்த வைணவ சந்நியாஸிகளே சங்க காலத்தில் வாழ்ந்துவந்தனர் என்று விளங்குகிறது. கலித்தொகை பாலைக் கலியில் (37) ''உறித்தாழ்ந்த கரகமும், உரைசான்ற முக்கோலும் நெறிபடச்சுவலசை இ வேறேரா நெஞ்சத்துக் குறிப்பேவல் செயல் மாலைக் கொளை நடை அந்தணீர்!

http://acharya.org

வெவ்விடைச் செலன் மாலை ஒழுக்கத்தீர்!" என்று சங்க காலத்தில் அந்தணர் எனப்பட்ட சந்நியாஸிகள் கரகமும், சிறந்த முக்கோலும் உடையவராய் சிஷ்யர்களோடு யாத்திரையாய்ச் சென்று கொண்டிருப்பார்களென்றும், அவர்கள் இறைவன் திருவடியன்றி வேறு இன்பங்களைக் கருதாதவர் என்றும், தலைசிறந்த ஒழுக்கத்தை உடையவர்களென்றும் கூறப்பட்டுள்ளது. நெய்தற் கலியில் "முக்கோல் கொள் அந்தணர் முதுமொழி நினைவார்போல்" என்று இந்த முக்கோற்பகவர் முதுமொழியாகிற வேதத்தையே எப்போதும் நினைத்திருந்தனர் எனக் கூறப்பட்டது. "முக்கோற்பகவர்" என்று சங்க இலக்கியங்களில் பல இடங்களில் இவர்கள் குறிக்கப்படுகையாலே, பாகவத தர்மத்தை அநுட்டிக்கும் ஸ்ரீவைஷ்ணவ சந்நியாஸிகளே இவர்கள் என விளங்குகிறது. பூணூலும் திரிதண்டமும் இல்லாத சைவ சந்நியாசிகளைப் பற்றியோ, பூணூல் இல்லாமல் ஏகதண்டம் ஏந்திய அத்வைத சந்நியாசிகளைப் பற்றியோ சங்க நூல்களில் எங்கும் குறிப்பு காணப்படவில்லை.

சங்க நூல்களில் முக்கோற்பகவர்கள் ஓரிரவுக்கு மேல் ஓர் ஊரிலும் தங்காமல் ஊர் ஊராகச்சென்று மக்களுக்குப் பரம் பொருளிடம் பக்தியையும் நல்லொழுக்கத்தையும் உபதேசித்து வந்தனர் என்பது அந்நூல்களைக் காண்பார்க்கு எளிதில் விளங்குகிறது. 'முக்கோற்பகவரை வினவுதல்' என்னும் துறை ஒன்று சங்க நூல்களில் காணப்படுகிறது. இது அக்கால மக்கள் அந்த முக்கோற்பகவர்களிடம் மிகுந்த மதிப்புக் கொண்டிருந்தனர் என்று காட்டுகிறது.

சங்க காலத்திலும் பாமர மக்களிடம் பொய், களவு, உயிர்க் கொலை செய்து புலால் உண்ணல், கள்ளுண்ணல் முதலான தீய ஒழுக்கங்கள் இருந்தன; புலாலையும், கள்ளையும் பலியாகக் கேட்கும் சிறு தெய்வங்களின் வழிபாடும் இருந்தது. அந்தத்தீய ஒழுக்கங்களையும், சிறு தெய்வ வழிபாட்டையும் விலக்க வேண்டுமென்று ஊர் ஊராகச்சென்று மக்களுக்கு உபதேசிக்கும் கடமையை இந்த முக்கோற்பகவர்கள் செய்து வந்தார்கள் என்று விளங்குகிறது.

சங்க காலத்தையொட்டி, திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் முக்கோற்பகவர்களால் உபதேசிக்கப்பட்ட நல்லொழுக்கங்கள் அனைத்தும் தொகுத்துக் கூறப்பட்டன. அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலையே விளக்க வந்தமையால் வள்ளுவனார் பரம்

http://acharya.org

பொருள் தத்துவத்தைப் பற்றியும் வீட்டைப் பற்றியும் தம் நூலில் விரிவாகப் பேசவில்லை. ஆயினும், முதலதிகாரமான கடவுள் வாழ்த்தில் முதல் குறளிலேயே முக்கோற்பகவர்களால் பரம்பொருளாகக் கொள்ளப்பட்ட ஆதிபகவனாகிற திருமாலே உலகுக்குக் காரணமானவன் என்று உணர்த்தினார். அவ்வதிகாரத்தில் மேல் பாடல்களால் அவனுடைய திருவடிகளைத் தொழுபவர்களுக்கே இம்மை மறுமை இன்பங்கள் கிட்டும் எனத் தெளிவாகப் பேசினார். இந்தப்பெருமைகள் சங்கநூல்களில் திருமாலுக்கே கூறியிருப்பதால் சங்ககாலத்தையொட்டி வாழ்ந்த திருவள்ளுவரும் 'ஆதிபகவன்', 'வாலறிவன்', 'மலர்மிசையேகினான்', 'வேண்டுதல் வேண்டாமையிலான்', 'இருவினையும் சேரா இறைவன்', 'பொறிவாயில் ஐந்தவித்தான்', 'தனக்குவமை இல்லாதான்', 'அறவாழி அந்தணன்','எண்குணத்தான்','(பிறவிப் பெருங்கடல் நீந்துவிக்கும்) இறைவன்', என்னும் திருப்பெயர்களால் சங்க காலத் தமிழர் கண்ட பரம்பொருளையே குறித்தார் என எளிதில் அறுதியிடலாம். இத்துடன் நில்லாமல் பொருட்பாலிலும் ''மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான் தாஅயதெல்லாம் ஒருங்கு'' (610) என்று உலகனைத்தையும் அளந்த திரிவிக்கிரமனைப் பற்றிப் பேசுகிறார். காமத்துப் பாலிலும் 'தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல் தாமரைக் கண்ணான் உலகு' (1108) என்று தலைசிறந்த வீட்டுலகம் தாமரைக் கண்ணனான திருமாலின் உலகமே என்று நிலைநாட்டினார். ஆகையால் சங்ககாலத்தில் முக்கோற்பகவர் ஊர் ஊராகச்சென்று உபதேசித்த நல்லொழுக்கங்களையே திருவள்ளுவர் தம் முப்பாலில் தொகுத்துரைத்தார் என்பது தெளிவு.

சங்க காலத்தில் வாழ்ந்த இந்த முக்கோற்பகவர்கள் வழிவந்தவர்கள் ஆழ்வார்கள். ''சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர் ஒன்றினர் அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீரரங்கமே'' (திருச்சந்தவிருத்தம் 52) என்னும் திருமழிசையாழ்வாரின் பாசுரத்திலிருந்து, ஆழ்வார்கள் காலத்திலும் முக்கோற்பகவர்கள் ஊர் ஊராகச் சுற்றி பகவத் பக்தியையும், நல்லொழுக்கத்தையும் உபதேசித்து வந்தார்கள் என்று விளங்குகிறது. ஆழ்வார்கள் காலத்தில் சிறு தெய்வங்களை வணங்கி வந்தவர்கள் தங்கள் தெய்வமே பரம்பொருள் என்று வாதிடும் நிலை விளைந்துவிட்டது. சங்க காலத்தில் நிலவியசமயத்தெளிவுநீங்கி,சமயக்குழப்பம் மிகுதியாகிவிட்டது. நரபலியை நடைமுறையில் கொண்ட காபாலிகம், காளாமுகம் முதலான மதங்களும், ஆடு, கோழி முதலிய உயிர்களைப் பலிகொடுக்

http://acharya.org

கும் காளி வழிபாடும் நாடெங்கும் பரவி விட்டன. இதனால் வள்ளுவர் காட்டிய கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல் முதலான நல்லொழுக்கங்கள் பெரும்பாலும் நாட்டைவிட்டு மறைந்து விட்டன. இந்நிலைக்கு முக்கியகாரணம் நரபலியையும், உயிர்ப்பலியையும் கேட்கும் சிறு தெய்வவழிபாடே என்றுணர்ந்த ஆழ்வார்கள் 'ஓ ஓ உலகினதியல்வே! படைத்திடந்துண்டு உமிழ்ந்து அளந்து தேர்ந்து உலகளிக்கும் முதற்பெருங்கடவுள் நிற்ப, புடைப்பல தானறி தெய்வம் பேணுதல்..... கொல்வன முதலா அல்லன முயலும்'' (திருவாசிரியம் 6) ''அணங்குக்கு அருமருந்தென்று அங்கோரடும் கள்ளும் பராய், சுணங்கையெறிந்து நும் தோள் குலைக்கப்படும் அன்னைமீர்'' (திருவாய்மொழி 4-6-7) ''நீர் எதுவானும் செய்து அங்கோர்கள்ளும் இறைச்சியும் தாவேன்மின்'' (திருவாய்மொழி 4-6-8) என்று தீயவொழுக்கங்களுக்கு மூலகாரணமான சிறுதெய்வ வழிபாட்டை விலக்கும்படியும், கழியமிக்க பெரும் தெய்வமான திருமாலையே வழிபடும்படியும் மக்களுக்கு உபதேசித்துப் போந்தனர். இதன் பலனாக மக்களில் ஒருபகுதியினர் திருந்தினர். காபாலிகம், காளாமுகம் முதலான மதங்கள் சிறிது சிறிதாக மறையத் தொடங்கின.

இந்த ஆழ்வார்கள் வழித்தோன்றல்கள் தான் ஆசாரியர்கள். முக்கோற்பகவர்களின் தலைவராய், 'எதிராசர்' என்றும் 'எதிகட்கிறைவர்' என்றும் உலகம் போற்ற நிற்கும் ஸ்ரீராமானுஜரை நடு நாயகமாகக் கொண்ட இந்த ஆசார்யர்கள் சங்க காலத் தமிழர் கண்ட வைதிக சமயமாய், ஆழ்வார்களால் நிலைநாட்டப்பெற்றதான விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ மதத்தையும், அதனுடன் இரண்டறக் கலந்து பிரிக்க முடியாத நல்லொழுக்கத்தையும் பாரத தேசமெங்கும் பரப்பினார்கள், 'மாயாவாதம்' முதலான மதங்கள் வேத சாத்திரங்களுக்குப் பொருந்ாதவை என்று நிலைநாட்டினார்கள். '' 'உலகம் பொய்' என்றும் 'ஜீவனும் பரம்பொருளும் ஒன்றே' என்றும் உணர்ந்த மாயாவாத சந்நியாசிகளுக்கே பரம்பொருளோடு இரண்டறக் கலக்கையாகிற மோட்சம் உண்டாகும். இல்லறத்தில் வாழும் மற்றவர்களுக்கு மோட்சம் இல்லை'' என்று கூறிய ஆதிசங்கரரின் மதத்தை மறுத்து, ''உலகம் பொய் என்பது தவறு, அது பரம்பொருளான திருமாலின் செல்வமும் அவன் உறையும் கோயிலுமாகும். விஷ்ணுவின் பரமபதம் என்று வேதங்களாலும், 'வீறு பெறு துறக்கம்' என்றும்

http://acharya.org

'அரிதின் பெறு துறக்கம்' என்றும், 'உரிதமர் துறக்கம்' என்றும், 'தாமரைக் கண்ணான் உலகு' என்றும் சங்க காலச் சான்றோர்களாலும் கூறப்பட்ட திருமால் உலகிற்குச் சென்று பேரின்பத்தை அடைந்து அவனுக்குத் திருவடிக் குற்றேவல் செய்வதே மக்களுக்குப் பெரும் பேருகும். இப்பேற்றை எல்லாச் சாதியினரும் எல்லா ஆச்ரமத்தைச் சேர்ந்தவரும், ஆண்பெண் இருபாலரும் திருமாலையே சரணடைவதால் பெறலாம்'' என்று நிலைநாட்டினர்கள் இவ்வாசாரியர்கள். திருக்குறளில் காட்டப்பட்ட நெறிமுறைகளின்படி தாமும் வாழ்ந்து பிறரையும் வாழவைத்தார்கள். ''திருமாலிடம் பயன் கருதாது அன்பு செலுத்துகிறவர்களுக்குப் பிறப்பால் உண்டான தாழ்வுகள் கழிந்துவிடும். அவர்கள் உடலால் உண்டான பண்டைக் குலத்தைத் தவிர்ந்து, அறிவாலும் ஒழுக்கத்தாலும் உண்டான தொண்டக்குலத்தில் சேர்ந்து விடுவார்கள். அவர்களைச் சாதியையிட்டுத் தாழ நினைப்பது பெரும்பாவமாகும். அவர்கள் சிறந்த இறையுணர்வு உள்ளவர்களானால், குலத்தால் வேளாளரான நம்மாழ்வாரிடம் அந்தணரான மதுரகவியாழ்வார் சீடராயிருந்தது போல, பிறப்பைப் பார்த்துத் தாழநினையாமல், பரம்பொருள் உபதேசமும் பெறலாம்'' என்று வலியுறுத்தினர்கள். ஸ்ரீராமானுஜருடைய ஆசாரியரான பெரியநம்பி என்னும் அந்தணர் தம்முடைய ஆசாரியரான ஆளவந்தாரின் சீடராய், தலைசிறந்த ஆசாரிய நிஷ்(ட்)டையை உடையவரான மாறனேர் நம்பிக்கு அவர் பிறந்த குலத்தின் தாழ்வைக் கருதாது, அவருடைய விருப்பப்படி அவர் பரமபதம் அடைந்தவுடன் தலைசிறந்த ஞானிகளுக்குரிய பிரம்மமேதச் சடங்கின்படி அவருக்கும் தாமே இறுதிச் சடங்கைச் செய்தார். ஸ்ரீராமானுஜரும் பிள்ளை உறங்காவில்லிதாசர் என்னும் நாலாவது வர்ணத்தைச் சேர்ந்த தம் சீடரைத் தொடுவதாலே தாம் பரிசுத்தி பெறுவதாகக் கருதி நீராடிய பின்பு அவர் கையைப் பிடித்துக்கொண்டு வருவதை வழக்கமாகக் கொண்டார்.

இவ்விடத்தில் வார்த்தாமாலை என்னும் நூலில் காணப்படும் பின்வரும் வரலாறு காணத்தக்கது. (இருநூற்று எண்பத்து மூன்றும் வார்த்தை). ''நடாதூராழ்வான் ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் கையைப் பிடித்துக்கொண்டு போகா நிற்க, நடுவில் திருவீதியிலே ஒரு திருக்குலத்தில் (தாழ்த்தப்பட்ட குலத்தில்) ஸ்ரீ வைஷ்ணவர் அணுகிவர, கைகொடுத்துக்கொண்டு போகிற ஸ்ரீ வைஷ்ணவர் அவரை ஜாதி நிரூபணம் பண்ணி ''கடக்கப் போ'' என்ன, ஆழ்வான்

http://acharya.org

அத்தைக் கேட்டு மூர்ச்சித்தார். மூர்ச்சை தெளிந்த பின்பு அருகு நின்ற ஸ்ரீ வைஷ்ணவர்கள் 'இதுவென்' என்ன: 'திருக்குலத்திலே திருவவதரித்து இரண்டாற்றுக்கும் நடுவே வர்த்திக்கப் பெற்ற (வாழப் பெற்ற) மஹாநுபாவனு பறையன்? நெடுங்காலம் ஆத்மாபஹாரம் பண்ணித் திரிந்த நானன்றோ பறையன்!' என்று அருளினார்.''

இவற்றிலிருந்து ஆசாரியர்கள் ஜாதி வேற்றுமையால் விளையும் தீமைகளைக் களைய அரும்பாடுபட்டனர் என்று விளங்குகிறது. தம் வாழ்வாலும் உபதேசத்தாலும் மக்கள் நல்லொழுக்கங்களையும் நற்குணங்களையும் கைக்கொள்ளும்படி செய்தனர் ஆசார்யர்கள். ''ஒருவன் துன்புறுவது காணும்போது 'ஐயோ' என்று இரங்கினானாகில் அவனுக்கு வைஷ்ணவத்வம் உண்டு என்றும், 'இவனுக்கு இவ்வளவும் வேணும்' என்று நினைத்தானாகில் அவனுக்கு வைஷ்ணவத்வம் இல்லை என்றும் அறுதியிடலாம்'' என்று நஞ்சீயர் என்னும் ஆசாரியர் வைஷ்ணவ லக்ஷணம் உரைத்தது இங்கு குறிக்கொள்ளத் தக்கது. ''அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய் தந்நோய் போலப் போற்றாக்கடை'' (திருக்குறள் 315) என்று திருவள்ளுவரும் அறிவுடையவர்களுக்கு இத்தன்மையை இலக்கணமாகக் கூறியுள்ளது இங்கு காணத்தக்கது.

ஒருவன் நமக்குத் தீங்கு செய்தால் அவனிடம் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறையை ''குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும், க்ருபையும், சிரிப்பும், உகப்பும், உபகார ஸ்ம்ருதியும் நடக்க வேணும்'' என்று பிள்ளை உலகாசிரியர் ஸ்ரீ வசநபூடணத்தில் அறுதியிட்டார். இதற்கு உரையிட்ட மணவாள மாமுனிகள் இந்தச் சூத்திரத்தைப் பின்வருமாறு விளக்குகிறார். (1) பொறை—மற்றவன் இழைத்த தீங்குக்குத் தாம் பழிவாங்க எண்ணாமல் மனத்தாலும் கோபம் கொள்ளாமல் இருக்க வேண்டும். (2) க்ருபை-நாம் பொறுத்திருந்தாலும் எம்பெருமான் இவனுக்கு தண்டனையை அளித்து விடுவானே; அதற்கு என் செய்வோம்! என்று வருந்தியிருக்க வேண்டும். (3) சிரிப்பு:-''இவர்கள் நம்மைக் கடுஞ்சொல் பேசுவது முதலான செயல்களாலே நமக்குப் புகழ் பொருள் முதலானவற்றைக் குறைக்க நினைத்து, அதனால் நாம் வருந்துவோம் என்று எண்ணுகிறார்களே! புகழ் பொருள் ஆகியவற்றை ஒரு பொருளாகக் கருதாத நாம் இதனால் வருந்தமாட்டோம் என்று அறிகின்றிலரே! நம்மிடமுள்ள ஞானம் பக்தி முதலான நற்பண்புகளை இவர்களால் எதுவும் செய்துவிட இயலாதே! என்று அவர்களுடைய அறிவின்மையைக் கண்டு சிரித்திருக்க வேண்டும். (4) உகப்பு: —அவர்கள் பண்ணும் அவமதிப்புமுதலானவை நம்முடைய சரீரத்தைக்குறித்தே;

http://acharya.org

அவர்கள் பொருள் புகழ் முதலானவற்றையே நம்மை இழக்கச் செய்கிறார்கள். இந்த சரீரம் பொருள் புகழ் முதலானவற்றை விட்டுப் பரம்பொருளை அடைவதே பெருமேறாகக் கருதியிருக்கும் நமக்கு இவர்கள் உதவுகிறார்கள் என்று உகந்திருக்க வேண்டும். (5) உபகார ஸ்ம்ருதி: 'நம்முடைய குற்றங்களை நாம் மறந்திருக்கும்போது நமக்கு அவற்றை இவர்கள் உணர்த்தினார்களே; இவர்களுக்கு நாம் என்ன கைம்மாறு செய்வோம்'' என்று நன்றி பாராட்ட வேண்டும்.

ஆசார்யர்கள் இந்த நற்பண்புகளைப் பிறர்க்கு உபதேசிப்பதோடு நில்லாமல் தாமும் தம் வாழ்க்கையில் அனுஷ்டித்துக் காட்டினார்கள் என்பதை குருபரம்பரை நூல் முதலானவற்றில் காணலாம்.

ஸ்ரீபராசர பட்டரைப் பற்றிய பின்வரும் ஐதிஹ்யம் இதற்குச் சிறந்த சான்றாகும். ஒரு நாள் ஸ்ரீபராசர பட்டர் ஸ்ரீரங்கம் கோயிலில் நம்பெருமாளைச் சேவித்துக்கொண்டிருக்கும்போது பெருமாளுக்குத் தொண்டு செய்யும் ஒருவர் பட்டரைப் பார்த்துக் கடும் சொற்கள் பேசினாராம். பட்டரைச் சேர்ந்த சிலர் அவரைக் கடிந்து வார்த்தைசொல்ல முற்படுகையில், பட்டர் தம்மைக் கடிந்து பேசியவருக்குத் தாம் அணிந்திருந்த ஆபரணம் ஒன்றைப் பரிசாக அளித்து ''குற்றங்களுக்கெல்லாம் கொள்கலமான அடியேன் பெருமாள் திருமுன்பே அவற்றை விண்ணப்பிக்க வேண்டியது கடமை; அந்தக் கடமையை நாம் மறந்திருக்கும்போது இவர் பெருமாள் திருமுன்பே என் குற்றங்களை விண்ணப்பித்தது நமக்குச் செய்த பெரிய நன்மையன்றோ. இவர் நமக்குச் செய்த இந்த நன்மைக்குப் பரிசளிக்கவேண்டுமே அல்லாது கடுஞ்சொல் பேசலாமோ'' என்றாராம். நம்பிள்ளை என்னும் பேராசிரியர் தம்மை இகழ்ந்த கந்தாடை தோழப்பரை வீடு தேடிச் சென்று மன்னிப்பு வேண்டி நின்று அவரால் 'நீரே லோகாசார்யர்' என்று பாராட்டப்பெற்றார் என்னும் வரலாறு காணத்தக்கது.

அனைத்துயிர்களிடமும் கருணைகாட்ட வேண்டும் என்பதையும் ஆசார்யர்கள் தம் ஒழுக்கத்தாலே காட்டினார்கள். ஸ்ரீ ராமானுஜரின் சீடரும் பட்டரின் ஆசார்யருமான கோவிந்தர் என்னும் எம்பார் ஒரு நந்தவனத்திலே ஒரு பாம்பு தன் நாவிலே முள் தைத்ததாலே நாக்கை நீட்டிக்கொண்டு வருந்துவதைக் கண்டு அப்பாம்பின் வாயில்கையைவைத்து முள்ளை எடுத்து, அதன் துன்பத்தைப் போக்கினார் என்னும் வரலாறு குருபரம்பரை நூலில் காணப்படுகிறது.

பாம்பின் வாயிலகப்பட்ட தவளையின் கூக்குரலைக் கேட்ட ராமானுஜரின் சீடரான கூரத்தாழ்வான் ''ஐயோ! இது யார் தன்னைக்

http://acharya.org

காப்பார் என்று கருதிக் கூப்பிடுகிறதோ?'' என்று மயக்கமடைந்தார் என்று வாரலாறு வார்த்தாமாலை முதலான நூல்களில் காணப்படுகிறது. இதிலிருந்து உயிர்களின் துன்பம் கண்டு பொறுக்காமையிருப்பதும், உயிர்களின் நன்மையையே தனக்குப் பயனாகக் கொள்ளுதலும் ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம் என்று பூர்வாசார்யர்கள் அறுதியிட்டிருந்தார்கள் என்று விளங்குகிறது.

இவ்வுலகத் துன்பங்களுக்கெல்லாம் மூல காரணம் பொருளாசையே ஆகும் அந்தப் பொருளாசையை அறவே ஒதுக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டினார்கள் ஆசார்யர்கள். ''நிதியைப் பொழியும் முகிலென்று நீசர் தம் வாசல் பற்றித் துதிகற்றுலகில் துவள்கின்றிலேன்'' என்று திருவரங்கத்தமுதனார், சான்றோர் வாழ்க்கைநெறியை இராமானுசநூற்றந்தாதியில் விளங்கக்காட்டினார். வித்யாரண்யர் என்னும் அத்வைதியான பெரியவர் தம் நண்பரான ஸ்ரீ வேதாந்த தேசிகருக்கு ''அரசவைக்கு வந்து அவைப் புலவராய் இருந்து செதியாக வாழலாம்'' என்று ஸ்ரீமுகம் (கடிதம்) எழுதிய போது, வேதாந்த தேசிகர் 'வைராக்ய பஞ்சகம்' என்னும் ஐந்து சுலோகங்களை வடமொழியில் அவருக்குப் பதிலாக எழுதி அனுப்பினார். அதில் ''மன்னா மனிசரைப்பாடிப் படைக்கும் பெரும் பொருள் நமக்குத் தேவையில்லை. செருக்குப் படைத்த செல்வந்தர்களின் வீட்டுத் திண்ணையில் காத்திருந்து போதுபோக்குவதற்கு ஒரு கும்பிடு என் தகப்பனார் பொருளீட்டியதும் ஒன்றும் இல்லை. தான் பொருளீட்டியதும் ஒன்றுமில்லை. ஆனால் பிதாமகனுடைய (1. பிரமனுடைய 2. பாட்டனுருடைய) செல்வமான காஞ்சிவரதன் அத்திகிரியின் மேல் விளங்கா நிற்கிறான்'' என்று கூறினார் ஸ்ரீவேதாந்த தேசிகர். அரசர் போல் வாழ்ந்த கூரத்தாழ்வான் தம்முடைய மனைவியான ஆண்டாளுடன் கூரத்திலிருந்து தம் அரசவாழ்வைத்துறந்து விட்டு ஸ்ரீரங்கத்திற்கு வரும்போது வழியில் ஒரு காட்டுப்பகுதியில் நடக்கையில் 'இங்கு திருடர் பயம் உண்டோ?' என்று ஆண்டாள் வினவினார். 'மடியில் கனமிருந்தால் வழியில் பயமிருக்கும். உன் மடியில் ஏதேனும் கனம் இருக்கிறதோ?' என்று கேட்டார் கூரத்தாழ்வான். இதற்கு ஆண்டாள் 'தேவரீர் தினமும் பாலமுது உண்ணும் பொன் வட்டிலை மட்டும் தேவரீருக்காகக் கொண்டு வந்திருக்கிறேன்' என்றாராம். உடனே கூரத்தாழ்வான் அந்தப் பொன்வட்டிலை வாங்கி அருகிலிருந்த புதருக்குள் வீசி எறிந்துவிட்டு 'இப்போது பயமில்லையே' என்றாராம்.

ஆசார்யர்களின் காலத்தில் அவர்களோடு தொடர்புடைய பெண் பிள்ளைகளுக்கும் சமுதாயத்தில் மிகுந்த மரியாதையும் மதிப்பும் அளிக்கப்பட்டது. அவர்களுக்குள் தலைசிறந்த ஞானிகளும் இருந்தனர். ஆழ்வானின் தேவியாரான ஆண்டாள் தம் திருக்குமாரரான

பராசரபட்டர் இவ்வுலகை விட்டுப்பிரிந்தபோது "அவர் பரமபத நாதன் திருவடியை அடைந்திருக்கும்போது நாம ஏன் வருந்த வேண்டும்" எனச் சிறிதும் வருத்தமற்றிருந்தாராம். தம் அண்ணன் பிரிந்ததைக் கண்டு வருந்தி அழுத தம்பியான சீராமப்பிள்ளையைப் பார்த்து "அவர் பெற்ற பேற்றைக் கண்டு தாயாதிக் காய்ச்சலாலே பொருமைப்படுகிருயோ?" என்று கேட்டாராம்.

பிள்ளையுறங்காவில்லிதாசர் என்னும் ராமானுஜரின் சீடருடைய மனைவியான பொன்னாச்சியார் சிறந்த வைராக்யமுடையவளாய் வாழ்ந்தாள். அவள் அணிந்திருந்த நகைகளை அவள் தூங்கும் போது சில ஸ்ரீவைஷ்ணவர்கள் திருட முயல்வதைக்கண்டு மறு பக்கம அணிந்திருந்தநகைகளையும்அவர்கள் எடுத்துக்கொள்ளவசதி யாகப் புரண்டுபடுத்தாளாம். பிள்ளை உறங்காவில்லிதாசர் பரமபதம் அடைந்தவுடன் அவர் நியமித்தபடி அவருடைய மனைவியான பொன்னாச்சியார் தம் வருத்தத்தை வெளிக்காட்டாமல் அவருடைய ஈமச்சடங்குகளுக்குச் செய்யவேண்டிய உதவிகளைச்செய்த பிறகு அவரைப் பிரிந்த வருத்தத்தாலே அப்போதே உயிரைவிட்டார் என்னும் வரலாறும் குருபரம்பரை நூலிலே காணப்படுகிறது. திருக் கோட்டியூர் நம்பியின் குமாரியான தேவகிப் பிராட்டியும், பெரிய நம்பியின் குமாரியான அத்துழாயும் தலைசிறந்த ஞானியராய், தம் ஆசார்யரான எம்பெருமானாரிடம் மிகுந்தபக்தி கொண்டவராய் வாழ்ந் தனர். மற்றும் பலரும் உண்டு.

இவ்வண்ணமாக முக்கோற்பகவர்களும், திருவள்ளுவரும் காட்டிய வாழ்க்கை நெறிமுறைகளை ஆசாரியர்கள் வாழ்ந்து பிறர்க்கு உபதேசித்தும் போந்தார்கள் இதனால் லட்சக்கணக்கான மக்கள் அந்த நெறிமுறைகளைக் கைக்கொண்டார்கள். இதன் விளை வாக, காபாலிகம் காளாமுகம் முதலிய வன்முறை மதங்கள் அடி யோடு மறைந்து, புலாலுண்ணுமை, கள்ளுண்ணுமை முதலான நெறிமுறைகளைப்பின்பற்றும் சைவ சித்தாந்த நெறிமுறை உருப் பெற்றது உயிர்ப்பலியில்லாத சக்தி கோயில்களும் உண்டாயின.

சங்ககாலச் சான்றோர்களும், முக்கோற்பகவர்களும், திருவள்ளு வரும் வலியுறுத்திய தலைசிறந்தவாழ்க்கை நெறிமுறைகளைக்கண்டிப் பாக வலியுறுத்தியபடியால் ஆசார்யர்களுடைய சமுதாயச் சிந்தனை கள் பெரும்பான்மையினரால் பின்பற்ற இயலாதவையாய், சிறுபான் மையோரால் கடைப்பிடிக்கப்படுபவையாய் இருந்துவருகின்றன. இத்தகைய சிந்தனைகளை அனைவரும் கைக்கொள்ளும்படி செய்ய முயல்வதே நம் நாட்டில் இன்று காணப்படும் வகுப்புக் கலவரங்கள் வன்முறைகள் முதலானவற்றை அறவே ஒழிக்கும் வழியாகும்.

http://acharya.org

* வேதாந்த தேசிகரின் சிந்தனைகள்

வழங்குபவர்

ஸுதர்சனர் ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் MABL,
ஆசிரியர், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்
38, புத்தூர் அக்ரஹாரம், புத்தூர், திருச்சி—620017

1. வேதாந்தங்களுக்கு வெற்றி

மனிதன் தன்னுடைய நலனுக்காக முயல்வது 'ப்ரவ்ருத்தி' எனப்படுகிறது. அந்த முயற்சியிலிருந்து நீங்குவது 'நிவ்ருத்தி' எனப்படுகிறது. சாஸ்திரங்களும் 'ப்ரவ்ருத்தி சாஸ்திரம்', 'நிவ்ருத்தி சாஸ்திரம்' என இருவகைப்படும். வேதங்களில் 'கர்மகாண்டம்' எனப்படும் பூர்வ பாகத்தில் மனிதன் விரும்பும் செல்வம், பெண்டு பிள்ளைகள் முதலான இவ்வுலகப் பலன்களுக்கு இந்திரன் முதலான சிறு தெய்வங்களைக் குறித்துப் பலவகையான யாகங்களைச் செய்ய வேண்டும் என விதிக்கப்படுகிறது. இக்கர்மகாண்டம் ப்ரவ்ருத்தி சாஸ்திரம் எனப்படுகிறது. இந்த முயற்சிகளின் பலனாகக் கிடைக்கும் செல்வம் முதலானவை அற்பமாகவும், நிலை நில்லாதவை யாயும் இருக்கையால் அறிவுடைய சேதநர் முற்கூறிய ப்ரவ்ருத்தி களைக் கைவிட்டு அந்தமில் பேரின்பமான மோக்ஷத்தை அடைய விரும்பவேண்டும் என்று வேதத்தின் பின்பகுதியான ஞான காண்டம் எனப்படும் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்டது. இதனால் இந்த வேதாந்தங்கள் 'நிவ்ருத்தி சாஸ்திரம்' எனப்பட்டன.

வேதாந்தங்களாகிற உபநிஷத்துக்களை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீராமாநுஜரால் நிலைநிறுத்தப் பெற்ற விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தைச் சிறப்பாக நாடெங்கும் பரப்பியதால் வேதாந்தாசாரியர் அல்லது வேதாந்ததேசிகர் என்று ஸ்ரீரங்கநாதப் பெருமானிடமிருந்து பட்டம் பெற்றவராய், கி.பி, 13—14ம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான ஸ்ரீவேங்கடநாதன் என்னும் ஆசாரியர் திருவேங்கடமுடையானின் திருநட்சத்திரமான புரட்டாசித் திருவோணத்தில் அத்திருமலையானின் திருமணியின் அம்சமாக அவதரித்தவர். நூறாண்டு வாழ்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட தென்மொழி வடமொழி நூல்களை அருளிச்செய்த அவர் இவ்வுலகில் ஒவ்வோர் உடலில் வாழும் உயிர்கள் பற்றியும், அவ்வுயிர்கள் அவ்வுடலில் நுகரும் ஜடப்பொருள்கள் பற்றியும், உயிர்களாகிற அறிவுள்ள சேதநர்களையும் அறிவற்ற ஜடப்பொருள்களையும்,

---

* திருச்சி வானொலியில் 1995 மார்ச் 18, 19, 20 தேதிகளில் காலையில் சிந்தனைச் சுடரில் நிகழ்த்திய உரை.

http://acharya.org

இணைத்து வைத்து உலகினை நடத்திச் செல்லும் இறைவனைப் பற்றியும் தம் நூல்களில் வேதாந்தங்களின் அடிப்படையில் விரிவாக ஆராய்ந்து, இவ்வுலகில் உயிர்கள் வாழ்வாங்கு வாழவும், மறுமையில் பேரின்பம் பெறவும் நல்வழிகாட்டியுள்ளார்.

நம் தமிழ் நாட்டில் சங்ககாலம் வரையில் வேத வேதாந்தங்களில் சொன்னபடியே சான்றோர்கள் வாழ்ந்து வந்தனர் என்பது சங்க நூல்களிலிருந்து விளங்குகிறது. சங்ககாலத்திற்குப் பிறகு களப்பிரர்கள் ஆட்சியில் பௌத்தர்கள் புத்தமதத்தைப் பரப்பத் தொடங்கினர், தம்முடைய தர்க்க வாதத்தால் "உலகனைத்தும் பொய், கடவுளும் இல்லை, எல்லாம் சூனியம்" என்னும் வேத வேதாந்தங்களுக்கு மாறான சூனியவாதத்தைப் பரப்பி வந்தனர். இந்நிலையில் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய ஆதிசங்கரர் வேதாந்தங்களையும் தர்க்கங்களையும் கொண்டு இந்தச் சூனிய வாதத்தை மறுத்து, "பல உயிர்களையும் ஜடப்பொருள்களையும் கொண்டதாகக் காட்சியளிக்கும் உலகம் பொய்த் தோற்றமே. அறிவு மாத்திரமான பிரம்மம் ஒன்றே மெய்" என்னும் அத்வைத மதத்தை நிலை நாட்டி, வேதாந்தங்களுக்கு ஓரளவு வெற்றி தேடித் தந்தார்.

"இவ்வுலகிலுள்ள எண்ணிறந்த ஜீவர்கள் என்றும் உள்ளவர்கள். அநாதிகாலமாக அவர்கள் செய்துவரும் நல்வினைகளால் உகப்படைந்தும், தீவினைகளால் கோபமடைந்தும் நிற்கும் இறைவனாகிற திருமால் அவரவர் வினைக்கேற்ப, தேவர், மனிதர், விலங்குகள், பறவைகள், தாவரங்கள் முதலான உடல்களோடு அவர்களைப் பிறக்கவைத்து, இன்பதுன்பங்களை அளித்து வருகிறான். இப்படிப் பிரமன் முதல் புல்லீறாகவுள்ள உலகமனைத்தையும் படைத்து, அளித்து, ஒடுக்கும் இன்புறும் விளையாட்டைச் செய்து வருபவன் தேவாதி தேவனான திருமாலே என்பது வேதாந்தங்களின் முடிவு. ஜீவர்கள் இவ்வுலக வாழ்வுத் துன்பத்திலிருந்து நீங்கி, வீட்டுலகமாகிற வைகுந்தத்தில் அந்தமில் பேரின்பமடைவதற்காகவே, மீண்டும் மீண்டும் இவ்வுலகைப் படைத்து, வேதங்களை அளித்து, தானே பல அவதாரங்களைச் செய்து, ஞானிகளையும் அவதரிக்கச் செய்து உலகினரைத் திருத்துகிறான் அவன்" என்னும் ஸ்ரீராமானுஜரின் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நாடெங்கும் நிலைநாட்டி வேத வேதாந்தங்களுக்கு முழுவெற்றி தேடித்தந்தார் ஸ்ரீவேதாந்ததேசிகர்.

http://acharya.org

2. முற்பட்ட ஆசார்யர்களின் கருத்து

நிவ்ருத்தி சாஸ்திரங்களில் சொல்லப்படும் மோக்ஷத்தின் பொருட்டும் மனிதன் முயற்சி செய்வது சிறந்ததா? முயற்சி எதுவும் இல்லாமல் சாதகப்பறவை மழை நீரை எதிர்பார்த்திருப்பது போல் பரமனின் அருளையே எதிர்பார்த்திருத்தல் சரியா? எனும் வேதாந்தச் சர்ச்சை ஸ்ரீராமானுஜரின் சீடப்பரம்பரையினரிடம் விளைந்தது. தான் மோக்ஷமடைய முயற்சி செய்வதுவும் சுயநலத்தின்பாற்பட்டதாகையாலே அம்முயற்சியினின்றும் நீங்கி, நாதன் தனது அருளைப் பார்த்திருத்தலே சிறந்தது எனும் கருத்து பல ஆசார்யர்களால் வலியுறுத்தப்பெற்றது.

அதாவது—''வேதாந்தங்கள், அனைத்துலகையும் பரமனே இயக்குகிறான் என்றும், அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் முழங்குகின்றன. அப்பரமன் ஜீவர்களுக்கு, அவர்கள் செய்த நல்வினை தீவினைகளை ஒட்டி இன்ப துன்பங்களை அளிக்கிறான் என்றும் கூறுகின்றன. இப்படிப் பரமாத்மாவே உயிர்களை இயக்கி நற்செயல்கள், தீச்செயல்களைச் செய்யும்படி தூண்டுகிறானானால், அவனே சிலருக்கு நற்செயலின் பயனாக இன்பத்தையும், சிலருக்குத் தீச்செயலின் பயனாகத் துன்பத்தையும் அளிக்கலாமா? இது பக்ஷபாதமாகுமே! மேலும், பரமனே ஒருவனைத் தீச்செயலைச் செய்யத் தூண்டிவிட்டு, அவன் அதைச் செய்தபின், தானே நீதிபதியாய் இருந்து அவனுக்குத் தண்டனை வழங்கலாமா? இது கருணை சிறிதும் இல்லாதவன் செய்யும் காரியமாயிற்றே! என்னும் கேள்விகள் எழுகின்றன. இப்படிப் பக்ஷபாதம் கருணையின்மை ஆகிய குற்றங்கள் பரமாத்மாவுக்கு விளையமாட்டா என்று ஸ்ரீவேதாந்ததேசிகருக்கு முற்பட்ட ஆசாரியர்கள் (பின்வருமாறு) விளக்கினர். ஜீவன் ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும், தொடக்கத்தில் பரமாத்மா ஜீவனைச் சுதந்திரமாகவே செயல்படவிடுகிறான். தனக்குப் பரமாத்மா அளித்திருக்கும் பகுத்தறிவைக் கொண்டு ஜீவன் சுதந்திரமாக ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கிய பின்பு, பரமாத்மா அச்செயலுக்கு அனுகுணமாக ஜீவனை மேன்மேலே தூண்டுகிறானாகையாலே, பரமனுக்குப் பக்ஷபாதமோ கருணையின்மையோ விளையாது என்பதே அவர்கள் அளித்த விளக்கம்.

http://acharya.org

"ஜீவர்கள் அனைவர்க்கும் இயற்கை உறவினனுயிருக்கும் பரமாத்மா அந்த ஜீவர்கள் தன்னையடைந்து பேரின்பம் பெறுவதற்காகவே உலகைப் படைத்தல், தானே அவதரித்தல் முதலான அருஞ்செயல்களை அநாதிகாலமாகச் செய்கிறான். இதை உணராமையால் ஜீவர்கள் அற்பமான இவ்வுலகப் பயன்களை விரும்பி நிற்கின்றனர். இப்படித் தான் அளித்திருக்கும் செயல்படும் திறமையைப் பயன்படுத்தி ஜீவர்கள் தம் நலனின் பொருட்டு முயலும்போது, சாஸ்திரங்களின் ஆணையையொட்டி நடந்தால் அப்புண்ணியச் செயல்களின் பயனாக அவர்கள் விரும்பும்பயன்களை அளித்து அவர்களைப் படிப்படியாக முன்னேற்றி அவர்களுக்கு உரியகாலத்தில் இவ்வுலகிலிருந்து விடுதலையடைவதாகிற மோட்சத்தை அடைய வேண்டும் எனும் விருப்பத்தை விளைத்து, அதற்குரிய கர்ம ஜ்ஞான பக்தியோகங்கள் முதலான மோக்ஷஸாதனங்களையும் சாஸ்திரங்களில் காட்டியுள்ளான் பரமன். அப்படி அவர்கள் அடையும் மோட்சம் அணுவான தம் ஆத்மாவைத் தாமே அனுபவிக்கிற தாழ்ந்த கைவல்ய மோட்சம் என்றும், பரமாத்மாவைப் பெற்றுத் தாம் பேரின்பமடைவதாகிற உயர்ந்த மோட்சம் என்றும் இருவகைப்படுகிறது. ஜீவனுக்குப் பரமன் அளித்திருக்கும் சுதந்திரத்தைப் பயன்படுத்திப் பெறும் மோட்சமாகையாலே அவ்விருவகை மோட்சமும் சிறந்தவையல்ல.

"ஜீவனுக்குப் பேரின்பமளித்துத்தான் இன்புறுவதற்குப் பரமன் அநாதிகாலமாக முயலுகிறான்" என உணர்ந்து, மோட்சத்திலும் தம் இன்பத்தைக் கருதாமல் பரமனின் உகப்பையே விரும்பி மோக்ஷஸாதனம் எதையும் அனுஷ்டிக்காமல் அவனது அருளையே எதிர்பார்த்து அவனுக்கேயான வாழ்க்கையை இவ்வுலகில் வாழ்பவர்களுக்கு, எந்தக் கைம்முதலையும் எதிர்பாராமல் மோட்சத்தை நல்கி, தான் இன்பமடைகிறான் பரமன். அவனது உகப்புக்கே உறுப்பான இதுவே தலைசிறந்த மோட்சம்" என்பது முற்பட்ட ஆசார்யர்களின் கருத்து.

இக்கருத்தை ஸ்ரீவேதாந்ததேசிகர் ஏற்கவில்லை. இதை ஏற்றால் மனிதனின் முயற்சிக்குத் தீங்கு விளையும் என்று அவர் கருதினார். மேலும், "மோக்ஷம் என்பது எல்லா வினைகளும் கழிந்தபின் விளைவதொரு நிலை. எல்லாக்கர்மங்களும் கழிந்தபின் மோக்ஷத்தில் தாழ்ந்த மோக்ஷம் உயர்ந்த மோக்ஷம் என இருவகை மோக்ஷங்கள் உண்டாக இடமில்லை," என

http://acharya.org

அவர் உறுதியாகக் கருதினார். அதனாலேயே, 'பரமன் தனக்குப் பக்ஷபாதமும் கருணையின்மையும் விளையாமைக்காக ஜீவனுக்கு ஒவ்வொரு செயலையும் தொடங்கும்போது சுதந்திரமளித்திருக்கிறான்' என்று கொள்ளாமல் 'முன்வினைகளை ஒட்டியே ஒவ்வொரு செயலிலும் பரமன் ஜீவனைத் தூண்டுகிறான்' எனக்கொண்டார்.

3. ஸ்ரீவேதாந்த தேசிகரின் நிர்ணயம்

மனிதன் மோக்ஷத்தைப் பெறுவதற்காகக் கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம் முதலான பல முயற்சிகளைச் செய்யும்படி சாஸ்திரங்கள் ஆணையிட்டிருக்கையால் மோக்ஷத்தின் பொருட்டுத் தன் முயற்சி சிறந்ததன்று என்று கூறுவதை ஸ்ரீவேதாந்த தேசிகர் ஏற்கவில்லை. கடும் முயற்சி செய்து ஹயக்ரீவப் பெருமானைக் குறித்து உபாஸனம் செய்து அவரை நேரே கண்டு அவரிடமிருந்து எல்லா வித்யைகளும் கைவரப்பெற்ற வேதாந்தாசாரியர், மனிதனின் முயற்சிக்கு முக்கியத்துவம் இல்லாமல் போனால் அவன் சோம்பல் வயப்பட்டு வீணாகிவிடுவானோ என்று அஞ்சி "நிவ்ருத்தி சாஸ்திரமான உபநிஷத்துக்களில் கூறப்படும் மோக்ஷத்தின் பொருட்டும் மனிதனின் முயற்சி அவசியமே" என்று வலியுறுத்தினார். "ஒவ்வொரு முயற்சியிலும் பரமன் ஜீவனுக்கு சுதந்திரம் அளித்திருக்கிறானாகையால் அந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தித் தன்மோக்ஷத்திற்காகத் தான் பாடுபடுவது பரமனுக்கு இயல்வரகவே அடிமைப்பட்ட ஜீவனுக்குத் தகாது. அப்படி முயல்வதால் சுயநலம் கலந்த தாழ்ந்த மோக்ஷத்தையே பெற்று விடுவான்" என்னும் கருத்தையும் அவர் ஏற்கவில்லை. "தனக்குப் பக்ஷபாதம், கருணையின்மை என்னும் குற்றங்கள் விளையாமைக்காக இறைவன் ஜீவனுக்கு ஒவ்வொரு முயற்சியிலும் தொடக்கத்தில் சுதந்திரமளித்திருக்கிறான் என்று கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஜீவன் முன் செய்த வினைகளையொட்டியே பரமன் அவனை மேன்மேலே நற்செயல்களிலும், தீய செயல்களிலும் தூண்டுகிறானாகையாலே, இறைவனுக்குப் பக்ஷபாதம் கருணையின்மை எனும் குற்றங்கள் விளையமாட்டா, ஆகையால், இந்தக் குற்றங்கள் விளையாமைக்காக, பரமன் ஜீவனுக்கு ஒவ்வொரு முயற்சியிலும அதைத் தொடங்கும்போது சுதந்திரம் அளிக்கிறான் என்று கற்பிக்கவேண்டிய அவசியமில்லை. கர்மயோகம், ஞானயோகம், பக்தியோகம், ப்ரபத்தி முதலான மோக்ஷ ஸாதனங்கள் ஜீவனால் தன்னைப் பரமனுக்கு சேப்பட்டவன் என்னும் நினைவுடனே செய்யப்படுவதால் அவை சுதந்திரமான செயல்கள் அல்ல, அவற்றால்

http://acharya.org

ஆத்மாநுபவம், தன் ஆனந்தத்திற்கு உறுப்பான பிரம்மாநுபவம் எனப்படும் தாழ்ந்த மோக்ஷங்கள் விளைகின்றன என்பது சரியல்ல. உண்மையில் ஆத்மாநுபவமாகிற கைவல்யம் மோக்ஷமேயல்ல. எல்லாக் கர்மங்களும் கழிந்தபின்பு மோக்ஷத்தில் தாழ்ந்தது உயர்ந்தது எனும் வேறுபாடு இருக்க நியாயமில்லை. ஆகையால் மோக்ஷமடையப் பரமனின் அருளைப் பெறுவதற்கு ஜீவனின் முயற்சியும் அவசியமே'' என்று ஜீவனின் முயற்சிக்கு வெற்றி தேடித்தந்தார் வேதாந்த தேசிகர்.

பிற்காலத்தில், ''மோக்ஷத்தின் பொருட்டு ஜீவன் முயற்சி செய்வது அவனுடைய இயற்கையான அடிமை நிலைக்கு முரணானது. தலைசிறந்த மோக்ஷத்தைப் பெறத் தடையானது. பூனைக்குட்டி எச்செயலுமற்றுத் தன் தாயினால் கவ்விச் சென்று ரக்ஷிக்கப் படுவதைப் போலே ஜீவனும் தன் நன்மைக்குத் தான் முயலாமல் இறைவனால் ரக்ஷிக்கப்படுவதை எதிர்பார்த்திருப்பதே தக்கது'', என்னும் முற்பட்ட ஆசார்யர்களின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தென்கலை சம்பிரதாயமும், ''மோக்ஷத்தின் பொருட்டு இறைவனின் அருள் முக்கியமானாலும் ஜீவனின் முயற்சியும் வேண்டும். குரங்கு தன் குட்டியோடு கிளைக்குக் கிளை தாவும் போது, குட்டி தன் தாயின் வயிற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ளுவதை போலே, பரமனின் அருளைப்பெற ஜீவனும் தன் முயற்சியாகிற பக்தி அல்லது ப்ரபத்தியாகிற மோக்ஷஸாதனங்களைச் செய்யவேண்டும்'' என்னும் வேதாந்த தேசிகரின் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு வடகலை சம்பிரதாயமும் உருவாவதற்கு ஸ்ரீவேதாந்த தேசிகரின் சிந்தனைகள் வழிவகுத்தன. ''அனைத்துலகையும் சரீரமாகக் கொண்ட திருமாலே பரம் பொருள்'' என்னும் விசிஷ்டாத்வைத ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தின் முக்கியக் கொள்கையில் இவ்விரு பிரிவினரிடையே கருத்து வேறுபாடு இல்லையாகையால் அனைவரும் ஒருவர்க்கொருவர் சகிப்புத் தன்மையுடன் ஒற்றுமையாயிருக்க எத்தடையும் இல்லை.

''ஸ்ரீமாந் வேங்கட நாத₂ார்ய: கவிதார்க்கிக கேஸரீ |

வேத₃ாந்தாசார்ய வர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃||''

[கவிகளுள்ளும், தர்க்கமறிந்தவர்களுள்ளும் சிங்கம் போல் சிறந்தவராய், 'வேதாந்தாசார்யர்' எனபுகழ் பெற்றவரான ஸ்ரீமத் வேங்கடநாதாசார்யர் என் நெஞ்சில் எப்போதும் வாழ்வாராக] என்பது சான்றோர்கள் வேதாந்ததேசிகரைப் போற்றும் சுலோகமாகும்.

http://acharya.org